# பச்சைக்கிளி ரெண்டு

உமா மகேஸ்வரி

CPL 646037



343/08
6
646037

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பச்சைக் கிளி ரெண்டு |
| ஆசிரியர் | : | உமா மகேஸ்வரி |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : | டிசம்பர், 2007 |
| மொழி | : | தமிழ் |
| தாளின் தன்மை | : | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | 272 |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : | விசாலம்<br>56/35, அய்யம் பெருமாள் தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.90.00**

| | | |
|---|---|---|
| கணினி அச்சு | : | வேலன் லேசர்<br>சென்னை-18. ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : | கே.வி.எஸ். ஆப்செட்<br>சென்னை-14. ✆:28480166 |

894.8113
UMA
Prubls

CONNEMARA PUBLIC LIBRA
- 8 FEB 2009
CHENNAI-600 008



# பச்சைக் கிளி ரெண்டு



உள்ளே

1. பச்சைக் கிளி ரெண்டு 5

2. ரோஜாப்பூ தோட்டம் 149

- 8 FEB 200
CHENNAI-600 00

# பச்சைக் கிளி ரெண்டு



## 1

இருள் விலகி கொஞ்சம் கொஞ்சமாக ஒளி பரவும் நேரம், சூரியன் தன்னை வெளியே விடுமாறு மேகக் காவலனிடம் முறையிட்டு கொண்டு இருக்கும் நேரம். இளஞ்சிவப்பு லேசாக வெளியே தெரியும்போது காலை சுமார் ஐந்து முப்பது இருக்கும். டாக்சி, ஆட்டோ, பஸ் என்று ஒன்று ஒன்றாக விடுபட்டு சாலையை ஆக்கிரமித்துக் கொண்டன. தி.நகரில் உள்ள அந்தப் பெரிய அனாதை ஆசிரமமும் கொஞ்சம் கொஞ்சமாக விழிக்க ஆரம்பித்தது. பல லட்சங்களை நாலைந்து வருடங்களுக்கு முன்பே விழுங்கிய கட்டிடம். காம்பவுண்டை அடுத்தே குரோட்டன்ஸ், மல்லி, ரோஜா என்று பலவகை பூச்செடிகள். இவற்றை எல்லாம் தாண்டி உள்ளே போனால், அழகான அந்த அனாதை இல்லத்தின் ஆரம்பப்படி நம் கால்களைத் தழுவும். இல்லத்தின் இடதுபுறம் டெனிகாட், துரோபால் விளையாடுவதற்கான சின்னச் சின்னக் கம்பங்கள், அதற்கு

இடையே நூலால் ஆன வலை. இரண்டு நாட்களுக்கு முன்பு தான் முடி இறக்கிய புல்வெளிகள், வலதுபுறம் திரும்பிப் பார்த்தால், இரண்டு, மூன்று கார்கள் நிற்கும் அளவிற்கு கார் செட். இல்லத்தின் பின்புறம், தமிழ் காய்கறிகளில் இருந்து, இங்கிலீஸ் காய்கறி வரை பயிரிடப்பட்டு இருந்தது. இந்த ஆசிரமத்தின் இவ்வளவு முன்னேற்றத்திற்கும் காரணம் திருமதி. காமாட்சி வரதராஜன். வார்டன், மேடம், அம்மா, நிர்வாகி எல்லாமே அந்த ஒரே ஜீவன்தான். இந்த காமாட்சி வரதராஜனுக்கு இடதுகை, வலதுகை, கண், காது, இமை எல்லாமே திவ்யாதான்.

''டொக்... டொக்.. டொக்...''

சிரமப்பட்டு கண்களைத் திறந்தாள், திவ்யா. திரும்பவும் கதவு தட்டப்படும் ஓசை கேட்டு தலை வரை போர்த்தி இருந்த போர்வையை விலக்கி விட்டு, முதுகிற்கு பின்னால் கைகளைக் கொண்டு போய் பலமாக ஒரு முறுக்கு முறுக்கினாள். இடுப்பு வரை இருந்த போர்வையை விலக்கி விட்டு, ஒதுங்கி இருந்த முடி, நைட்டி எல்லாவற்றையும் சரி செய்து கட்டிலில் இருந்து ஒரு சின்ன 'ஜம்ப்'.

'மலுக்' என்ற ஓசையோடு கதவு திறந்துக் கொண்டது. இல்லத்தின் பணிப்பெண்களில் ஒருவளான ஷீலா நின்றிருந் தாள்.

''குட் மார்னிங் ஷீலா. என்ன விஷயம்?'' கொட்டாவி வேகமாக வெளியே பறந்தது.

''ஒன்றும் இல்லை. ஐந்து மணிக்கே எழுந்திடுவே. இன் னைக்கு ஐந்து நாற்பத்தைந்து ஆகியும் ரூம் மூடியே இருக்கே என்றுதான் தட்டினேன்.''

''அஞ்சே முக்காலா? ஓ காட். தேங்க்ஸ் ஷீலா'' - அவள் கையை பிடித்து ஒரு அழுத்து அழுத்திவிட்டு, பக்கெட்டை



யும், குவளையையும் தூக்கிக் கொண்டு கிணற்றடிக்கு ஓடினாள். பத்து வயதுக்கு மேற்பட்ட வாண்டுகள் எல்லாம் வரிசையாக பக்கெட்டில் தண்ணீர் பிடித்து குளித்துக் கொண்டு இருந் தார்கள்.

''குட்மார்னிங்''க்கா.

''குட்மார்னிங்''

''குட்மார்னிங்''க்கா.

''குட்மார்னிங், குட்மார்னிங்''

பேஸ்ட்டையும், பிரஷ்சையும் வாயில் திணித்துக் கொண்டு, பக்கெட் நிறைய தண்ணீரை நிரப்பிக் கொண்டு பாத்ரூமை நோக்கி ஓடினாள். திவ்யா குளித்து விட்டு வருவதற்குள், அவளைப் பற்றி ஒரு சில வரிகள்.

கருந்திராட்சை அவள் கண்களில் குதித்து விளையாடும். அழகிய சிவந்த நிறம், வட்டமான முகம், எடுப்பான நாசி, முத்தை அவள் பற்களுக்கு உவமையாகச் சொல்லலாம். ஆனால் அவள் பற்களின் வெண்மையில் முத்து நாணித் தலைகுனிந்து விட்டால், வேண்டாம். ஆரஞ்சு சுளை இரண்டை அறுத்து வைத்தது போல் அற்புதமான உதடுகள். இடுப்பு வரை தவழும் நீண்ட கருங்கூந்தல். தூக்கக் கலக்கத்திலும் தூய்மையான அழகு சுடர்விட்டு எரியும். இருபத்தி ஒரு வயதாகும் யுவதி. எம்.காம். பர்ஸ்ட் இயர், ஸ்டெல்லா மேரிஸில் பயில்கின் றாள்.

பாத்ரூம் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள், திவ்யா. தன் அறைக்குப் போக எத்தனிக்கும்போது...

''திவ்யா''

''யா'' திரும்பினாள்.

''உன்னை மேடம் வரச் சொன்னாங்க.''

''என்னையா?'' புருவத்தை உயர்த்தியவள், ''இதோ வரேன்'', அவசர அவசரமாக புடவையை மாற்றிக் கொண்டு, நிலவு போன்ற முகத்தில் சின்ன கருப்பு ஸ்டிக்கரை ஒட்டிக் கொண்டு, குளியலுக்காகப் போட்ட கொண்டையைக் கூட அவிழ்க்காமல், மேடம் ரூமை நோக்கி ஓடினாள்.

''மேடம், உள்ளே வரலாமா?''

குனிந்து ஏதோ எழுதிக் கொண்டு இருந்த காமாட்சி வரத ராஜன், கனமான மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டே, ''வா'' என்றார்.

''உட்கார்''

''என்ன மேடம், இவ்வளவு ஏர்லியரா?''

''ஒண்ணும் இல்லம்மா. நீ இன்று லீவ் போட்டுடு.''

''இன்னைக்கா? எதுக்கு மேடம்''

''இன்னைக்கு எட்டு மணிக்கு புரசைவாக்கத்தில் இருக்கும் மாதர் சங்கத்திற்கு வருவதாக சொல்லி இருக்கேன். ஆண்டு விழாவாம். என்னைப் பேசச் சொல்லி ரொம்ப வற்புறுத் துராங்க. அதனால் இன்று நீ ஆசிரமத்தைப் பார்த்துக் கொள்.''

''மேடம், நான் திரும்பக் கேட்பதாக நினைக்காதீர்கள். ஷீலா, ரேவதி இவங்க எல்லாம் இருக்காங்களே..'' வார்த் தையை இழுத்தாள்.

''வேலை ஒன்றும் இல்லை. அருண் என்பவர் குழந்தை ஒன்றை தத்து எடுத்துக் கொள்வதாக சொல்லி அப்பாய்ண் மெண்ட் வாங்கி இருக்கார். அதனால் அவர் வந்தால், அவர் விரும்பும் குழந்தையைக் கொடுத்து, ஃபாமில் எல்லாம் கை யெழுத்து வாங்கி, எல்லா வேலையையும் நீதான் முடிக் கணும்.''



''ஓ.கே. மேடம்.''

திவ்யா, முன்னால் மறைந்ததும், காமாட்சி வரதராஜனின் உள்ளம் பின்னோக்கி நாலைந்து வருடங்களுக்கு ஓடியது.

காம்பவுண்ட் கேட் அருகே ஒரு பதினேழு வயது இளம் பெண் தயங்கித் தயங்கி நிற்பதைக் கண்டதும்...

''உள்ளே வாம்மா'' சத்தமாக குரல் கொடுத்தார்.

தோளில் ஒரு லெதர் பேக். ஒரு சின்ன வி.ஐ.பி சூட்கேஸ். ஜீன்சினாலும், தொள தொள பனியனாலும் உடலை மூடி இருந்தாள். தலையைத் தூக்கி வாரி, குதிரைவாலாக ரப்பர் பேண்ட் போட்டு இருந்தாள். நடக்கும் போது அச்சமும், தயக்கமும், தளிர் நடை போட்டதை காமாட்சி கவனிக்கத் தவறவில்லை.

தன் அருகே அவள் நெருங்கியதும்...

''உள்ளே வாம்மா. என்ன வேணும்? சிட்டிக்கு புதுசா?''

''ஆமாம். காமாட்சி வரதராஜனைப் பார்க்கணும்'' - குரல் வீணையில் இருந்து விழுந்த சுருதியாக ஒலித்தது.

''காமாட்சி வரதராஜனையா? ஏன்?''

''அதை நான் அவங்ககிட்ட சொல்லணும். சாரி. ஏன் மேடம் நிஜமாகவே அவங்க சோசியல் ஒர்க்கரா?''

''அப்படித்தான் சொல்றாங்க. ஆனால் அந்த அளவுக்கு பெரிய சோசியல் ஒர்க்கரா என்று எனக்குத் தெரியாது. நீ உள்ளே வா.''

''தேங்க்ஸ் மேடம்'' - காமாட்சியைப் பின் தொடர்ந்தாள்.

தன் அறைக்குள் நுழைந்த காமாட்சி வரதராஜன், ''உட் காருமா. நான் தான் நீ கேட்ட காமாட்சி வரதராஜன். எனி ஹெல்ப்?''

அதிர்ந்தாள் அந்தப் பெண். தட்டுத் தடுமாறி குரல் வெளிவர மறுத்து... "மே...ட...ம்... நீ...ங்...க யார்னு தெரியாமல்..."

"அட உட்கார். நோ பார்மாலிட்டி. உன்னோட பேர் என்ன?"

"திவ்யா"

"ஸ்வீட் நேம். எனி ஹெல்ப்?"

சூட்கேசைத் திறந்தாள். அதில் ஏதோ சர்டிபிகேட் போல் இருந்த ஒன்றை எடுத்து காமாட்சியிடம் பவ்யமாக நீட்டினாள்.

வாங்கிப் பார்த்த காமாட்சி, "ட்வல்த் சர்டிபிகேட். எய்ட்டி பைவ் பர்சன்டேஜ் மார்க் வாங்கி இருக்க..."

"மேடம் இதுதான் என்னோட சர்டிபிகேட். எனக்கு இங்கே வேலை கிடைக்குமா?"

திவ்யாவை ஏற இறங்கப் பார்த்தார் காமாட்சி.

"உன்னைப் பார்த்தால் பணக்கார வீட்டுப் பொண்ணு மாதிரி தெரியுது. பாம்பேல படிச்சி இருக்க. அது மட்டும் இல்ல. பிளஸ்டூ படிச்சிட்டு, என்ன வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்து மெட்ராஸ் வந்த?" லேசான கண்டிப்போடு கேட்டார்.

"நான் ஒரு அனாதை. பிளஸ்டூ வரைக்கும் பாம்பேயில் இருக்கும் தமிழ்நாட்டுகாரர் ஒருவரால் படிச்சேன். சமீபத்தில் அவரும் காலமாயிட்டார். எனக்கு என்று எந்த சொந்தமும் இல்லை. அதனாலதான் உங்களைத் தேடி வந்தேன். நான் இங்கேயே தங்கிக்கிறேன் மேடம். நீங்க என்ன வேலை சொன்னாலும் செய்கிறேன். ஆனா இதெல்லாம் ஒரு எதிர்பார்ப்போட தான். என்னிடம் நீங்க அன்பா இருக்கனும். அவ்வளவுதான் மேடம்."



"உன்னைப் பார்த்தால் அனாதை போல் தெரியலையே. வீட்டை விட்டு ஓடி வந்திட்டியா?"

"இல்லை" பலமாகத் தலையாட்டினாள். "எனக்குன்னு யாருமே இல்லை. என்னிடம் அன்பு காட்ட இந்த உலகத்தில் ஒரு ஜீவன் கூட இல்லை மேடம். பிச்சைக்காரனுக்கு ராஜா என்று பெயர் இருப்பது இல்லையா? அது மாதிரிதான். என்னமோ தெரியலை. என்னைப் பார்த்தா பணக்காரப் பொண்ணு மாதிரி தெரியுது." விரக்தியாக சிரித்தாள்.

அவளைப் பார்க்கவே காமாட்சி வரதராஜனுக்குப் பாவமாக இருந்தது. முழு விவரத்தையும் பிறகு கேட்டு தெரிந்துக் கொள்ளலாம் என்று, முடிவெடுத்து,

"சரஸ்வதி பூஜை அன்று வந்திருக்க, நல்ல மார்க்கும் வாங்கி இருக்க, நான் படிக்க வச்சா படிக்கிறியா?"

"மேடம்" நா தழுதழுக்க காமாட்சியின் காலில் படார் என்று விழுந்தாள்.

"இதென்ன தப்பான பழக்கம், எழுந்திரு. நீ அனாதை என்று சொன்னதை நான் நம்புறேன். அது இதுவரைக்கும்தான். ஆனா இனிமேல் அப்படி இல்லை. உனக்கு தம்பி, தங்கச்சி, பாட்டி, அம்மா எல்லோரும் இங்கே இருக்காங்க. இந்த ஆசிரமத்திற்கு வந்தவங்க அழக் கூடாது. எப்போதுமே சந்தோஷமா சிரிச்சிக்கிட்டே இருக்கணும், என்ன. நான் சொல்வது புரியுதா?"

பலமாகத் தலையாட்டினாள், திவ்யா.

வந்த இரண்டொரு நாட்களிலேயே, அங்கே உள்ள அத்தனை பேரிடமும் சகஜமாகப் பேசியது, அழுகின்ற பிள்ளைகளை சிரிக்க வைத்தது, ஒன்றோடு ஒன்றாகக் கலந்தாள். 'பூச்செடிக்கும், விளையாட்டிற்கும் தனி இடம் ஒதுக்கணும். காய்கறி செடி வைக்கணும்' இதெல்லாம் திவ்யாவின் யோசனைதான். சொன்ன

தோடு மட்டும் இல்லாம, சொன்னதை செய்து விட்டுதான் மறு வேலை பார்ப்பாள். ஒரு நாள் கூட திவ்யாவைப் பார்க்காமல் காமாட்சி வரதராஜனால் இருக்க முடியவில்லை. தனக்கு பின் இந்த ஆசிரமத்தை நிர்வகிக்க ஒரு நல்ல தலைவி கிடைத்து விட்டாள் என்ற திருப்தி வேறு அவருக்கு இருந்தது. காலேஜ் டூர் என்று திவ்யா சென்று விட்டால், ஆசிரமமே களையிழந்து காணப்படும். அவள் வந்த மறு நிமிடமே எல்லா உள்ளங்களும் சந்தோஷத்தில் கீழே விழுந்து, காயங்களை ஏற்படுத்திக் கொள்ளும். எப்படியோ திவ்யா எல்லோருடைய அன்பிற்கும் பாத்திரம் ஆனாள்.

நினைவில் இருந்து விடுபட்ட காமாட்சி வரதராஜன், நீண்ட பெருமூச்சை வெளி விட்டுவிட்டு மணியைப் பார்த்தார். ''ஐய்யய்யோ, மணி ஏழரை ஆகி விட்டது'' விடுவிடுவென தன் அலுவலக வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு, திவ்யாவிடம் சொல்லிவிட்டு, ஆசிரம வாகனத்தை விட்டு விட்டு, தன் சொந்த உபயோகத்திற்கு உள்ள மாருதியை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

ஒன்பது மணிக்கு பள்ளிக்கு கிளம்பும் சிட்டுக்கள் எல்லாம், ஒவ்வொன்றாக கிளம்ப ஆரம்பித்தது. ஆசிரமத்தில் உள்ள பாதி டிக்கெட்டுகளுக்கு மேல் போய் விட்டன.

காலை டிபனை முடித்துக் கொண்டு, தழைய தழைய பின்னிய கூந்தலை முன் பக்கம் தூக்கி போட்டுக் கொண்டு, ஆசிரம வாயிலில் வந்து அமர்ந்தாள் திவ்யா.

தோட்டக்கார தாத்தா திருட்டுத்தனமாக தம்மடித்துக் கொண்டு இருப்பதைப் பார்த்தாள். பூனை போல மெதுவாக நடந்து, அவர் பின்னால் சென்று,

'ஆச்' என்று பெரியதாக ஒரு தும்மல் போட்டாள்.

வெலவெலத்துப் போன தாத்தா, பீடியை நழுவ விட்டார்.



''என்னமா இது. கொஞ்ச நேரத்தில் இப்படி பயமுறுத்திட்ட.''

இடுப்பில் கையை ஊன்றி, ஜான்சிராணி பாணியில், ''திருட்டுத்தம்மா, மேடத்திடம் சொல்லவா?''

''ஐய்யய்யோ சொல்லாதம்மா. நல்ல பொண்ணுல்ல'' - தாத்தா கெஞ்சினார்.

''ஏதோ போனால் போவுது. வயசானவங்க மாட்டி வைக்க மனசு வரலை''

''உம்'' முனகினார்.

''தாத்தா, அங்க பாருங்க. அந்த ரோஜா செடி காம்பவுண்டுக்கு வெளியே அந்தப் பக்கமா வளைந்து கொண்டு இருக்கு'' இடத்தை சுட்டிக் காட்டினாள்.

''அட ஆமாம். நான் பார்க்கவே இல்லையே.''

''கிழிஞ்சது. நல்ல நாள்லேயே கண்ணு தெரியாது.''

''என்னம்மா சொன்ன?''

''காதும் கேட்காதா? நல்லதாப் போச்சு. அதெல்லாம் ஒன்றும் இல்ல தாத்தா. இவ்வளவு வயசாயும் இவ்வளவு ஸ்மார்ட்டா இருக்கீங்களேன்னு சொன்னேன்'' கொஞ்சம் சத்தலாகவே சொன்னாள்.

''அதெல்லாம் உங்க பாட்டிகிட்ட கேட்டு தெரிஞ்சிக்க'' நரைத்திருந்த மீசையை முறுக்கி விட்டுக் கொண்டார்.

''தாத்தா நான் வெளியே போயி செடியை எடுத்துத் தரேன். இந்த பக்கம் இருந்து உள்ளே பக்கத்து செடியில் கட்டுறீங்களா?''

''சரிம்மா''

உடனே வெளியே வந்து, காம்பவுண்டுக்கு வெளியே தலையை நீட்டிக் கொண்டு இருந்த ரோஜா செடியை, முள்

இல்லாத இடத்தை பார்த்து, கையை வைத்து, லாவகமாய் எடுக்கும்போது....

நீல நிற பத்மினி பிரிமியர், சேற்றை வாரி இவள் சேலையில் இறைத்தபடி, காம்பவுண்ட் கேட் அருகே மூச்சு வாங்கியது.

அளவுக்கு மீறிய கோபத்தை அடக்கிக் கொண்டு, காருக்கு அருகே வந்து திவ்யா நிற்கவும், கார் கதவைத் திறந்து கொண்டு ஒரு இளைஞன் இறங்கவும் சரியாக இருந்தது.

"ஏய் மிஸ்டர். ரோடு என்ன உங்க வீட்டு சொத்தா?"

"இல்லையே" அலட்சியமாகக் கூறினான்.

"கார் ஓட்டுவதற்கு முன், ரூல்ச தெரிஞ்சிக்கணும் மிஸ்டர்."

"ம்கூம்" கைகளை விரித்தான்.

"ஏய் மிஸ்டர். சேலையில் சேறடிச்சதும் இல்லாமல், கொஞ்சம் கூட அலட்டிக்காம பேசிறியே. நாகரீகம் தெரியாதா? பார்த்தா மட்டும் டீசண்டா ட்ரஸ் பண்ணிக்கிறீங்க, ஸாரின்னு ஒரு வார்த்தை இருக்கே தெரியுமா?"

"ஸாரி தெரியாது" நாக்கை கடித்துக் கொண்டான்.

"ஓ.. ஸாரி தெரியாதுன்னு சொல்லத் தெரியும். ஸாரி தெரியாது."

"மேடம்" என்ற பேச எத்தனித்தவன், தோளை குலுக்கிக் கொண்டு, "யூ ஆர் ஏ வெர்ஜின்?"

இடி போல ஒரு அறை அவன் கன்னத்தில் இறங்கியது.



## 2



அடி, இடி போல் இறங்கியதும், ஆடிப் போய் விட்டான், சம்பத். பொறி கலங்கியது. கண்ணில் மின்மினி பறந்தது. அதற்குள் பின் சீட்டில் இருந்து அவசர அவசரமாக வேறு ஒரு இளைஞன் இறங்கினான்.

"ஸாரி மேடம். இவனுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்" பார்வையால் கெஞ்சினான்.

"உங்க முகத்துக்காக விட்டுடறேன் சார்" ம்கும் என்று ஒரு நொடி நொடித்து திரும்பி, உள்ளே நுழைந்தாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ மேடம்"

திரும்பி, என்ன என்பது போல் பார்வையில் எரித்தாள்.

"என்னோட பெயர் அருண். குழந்தை ஒன்று தத்து எடுத்துக் கொள்ளணும் என்று முன்பே காமாட்சி வரதராஜனிடம் அப்பாய்ன்மெண்ட் வாங்கி இருக்கேன்."

"ஓ, அது நீங்கதானா? ப்ளீஸ் கம்" கேட்டைத் தள்ளி, அவர்கள் கார் உள்ளே வர வழிவகுத்து, முன்னால் நடந்தாள்.

சம்பத்தின் தோளைப் பற்றிய அருண்,

"டேய் உனக்கு என்னடா ஆச்சி. கலியுகத்து ராமன்னு நினைச்சேன். ராவணனை விட மோசமாக இருப்ப போல இருக்கு. எனக்கு தெரிஞ்சி எந்தப் பொண்ணையும் திரும்பிக் கூடப் பார்த்தது இல்லை. திடீர் என்று உனக்கு எப்படி... எப்படி... இப்படி ஒரு கேள்வியை, அதுவும் இந்தப் பொண்ணைப் பார்த்து கேட்க தோணிச்சி?"

''ப்ச்ச, விடுடா'' சம்பத் அலட்டிக்காமல் பதிலளித்தான்.

''ஹலோ, டேய் என்னை என்ன கிறுக்கன் என்று நினைத்தாயா? நீ கேட்ட கேள்விக்கு, சதாம் உசேன் வேகத்தில திருப்பி வேற தாக்குதல் நடத்திருக்கா. உனக்கு ஒன்றுமே இல்லையா?''

அதற்குள் அவர்களை உள்ளே அழைத்துப் போக நாற்பது வயதுமிக்க ஒரு ஆயா வெளியே வந்து பார்த்தார்.

''தம்பி, உங்களை உள்ளே கூப்பிடுறாங்க''

அருணை ஒட்டினார் போல், சம்பத்தும் அவனை உரசிக் கொண்டே உள்ளே வந்தான்.

ஆசிரமத்தின் வலது கோடியில் வரிசையாக உள்ள ஒவ்வொரு அறைக்கும் திவ்யா இருவரையும் அழைத்து சென்றாள்.

''இந்தக் குழந்தை பெயர் மாயா. ஒன்னரை வருசம் ஆகுது.''

''நெக்ஸ்ட் ரூமுக்கு வாங்க.''

''இந்தக் குழந்தை பெயர் விக்னேஷ். ஐந்து மாதம்தான் ஆகுது.''

''இந்த குழந்தை பெயர் ப்ரிதிவ். ஒரு வருடம்.''

எல்லாக் குழந்தைகளின் பெயர், வயது போன்ற விவரங்களை விவரித்து முடித்ததும்,

''நீங்கள் எந்தக் குழந்தையை லைக் பண்றீங்களோ, அதை எடுத்துக் கொள்ளலாம். பட் ஒன் கண்டிசன். நீங்கள் தத்தெடுத்த விசயம் இந்தக் குழந்தைக்கு எந்த சமயத்திலும் தெரியக் கூடாது. ஏனென்றால், அப்பாவும், அம்மாவும் உங்களுக்கு இருக்காங்க. இங்க விட்டுட்டு போயிருக்காங்க என்றுதான் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். உண்மையான பாசத்



தோடும், நேசத்தோடும் நீங்கள் குழந்தையை வளர்ப்பீங்கன்னா, குழந்தையை மகிழ்ச்சியோடு கொடுக்கிறோம்.''

''ச்சேச்சே நீங்கள் நினைப்பது போல் இல்லை நான். எனக்கு குழந்தை இல்லை என்பதால்தான், அதனால் நீங்கள் நினைப்பது போல் எந்தத் தப்பும் நடக்காது.''

''அப்கோர்ஸ். பட், நாளைக்கே உங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால், இந்தக் குழந்தையை எப்போதும் போல பார்த்துக் கொள்வீர்கள்தானே?''

சோகத்தை சின்ன சிரிப்பின் மூலம் நாசுக்காக வெளிப்படுத்தினான், அருண்.

''நடக்க வாய்ப்பில்லை. ஏன்னா தாயாகும் பாக்கியம் என்னோட மனைவிக்கு இல்லை. அவளைத் திருப்திப்படுத்தத் தான் இந்தக் குழந்தை.''

இப்படி ஒரு சோகம் இருக்கும் என்று திவ்யாவுக்கு என்ன ஜோசியமா தெரியும். கைகளைப் பிசைந்து கொண்டு...

''எக்ஸ்க்யூஸ் மி, ஸாரி, ஏதோ...''

''இட்ஸ் ஆல் ரைட். எனக்கு அந்த ஐந்து மாதத்தில் இருந்த குழந்தை வேணும்.''

''ஓ.கே. இந்த பாமில் எல்லாம் கையெழுத்து போடுங்க. இது எல்லாம் இந்தக் குழந்தைக்காக நாங்க வாங்கி வச்சி இருக்கும் சர்டிபிகேட்ஸ். இனி மேல் இந்தக் குழந்தையோட கார்டியன் பிளஸ் பாதர் எல்லாமே நீங்கதான்.''

''தேங்க் யூ மிஸ்...'' பெயர் தெரியாமல் அருண் தடுமாறவும்,

''திவ்யா'' என்றாள்.

"ஸ்வீட் நேம்" சொன்னது சம்பத்.

திவ்யாவின் முறைப்பை லட்சியம் செய்யாமல், மோட்டு வளையை நோட்டம் போட்டான், சம்பத்.

"அப்போ நாங்க வரோம் மிஸ் திவ்யா" குழந்தையோடு அருண் விடைபெற்றான்.

வழியனுப்ப திவ்யா வாசல் வரை வந்தாள். அப்போது அவள் காதருகே வந்து, "உன்னைப் பார்க்க திரும்ப வருவேன். வரட்டா" கிசுகிசுத்தான் சம்பத்.

"யூ... யூ... ஸ்கவுண்ட்ரல்" சத்தம் வெளிவராமல் முனகினாள்.

அன்று முழுவதும் எதிலேயும் அவள் மனம் ஈடுபடவில்லை. மேடம் வந்து கேட்டபோது கூட, ஏனோதானோ என்றுதான் பதிலளித்தாள். "ஏம்மா உடம்பிற்கு ஏதாவது பண்ணுதா?" என்று அவர் அக்கறையோடு கேட்டபோது கூட, சரியாக பதில் சொல்ல முடியாமல் விழித்தாள். ச்ச, என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்டுட்டானே? பார்த்தா கற்பூர முல்லையில வந்த ராஜா மாதிரி அட்டகாசமா இருக்கான். ச்சே இவனெல்லாம் எதுக்காக இந்திய மண்ணுல பிறந்தானோ தெரியலை. கொஞ்சம் கூட வாய் கூசாம. இரவு சாப்பிடப் பிடிக்காமல், படுக்கையில் போய் விழுந்தாள். கண்ணை மூடினால் சம்பத்தோட உருவம், திறந்தாலும் அவன் உருவம் நிற்பதுபோல பிரமை. தூக்கம் வராமல் புரண்டு, புரண்டு படுத்தாள். கருமம் பிடிச்சவன், என் நிம்மதியை கெடுக்கணும்னே வந்திருக்கான். யூ ஆர் எ வெர்ஜின்? யூ ஆர் எ வெர்ஜின்? மீண்டும் மீண்டும் அவள் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. இருந்து இருந்தார்போல் அழுகை அழுகையாக வந்தது. மெல்ல மெல்ல உறக்கம் அவளை ஆட்கொள்ள ஆரம்பித்தது.



## 3



"திவ்யா."

"திவ்யா."

இதழுக்குள் பெயர் இடிந்து விடாமல் இருக்க, இதமாக, பயந்து மெதுவாக உச்சரித்தான், 'திவ்யா'. வால்கிளாக் ஐந்தரை என்று தன் கடமையை உணர்த்தியபோது, கோபமாக அதைப் பார்த்தான். கொஞ்சம் வேகமாக ஓடக் கூடாதா. கடிந்து கொண்டான். வேக வேகமாக தலையை வாரி, லேசாக கலைத்து விட்டான். அதுதான் இப்போதைய பேஷனாம். பாண்ஸ் கிரீமை பொட்டு பொட்டு ஆக வைத்து இரண்டு கையாலும் முகம் முழுவதும் தேய்த்து, பவுடரை பட்டும் படாமல் அடித்து, சரி செய்தான். பீரோ ஹேங்கரில் வரிசையாக மாட்டப்பட்ட பேண்ட் - சர்ட்டை ஒரு முறை நோட்டம் விட்டான். ஒவ்வொரு செட்டாக போட்டுப் போட்டு, திருப்தி இல்லாமல் மாற்றினான்.

லூசர் போட்டுக் கொள்ளலாமா? கோட் சூட் எல்லாம் தேவையில்லை. கருப்பு பேண்ட்டும், எல்லோ லூசர் பனியனும் போட்டால் காம்பினேசன் தூள். கண்டிப்பா ஒரு அசத்து அசத்தத்தான் போகிறது. இந்த ட்ரசைப் பார்த்ததுமே அவள் அசந்து விழணும். அப்படியே நான் தாங்கிப் பிடிக்கணும். வாவ். நினைக்கும்போதே இனிக்குதே. திவ்யா, ஐ வில் கம். என்னைப் பார்த்ததும் அவளோட ரியாக்சன் எப்படி இருக்கும்? நிச்சயமா சந்தோசமாக இருக்காது. பேண்டில் பெல்டை இறுக்கிக் கொண்டு, சற்று முன்பு தானே பாலீஸ் செய்து வைத்து இருந்த ஷூவை எடுத்து மாட்டினான். ஷூவை

எடுத்து மாட்டும் இந்த சம்பத்துக்கு வயது 27. இரண்டு பைவ் ஸ்டார் ஹோட்டல்ஸ், ஒரு பிரைவேட் டிராவல் ஏஜென்சி, ஊட்டியில் ஐநூறு ஏக்கர் தேயிலை எஸ்டேட் ஓனர் மருத நாயகத்தின் மூத்த மகன். எம்.பி.ஏ. பட்டதாரி. அதுமட்டும் அல்லாமல் பிசினஸ் மேனேஜ்மெண்ட், தந்தைக்கு உதவியாக இருக்கின்றான். ஒரு தங்கை பிளஸ்டூ, ஒரு தம்பி டென்த், தாய் மரகதம் ஒரு சமூக சேவகி. இதுதான் இவனுடைய பயோ டேட்டா. மருதநாயகமும் ஒரு வருடமாக இவனுக்கு திரு மணத்தை முடிக்க வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தார். ஆனால் திருமணமே செய்து கொள்ளும் எண்ணம் இல்லாததால், எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் பிடிக்கவில்லை என்று ஒட்டுமொத்தமாக மறுத்து வந்தான். பெண் பார்த்து அலுத்துப் போன மருதநாயகம், "இங்க பாருடா. இனிமேல் நான் உனக்கு பொண்ணு பார்க்கப் போவது இல்லை. உனக்கு பிடிச்சி இருந்தா யாரையாவது கொண்டு வந்து நிறுத்து" என்று சொல்லி இரண்டு மாதங்கள் ஆகின்றது.

"ஒரு வழியாக தன் மேக்கப் எல்லாவற்றையும் முடித்து, திரும்ப கண்ணாடியில் திரும்பித் திரும்பி பார்த்தான். இன் பண்ணி இருந்ததில் இருந்த சுருக்கங்களை சரி செய்தான். இந்த ட்ரசிலேயே போகலாமா? வேண்டாமா? போட்டாச்சி, திரும்ப கழட்ட வேண்டாம். திரும்பவும் பெல்ட்டை ஒரு இறுக்கு இறுக்கினான்.

மாடியிலிருந்து கீழே வந்தவன் தனக்கென்று இருந்த அந்த புதிய மாடல் மாருதி ஜிப்சியை சீராக சாலையில் சீறவிட் டான். கொஞ்ச நேரத்திற்கு எல்லாம் காமாட்சி வரதராஜன் ஆசிரமத்தில் வந்து நின்றது.

ரோஜா செடியில் இருந்து பனித்துளி சொட்டு சொட்டாக விழுந்து கொண்டு இருந்தது. காரை நேராக ஆசிரம போர்டிகோவிலேயே நிறுத்தினான். விடுவிடுவென நிர்வாகி



ரூமை நோக்கி நடையை எட்டிப் போட்டான். நடக்கும்போதே ஒரு சந்தேகம். மேடம் இப்போ எழுந்திருப்பாங்களா? சிக்ஸ் தர்ட்டிதானே ஆகுது. லேசாக தயக்கமாக இருந்தாலும், கதவை ஆள்காட்டி விரலால் மெதுவாகத் தட்டினான்.

"எஸ் கமின்"

கதவை தள்ளிக் கொண்டு, தன் உடம்பை உள்ளே தள்ளி னான். "குட் மார்னிங் மேடம்."

"குட்மார்னிங்" அவர் பார்வையில் வியப்பு அப்பட்ட மாக தெரிந்தது.

"நீ மரகதத்தோட சன் இல்ல?"

"எஸ் மேடம்" பவ்யமாக பதில் அளித்தான்.

"வாட் எ சர்ப்பிரைஸ். அம்மா அனுப்பினாங்களா?"

இல்லையென சொல்ல வார்த்தை தொண்டை வரைக்கும் வந்தது. அதற்குள், "ஆமாம்" என்று தலை முந்திரிக் கொட்டை போல ஆட்டியது.

"என்னவாம்?"

தலையைக் குனிந்து கொண்டு மவுனமாக பேப்பர் வெயிட் டரை உருட்டிக் கொண்டு இருந்தான்.

"என்ன சம்பத், கமான் டெல் மி."

"அ...து.. வ..ந்..து.. அ...து வந்து ஒன்றும் இல்லை மேடம். மம்மிக்கு லேசா பீவர். அதனால வர முடியவில்லை. ஆசிரமத்திற்கு ஏதோ டொனேசன் தரணும்னு சொன்னாங்க. யாரையாவது என்னோட அனுப்பி வைத்தால் கேஷாக எடுத்துக் கொடுத்து விடுவேன்."

"ஏன், நீயே கொண்டு வரலாமே."

''வரலாம் மேடம், பட் ரொம்ப முக்கியமான ஒர்க் இருக்கு'' அடுக்கடுக்காகப் புளுகினான்.

''சரி நான் வரட்டுமா?''

''போச்சுடா, காரியமே கெட்டுடுமே'' ஒரு நிமிடம் யோசித்தவன், ''நீங்கள் எதுக்கு சிரமப்படணும். உங்களுக்கு நம்பிக்கையானவங்க யாராவது...'' இழுத்தான்...

''சரி, நீ சொல்லும்படியே அனுப்புகிறேன். ஆறரை மணிக்கு எந்த பாங்க் திறந்து இருக்கு?''

''அ...து அ...து'' ஒரு வண்டி, இரண்டு வண்டி, ம்கூம் பத்து வண்டி அசடு சம்பத் முகத்தில் வழிய ஆரம்பித்தது.

காமாட்சி வரதராஜனுக்கு ஏதோ புரிந்த மாதிரியும் இருந்தது. புரியாத மாதிரியும் இருந்தது. இன்று காலையிலேயே இவன் ஏன் இங்கே வந்தான்? மம்மிக்கு உடம்பு சரியில்லை என்று வேறு பொய். காமாட்சி வரதராஜனிடம் பொய் சொல்ல வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு வந்தால் கூட, அவர் பார்வையை நாம் சந்தித்தோம், தொலைந்தோம், கட கடவென்று எல்லா உண்மையையும் சொல்ல ஆரம்பித்து விடுவோம். விதிவிலக்கு திவ்யா. சம்பத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாக நடுங்க ஆரம்பித்து விட்டது.

''மேடம்.. வந்து...''

''கமான் டெல் மி...''

''திவ்யாவைப் பார்க்கணும்'' சொல்லி விட்டு தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

''வாட், திவ்யாவா? எதுக்காக?''

''கொஞ்சம் பர்சனலா பேசணும் மேடம்.''

''பர்சனல் என்றால்'' காமாட்சி வரதராஜனுக்கு தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. சற்று



முன்பாவது ஏதோ புரிந்த மாதிரியும், புரியாத மாதிரியும் இருந்தது. ஆனா இப்போ சுத்தமாக தலையை சுத்த ஆரம்பித்து விட்டது.

பெல்லை அடித்தார். ஒரு சின்னப் பெண் ஓடி வந்தாள்.

''திவ்யா அக்காவைக் கூட்டி வா.''

வேகமாக தலையாட்டிக் கொண்டு அந்த வாண்டு பறந்தது.

சிறிது நேரத்தில் ஆயிரம் கேள்விகளைத் தாங்கிக் கொண்டு திவ்யா வந்து நின்றாள். சம்பத்தை பார்த்ததும் அழகு முகம் கருத்தது. இவன் எதற்காக இப்போ வந்து இருக்கான்? என்னைப் பற்றி ஏதாவது தவறாக மேடத்திடம் சொல்லி இருப்பானோ? எரிமலைக் குழம்பின் உக்கிரத்தை கண்களில் தேக்கி பார்வையால் ஒரு வெட்டு வெட்டினாள்.

இவர்களின் நடிப்பை எல்லாம் கண்டும் காணாதது போல் இருந்த காமாட்சி வரதராஜன், தொண்டையை செருமிக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

''திவ்யா, உன்னிடம் சம்பத் ஏதோ பர்சனலா பேசணுமாம்'' அர்த்தத்தோடு திவ்யாவை கண்டிப்போடு பார்த்தாள்.

'நான் எந்த தப்பும் பண்ணல மேடம்' பரிதாபமாக கண்களால் கெஞ்சினாள். சம்பத்தாம், சம்பத் 'சாடிஸ்ட்' முனகினாள்.

''என்ன முணுமுணுக்குற?''

''ஒண்ணும் இல்லை மேடம் என்னிடம் இவர்...''

''ஏன் சம்பத்தை உனக்குத் தெரியாதா?''

''தெரியாதே'' பச்சையாகப் புளுகினாள்.

சம்பத்திடம் திரும்பிய மேடம், ''என்ன சம்பத், உன்னைத் தெரியாதுன்னு சொல்றா?''

கொஞ்சம் கூடத் தயங்காமல், திவ்யாவைப் பார்த்து, ''ஏய், எதுக்காக பொய் சொல்ற? உனக்கு என்ன ஆச்சி? நேத்து கூட நன்றாகத் தானே பேசிக் கொண்டு இருந்தாய்? மேடம் திட்டுவாங்கன்னு நினைக்கிறியா? ச்சச்சே, மேடம் அப்படிப் பட்டவங்க இல்லை, இல்ல மேடம்.''

''அடப்பாவி'' விக்கித்து நின்றாள் திவ்யா.

தர்மசங்கடமாகப் போனது மேடத்திற்கு ''தலையும் இல் லாமல், வாலும் இல்லாமல் ஏதேதோ சொல்கின்றானே?'' அதற்குள் திவ்யாவின் கண்களில் குபுக் என்று கண்ணீர் எட்டி பார்த்தது. ''மேடம்.. மே...ட...ம்...'' நா தடுமாறி தத்தளித்தது.

''மேடம், நான் திவ்யாவை ஒரு மணி நேரம் வெளியே கூட்டிகிட்டு போறேன்.''

''நான் போகலை மேடம்'' வெடித்தாள்.

''ப்ளீஸ் மேடம், இவளை வரச் சொல்லுங்க. அவள் கேட்டதை நேற்று நான் வாங்கி வரலை, அதனால்தான் இப்படி எல்லாம் பேசுறா? ப்ளீஸ் மேடம்.''

''மேடம், இது அப்பட்டமான பொய். இந்த ஆளை யாருன்னே எனக்குத் தெரியாது. நான் சொல்றதை நம்புங்க மேடம், ப்ளீஸ்.''

மீண்டும் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டார் மேடம். ஐந்து வருடமாய் தன்னிடம் வளரும் திவ்யாவின் வார்த் தையை நம்புவதா? இல்லை, உத்தமமான புள்ளை, அதிபுத்தி சாலி, கண்ணியமான இளைஞன் என்று பெயர் எடுத்த சம்பத் தின் வார்த்தையை நம்புவதா? அட கடவுளே! காலையி லேயே இப்படி ஒரு பிரச்சினையையா நான் சந்திக்கனும்?

''ப்ளீஸ் மேடம், அவளை வரச் சொல்லுங்க'' குழந்தைத் தனமாக கேட்டான் சம்பத்.



ஆனது ஆகட்டும் என்று ஒரு முடிவிற்கு வந்தாள் திவ்யா. இப்படியே விட்டால் இவன் சரிவர மாட்டான். நாக்கைப் புடுங்கிக்கிட்டு சாகற மாதிரி நாலு கேள்வி கேட்கனும். என்னை என்ன பண்ண முடியும்? போய்த் தான் பார்ப்போமே?

''மேடம், நான் இவரோட போயிட்டு, அரை மணி நேரத்துல வந்திடுறேன்.''

இதுங்க ரெண்டும் பண்ணிய கூத்தில், தடுமாறிய மேடம், ஒன்றும் புரியாமல் தலையாட்டினார்.

மாருதியின் பின் சீட்டில் கோபத்தோடு போய் அமர்ந் தாள். டோரை இழுத்து லாக் பண்ணும் போது தன் கோபம் முழுவதையும் அதில் காட்டினாள். ஆனால் இதை எல்லாம் லட்சியம் பண்ணாமல் சாலையில் தன் கவனத்தை செலுத்தி னான் சம்பத்.

இருவருக்கும் இடையே ஒரு பத்து நிமிடம் மவுனப் போராட்டம் நடந்தது. மாருதி ஜிப்சி ஆள் நடமாட்டம் இல்லாத வெற்று கிரவுண்டில் நின்றது. அவன் நிறுத்தி ஒரு செகண்ட் கூட ஆகி இருக்காது.

''ஏய், என்ன நினைத்துக் கொண்டு இருக்க?'' சீறினாள்.

''உன்னைத்தான்.''

''ச்ச, உன்னைத் திட்டக் கூட தமிழ்ல வார்த்தை இல்லை.''

''ஏன், நான் அவ்வளவு நல்லவனா?''

''இல்லை, அசிங்கமானவன். உனக்கு நான் என்ன பண் ணேன், எதுக்காக மேடத்திடம் அப்படி பொய் சொன்ன? அவங்க என்னைப் பற்றி என்ன நினைப்பாங்க? இதுநாள் வரைக் கும் அவங்க என் மேல் வைத்து இருந்த நம்பிக்கையை எல் லாம் ஒரு நிமிடத்தில் அழிச்சிட்டியே? நீ நல்லா இருப்பியா?''

''நான் நல்லா இருக்கணும் என்றால், நீ மனது வைக்கணும்.''

''ஷட்டப் யுவர் ப்ளடி மவுத்'' ஆத்திரம் தாளாமல் அழுகையாக வெடித்து சிதறியது. கண்களைக் கைகளால் அழுத்தமாக துடைத்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சம்பத்திற்கு என்னவோ போல் ஆகியது. அவள் கன்னத்தை தொட்டு கண்ணீரைத் துடைக்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் இடி போன்ற அறை நினைவிற்கு வந்ததும், எச்சிலை விழுங்கிக் கொண்டான்.

''எதுக்காக என்னைக் கூட்டி வந்தே?''

நேரடியான கேள்வி, சம்பத்தை தடுமாற வைத்தது. தைரியம் அனைத்தும் ஒட்டுமொத்தமாக ஓடி மறைந்தது. அதைத் தேடி பிடிப்பதற்குள், கலங்கிய அவள் கண்களில் இருந்து புறப்படும் தீ ஜுவாலை, தன்னை எரித்து விடும் என்று தெரிந்ததும்,

''நான் உன்னை விரும்புகிறேன்.''

''என்ன?'' ஏளனம் இதழில் தொற்றிக் கொண்டது.

''ஐ லவ் யூ'' ஓசை வெளியே வராமல் உதடு மட்டும் அசைந்தது.

''எனக்கு காது கொஞ்சம் மந்தம். அதுமட்டும் இல்லை. நீ என்ன சொன்னாலும் அதைக் கேட்கும் நிலையில் நான் இல்லை. 'ஐ ஹேட் யூ'. 'ஐ ஹேட் யூ'. 'ஐ ஹேட் யூ...''

''அப்கோர்ஸ், பட் ஐ லவ் யூ. உன்னிடம் கொஞ்சம் நான் பேசணும். நான் பேசி முடிக்கும் வரை தயவு செய்து நீ பேசாதே. பிகாஸ் நான் சொல்ல வந்ததை மறந்திடுவேன்.''

வேண்டா வெறுப்பாகவும், போனால் போகிறது என்பது போல் செவிமடுக்க ஆரம்பித்தாள்.



''என்னோட பெயர் சம்பத். ஏஜ் டொண்டி செவன். அப்பா, அம்மா, ஒரு தம்பி, ஒரு தங்கை. தட் ஈஸ் மை பேமிலி. இதுவரைக்கும் எனக்கு கல்யாணம் ஆகலை. அப்படி இனிமேல் நடந்தால் அது உன்னோடதான். நான்தான் உன்னை லவ் பண்ணுகிறேன் என்று சொன்னேனே தவிர, நீ என்னை லவ் பண்ணணும் என்று சொல்லவில்லை. அது அஸ் யூ லைக். கண்கள் சந்தித்தால் வர வேண்டும் உண்மைக் காதல் என்று ஏதோ ஒரு புத்தகத்தில் படித்து இருக்கிறேன். அது போலத்தான் உன்னைப் பார்த்ததும் ஏதோ ஒரு மின்னல், உன்னிடம் பேசணும், பழகணும் என்று அந்த ஒரு செகண்டில் என்ன என்னவோ தோணியது. இதெல்லாவற்றையும் விட உன்னோட கையைத் தொட்டு பார்க்கணும்னு என்று ஆசை. நான் தொட்டால் வேற வினையே வேண்டாம். ஆனால் நீ என்னைத் தொடலாம், அறை கொடுக்கும் சாக்கில் எந்தக் கேள்வியை கேட்டால் உன்னிடம் இருந்து நான் எதிர்பார்த்தது கிடைக்கும் என்று எதிர்பார்த்தேனோ, அதைத்தான் கேட்டேன். நான் விரும்பியதும் கிடைத்தது. ஆனா என்ன கொஞ்சம் ஸ்ட்ராங்காவே கொடுத்திட்ட. இன்று என்னோட பேரன்ஸ்கிட்ட உன்னை பற்றி சொல்லப் போறேன். கண்டிப்பா சம்மதிப்பாங்க. இந்த வாரத்தில் ஒரு நல்ல நாளாகப் பார்த்து பொண்ணு கேட்டு வரேன். மேடமும் சம்மதிப்பாங்க என்று பரிபூர்ணமாக நம்புகிறேன். அந்த நம்பிக்கையும் இருக்கு. இது எல்லாம் உன்னைக் கேட்காமல் நான் எடுத்து முடிவு. நீ யாரையாவது லவ் பண்ணலாம்! இல்லை வேறு ஏதாவது இருக்கலாம். அதைத் தெரிந்து கொள்ளலாம் என்றுதான் உன்னை நான் இங்கே கூட்டி வந்தேன். நீ என்ன சொல்ற?''

''தனியே பொட்டல் கிரவுண்டில் கூட்டி வந்து கேட்டா, நான் சம்மதிப்பேன் என்று எண்ணமா'' கடுகடுத்தாள்.

''நெவர், நீ என்னைக் கண்டு பயப்படணும் என்று என்ன இருக்கு? உன்னோட மனதில் என்ன இருக்கு? என்று கேட்டேன், அவ்வளவுதான்.''

''சொல்ல முடியாது'' காய்கறிகாரன் கறாராக விலை சொல்வது போல் சொன்னாள்.

''அது உன்னோட விருப்பம், நான் தான் ஏற்கனவே சொல் லிட்டேனே, உன்னைக் கட்டாயப்படுத்த மாட்டேன் என்று.''

நடு முதுகைப் பார்த்து சாட்டையால் யாரோ 'சுரீர்' என்று அடித்தது போல் துடித்தாள். நான் யாரையும் கட்டாயப்படுத்த மாட்டேன். நான் யாரையும் கட்டாயப்படுத்த மாட்டேன். எப்பவோ! எங்கேயோ, யாரோ சொன்ன சொல்லை, திரும்ப இவனும் சொல்கிறானே? யாரோ இல்லை, சொந்த.. சொந்த...முகம் இருண்டு எண்ணங்கள் இடி இடித்ததால், கண்ணீர் கரை புரண்டது.

''ஏய்.. ஏய்.. இங்க பாரு. இப்ப நான் என்ன சொல்லிட் டேன். எதுக்கு இப்போ அழற? நான் பொய் சொன்னபோது எல்லாம் பூலான்தேவி மாதிரி இருந்தே உண்மையைச் சொன்னா அழ ஆரம்பிக்கிறே? வாட் ஹேப்பண்ட்?''

''எது உண்மை?'' குரல் கரகரத்தது.

என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா? என்று கேட்டதும், உன்னைக் கட்டாயப்படுத்த மாட்டேன் என்றதும், ''உன்னைத் தானே பண்ணிக்க மாட்டேன் போடா'' விடுதலைப் புலிகளின் வேகத்தில் தோட்டாக்களை துப்புவதுபோல் வார்த் தையைத் துப்பினாள்.

## 4



இரண்டு நாட்களாக திவ்யாவுக்கு காய்ச்சல் தூக்கி தூக்கிப் போட்டது. நாலு இன்ஜக்ஷன் போட்டாச்சு. டானிக் டேப்லட்



என்று கண்ணும் கருத்துமாக பார்த்தும் திவ்யா கண்விழிக்க வில்லை. உடம்பு அனலாக கொதித்தது. காலை, மாலை இரண்டு வேளையும் டாக்டர் வந்து போய்க் கொண்டுதான் இருந்தார். ஆனாலும் நோ இம்ப்ருமெண்ட். காமாட்சி வரத ராஜனுக்கு வேலையே புரியவில்லை. இரவு பகல் பாராமல் திவ்யா அருகிலேயே உட்கார்ந்து இருந்து கவனித்துக் கொண் டார். இரண்டு முறை சம்பத்தும் வந்து பார்த்தான். அவனைக் கண்டிக்க வேண்டும் என்று எண்ணும் போது அவனுடைய உண்மையான விசாரிப்பு, அன்பான வேண்டுகோள், திவ் யாவைப் பரிவோடு பார்க்கும் அந்தப் பார்வை எல்லாமே காமாட்சி வரதராஜனின் வாயை அடைத்துவிட்டது. மெல்ல ஒரு வாரம் உருண்டோடியது. கண்களைத் திறந்து பார்த்தாள். எழுந்து உட்காரவோ நடக்கவோ இயலவில்லை.

மறந்து போய் இருந்த பழைய நினைவுகளை ஒரே ஒரு வார்த்தையில் மீண்டும் நினைவு படுத்திவிட்டானே? மனதின் ஆழத்தில் அமுங்கிப் போய் இருந்த பழைய நினைவுகள் வெகுண்டு எழுந்து நெஞ்சைத் தாக்கியது. உத்திரகாசியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் சேதத்தை விட அவள் மனதை அதிக அளவு தாக்கி சேதப்படுத்தி இருந்தது.

உடல் நிலை ஓரளவு தேறி இருந்தது. கண்களை மூடிக் கொண்டு படுத்து இருந்தாள். சம்பத்தும், மேடமும் அவள் இருந்த அறைக்குள் வந்து அவளருகே நின்று கவனித்தனர். இவள் தூங்குவதாக எண்ணிக் கொண்டு இருவரும் பேசினர்.

''இப்போ பரவாயில்லையா மேடம்?''

''பரவாயில்லப்பா.''

''ஏதாவது சாப்பிடுறாங்களா?''

''சாப்பாடு எதுவும் இல்லப்பா பன்னும் காபியும்தான். பழம் கூட சாப்பிட மாட்டேங்கறா.''

"கவலைப்படும் அளவிற்கு ஒன்றும் இல்லையே?"

"ஒண்ணும் இல்லை. ஆனா நீதான் ரொம்ப சோர்ந்து போயிருக்க. ஒரு வாரமா பிசினஸையும் கவனிப்பது இல்லை யாமே?"

"மனது சரியில்லை மேடம்."

"ஏன்?"

"திவ்யாவோட இந்த நிலைக்கு நான்தான் காரணமோ என்ற ஒரு குற்ற உணர்வு."

"நீ எதையாவது கற்பனை பண்ணிக் கொண்டு இருக் காதே."

கால் பக்கம் இருந்த தலையணையை சரி செய்த மேடம், தலை பக்கம் நின்றிருந்த சம்பத்தைப் பார்த்து "தலையைக் கொஞ்சம் தூக்கி தலையணையை சரி செய்துவிடு."

"ஸாரி மேடம். நீங்களே சரி பண்ணுங்க."

"ஏம்ப்பா?"

தலையைக் குனிந்து கொண்டு "ஆபத்திற்கு பாவம் இல்லை தான். ஆனால் நீங்கள் இருக்கும் போது நான் தலையைத் தொட்டு சரி செய்ய விரும்பவில்லை. ஏற்கனவே இவங்களுக் கும் எனக்கும் லடாய். அதுமட்டும் இல்லை ஒரு பொண் ணோட ஒப்பீனியன் இல்லாம அவளோட நிழலைத் தொடுவது கூட தப்பு மேடம்."

அவன் பேச்சைக் கேட்டு சிரித்த மேடம் தானே தலைப் பக்கம் இருந்த தலையணையை சரி செய்து அவனையும் அழைத்துக் கொண்டு தன் அறைக்குப் போனார்.

அவர்கள் போய்விட்டார்கள் என்று நிதானித்து கண்களை மெல்லத் திறந்தாள் திவ்யா. உன்னைத் தொட்டுப் பார்க்கணும்



என்று வெளிப்படையாக சொன்னவன் இன்று தன் தலையைத் தொட வாய்ப்பு கிடைத்தும் நாசூக்காக நடந்து கொண்டது. அதற்கு அவன் சொன்ன காரணம் இவையெல்லாம் அவள் மனதில் அவனை ஒரு உயர்ந்த ஸ்தானத்திற்கு உயர்த்தியது. உண்மையாகவே என்னை விரும்புகிறாரா? அன்று அவர் பேசியது எல்லாம் பொய் என்று நினைக்காவிட்டாலும் தப் பான அபிப்ராயம்தானே இருந்தது. மரியாதைக் குறைவாக அன்று பேசியும் இன்றுவரை ஒவ்வொரு நாளும் நம்மை வந்து பார்க்கின்றாரே. மனம் விட்டு உண்மையை அவர் கூறிய பின்பும் நான்தான் மடத்தனமாக நடந்து கொண்டேனா? அவர் பாவம். அட நல்ல எண்ணம் தோன்றியதும் மரியாதை யும் மனதில் வந்து விட்டதே?

மெல்ல மெல்ல உடல் தேறியது. ஒவ்வொரு நாளும் தவ றாமல் அவளைப் பார்க்க வந்தான் சம்பத். இருவரும் பேசவே இல்லை. பார்வைகள் சந்திக்கும் போது இமைகள் தரையைப் பார்த்தன. இரண்டு வார இடைவெளிக்குப் பிறகு முதல் முதலாக அன்று காலேஜுக்கு புறப்பட்டாள். அந்தத் தெருவைத் தாண்டி அடுத்த தெருவில் உள்ள மினி பஸ் ஸ்டாண்டில் லேடீஸ் ஸ்பெஷலுக்காக காத்திருந்தாள்.

அந்த வழியாக வந்த சம்பத்தின் மாருதி, அவள் நிற்பதைப் பார்த்து அவள் அருகே வந்து நின்றது.

மாருதி உள்ளே இருந்து எட்டிப் பார்த்த சம்பத், 'ப்ளீஸ் கம். நான் காலேஜ்ல ட்ராப் பண்ணுறேன்.'

"நோ தேங்க்ஸ்."

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்... ப்ளீஸ்..."

பக்கத்தில் நின்றவர்கள் வேடிக்கை பார்க்க ஆரம்பித்த தும், ஒன்றும் பேசாமல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே அமர்ந்தாள். ஒரு பெரிய சாதனை செய்து விட்ட திருப்தி

சம்பத் முகத்தில் நிலவியது. காலேஜ் போகும் வரை இருவரும் பேசவில்லை. காலேஜ் வாசலில் இறங்கும் போது சின்ன கவரை நீட்டினான். மறுக்காமல் பெற்றுக் கொண்டாள்.

லிஷர் பீரியடில் மர நிழலைத் தேடிப் போனாள். கவரைக் கிழித்து உள்ளே இருந்த கடிதத்தை எடுத்தாள். நான்காக மடிக் கப்பட்ட கடிதம். பிரித்தாள். முத்துமுத்தான கையெழுத்து. முத்தமிட துடித்தது இதழ். கண்கள் ஒவ்வொரு வரி மேலும் தவழ்ந்து, தழுவி, அணைத்து அடுத்த வரிகள் அணி வகுத்தது.

*''அன்பு திவ்யாவுக்கு,*

*உன்னிடம் பேசத் துடிக்கிறேன். ஆனால் பேசினால் நீ மறுபடியும் அழுது, உன் உடல்நிலை பாழாகுமே என்ற பயம். அதனால்தான் எழுத்தில் என் இதயத்தை தூது விட்டு இருக்கின்றேன். உன்னை மட்டும் இதயத்தில் நிறுத்தி, உன் காதுக்கு மட்டும் கேட்கும்படி பாட வேண்டும் என்று ஆசை. ஆனால் அது நடக்க முடியாத செயல். கீழே உள்ள பாடல் உனக்காக என் உள்ளத்தில் உருவான உதிரச் சொட்டுக்கள். இதை என் இதழ் இசைப்பதாக தயவுசெய்து நினைத்துக் கொள்ளேன்.*

கவிதை வரிகளாகவும், கடித வரிகளாகவும் நீண்டு கொண்டே சென்றதோடு இவள் இதயத்தைத் தொட்டது.

திரும்ப, திரும்ப படித்துப் பார்த்தாள். முன்பு கடிதம் எப்படி மடிக்கப்பட்டு இருந்ததோ, அதே மடிப்பு மாறாமல் மடித்து, பாதுகாப்பாக புத்தகத்தில் செருகினாள். என்ன பதில் சொல்வது? இதே கடிதத்திலேயே 'சேம் டு யூ' என்று எழுதிக் கொடுத்து விடுவோமா? மேடம் கிட்டே எப்படி இதைச் சொல்வது? அவங்க இதை எப்படி எடுத்து கொள்வார்கள்? நெகட்டிவாக மீன் பண்ணிக் கொண்டால் என்ன செய்வது? ஆனது ஆகட்டும், ப்ராங்கா சொல்லி விடுவதுதான் பெஸ்ட்.



மாலை கல்லூரி வாயிலில் இவள் வருகைக்காக தவறாமல் காத்து இருந்தான் சம்பத். அன்றே இரண்டாவது முறையாக அந்த மாருதி திவ்யாவோடு ஊர்ந்து கொண்டு இருந்தது.

மவுனத்தைக் கலைத்தான் சம்பத்.

''இதுக்கு முன்பு எங்கே படிச்சீங்க?''

''ஸ்டெல்லா மேரிஸ்தான்'' மூங்கிலில் நுழைந்த காற்றாக வெளி வந்தது குரல்.

''அரியர்ஸ் எல்லாம் இருக்கா?''

கேட்கக் கூடாத கேள்வி. ''இட்ஸ் ஆல் ரைட். இதுவரை எந்த இயருக்கும் இல்லை.''

''அப்போ இனிமேல் இருக்குமா?'' கொஞ்சம் தைரியமாகவே கேட்டான்.

''இருக்கலாம்! யார் கண்டா?'' ஷாப்டாக பதிலளித்தாள்.

''ஏன்?''

''காதலிக்கிறதா உத்தேசம்''

அவள் புறம் திரும்பி, ''அப்படின்னா காதலிக்கிறவங்க எல்லாம் அரியர்ஸ்காரங்களா?''

உடனே வேகமாக தலையாட்டி மறுத்தாள். ''நோ... நோ... நான் எல்லோரையும் சொல்லலை, என்னை மட்டும்தான் சொன்னேன்.''

''யார் என்று தெரிந்து கொள்ளலாமா?'' தயக்கமாக கேட்டாலும், மனம் முழுவதும் நீங்கள்தான் சம்பத் என்று அவள் சொல்ல வேண்டும். காது குளிரக் கேட்க வேண்டும் என்று விரும்பினான்.

''ஓ.. உங்ககிட்டே சொல்லாமலா? மிஸ்டர் அசடு'' சொல்லி விட்டு உதட்டை மடித்துக்கொண்டு சிரித்தாள். இவள் வைத்த

பெயர் சரி என்பது போல் சம்பத் அசடு வழிய திரும்பி பார்க்காமல், சாலையில் தன் கவனத்தை செலுத்தினான்.

ஆசிரமம் வந்ததும், வானில் இருந்து இறங்கிய இளைய தேவதை போல் காரில் இருந்து இறங்கினாள்.

கேட்டை திறந்து உள்ளே போகும் முன், திரும்பி மென்மையாக, மிருதுவாக, சின்ன, ரொம்ப ரொம்ப சின்ன புன்முறுவலில் தன் காதலைப் பனிப் போர்வையாகப் படர விட்டாள். அன்று விரைவாகவே சாப்பிட்டு விட்டு தன் அறைக்கு சென்று கதவை மூடிக் கொண்டு படுக்கையில் 'தொப்' என்று விழுந்தாள். சம்பத்தின் கடிதத்தை மார்போடு அணைத்து இருந்தாள். 'ஐ லவ் யூ' மனம் மட்டும் திரும்ப திரும்ப சொல்லி பார்த்தது. ச்சச்ச நாமா காதலிக்கிறோம். ச்சீ, இது ரொம்ப அசிங்கமாக இருக்கே? பலவாறு தன்னையே எண்ணிக் கொண்டு திட்டிப் பார்த்தவள் நேரம் ஆக ஆக ச்சீய் என்ற முனகலோடு தலையணையில் முகம் புதைத்தாள்.

இரவு பத்து மணி. எல்லோரும் தூங்கி விட்டனரா? என்று பார்த்துக் கொண்டே வந்த காமாட்சி வரதராஜன், ஒரு ரவுண்ட் முடிந்ததும், தன் அறைக்குள் நுழைந்தார். பேப்பர் வெயிட்டிற்கு கீழ் ஒரு வெள்ளைத் தாள் படபடத்துக் கொண்டு இருந்தது. பேப்பர் வெயிட்டரை எடுத்து விட்டு, பேப்பரை எடுத்துப் படித்தாள்.

''மேடம், நான் சம்பத்தை விரும்புகிறேன், உங்கள் அபிப்ராயம், அன்பு திவ்யா.''

''நாட்டி கேர்ள்'' உதடு உச்சரித்தாலும், இதுவரை அவர் கட்டிய மனக்கோட்டை எல்லாம் மணல் கோட்டையாக பொலபொலவென சரிந்தது. கருங்கல் கோபுரமாக அவருள் இருந்த கற்பனையை யாரோ கடப்பாரை கொண்டு இடிப்பது போல் துடித்தார். திவ்யா இந்த இல்லத்தைக் கட்டிக் காக்கப் போகிற



வள் இல்லை. அவளுக்கு என்று கவிதையாக ஒரு குடும்பம். உருவாகப் போகிறது. எங்களை விட்டுப் போகப் போகிறாளா? என்னதான் சம்பத் தான் திவ்யாவை காதலிப்பதாக கூறி இருந்தாலும், அதையே திவ்யா இவ்வளவு சீக்கிரம் கூறுவாள் என்று எதிர்பார்க்காதது வேறு, மேலும் மனத்தளர்வைக் கொடுத்தது. இவர்களைக் காதலிக்க விடலாமா? வேண்டாமா? தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தார் காமாட்சி வரதராஜன்.

## 5



மேடத்திடம் அதிகம் ஒட்டுவதை இரண்டு நாட்களாகவே தவிர்த்து வந்தாள் திவ்யா. என்ன சொல்லி விடுவார்களோ? என்ற பயம். மேடத்தின் மவுனம் என்னவோ போல் இருந்தாலும், தவறான முடிவு மட்டும் எடுக்க மாட்டாங்க என்ற நம்பிக்கை அவளுள் நிறைந்து இருந்தது. இவளும் அமைதியாகவே நடந்து கொண்டாள். மேடத்தை பார்க்கும் போதெல்லாம் ஏதோ தப்பு செய்துவிட்ட குறுகுறுப்பு உந்தித் தள்ள தலையைக் குனிந்து கொண்டாள். எத்தனை நாளைக்குத் தான் இப்படிப் பொய் நாடகம் போடுவது? அன்று திவ்யாவுக்கு பேச வேண்டிய அவசியம் வந்தது. எப்படியாவது பேச வேண்டுமே என்று காரணத்தைத் தேடியவளுக்கு, காட்ஸ் சம்பந்தப்பட்ட புக்ஸ் இரண்டு வாங்க வேண்டிய கட்டாயம் வந்ததும், நேராக மேடம் ரூமிற்கு சென்றாள்.

''குட் ஈவினிங் மேடம்.''

நமட்டு சிரிப்பு சிரித்தார் மேடம். ''குட் ஈவினிங்''

''புக்ஸ் வாங்கணும்'' பெரு விரலால் தரையிலும், ஆள் காட்டி விரலால் டேபிளின் விளிம்பிலும் கோலம் போட்டாள்.

''சரி வாங்கிக் கொள்ளலாம். இரண்டு நாளாக எங்கடா போயிருந்த?'' அன்பொழுகக் கேட்டார்.

''மேடம், அது வந்து.. நான் எந்தத் தப்பும் பண்ணலை. அவராத்தான்'' வார்த்தைகளை மென்று விழுங்கினாள்.

''நான் கேட்ட கொசினுக்கு இதுவா ஆன்சர். உன்னை பற்றி எனக்குத் தெரியாதாடா? உனக்கு விருப்பம் என்றால் குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை.''

கண்கள் பனிக்க, ''தேங்க்ஸ் மேடம்''

''அதுக்குள்ள தேங்க்ஸா? வேண்டாம். எங்களை எல்லாம் விட்டு நீ போறதா முடிவு பண்ணிட்ட பிறகு, நான் சொல்ல என்ன இருக்கு? உம்! இவ்வளவு சீக்கிரம் என்னை விட்டு நீ போவாய் என்று நான் நினைக்கலடா? உனக்கு என்று ஒரு வட்டத்தை உருவாக்கிக் கொண்ட பின், அதை அழிக்க நான் விரும்பவில்லை. எனக்குப் பின்னால் இந்த இல்லத்தை நீ நடத்துவாய் என்று கற்பனை பண்ணிட்டேன். உன்னை போல ஒருத்தியை எங்கே தேடி, எப்படி நான் உருவாக்கப் போகிறேனோ தெரியவில்லை?'' திவ்யாவுக்கும் தெரியாமல் கண்ணாடியைக் கழட்டி துடைப்பது போல் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''மேடம், என்னை நீங்க தப்பா எடை போட்டுட்டீங்க. இப்ப கூட எனக்கு சம்பத்தோட உறவு வேண்டாம் என்றால், உங்களுக்காக, உங்கள் அன்புக்காக நான் விலகிக்க தயாரா இருக்கேன்.''

''நோ.. நோ.. இந்த மாதிரி கிறுக்குத்தனமா எதையாவது சொல்லாதே. சம்பத்தைப் போல் ஒரு நல்ல பையன் கிடைப்பது ரொம்ப கஷ்டம். அவங்க பேமிலி ரொம்ப நல்ல பேமிலி. உனக்கு கிடைக்கும் இந்த நல்ல வாழ்க்கையை, கடமை என்ற பெயரில் உன்னை காலம் முழுவதும் ஆசிரமத்தில் வாட்ட நான் விரும்பவில்லை.''



''எதுக்கு மேடம், என்னை தனியாக்கிப் பேசுறீங்க? எனக்கு கல்யாணம் நடந்தால் உங்களை எல்லாம் மறந்து விடுவேனா?''

''நீ மறக்க மாட்ட, அது எனக்குத் தெரியும். உன்னால் மறக்கவும் முடியாது. அதுவும் எனக்குத் தெரியும். இங்கே வருவது தான் குறையும்.''

''இல்லை மேடம், எந்த நிமிஷமும் இந்தத் தவறு நடக்காது. என்னை இந்த அளவிற்கு உருவாக்கியதே நீங்கதான் மேடம். ஒரு காலத்தில் அன்புக்காக எவ்வளவு ஏங்கி இருக்கேன் மேடம். அன்பு என்றால் என்ன என்று உங்கக்கிட்டதான் மேடம் தெரிஞ்சிகிட்டேன். உங்களுக்கும், எனக்கும் என்னோட மேரேஜால் பிரிவு ஏற்படும் என்றால், அப்படிப்பட்ட மேரேஜ் எனக்கு வேண்டாம்'' அழுத்தமாகக் கூறினாள் திவ்யா.

சேரை விட்டு எழுந்த மேடம், ஆதரவாக அவள் தோளைப் பிடித்து, ''நீ தப்பா பேசுற. சமூக சேவை உயிர் என்றால் குடும்பம் இதயம். இதை ரொம்ப நாட்களுக்கு அப்புறம்தான் நானே தெரிஞ்சிக்கிட்டேன். அதனாலதான் என் பெயருக்கு பின்னால் இருக்கும் வரதராஜன் என்று அவர் பெயர் மட்டும் இருக்கு. அவர் இல்லை.''

''மேடம்!''

''எஸ், இதுவரைக்கும் காமாட்சி வரதராஜனை பற்றி யாருக்கும் தெரியாத உண்மையை உன்னிடம் சொல்கிறேன். நீ தப்பான முடிவு எடுத்து விடக் கூடாது என்பதால். எத்தனையோ கற்பனைகள், ஆசைகளை இதயத்தில் ஏந்திக் கொண்டுதான் என் திருமணம் நடந்தது. அப்போதே சோசியல் ஓர்க்கில் எனக்கு ஈடுபாடு இருந்தது. ஒரு வருடம் சந்தோசமாகவே இருந்தோம். ஆனால் நாள் ஆக ஆக இரவு பத்து மணிக்கு வருவது, ஏழு மணிக்கே ஓடுவது என்று சமூக

சேவையில் ரொம்ப பிஸியாகி விட்டேன். அதனால் நாங்க ஒருத்தரை ஒருத்தர் பார்த்துப் பேசுவதே ஒரு மாதம் இரண்டு மாதம் ஆகும். அவரும் சராசரி மனிதன் தானே? ஆபீசில் இருந்து வரும் போது சிரிச்ச முகத்தோட மனைவி எதிர் நோக்க வேண்டும் என்ற ஆசை இருக்காதா? எங்களுக்குள்ள விரிசல் பெரிசா விழ ஆரம்பித்தது. சட்டப்படி விவகாரத்து வாங்கிக் கொண்டோம். ஆனால் குடும்பத்திற்காக நேரம் ஒதுக்கி இருக்கக் கூடாதா? என்று இப்போது எண்ணுகிறேன். பட் டூ லேட்."

"மேடம் நீங்கள் சொல்வது எனக்குப் புரியலையே?"

"புரியாத வரைக்கும் சந்தோசம். போகப் போக நீயும் புரிந்து கொள்வாய்."

"உங்களுக்கு சம்மதம் தானே?"

"காதலிப்பதற்கு முன்பு என் சம்மதத்தை நீ எதிர்பார்த்தாயா? இல்லையே? முடிவு பண்ணிட்டு ஆசீர்வாதம் பண்ணச் சொல்லி கூப்பிடுற. பேசாமல் நான் ஆசீர்வாதம் பண்ணுவது தான் நல்லது."

"மேடம் திரும்பத் திரும்ப அப்படியே சொல்றீங்க. எனக்கு திருமணமே வேண்டாம் என்றால் கூட எனக்கு சம்மதமே. உங்கள் விருப்பம் தான் என் விருப்பம்."

அப்படியே அவளை உச்சிமுகர்ந்த மேடம் "காட் பிளஸ் யூ"

காமாட்சி வரதராஜனின் இரண்டு கைகளையும் தன் கைகளில் தாங்கி கண்களில் ஒற்றிக் கொண்டு, மென்மையாக முத்தமிட்டாள் திவ்யா.

"இனிமேல் சம்பத்தோட கார் இரவில் எல்லாம் இருக்கக் கூடாது?"



"ஏன் மேடம்?"

"வேண்டாம் என்றால் விடேன். எல்லாம் உன் நன்மைக்கு தான். சம்ஜே?"

"சமஜ்கயா" பலமாகத் தலையாட்டிக் குதூகலித்தாள்.

வேகமாக ஓடி வந்த ரேவதி, இவர்கள் இருவரும் சிரித்துக் கொண்டு இருப்பதைப் பார்த்து தயங்கியபடி நின்றாள். ரேவதி வந்ததை கவனித்த மேடம், ரேவதி அருகே வந்து, "என்ன ரேவதி?"

"மேடம், உங்களைப் பார்க்க யாரோ வந்து இருக்காங்க?"

"யாரு?"

"பேர் மரகதம் என்று சொன்னாங்க."

"மரகதமா?" உற்சாகம் தொற்றிக் கொள்ள, "ஓடு.. ஓடு.. உடனே கூட்டி வா" ரேவதி ஓடியதும், திவ்யாவைப் பார்த்து விஷமமாக சிரித்தார் மேடம்.

"மேடம், நான் ரூமிற்கு போறேன். டென்த் படிக்கிற சுசீலாவிற்கும், ரமாவிற்கும் ஏதோ மேக்ஸில் டவுட்டாம். அதைக் க்ளியர் பண்ணனும். நம்ம ரவி ப்ராக்டிகலில் டெஸ்ட் ட்யூபை ஒடச்சிட்டானாம். உங்ககிட்டே சொல்லப் பயப்படுறான். பைன் கட்டணுமாம்."

"சரி.. சரி.. அதைப் பற்றி அப்புறம் பேசலாம். ஒரு முக்கியமான கெஸ்ட் இப்போ வராங்க."

"யாரு மேடம், இந்த மரகதம்?"

"நம்ம கெஸ்ட்"

"நம்ம கெஸ்டா?" 'ப்ளச்' என்ற சத்தம் வர உதட்டைப் பிதுக்கிக் கொண்டு நகர்ந்தாள்.

நல்ல பொன்நிறம்... கொஞ்சம் குண்டு.. அழகான முகத்தில் வட்டமான நிலவு போன்ற குங்குமப் பொட்டு. உடலைக் காஞ்சிபுரம் பட்டு பெரிய பார்டரோடு தழுவி இருந்தது. கண்களில் வயதுகேற்ற கண்ணாடி. இடது கையில் அழகான ஸ்டாப் வைத்த ரிஸ்ட் வாட்ச். வலது கையில் முத்துக்கள் பதித்த ஒரு தங்க வளையல். மொத்தத்தில் நகைக் கடை அலங்காரப் பொம்மையாக மரகதம் மருதநாயகம் ஜொலித்தார்.

''வாட் எ ப்ளசண்ட் சர்ப்ரைஸ். ப்ளீஸ் வெல்கம்.''

''எனக்கு எதுக்கு இந்த வரவேற்பு ஏல்லாம்'' அடக்கமாகச் சிரித்தார் மரகதம்.

''ஆசிரமம் நன்றாக நடக்கிறதா?''

''ஓ... பேஷா.. உங்களைப் போல பெரிய மனிதர்கள் கொடுக்கும் டொனேசனில் தானே இந்த ஆசிரமமே நடக்கிறது. சோ, இதுவரை எந்த ப்ராப்ளமும் இல்லை, இனியும் இருக்காது'' சிரித்தார்.

''பார்த்தீங்களா? பேசிக் கொண்டு இருப்பதில் வந்த விஷயத்தை மறந்திட்டேன். ஹூ இஸ் திவ்யா?''

''ஏன்?''

''தெரியாத மாதிரி கேட்கிறீர்களே? மேடத்திற்கு எல்லாம் தெரியும் என்றான்.''

''யாரு?''

''சம்பத்''

''நான் சொல்ல என்ன இருக்கு?''

''இது விலகிப் போற பேச்சு. சம்பத்திற்கு ரொம்ப பிடிச்சி இருக்கும் போல இருக்கு. எங்களைப் பொருத்தவரைக்கும் நோ அப்சக்ஸன். அவருக்கும் சரி, எனக்கும் சரி. வர்ர



பொண்ணு பணக்காரியாக இருக்கனும் என்று இல்லை. நல்ல குணம் உள்ள பொண்ணா இருக்கனும். மம்தாவையும், விக்னேஷையும் பார்த்துக் கொள்ளும் ஒரு அண்ணிதான் எங்களுக்குத் தேவை. அது மட்டும் இல்லை. உங்கள் வளர்ப்பில் அவள் வளர்ந்து இருக்கின்றாள் என்று எண்ணும் போதே, அவள் எப்படி இருப்பாள்? என்று என்னால் ஊகிக்க முடிகின்றது. அதனால் முறையா பொண்ணு கேட்டு வர்ற ப்ரைடே வர்றோம். உங்கள் ஒப்பீனியன் என்ன?''

''நான் சொல்ல என்ன இருக்கு. திவ்யாவும், சம்பத்தும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறாங்க.''

''அந்தப் பொண்ணை நான் பார்க்கலாமா?''

''வித் க்ரேட் பிளஷர்'' பெல் அடித்து, திவ்யாவை வரச் சொல்லி உத்தரவிட்டார். அடுத்த இரண்டு நிமிடத்தில், அங்கு திவ்யா ஆஜரானாள்.

''எஸ் மேடம்.''

''ரவி, எவ்வளவு பைன் கட்டனும்?''

''தெரியலை மேடம். கேட்டுச் சொல்றேன்'' இருவரும் பேசிக் கொண்டு இருக்கும் போதே.

திவ்யாவின் காலில் இருந்து தலைவரை நோட்டம் விட்டாள் மரகதம். மரகதத்தின் முகத்தில் திருப்தி ஹண்ரட் பர்சண்ட் நிலவியது. சம்பத்திற்கு சரியான ஜோடிதான். இப்படி ஒரு பெண் இங்கு இருக்கும் போது, எப்படி மற்ற பெண்களை அவன் பிடிக்கும் என்பான்?

திவ்யாவைப் போகச் சொல்லட்டுமா? என்பது போல் மரகதத்தை பார்த்தார் மேடம். மரகதமும் கண்ணசைத்தார்.

''சரி நீ போடா. ரவியைக் கொஞ்சம் நேரம் கழித்து வரச் சொல்.''

போகும்போது மரகதத்தை ஒரு பார்வை பார்த்து விட்டுப் போனாள் திவ்யா.

''பொண்ணு நல்லா இருக்காளா?''

''ரொம்ப ரொம்ப.. அவளோட அப்பா, அம்மா இவங்களை பற்றி ஏதாவது.''

ஒரு நீண்ட பெருமூச்சு காமாட்சி வரதராஜனிடம் இருந்து வந்தது. ''அவளுக்கு யாரும் இல்லை. தான் ஒரு அனாதை என்று சொல்லித்தான் இங்கு வந்தாள்.''

''பொய் சொல்லி இருக்கலாம் இல்லையா?''

''ச்சேச்ச. அப்படிப்பட்ட பொண்ணு அவள் இல்லை. சொல்லப் போனால் உங்களுக்கு ஏற்ற மருமகள். பொய் பேசுபவர்களைக் கண்டால் பிடிக்காது.''

''அப்போ''

''அவளுக்கு என்று நாங்கதான். உறவுமுறைகள் எதுவும் இல்லை'' இந்த வார்த்தை எவ்வளவு பெரிய விபரீதத்தை உண்டாக்கி, வேடிக்கை பார்க்கப் போகிறது என்று அப்போது காமாட்சி வரதராஜனுக்குத் தெரியவில்லை.

## 6



அந்த வாரமே வெள்ளிக்கிழமை ஆசிரமத்தில் எளிய முறையில் திவ்யா, சம்பத் நிச்சயதார்த்தம் நடந்தேறியது. என்னதான் திவ்யா, அழகாக, நல்லவளாக இருந்தாலும், சம்பத் இவளை மனமார விரும்பினாலும், பதினேழு வயதில்,



நன்றாக விவரம் தெரிந்த அந்த இளம் வயதில்தான் ஆசிரமத்தை நாடி வந்திருக்கின்றாள். அவள் தாய், தந்தை யார்? அவர்கள் எப்படி இறந்தார்கள்? எங்கு இருந்தார்கள்? எந்த விவரமும் காமாட்சி வரதராஜன், மரகதத்திற்கு தெரிவிக்காதது. மரகதத்திற்கு என்னவோ போல் இருந்தாலும், அப்படி எதுவும் சிக்கல் இருந்தால் சொல்லி இருக்க மாட்டாரா? என்ற எண்ணத்தில், மனதில் உறுத்திய அந்த ஒரு எண்ணத்தையும் கைவிட்டார் மரகதம்.

நிச்சயதார்த்தம் நடந்த இரண்டு நாள் கழித்து, மேடத்தின் அனுமதி பெற்று தன் தாயின் வேண்டுகோளின்படி திவ்யாவை சம்பத் தன் வீட்டிற்கு கூட்டி வந்தான். வெட்கமா? நாணமா? தயக்கமா? எதுவென்று தெரியவில்லை. ஆனால் ஏதோ ஒன்றினால் பேசாமலேயே கண்களைத் தெருக்களின் இரண்டு பக்கமும் அலைய விட்டாள் திவ்யா.

அவளிடம் எதையாவது பேசி பதில் வாங்கிக் கொண்டே வந்தான் சம்பத். சுபமங்களம் என்று எழுதப்பட்ட அந்த பெரிய பங்களா முன் நின்றது சம்பத்தின் கார். வாட்ச்மேன் அவசர அவசரமாக கேட்டின் கதவை க்ரீச் என்ற சத்தம் எழும்ப வேகமாகத் திறந்தான். ப்ரேக்கில் இருந்து சம்பத் லேசாக காலை எடுக்க, பங்களா போர்டிகோவை நோக்கி வாயில் விழுந்த குலோப்ஜாமைப் போல் வழுக்கிக் கொண்டு போய் ஒரு வட்டமடித்து நின்றது.

முன் கதவைத் திறந்து கொண்டு இறங்கிய சம்பத், பின் கதவையும் திறந்து,

'ம் இறங்கு'

தீபாவளிக்கு வந்த திருட்டுக் கோழி கணக்காய் 'ஙே' என்ற முழிப்போடு தயக்கமாக இறங்கினாள்.

பங்களாவின் வெளிப்புற தோற்றமே, திவ்யாவுக்கு மயக்கத்தை கொடுக்கும் அளவிற்கு நுட்பமான கலையோடு

கோபுரமாக உயர்ந்து நின்றது. 'அடேயப்பா இவ்வளவு பெரிய வீடா, இந்த அளவிற்கு இவங்க பெரிய ரிச் பேமிலியா? ம்கூம் சத்தியமாக இங்கே நான் குப்பை கொட்ட மாட்டேன்.' பிளந்து இருந்த வாயை மூடக்கூட தோன்றாமல், அதிசயித்து நின்றாள்.

''ஏய்'' லேசாக தோளை தொட்டு உலுக்கினான், சுயநினைவிற்கு வந்த திவ்யா ''என்ன? என்ன வேணும்?''

''வீட்டுக்குள்ளே வா'' ஒரு அடி முன்னால் நடந்தான். அவன் பின்னால் பட்டிக்காட்டான் மிட்டாய் கடையைக் கண்டது போல் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே வந்தாள். சினிமாவில் தான் இப்படிப்பட்ட பங்களாவைப் பார்த்து இருக்கின்றாள். இந்த ஆடம்பரமான பங்களாவில் ஆபத்து இல்லாமலா இருக்கும்? ஒருவேளை காண்பது கனவா? நனவா? தன் உள்ளங்கையைக் கிள்ளிப் பார்த்தாள். உஷ் வலிக்குது. அடிவயிற்றில், பந்தாக ஏதோ சுருண்டது. இந்த வீட்டில் நாம் நிலைக்க மாட்டோம் என்று உள்ளுணர்வு உறுத்தியது. ஆடம்பரமான ஹால், எல்லாமே பளிங்குக் கற்கள். காஷ்மீர் ரத்தினக் கம்பளம், விலையுயர்ந்த சோபா செட்டுக்கள். இவற்றிற்கு நடுவே கண்ணாடியால் ஆன டீபாய், மேலே யோசிக்கவோ, பார்க்கவோ விடாமல் அவளை மரகதத்தின் குரல் தடுத்து நிறுத்தியது.

''உள்ளே வாம்மா''

தயக்கமாக சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே இரண்டு பற்கள் மட்டும் தெரிய சிரித்தாள்.

''உட்காருமா?''

மிகுந்த தயக்கத்தோடு சோபாவின் நுனியில் அமர்ந்தாள். திவ்யாவின் பக்கத்திலேயே மரகதமும் உட்கார்ந்தார். அப்போது மருதநாயகம் மாடியில் இருந்து இறங்கி வந்து கொண்டு இருந்தார். கம்பீரமான தோற்றம். உப்பலான



கன்னங்கள், செயினோடு தொங்கிய ஸ்பெக்ஸ். காதோரம் இருந்த முடிகளை நரைக்கு ஏலம் விட்டு இருந்தார். கண்களில் ஒரு காந்தப் பார்வை, நேருக்கு நேராக சந்திக்க முடியாத ஈர்ப்பு சக்தி அதனுள் இருந்தது.

அவரைப் பார்த்ததும் படக் என்று எழுந்து நின்றாள் திவ்யா.

''பரவாயில்லம்மா, உட்கார்'' குரலில் கட்டுப்பாடும் கலந்து ஒலித்ததால் திரும்பவும், திருட்டு முழிமுழித்துக் கொண்டு அமர்ந்தாள்.

திவ்யாவின் தடுமாற்றத்தைப் பார்த்து, மனதுக்குள் சிரித்த சம்பத், 'எதுக்கு பயப்படுறே?' என்பது போல் பார்வையால் தெம்பு கொடுத்தான்.

மருதநாயகம் நேரடியாக திவ்யாவிடம் கேள்விகளைத் தொடுக்கலானார்.

''சம்பத்தை உனக்குப் பிடிச்சிருக்காம்மா?''

தலையாட்டினாள்.

''பயந்து போய் இருக்கற மாதிரித் தெரியுது. ரிலாக்ஸ். நீ நாளைக்கு வாழப் போற வீடு, பயப்படாம பேசும்மா. என்ன புரியாம பாக்கறே, கல்யாணத்திற்கு சம்மதம் சொல்லிட்டோம் என்றா? இந்த காலத்தில் இதெல்லாம் ரொம்ப சகஜம். இந்த வீட்டிற்கு வரும் முதல் மருமகள், புது சொந்தம், அதனால் எங்களைப் பற்றி தெரிந்து கொண்டால், உனக்கு கொஞ்சம் நன்றாக இருக்கும். இல்லையா?''

மீண்டும் தலையாட்டினாள்.

''அதற்காகத்தான் சம்பத் உன்னை அழைத்து வந்து இருக்கிறான். எனக்கு பிசினஸ் விஷயமா வெளியே போக வேண்டி இருக்கின்றது. வரேம்மா, வரேன் மரகதம்'' எழுந்தவர், திவ்யாவின் தலையில் ஆதரவாக கையை வைத்து, ''நீ இந்த வீட்டிற்கு மருமகளாக வருவதில் ஐ ஆம் சோ ஹேப்பி.''

ஒரு நிமிடம் இந்தப் பிரபஞ்சத்தையே மறந்த மாதிரி ஒரு உணர்வு. ஊட்டி, காஷ்மீர், எவரெஸ்ட் இங்கெல்லாம் இருக்கும் குளிரை எடுத்து அவள் தலையில் வைத்தது போல் உறைந்து போய் உட்கார்ந்தாள். எவ்வளவுதான் வாயடித்தாலும், படபடவென பொரிந்து தள்ளினாலும், முக்கியமான சமயத்தில் மட்டும் வாய் ஊமையாகி விடுகின்றது. ரொம்ப நாளைக்கு பிறகு மாமனார் என்ற வடிவில், தந்தையின் பாசத்தோடு இப்படி ஒரு கரம் தன் தலையில் கை பதிக்கும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. இப்படி ஒரு குடும்பமா? இப்படி ஒரு அன்பா? எப்படிப்பட்ட பாசம், இது எல்லாம் எனக்கா? எனக்கா?

டிபன், காபியோடு சமையல்காரர் வந்ததும்,

மரகதம், திவ்யாவைக் கூட்டிக் கொண்டு டைனிங் டேபிளுக்கு சென்றார். நடப்பது ஒவ்வொன்றும் விசித்திரமாகவும், அதிசயமாகவும் பட்டது அவளுக்கு.

''ஏம்பா, விக்னேசும், மம்மதாவும் எங்கே?''

''மாடியிலதாம்மா, இருக்காங்க, பணிவோடு பதிலளித்தான் சமையல்காரன்.''

''சம்பத், திவ்யா இன்று வருவது இரண்டு பேருக்கும் தெரியுமில்லை?''

''தெரியாது மம்மி. நான்தான் சொல்லலை, ஒரு ஸர்ப்ரைசா இருக்கட்டும் என்று'' திவ்யாவைப் பார்த்து கண் சிமிட்டினான்.

''கூட்டி வரட்டுமாம்மா?''

''நீங்க வேண்டாம். நான் போய் கூட்டி வருகின்றேன்.'' தன் கனத்த சரீரத்தை தூக்கிக் கொண்டு மூச்சு வாங்க மாடிப் படிகளில் ஏறினார் மரகதம். மரகதம் அந்தப்புரம் திரும்பியதுமே, அவளை சீண்ட ஆரம்பித்தான் சம்பத்.



''ஏய், உட்கார், ஏன் நின்று கொண்டு இருக்க?''

''பரவாயில்லை.''

''சொன்னா கேட்க மாட்ட'' அவள் கையைக் பிடித்து, இழுத்து உட்கார வைத்தான். பின்பு டைனிங் டேபிளில் முழங்கையை ஊன்றி, முகவாய்க்கு முட்டுக் கொடுத்தபடி அவளைப் பார்த்து சிரித்தான்.

''என்னோட டாடியைப் பிடிச்சி இருக்கா?''

''சாஸ்டாங்கமா விழுந்து கும்பிடணும் போல இருக்கு.''

உம் என்று தலையாட்டியவன், ''மம்மி எப்படி?''

''நல்ல டைப்''

இவர்கள் இருவரும் கிசுகிசுப்பாக பேசிக் கொண்டு சிரிக்கும்போதே மம்தாவும், விக்னேசும் வேகமாக படி இறங்கிக் கொண்டு இருந்தார்கள்.

ப்ரவுன் கலரில் சின்னச் சின்ன பூப்போட்ட மிடியுடன் மம்தாவும், ஒயிட் அன் ஒயிட் பைஜாமாவில் விக்னேசும் வந்தார்கள். சம்பத்தின் நிறமும், சாயலும் அப்பட்டமாக இவர்களிடம் தெரிந்தது.

வேகமாக வந்த மம்தா, திவ்யா அருகில் உள்ள சேரில் வந்து அமர்ந்தாள். அவள் கையை எடுத்து தன் கைகளுக்கு நடுவில் வைத்து, இதமாக அழுத்தி, ''ஐ ஆம் மம்தா, சம்பத்தோட சிஸ்டர். சேம் டைம் ப்யூச்சரில் உங்களோட சிஸ்டர் இன் லா'' சிரிக்கும் போது கீழ் வரிசை பற்கள், இடம் மாறி முளைத்து இருப்பது தெரிந்தது. அவள் முகத்திற்கு அதுவும் அழகாக இருந்தது. லேசாக இதழை அசைத்தாலே கன்னம் இரண்டிலும் குழி விழுந்தது. பேசும்போதே நுனிநாக்கில் ஆங்கிலம் சரளமாகப் புகுந்து விளையாடியது.

திவ்யாவின் பின்புறம் விக்னேஷ் நின்று கொண்டு இருந் தான்.

'சுனோ'

பின்னால் திரும்பி பார்த்தாள்.

"மேரா நாம் விக்னேஷ் ஹை. சம்பத் கா சோட்டா பாயி ஹை"

சிரித்தான் சம்பத். "இவங்க இரண்டு பேருகிட்டேயும் கொஞ் சம் ஜாக்கிரதையாக இரு. இவ இங்கிலீஸ்லேயே அறுப்பா. இவன் இந்தியிலே அறுப்பான்."

வேகமாக தலையாட்டி மறுத்த விக்னேஷ்.

"எய் பாபி. பையா ஜுட் போல்தா ஹை"

"பார்த்தியா, திரும்ப இந்தியிலேயே அறுக்குறான்."

"பாபி, ஆப் கோ இந்தி மாலும் ஹை"

"ஹாங். முஜே இந்தி தோடா தோடா மாலும் ஹை" சந்தோஷத்தில் ஆர்ப்பரித்தாள், திவ்யா.

'ஹர்ராப்' மம்தாவும், விக்னேசும் கத்தினர்.

இவர்கள் பேச்சிலும், செயலிலும், தோளோடு தோள் ஒட்டிக் கொண்டதிலும் என்ன ஒரு ஆத்மார்த்தமான அன்பு.

அன்னியோன்யம்!

பிரிவு!

பாசம்!

வெகுநாட்களாகப் பழகியது போன்ற பந்தம்.

பேச்சுக்கு பேச்சு உரிமை கொண்டாடுதல். இந்த அன்பு எல்லாம் எனக்கா. இதுக்கு எல்லாம் நான் எப்படி திரும்ப



அன்பைக் கொடுக்கப் போறேன்? வாய்விட்டு அழ வேண்டும் போல் இருந்தது. திவ்யாவிற்கு (சந்தோஷத்தில்தான்).

அன்று மதியம் வரை திவ்யாவை சுற்றி மரகதம், மம்தா, விக்னேஷ், சம்பத் அந்த வீட்டில் வேலை செய்பவர்கள் எல்லாம் சுற்றி அமர்ந்து கொண்டு, பார்த்தது கேட்டது, படித்தது என்று எல்லாவற்றையும் பேசினர்.

கண்களை மூடிக் கொண்டு கனவு காண ஆரம்பித்தான், சம்பத். சினிமா செட்டிங்ஸ் எல்லாம் கண் முன்னால் ஆடியது. கற்பனைக்கு எட்டாத பூஞ்சோலை எல்லாம் பூத்துக் குலுங்கின.

சம்பத் கனவு கண்டு முடிக்கவும், விக்னேஷ் தொட்டு உலுக் கவும் சரியாக இருந்தது. "திவ்யாவை கொண்டு போய் இல் லத்தில் பத்திரமாக விட்டுட்டு வா" மரகதம் கட்டளை பிறப் பித்தார்.

சம்பத்திற்கு ஏனோ தெரியவில்லை. பெருமையாக இருந்தது.

இல்லத்தில் அவளை விடும்போது,

'திவ்யா'

'ம்'

'உன்னை நினைத்தால், எனக்குப் பெருமையாக இருக் கின்றது. ரியலி ஐ ஆம் ப்ரவுட் ஆப் யூ.'

வெட்கப்பட்டு சீட்டைப் புரண்டினாள்.

"ஒரு சின்ன ரிக்வெஸ்ட்"

"என்னங்க! சொல்லுங்க."

"கல்யாணம் ஆவதற்கு முன்னால், ஒரே ஒருமுறை எல்லை மீறட்டுமா?"

அதிர்ந்தாள், திவ்யா.

"பட்டும்படாமல், சின்னதா உன்னோட கையில் ஒரு கிஸ்."

அவன் முகத்துக்கு நேராக தன் வலது கையை நீட்டினாள்.

பூமாலையைத் தூக்குவது போல் அவள் கையைத் தூக்கி தன் இதழை அவள் உள்ளங்கையில் பதித்தான். அப்படியே கையை மூடிக் கொண்டாள், அவள்.

''என்னங்க நான் ஒன்று கேட்டால் தப்பாக நினைக்க மாட்டீர்களே?''

''ம்கூம் மாட்டேன்.''

''உங்கள் வீட்டில் எதிர்ப்பே இல்லையா? எல்லாருமே வித்தியாசமாக இருக்காங்க. ஆச்சரியமாக இருக்கே?''

''இதிலே ஆச்சரியப்பட என்ன இருக்கு?''

''ஆச்சரியம் தான். இவ்வளவு பணக்காரங்களா இருந்து கொண்டு என்னை மருமகளா ஒத்துக் கொள்வது என்றால் ரொம்ப ரொம்ப பெரிய மனசு வேணுங்க.''

''அப்போ எங்களுக்கு பெரிய மனசுங்கறியா?''

''ஐய்ய. அசடு வழியுது. உங்களுக்கு இல்லை. மற்றவர்களுக்கு தான் ரொம்பப் பெரிய மனசு.''

''என்னோட டாடியும், மம்மியும் பச்சை கொடி காட்ட மாட்டார்கள் என்று நினைத்தாயா?''

''ஆமாம். இவ்வளவு சீக்கிரம் இந்த விசயம் சாப்டாக முடியும் என்று நான் நினைக்கவில்லை. உங்களை வீட்டை விட்டுப் போகச் சொல்லி, நாம் ரிஜிஸ்தர் ஆபீசில் மாலையை மாற்றிக் கொண்டு பேரனோ பேத்தியோ பெத்தெடுக்கும் போதுதான் கொஞ்சமாவது சமாதானம் ஆவார்கள் என்று நினைத்தேன்.''

''நீ அப்படி வரியா. நீ ஒரு முஸ்லீமாகவோ, கிறிஸ்டியனாகவோ இருந்தால் இந்த ஜென்மத்தில் நம்மை அவர்கள் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்.''



'ஏன்?'

''மம்மிக்கும், டாடிக்கும் வேறு மதத்தில் அப்படி ஒரு வெறுப்பு. எங்கள் ஆபீசில் வேலை செய்பவர்கள் எல்லோரும் ஹிண்டுஸ்தான். டாடிக்கு வேறு மதத்தில் ஒரு ப்ரண்ட் கூட இல்லை.''

646037

''அப்படி என்றால்''

''சப்போஸ் உனக்கு அப்பா, அம்மா இருந்து, உன்னோட அண்ணனோ, அக்காவோ வேறு மதத்துகாரங்களை லவ் பண்ணி மேரேஜ் பண்ணி இருந்தால் கூட, நாம் சேர்வது ரொம்ப கஷ்டம்.''

''அப்போ என்னைக் கைவிட்டு விடுவீர்களா?''

''ஏய். எதுக்கு இப்போ இதெல்லாம் பேசுகிறாய், நீதான் இந்துவாச்சே, நோ ப்ராப்ளம், வீணாக மனதை போட்டு குழப்பிக் கொள்ளாதே, சீ யூ டுமாரோ.''

சம்பத்தின் கார் தெரு முனையை தாண்டியதும், அதுவரை மூடி பாதுகாத்து வைத்து இருந்த சம்பத்தின் முத்தத்தை கைகளை விரித்துப் பறக்க விட்டாள். அதுவரை அசையாமல் இருந்த நம்பிக்கை என்னும் அஸ்திவாரம் பலமாக ஆட்டம் கண்டது.

CPL 646037

## 7

891.8113 UMA

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம்.

ப்ளாக் கலர் கோட் சூட்டோடு, மருதநாயகம் நின்றிருந்தார். கையில் ஒரு சின்ன அரிஸ்ட்ரோகிராட் சூட்கேஸ்

CONNEMARA PUBLIC LIBRARY

இருந்தது. அடிக்கடி மணியைப் பார்ப்பதும், சம்பத்திடம் பேசுவதுமாக இருந்தார்.''

''ஏன் டாடி நிக்கணும்? வாங்க அங்கே போய் உட்கார லாம்.''

காலியாக இருந்த இரண்டு சேரைப் பார்த்து இருவரும் அமர்ந்தார்கள். அப்போது விமான அறிவிப்பு வெளியானது.

''சென்னையில் இருந்து பாம்பே செல்லும் இந்தியன் ஏர் லைன்ஸ் விமானம் இன்னும் பத்து நிமிடங்களில் புறப்பட இருக்கிறது.''

ஏர் போர்ட்டில் இருந்த பலருக்கு சுறுசுறுப்பு தொற்றிக் கொண்டது. மருதநாயகம் கிளம்பினார்.

''பை சம்பத்''

''பை டாடி''

**பா**ம்பே ஏர்போர்ட் (சாந்தா குரூஸ்).

கஸ்டம்ஸ் முடிந்து ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்தார் மருதநாயகம். பக்கத்தில் டாக்ஸி ஸ்டேண்ட் இருக்குமா? என்று யோசித்தவர், அருகில் இருந்த ஒரு இந்தி மொழி பேசும் இந்தியரை நெருங்கி.

''எக்ஸ்கியூஸ் மீ.''

அந்த இந்தியர் திரும்பவில்லை.

அவர் முன்னால் போய்...

''சார் வேர் ஈஸ்...'' மருதநாயகம் முடிக்கவில்லை.

''பை சாப். ஆப் இந்திமே போலியே, முஜே அங்ரேஜ் நஹி மாலும்.''



மருதநாயகத்திற்கு 'அச்சா' என்ற ஒரு இந்தி வார்த் தையைத் தவிர வேறு வார்த்தை மருந்துக்குக் கூடத் தெரியாது. ஒன்றும் புரியாமல்... அச்சா.. அச்சா..என்று தலையாட்டி அங்கிருந்து நகர்ந்தார்.

அடச்சே, சம்பத்தை அனுப்பி இருக்கலாம். மொழி தெரியாத இடத்தில் மாட்டிக் கொண்டு முழிப்பதாக இருக் கின்றது. யாருக்கு ஆங்கிலம் தெரியும் என்று எப்படிக் கண்டு பிடிப்பது? வாய் விட்டு தமிழிலேயே முனகினார்.

''எக்ஸ்கியூஸ் மீ.''

திரும்பிப் பார்த்தார்.

''கேன் ஐ ஹெல்ப் யூ? நீங்கள் மதராஸியா?''

ஆயிரம் பூக்கள் ஒன்றாக மருதநாயகம் முகத்தில் மலர்ந்தது.

''ஆமாம். உங்களுக்கு தமிழ் தெரியுமா?''

''நான் தமிழ்நாட்டுக்காரன் சார்.''

''பார்த்தால் அப்படித் தெரியலையே?''

''நான் பாம்பே வந்து செட்டில் ஆயி, முப்பது வருடம் ஆகின்றது.''

''ஓ அப்படியா. நான் பிசினஸ் விசயமா பாம்பே வந்தேன், இந்த அட்ரஸிற்கு போகணும் கொஞ்சம் ஹெல்ப் பண்ண முடியுமா?''

''ஓ எஸ்.. அட்ரஸைக் கொடுங்க.''

தன்னிடம் இருந்த பிசினஸ் பார்ட்னரின் விசிட்டிங் கார்டைக் கொடுத்தார் மருதநாயகம்.

''வாங்க என்னோட கார்லேயே போய் விடலாம்.''

''உங்களுக்கு எதுக்கு சிரமம்? ஆங்கிலம் தெரிந்த டாக்ஸிக் காரர் ஒரு வரை அறிமுகப்படுத்தினால் போதும்.''

''எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை. உங்களுக்கு ஹெல்ப் பண்ணுவதில் சந்தோசமே.''

''உங்கள் பெயர் என்ன?''

சொன்னார்.

''என்ன செய்கிறீர்கள்?''

''கிராபைட் கற்கள் இருக்கு இல்லையா? அதை பாலிஷ் பண்ணி, பல டிசைன்ல அதர் ஸ்டேட்ஸ் அன்ட் கன்ட்ரிக்கு ஏற்றுமதி பண்றேன். ஆமாம் நீங்கள் என்ன பண்ணுறீங்க?''

''என்னோட பெயர் மருதநாயகம். நானும் பிசினஸ் மேன் தான். ஊட்டியில ஒரு ஐநூறு ஏக்கர் தேயிலை எஸ்டேட் இருக்கு. இப்போ எங்கள் கம்பெனி தயாரிக்கும் மம்தா காபியில், இன்னும் எக்ஸ்ட்ரா நறுமண பொருள் எல்லாம் சேர்த்து, லேபில் கொடுத்து, டெஸ்ட் பண்ணி ரிசல்ட்டை தெரிந்து கொண்டால் ப்ராப்ளம் இருக்காது இல்லையா? அதுதான் இந்த பாம்பே ட்ரிப்.''

கார் ஏர்போர்ட்டை விட்டு, ஐந்து கிலோ மீட்டர் கடந்து வந்து கொண்டு இருந்தது.

''குழந்தைகள் வொய்ப்?''

''மூன்று குழந்தைகள் இரண்டு பையன், ஒரு பொண்ணு. பையன் பிசினஸ் மேனேஜ்மெண்ட் முடித்து எனக்கு ஹெல்ப் பாக இருக்கிறான். பொண்ணு ப்ளஸ் டூ, பையன் டென்த். வொய்ப் சோசியல் ஒர்க்கர். உங்கள் குடும்பத்தை பற்றி ஒன்றும் சொல்லவே இல்லையே?''



''ஒய்ப் இறந்து பத்தொன்பது வருடம் ஆகின்றது. இரண்டு பையன்கள், இரண்டு பொண்ணுங்க. பையனுங்க இரண்டு பேருமே டாக்டர்ஸ். மருமகள்கள் இரண்டு பேரும் டாக்டர் கள் தான்.''

''பொண்ணுங்க என்ன பண்றாங்க?''

''சின்னபொண்ணு சூசைட் பண்ணிக் கொண்டாள்.''

''மை காட்.''

''பெரிய பொண்ணு ஆக்ஸிடெண்டில் செத்துப் போயிட்டா.''

''ரியலி. இட் வாஸ் கிரேட் சாரோ!''

''என்ன குறையை என்னிடம் பார்த்தார்களோ தெரிய வில்லை'' சலனம் இல்லாமல் அவர் சொன்னாலும், குரல் என் னவோ சோகத்தையும், ஏக்கத்தையும் தாங்கிக் கொண்டுதான் வந்தது.

''கேட்க மறந்திட்டேனே? எங்கே தங்கப் போறிங்க?''

''ஹோட்டல் தான்.''

''நம்ம வீட்டில் தங்கிக் கொள்ளுங்கள்.''

''நோ தேங்க்ஸ். இந்த ஹெல்பே ரொம்பப் பெரியது.''

கார் பெரிய கம்பார்ட்மெண்ட் முன்னால் நின்றது.

''நீங்கள் சொன்ன கம்பார்ட்மெண்ட் இதுதான்.''

காரில் இருந்து இறங்கிய மருதநாயகம், அவரின் கைகளைக் குலுக்கி'' ரொம்ப தேங்க்ஸ்'' என்றார்.

''இந்தாங்க. இதுதான் என்னோட விசிட்டிங் கார்ட். மத ராஸ் திரும்புவதற்கு முன் என்னோட வீட்டிற்கு கண்டிப்பாக வரணும்.''

''டெபெனட்டா, வரேன்.''

''சி யூ அகேன்.''

''அச்சா, மே சல்தா கூம்.''

''புரியலையே சார்.'' மருதநாயகம் சிரித்தார்.

அவரும் சிரித்தார். ''வரேன் சார்.''

அவர் கார் கண்ணில் இருந்து மறைந்ததும் அப்பார்ட் மெண்டை அன்னாந்து பார்த்தார். ரத்னா காம்ளெக்ஸ் அன்ட் ஹோட்டல் என்ற பெரிய பெரிய எழுத்துக்கள் மின்னிக் கொண்டு இருந்தது. உள்ளே நுழைந்து நேராக லிப்டில் போய் நின்றார். செவன்த் ப்ளோரை அடைந்ததும், லிப்டில் இருந்து வெளிப்பட்டார். செவன்த் ப்ளோரில் உள்ள ரிசப்ஷனிஸ்டிடம் சென்று விசிட்டிங் கார்டை நீட்டினார்.

மிஸ்டர் சதாசிவம். மனதில் குறித்துக் கொண்ட பெயரை தன் வெண்டை விரலால் ஒவ்வொரு பேப்பராக ரெஜிஸ்தரில் புரட்டினாள். அந்த இள நங்கை, ''மிஸ்டர் சதாசிவம், ரூம் நம்பர் பைவ் நாட் எய்ட்.''

''தேங்க் யூ மிஸ்.''

அழகாக சிரித்து, அவர் நன்றியை ஏற்றுக் கொண்டாள்.

சூட்கேஸை இடது கையில் லாவமாகத் தூக்கிக் கொண்டு, ஒவ்வொரு அறையாக நம்பரைப் பார்த்து கொண்டே வந்தார். அந்த வரிசையில் இருந்த கடைசி ரூம் பைவ் நாட் எய்ட் என்று இருந்ததும்,

பஸ்ஸரை அழுத்தினார்.

''எஸ், கமின்''

ஆட்டோமேட்டிக் டோரைத் தள்ளிக் கொண்டு தன் எண் பத்தைந்து கிலோ வெயிட்டை உள்ளே திணித்துக் கொண்டு திரும்பிய போது, கதவு சாத்திக் கொண்டது.



''அட, மிஸ்டர் மருதநாயகம் நீங்களா?''

''நான்தான். சந்தேகமா?''

''முன்னமே தகவல் சொல்லி இருந்தால், ஏர்போர்ட் வந்து பிக்கப் பண்ணி இருப்பேனே? தகவல் இல்லாமல்...?'' சதாசிவம் ஆச்சரியத்தின் விளிம்பில் இருந்து இறங்காமலே பேசினார்.

''காபியோட லேப் டெஸ்ட் பார்த்து முடிவு பண்ணலாம் என்று வந்தேன்.''

''ஷ்யூர்.. வாங்க வீட்டிற்கு போகலாம்.''

''இல்லை... இல்லை... நேரா லேபிற்கு போறோம். வந்த வேலையை முடித்த பின்னால்தான்'' மறுத்தார் மருதநாயகம்.

''அஸ் யூ லைக், ஒன் மினிட், நான் ரெடியாகி விடு கின்றேன்.''

போன் பண்ணி சிட்ரா சூப்பர் கூலரை வரவழைத்தார். வெயிட்டர் வந்து போனதும், சதாசிவம் பாத்ரூமில் நுழைந்து கதவை மூடிக் கொண்டார். தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு சோபாவில் சாய்ந்த மருதநாயகம், வீக்லி மெகசினைப் புரட்டினார்.

சோப்பின் மணம் கமழ பாத்ரூமில் இருந்து வெளிப் பட்டார் சதாசிவம்.

பேஸ் வாஷ் பண்ணிக் கொள்ள பாத்ரூமில் நுழைந்த மருதநாயகம், வெளி வந்தவுடன் ''ஏம்பா எல்லா வசதியும் இந்த ரூமிலே நல்லாவே இருக்கு. எவ்வளவு வாடகை?'' என்றார்.

''ஒரு நாளைக்கு எண்ணூற்றி ஐம்பது ரூபாய். ஆனாலும் இங்க ரூம் போட வேண்டும் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பே ரிசர்வ் பண்ணனும். இவ்வளவு காஸ்ட்லியாக இருந் தாலும் ரிசர்வ்தான்.''

''நிஜமாகவா?''

''சச், உங்களை மாதிரி பெரிய பிசினஸ் மேக்னெட்டுகள் மீட் பண்ணுவதே, இந்த மாதிரி ஓட்டலில்தானே.''

சிரித்தபடியே, அவரின் கருத்தை ஆமோதித்தார் மருத நாயகம். சிறிது நேரத்தில் இருவரும் கிளம்பினார்கள். ரிசப்ஷ னிஸ்டிடம் ரூம் சாவியை ஒப்படைத்து விட்டு சதாசிவம் மருதநாயகத்துடன் லிப்டை அடைந்தார். ஒரு நிமிடத்தில் இருவரும் கீழ் ப்ளோரை அடைந்தனர். கார் பார்க்கிங்கில் தன் காரைக் கண்டுபிடித்து மருதநாயகத்துடன் லேபை நோக்கி தன் காரைச் செலுத்தினார். அரை மணி நேர ட்ராவலுக்கு பின் ரமோத் கெமிக்கல் ரிசர்ச் லெபாரட்டரி என்ற பெரிய ஆய்வுக் கூடத்தில் நிறுத்தினார். அவர்கள் உள்ளே போகும் முன் மூன்று அறைகளில் மெட்டல் டிடெக்டரால் சோதனையிடப் பட்டார்கள். பத்து நிமிட வெயிட்டிங்கிற்கு பிறகு.

''உங்களை சீப் கூப்பிடுகின்றார்? என்றார் ஒருவர் ஆங் கிலத்தில்...''

சீப் ரூம் அருகில் சென்றதுமே,

''எஸ் கமின்'' குரல் அசரீரியாகக் கேட்டது.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

''சிடவுன் ப்ளீஸ்.'' 'சீப்' குறுந்தாடியில் கூரிய கண்களுடன் ஒயிட் அன்ட் ஒயிட்டில் இருந்தார்.

''ஐ ஆம் மருதநாயகம். பிசினஸ் மேன்.''

''மம்தா காபி?''

''எஸ்.'' தலையாட்டினார்.

''நீங்கள் சொல்கின்ற எக்ஸ்ட்ரா கெமிக்ல்ஸ் சேர்ப்பதால், நோ ப்ராப்ளம். டீட்டைல்ஸ் எல்லாம் இதிலே இருக்கு. கவர்மண்ட் அப்ருவலும் வாங்கி இருக்கு.''



''தேங்க் யூ ஸார்.''

''நோ தேங்க்ஸ். இட்ஸ் மை ட்யூட்டி.''

பேமெண்ட் கொஞ்சம் அதிகமாகவே கட்டி ரசீதைப் பெற்றுக் கொண்டு, விடை பெற்று இருவரும் வெளியே வந்தார்கள்.

''சதாசிவம் பாம்பேயில் தான் லீடிங் அட்வடைசிங் ஏஜென் ஸிகள் நிறைய இருக்கு. நீயே பார்த்து ஒரு விளம்பரப் படத் திற்கு ஏற்பாடு செய், டி.வி.க்கு கொடுத்திடலாம்.''

''இதை நீங்கள் சொல்ல வேண்டும் என்பது இல்லையே. நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்.''

''அப்போ, நான் அடுத்த ப்ளைட்டுக்கே, மெட்ராஸ் போறேன்.''

''ஏன், இவ்வளவு சீக்கிரம்? வீட்டிற்குக் கூட வரவில்லை.''

''நெக்ஸ் டைம். நிறைய வேலை இருக்கு. அடுத்த முறை பேமிலியோடு வந்து தங்குகின்றேன்.''

திரும்ப ரத்னா காம்ப்ளெக்ஸிற்கு திரும்பினார்கள். சூட் கேஸை எடுத்துக் கொண்டு கிளம்ப எத்தனித்த போது, அன்று அறிமுகமான புதிய நண்பரின் விசிட்டிங் கார்ட் பாக்கெட்டில் உறுத்தியது. போகலாமா? வேண்டாமா? திடீர் என்று வந்து ஹெல்ப் பண்ணிய மனிதர் இல்லையா? சொல்லாமல் போவது நன்றாக இருக்காது. இப்போ அவர் வீட்டில் இருப்பாரா? போய்த்தான் பார்த்திடுவோமே?

''சதாசிவம், இந்த அட்ரஸிற்கு என்னை ட்ராப் பண்ண முடியுமா?''

''இப்போவா?''

''எஸ்! ஏன்? எனி ப்ராப்ளம்?''

"ஒன்றும் இல்லேப்பா. கம்பெனியில் இப்போ மீட்டிங் ஒன்று இருக்கு." உம்.. யோசித்தவர். "ஒன்று பண்ணட்டுமா? ட்ரைவரை அனுப்பட்டுமா?"

"ட்ரைவர் போதும்."

இன்னும் சிறிது நேரத்தில் வீணான குழப்பம், துன்பம் ஏற்படப் போவதை அறியாமல் மருதநாயகம் காரில் ஏறி உட்கார்ந்தார்.

## 8



"வெல்கம். ப்ளீஸ் கம். வெல்கம்..." வாய் நிறைய பல்லாகவும், முகம் முழுவதும் சிரிப்பாகவும் மருதநாய கத்தை வரவேற்றார். கார் நண்பர் வரதராஜன், ஆடம்பரமான பங்களா தான். அதில் சந்தேகம் இல்லை. லட்சங்களில் புரளும் லட்சாதிபதிதான் வரதராஜன். வெளியே ஆடம்பர மான பங்களாவாகத் தோன்றினாலும், உள்ளே கிளி கொஞ்சியது, குருவிக் கூடு போல் அடக்கமாக இருந்தது.

"உள்ளே வாங்க."

தனி சோபாவில் அமர்ந்தார் மருதநாயகம்.

"தப்பா நினைக்கக் கூடாது. நீங்கள் வரும் நேரம் வீட்டில் யாரும் இல்லை, எல்லோரும் ஹாஸ்பிடல் போய் இருக் காங்க."

"டாக்டர் என்றால் இப்படித்தான். அவர்கள் ட்யூட்டிக்கு நேரங்காலம் கிடையாது. ஆனாலும் புனிதமான தொழில் இல்லையா?" சொன்னார் மருதநாயகம்.



ஆமோதிப்பது போல் தலையாட்டினார் அவர்.

தான் வந்த காரியத்தைச் சொன்னார் மருதநாயகம். "அடுத்த ப்ளைட்டில் மெட்ராஸ் போகிறேன். உங்களைப் பார்த்து சொல்லி விட்டுப் போகலாம் என்று தான்."

"அதற்குள்ளா வந்த வேலை முடிந்து விட்டது?"

தலையாட்டினார் மருதநாயகம்.

"டிபன் சாப்பிட்டுத்தான் போகணும்" உடும்புப் பிடியாக வற்புறுத்தினார் அவர். தட்ட முடியாமல் தத்தளித்தார் இவர். அவரின் அன்புக்கு கீழ்ப் படிந்து, ஒப்புக் கொண்டார். இவர் கண்கள் வீட்டை சுற்றி பார்க்கச் சுழன்றது. உற்சாகமாக சுழன்ற கண்கள் ஒரு இடத்தில் நிலை குத்தி நின்றது. கண்களைக் கசக்கி விட்டு ஹேண்ட் கர்சீப்பில் துடைத்துக் கொண்டு திரும்பவும் உற்றுப் பார்த்தார். திரும்பவும் தன் கண்களை நம்பாமல், எழுந்து அந்த சுவற்றில் மாட்டப்பட்ட படங்களை உற்றுப் பார்த்தார். சந்தேகமே இல்லை. இது திவ்யாதான். மூன்று பெண்களின் போட்டோ பெரிய அளவில் மாட்டப்பட்டு அனையாவிளக்குடன் சந்தன மாலையை சுமந்துக் கொண்டு காட்சி அளித்தன. அதில் ஒன்று திவ்யாவுடையது. நாலைந்து வருடங்களுக்கு முன்பு எடுத்து இருக்கலாம். முகத்தில் லேசான குழந்தைத் தனம். மற்றபடி இப்போது இருப்பது போலவே இருந்தாள்.

உயிரோடு துள்ளிக் குதிக்கும் திவ்யா இறந்து விட்டதாக நினைத்து சந்தன மாலையில் அல்லவா அவள் போட்டோ சிரித்துக் கொண்டு இருந்தது. அந்தக் கொஞ்ச நேரத்தில் என் னென்னவோ நினைத்து விட்டார் மருதநாயகம்.

"என்ன சார் அப்படிப் பார்க்குறீங்க. அவர்கள் எல்லாம் இறந்து போன என் சொந்தங்கள். முதல் போட்டோவில் இருப்பது என் இளைய மகள் சுகன்யா. ஆறு வருடத்திற்கு முன்பு சூசைட்

பண்ணிக் கொண்டாள். எதுக்கு அப்படிப்பட்ட முடிவுக்கு வந்தாள் என்று இதுவரை எனக்குத் தெரியாது.''

''இரண்டாவது போட்டோ என்னோட மனைவி. சுகன்யா பிறந்த பதினைந்தாவது நாளில் இறந்து விட்டாள். மூன்றாவது இருப்பது என் பெரிய மகள் திவ்யா. ஒரு ஆக்ஸிடெண்டில் இறந்து விட்டாள்.''

''ஆக்ஸிடென்டிலா?''

''நான்கு வருடங்களுக்கு முன்பு, எனக்கு இந்த வீட்டில் இருக்க பிடிக்கவில்லை. அதனால் ஜனதா எக்ஸ்பிரஸில் நான் மதராஸ் போகிறேன். என்னை யாரும் தேட வேண்டாம் என்று எழுதி வைத்து விட்டுப் போய் விட்டாள். அவள் போன ஜனதா எக்ஸ்பிரஸ் ஆக்ஸிடெண்ட் ஆகி விட்டது. இதைப் பேப்பரில் நீங்கள் கூடப் பார்த்து இருக்கலாம். ரயில்வே பெயர் பட்டியலில் இருந்துதான் அதில் அவள் போனது தெரிந்தது.''

''பாடியை எடுத்து வந்தீர்களா?''

''ஆமாம். நான்தான் ட்ரஸை பார்த்து அடையாளம் காட்டினேன். முகம், கை, கால் எல்லாம் சிதைந்து விட்டது.'' பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் அவர். அழுது தன் துக்கத்தை போக்கிக் கொண்டார். மருதநாயகத்திற்கு துக்கம், கோபம், ஆத்திரம், ஏமாற்றம் எல்லாம் ஒன்றாய் சேர்ந்து நெஞ்சை பளுதூக்கும் இயந்திரம் கொண்டு அழுத்தியது.

தன் முகமாற்றத்தை கார் நண்பர் கவனிக்காதபடி தன்னை சுய நிலைக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டார். ''தவறாக எண்ணவில்லை என்றால் நான் ஒன்று கேட்கவா?''

''கேளுங்க சார்?''

''ஒரு பொண்ணு சூசைட் ப்ண்ணிக் கொண்டாள். ஒரு பொண்ணு வீட்டை விட்டு போறேன்னு லட்டர் எழுதி வைத்து



விட்டு, ஆக்ஸிடெண்டில் இறந்து விட்டாள். அதனால் வீட்டிற்குள் ஏதேனும் பிரச்சனையா?''

''அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. எந்தக் குறையும் அவர்களுக்கு இல்லை. ஏன் இப்படிச் செய்தார்கள் என்று இதுவரை எனக்குத் தெரியாது. இனி மேலும் தெரியப் போவதில்லை. யார் எழுந்து வந்து சொல்லப் போகிறார்கள்?''

சொல்ல ஒருத்தி இன்னும் உயிரோடுதான் இருக்கின்றாள் என்று சொல்ல நினைத்த மருதநாயகம். கஷ்டப்பட்டு தொண்டை வரை வந்த வார்த்தையை அடக்கிக் கொண்டார். திவ்யாவின் வாயில் இருந்து உண்மையை தெரிந்துக் கொண்டுதான் அடுத்த ஸ்டெப் எடுக்கனும் என்று எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.

மறுபடியும் போட்டோவைப் பார்த்தவர், கரண்டில் கை வைத்தது போல் துடித்துப் போய் துவண்டார். ஆறடி உயரம் ஐந்தடியாக குறுகிப் போய் விட்டது போல் உணர்ந்தார். திவ்யாவின் தாயின் பெயர் மும்தாஜா?

மருதநாயகத்தின் முக மாற்றத்தை புரிந்து கொண்ட அவர், எரியும் தீயில் எண்ணெய்யை ஊற்றுவது போல் அதையும் விளக்க ஆரம்பித்தார்.

''மெட்ராஸில் இருந்து நான் பாம்பே வரும் போது ஒரு லட்ச ரூபாய் கேஷோடு வந்தேன். என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஆனது ஆகட்டும் என்று சின்னதாக ஒரு ஜவுளிக் கடை ஆரம்பித்தேன். என்னோட கடைக்கு வந்த முதல் கஸ்டமர் மும்தாஜ்தான். கொஞ்சம் கொஞ்சமாக வியாபாரம் சூடுபிடித்தது. வியாபாரம் மட்டும் அல்ல. எங்களுடைய நட்பும் தான். நாளாக நாளாக கிரானைட் பிசினஸிற்கு மாறிட்டேன். இரண்டு பேரும் ரிஜிஸ்தர் ஆபீஸில் பதிவு திருமணம் பண்ணிக் கொண்டோம். நாலு குழந்தை பிறந்தது. எல்லோருக்

கும் இந்துப் பெயர்கள் தான். இந்து முறைப்படிதான் வளர்த் தாள். எந்த ஒரு நேரமும் தான் ஒரு முஸ்லிம் என்று அவள் காட்டிக் கொள்ளவே இல்லை. என்னோட குழந்தைகளைப் பொறுத்தவரை தாய்மொழி இந்தி. ஆனால், எல்லாருமே தந்தை மொழியைத் தாய் மொழியாகக் கற்றனர். நான்கு பேருக்கும் இந்தியில் பேசத் தெரியும். படிக்கவோ எழுதவோ தெரியாது. அப்படி நான் தமிழ் கலாச்சாரத்தை ஊட்டி வளர்த் தும் நோ யூஸ். என்னதான் தந்தைப் பாசத்தோடு வளர்த்தாலும், தாய் வளர்ப்பு மாதிரி ஆகாது. அந்தக் கொடுப்பினை தான் என் குழந்தைகளுக்கு இல்லாமல் போய் விட்டதே.''

மருதநாயகத்தின் உடல் குப்பென்று வேர்த்துக் கொட்டி யது. இதயம் சுக்கு நூறாகி திசைக்கு ஒரு பக்கமாகப் பறந்தன. இதுவரை தான், தனக்குள் கட்டி வைத்த கற்பனை, தன்னம் பிக்கை இவையெல்லாம் தவிடு பொடியாவதை உணர்ந்தார். ஒரு இந்துவிற்கும், முஸ்லீமிற்கும் பிறந்தவள். இவ்வளவு பெரிய பொய்யை சகஜமாக மறைத்தவள், எனக்கு மருமக ளாக வருவதா? நோ, நெவர். ஒரு போதும் இதை நான் சம் மதிக்க மாட்டேன். அவரிடம் வேண்டா வெறுப்பாக விடை பெற்றுக் கொண்டு ஏர்போர்ட்டை நோக்கி அதே ஏர் விமான வேகத்தில் பறந்தார்.

முதலில் காமாட்சி வரதராஜனுக்கு தான் மருதநாயகத் திடம் இருந்து போன் பறந்தது.

''உடனே வர முடியுமா?''

''உடனேவா? என்ன சார் விஷயம்? போன்லேயே சொல் லுங்களேன்.''

''போனில் பேச கூடிய விஷயம் இல்லை. உங்கள் சிஷ்யை அதான் திவ்யா அந்தப் பொண்ணையும் அழைத்துக் கொண்டு வர முடியுமா?''



மருதநாயகத்தின் குரல் லேசான கலக்கத்தைக் கொடுத்தது. 'கிண்டலுக்காக சொல்கின்றாரா? இல்லை உண்மையான கோபத்தில் சொல்கின்றாரா? கோபம் கொள்ளும் அளவிற்கு இவள் என்ன தவறு செய்தாள்?' ஒன்றும் புரியாமல்

''திவ்யா காலேஜ் போய் இருக்கிறாள்.''

''அவள் படிச்சி கிழித்தது போதும். உடனே வரச்சொல்லி ஆள் அனுப்புங்க.''

''என்ன சார், திடீர் என்று இப்படி எல்லாம் பேசறீங்க?''

''நானா பேசலை, ஆத்திரம் பேசுது. ஏமாந்து விட்டோமே என்ற வெறுப்பு பேசுது.''

''எனக்கு ஒன்றும் புரியலையே?''

''உடனே திவ்யாவிற்கு ஆள் அனுப்பி, அவளோட வீட் டிற்கு வாங்க, இல்லை நாங்கள் அங்கு வரட்டுமா?'' வெறுப் பாக வெடித்தார்.

''நாங்களே வரோம்''

'டொக்' வெறுப்பாக மறுபக்கம் போன் வைக்கப்படும் சத்தம் கேட்டது. போனிலே அவரின் வக்கிரமான பேச்சைத் தாங்க முடியவில்லை. நேரில் எப்படி இருக்கின்றாரோ? ஏமாற் றமா? யார் யாரை ஏமாற்றினார்கள்? யோசிக்க இது நேரம் இல்லை என்று உடனே அவரின் விரல் ஸ்டெல்லா மேரிசுக்கு போன் செய்தது.

''எஸ் ஸ்டெல்லா மேரிஸ்.''

''நான் காமாட்சி வரதராஜன். சோசியல் வொர்க்கர்.''

''உங்களுக்கு என்ன மேடம் வேண்டும்?''

''எம்.காம் பஸ்ட் இயர் திவ்யாவை உடனே ஆசிரமத் திற்கு வரச் சொல்லுங்கள். வெரி அர்ஜெண்ட்.''

"ஓ.கே. மேடம்."

"தேங்க்ஸ், சாரி பார்த டிஸ்டபென்ஸ்."

திவ்யா வரும்வரை ஹாலுக்கும், ரூமிற்கும் குட்டி போட்ட பூனையாக நடைபோட்டார். நிமிடத்திற்கு ஒருமுறை வாசலைப் பார்ப்பதும், வாட்சைப் பார்ப்பதுமாக நிமிடத்தை ஓட விட்டார். பதற்றத்தோடு ஓடி வந்தாள், திவ்யா.

"என்ன மேடம், என்னாச்சி, உடம்பிற்கு ஏதாவது."

"அதெல்லாம் ஒன்றும் இல்லை, புறப்படு."

"எங்கே மேடம்? எதற்கு? ஒருநாள் கூட இப்படி என்னை வரவழைத்தது இல்லையே, என்ன மேடம் ப்ராப்ளம்."

"சம்பத் வீட்டிற்குப் போகிறோம்."

"சம்பத் வீட்டிற்கா?" புருவம் இரண்டும் முடி போட்டது.

"ஆமாம். எதுவாக இருந்தாலும் காரில் வந்து பேசு. புக்சை வைத்து விட்டு ஓடி வா?" துரிதப்படுத்தினார்.

காரில் போகும்போது...

"திவ்யா நீ ஏதாவது தப்பு பண்ணிட்டியா?"

"தப்பா? நானா? இல்லை மேடம்."

"அது போதும் எனக்கு."

இப்போ சம்பத் வீட்டிற்கு எதுக்காகப் போறோம்? இதற்கு மேல் பேசினால் மேடம் சிடுசிடுப்பார் என்று வருவதை எதிர்நோக்கத் தயாரானாள்.

சுபமங்களாவில் கார் நுழையும்போதே வாயிலில் மருதநாயகம் நடை போட்டு கொண்டு இருந்தார். பின்புறம் கையைக் கட்டிக் கொண்டு, தனக்குத் தானே ஏதோ பேசிக் கொண்டு



இருந்தார். அதைப் பார்த்தால் தாக்கத் தயாராக இருக்கும் புலியைப் போல் தோன்றினார்.

இவர்கள் கார் உள்ளே நுழைந்ததும் பரபரப்பானார். இருவரையும் மாடியில் இருக்கும் தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.

அவர் முகத்தைப் பார்க்கும்போதே, அச்சம் அடி வயிற்றில் பந்தாகச் சுருண்டு, தொண்டையை அடைத்தது. அன்பான ஆத்மாவாக பார்த்த மருதநாயகமா இவர்? இவருள் இப்படி ஒரு உருவமா? எள் போட்டால் வெடித்து சிதறும் அளவு முகம் சிவந்து கோபக்கனல் வீசியது. நீ ஏதாவது தப்பு பண்ணினாயா என்றுதானே மேடம் கேட்டாங்க, என் மீது தான் இந்தக் கோபமா? அப்படி என்ன தவறு செய்தேன் நான்? ஒன்றும் செய்யவில்லையே? அவரின் அறைக்குள் நுழையும் போது, லேசான புன்னகையோடு திவ்யா அவரைப் பார்த்தார்.

இவள் புன்னகைக்கு பதிலாகப் பார்த்தாரே ஒரு பார்வை. அப்பப்பா இப்படி ஒரு பார்வையா? கூனிக் குறுகிப் போனாள் திவ்யா.

அறையினுள் சம்பத்தை தவிர, மம்தா, விக்னேஷ், மரகதம் அனைவரும் இருந்தார்கள். தான் முதல் முறையாக அந்த வீட்டிற்கு வந்தபோது பார்த்த பார்வை, பேசிய பேச்சு எல்லாம் அடிமட்ட வெறுப்போடு முகத்தை திருப்பிக் கொண்டன. திவ்யாவிற்கு கீழே பூமி கடகடவென உருண்டது. பூமி பிளந்தது. அவள் மட்டும் அதள பாதாளத்திற்கு சென்று கொண்டு இருந்தாள். வேர்வை சொட்டுக்கள் போட்டி போட்டுப் புறப்பட, எச்சிலை விழுங்கிக் கொண்டு, விழித்தாள். கண்கள் படபடவென அடித்துக் கொண்டன.

மேடத்திற்கும் அந்த சூழல் லேசான பயத்தை நெஞ்சில் படரத்தான் விட்டது. ஏதோ நடக்கக் கூடாத செயல் நடந்து விட்டது என்பதை மட்டும் உணர்ந்தாள்.

மரகதத்தின் அருகே சென்ற மேடம்,

''என்ன மரகதம் என்ன?'' பதற்றத்தோடு வினவினார்.

''திவ்யாவிற்கு உண்மையிலேயே யாரும் இல்லையா?'' நேரடியாக விஷயத்திற்கு வந்தார், மரகதம்.

''இல்லை'' சாதாரணமாகவே பதிலளித்தார்.

''உண்மையிலேயே இல்லை என்று நினைக்கின்றீர்களா? இல்லை மறைக்கின்றீர்களா?''

''ஸ்டாப் இட் மரகதம். மறைக்கணும் என்று எனக்கு என்ன இருக்கு. நாலு வருடத்திற்கு முன்பு வேண்டுமானால் அவள் அனாதையாக இருக்கலாம். பட் இப்போ இல்லை.''

விஷயம் லேசாக இல்லை முழுவதுமே புரிந்தது திவ்யாவிற்கு. 'எத்தனை நாளைக்குத் தான் மறைக்க முடியும்? கெட்டிக்காரன் புளுகே எட்டு நாளைக்குத்தானே. நானே நாலு வருடம் அல்லவா பாதுகாத்து இருக்கின்றேன். உண்மை தெரிந்தது பற்றி கவலை இல்லை. மேடத்தின் முகத்தில் எப்படி விழிப்பது? எத்தனை முறை மேடத்திடம் தன்னைப் பற்றி சொல்லிவிட வேண்டும் என்று நினைத்து இருக்கின்றோம், ஆனால் சொல்லவில்லையே?' பதற்றத்தில் அருகில் நின்று கொண்டு இருந்த மம்தாவின் கையை லேசாகப் பற்றினாள்.

அவள் கையைத் தன் கைகளில் இருந்து நாசுக்காக விடுவித்துக் கொண்டு நகர்ந்து நின்று கொண்டாள் மம்தா. திவ்யா அவளைப் பார்க்கும் போது அவள் தரையைப் பார்த்து கொண்டு இருந்தாள, விக்னேஷ் எங்கோ பார்த்து கொண்டு இருந்தான்.

''நீங்களோ, நானோ இதுவரைக்கும் நினைத்தது போல் திவ்யா அனாதை இல்லை. அப்பா, இரண்டு அண்ணன்கள், இரண்டு அண்ணிகள் எல்லோரும் உயிரோடுதான் இருக்கின்றார்கள்.''



தூக்கிவாரிப் போட்டது காமாட்சி வரதராஜனுக்கு. கேள்விக் குறியை பார்வையின் வழியே அம்பாக திவ்யா மீது செலுத்தினார். மேடத்தின் பார்வையை சந்திக்கும் திறன் இல்லாமல் கண்களில் கண்ணீரோடு நின்றாள்.

திவ்யாவின் முகத்தைத் தூக்கி, ''இவங்க சொல்றது உண்மையா?''

'எஸ் மேடம்' குரல் வெளிவராமல், தொண்டைக்குள்ளேயே சிக்கி சின்னாபின்னமானது.

''கேட்கிறேன் இல்லே சொல்லும்மா.''

''எஸ் மேடம்.''

அதற்கு மேல் அவளிடம் எதுவும் பேசாமல், மருதநாயகத்தை நோக்கி, ''மேரேஜை கேன்சல் பண்ணப் போறீங்க அவ்வளவுதானே?''

''ஆமாம். ஆனா இந்த ஒரு காரணத்திற்காக கேன்சல் பண்ணலை. எனக்கு என்று சில கொள்கைகள் இருக்கு. அதில் ஒன்று அடுத்த மதத்துக்காரர்களிடம் பர்சனலா எந்த சம்பந்தமும் வைத்துக் கொள்ளாதது. ஒரு முஸ்லிம் பெண்ணிற்கு பிறந்த பெண்ணை எப்படி என்னால் மருமகளாக ஏற்றுக் கொள்ள முடியும்.''

மீண்டும் திவ்யாவிடம் உண்மையா? எனக் கேட்க விரும்பாமல், ''உங்கள் இஷ்டப்படி நீங்கள் எந்த முடிவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இதில் எனக்கு எந்தவித உரிமையோ, சம்பந்தமோ இல்லை'' வெளியே செல்லத் திரும்பினார்.

மேடத்தின் கால்களைப் பற்றிக் கொண்டு திவ்யா கதறினாள்.

''மேடம் என்னை நம்புங்க மேடம். இவங்க சொல்வது எல்லாம் உண்மைதான். அதுக்காக என்னை வெறுத்து ஒதுக்

கிடாதீங்க மேடம். நான் எல்லா உண்மையையும் சொல்லி விடுகின்றேன். அதுக்கு மேலே நீங்கள் என்ன முடிவு எடுத் தாலும், அதுக்கு நான் கட்டுப்படறேன் மேடம். தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்க மேடம். ப்ளீஸ் அங்கிள். ப்ளீஸ் ஆண்டி... நான் சொல்வதைக் கேளுங்க. ப்ளீஸ்... ப்ளீஸ்.. ப்ளீஸ்...'' கதறினாள் திவ்யா.

மேடத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நாலு வருடம் வளர்த்தவர் ஆயிற்றே. அவளை மேலும் அழ விடு வாரா? பொறுக்க முடியாமல்...

''சொல்லுமா? ஏன் வீட்டைவிட்டு ஓடி வந்தே?''

ஐந்து பேரும் திவ்யாவை சுற்றி சக்ரவியூகம் அமைத் தார்கள்.

கண்களை ஒற்றிக் கொண்டு சொல்ல ஆரம்பித்தாள்.

''என்னோட டாடி ஓகோ என்ற பணக்காரராக இல்லாவிட் டாலும் ஓரளவு பணக்காரர். கிராபைட் பிசினஸ் பண்ணிக் கொண்டு இருந்தார். நல்ல லாபம். எனக்கு இரண்டு அண் ணன், பெரியவன் பெயர் நிஜந்தன். சின்னவர் பெயர் ரஞ்சித். அதற்கு பிறகு நான், எனக்கு அடுத்து சுகன்யா என்று ஒரு சிஸ்டர். அந்த வீட்டில் ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது பேசிக் கொள்ளும் ஜீவன்கள் நாங்கள் இரண்டு பேரும்தான். அதுவும் டெலிபோன் மூலமா. நானாவது என்னோட அம்மா முகத்தைப் பார்த்து இருக்கேன். ஆனால் அவளுக்கு அந்த பாக்கியம் கூட இல்லை. எங்களுக்கு அந்த வீட்டில் எந்தக் குறையும் இல்லை அன்பைத் தவிர. அண்ணன்கள், நான் நாங்கள் மூவரும் டென்த் வரை ஊட்டி கான்வெண்டில்தான் படித்தோம். ஆனா சுகன்யா பாம்பேயிலேயே படித்தாலும் அவளுக்கு தமிழ் டியூசன் வீட்டிலேயே நடந்தது. ஒருநாள் சுகன்யாவிடம் இருந்து எனக்கு தந்தி வந்தது. அப்போ நான் டென்த் படித்துக் கொண்டு இருந்தேன். எனக்கு ஒன்றுமே



புரியலை. ஹெட்மிஸ்ட்ரஸ்கிட்டே பர்மிசன் வாங்கிக் கொண்டு நான் பாம்பே வரதா, டாடிக்கும், தந்தியடித்து விட்டு, பாம்பே போனேன். அங்கே...''

## 9



பாம்பே ரெயில்வே ஸ்டேசனில், காரோடு காத்திருந் தார் வரதராஜன். ஒரு சின்ன லெதர் பேக்கொடு. நீலநிற சல் வாரில் வந்து இறங்கினாள், திவ்யா. காரில் ஏறிக் கொண் டதும்.

''என்ன டாடி விஷயம்? சுகன்யா தந்தி அடிச்சி இருந்தா.''

''தந்தியா? சுகன்யாவா?''

''ஆமாம் டாடி. ஸ்டாட் இமீடியட்லி. அப்படீன்னு அடிச்சி இருந்தாள். அதனால் நான் இப்போ வரேன். ஏன் உங்களுக்கு தெரியாதா?''

''தெரியாதுமா. நீ வருவதாக தந்தி வந்திருக்குன்னு நிஜந்தன் சொன்னான். அவனைத் தான் ஸ்டேஷனுக்கு வரச் சொன் னேன். அவனுக்கு முக்கியமான வேலை இருக்கிறதாம்.''

''என்னைக்கு டாடி அண்ணன் என்னை அழைத்துப் போக வந்தான்'' மனபாரத்தோடுதான் சொன்னாள். அவர்கள் கார் வீட்டை அடைந்தது.

வீட்டிற்குள் ஓடினாள்.

எதிர்ப்பட்டான் ரஞ்சித்.

''ஹாய் திவ்யா 'யஹாங்?'

''ஹாய், குச்நய்' சொல்லி விட்டு மாடிக்கு ஓடினாள். சுகன்யாவின் ரூம் சென்று பார்த்தாள். சுகன்யா இல்லாமல் அறை வெறிச்சோடிப் போய் இருந்தது.

கீழே இறங்கி வந்தாள்.

'டாடி! டாடி!' குரல் மட்டும் எதிரொலித்தது.

''உங்களைக் கொண்டு வந்து விட்டு விட்டு, அப்போதே போய் விட்டார் பாப்பா'' சமையல்காரர் பதிலளித்தார்.

''எங்கே போய் இருக்கார்?''

''வேற எங்கம்மா போவார், பிசினஸ் விஷயமாத்தான் போவார்.''

'ஷிட்' சோபாவில் சாய்ந்தாள்.

''அங்கிள்''

''என்னம்மா''

''சுகன்யாவிற்கு உடம்பு ஏதாவது சரியில்லையா?''

''அப்படி ஒன்றும் இல்லம்மா''

''பின்பு எதுக்கு தந்தியடிச்சா?'' மோவாயை சொறிந்தாள்.

''தந்தியா?''

''ஆமாம் அங்கிள். ஸ்கூல் எப்போ விடும்?''

''நாலு மணிக்கு எல்லாம் விட்டுடும். இன்னும் கொஞ்சம் நேரத்தில் சின்னப்பாப்பா வந்திடும். உனக்கு பிடிச்ச டிபன் சொல்லுமா? பண்ணி வைக்கிறேன்.''

''புதுசா ஒன்றும் வேணாம் அங்கிள். இன்னைக்கு என்ன பண்ணனும் என்று நினைத்தீர்களோ அதையே பண்ணி டுங்க.''



சுகன்யாவின் ரூமிற்கு போனாள் திவ்யா. பெட்டின் மேல் இருந்த சல்வார், சுடிதார், மிடி எல்லாவற்றையும் தூக்கி பாத்ரூமில் கொண்டு போய் போட்டு விட்டு வந்து படுத்தாள். தான் கையோடு கொண்டு வந்த புத்தகங்களை எல்லாம் ஒவ்வொன்றாகப் புரட்ட ஆரம்பித்தாள். சமையல்காரர் இரண்டு முறை மாடிப்படி ஏறினார். ஒருமுறை ஹார்லிக்சோடும், மறுமுறை டிபனோடும் சென்றார். வந்த களைப்பு, உண்ட மயக்கம், இவை இரண்டும் சேர்ந்து அவளைப் பிடித்துக் கொண்டதும், கண்கள் செருக, கண்களை மூடிக் கொண்டு உறக்கத்தோடு உறவாட ஆரம்பித்தாள்.

நாலரை மணிக்கு ஸ்கூல் பேக்கை பெர்த் மூட்டையாக தோளில் சுமந்துக் கொண்டு மாடி ஏறிக் கொண்டு இருந்தாள், சுகன்யா. கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றவள் திவ்யா தூங்கிக் கொண்டு இருப்பதைப் பார்த்ததும், தாளமுடி யாத சந்தோஷத்தில் புத்தக மூட்டையை தூக்கி எறிந்துவிட்டு, அவள் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். திவ்யாவின் ஆழ்ந்த உறக்கத்தைப் பார்த்து, எழுப்ப மனம் இல்லாமல் அவள் முகத்தையே சலனம் இல்லாமல் பார்த்தாள். யூனிபார்மை கழற்றி, ஸ்கட் பனியனுக்கு மாறினாள். எய்த் படிப்பவள் சுகன்யா. திவ்யாவை விட கலர் கொஞ்சம் கம்மி. கைகளில், காதில் கழுத்தில் எதிலும் மணியோ, செயினோ எதுவும் இல்லை. நெற்றிக்கு நடுவே சின்னப் புள்ளியாக பொட்டு, புருவத்திற் கும், கண்களுக்கும் மை இட்டு இருந்தாள். அழகாக வெட் டப்பட்ட கை கால் நகங்கள். அதை விட அழகாக அதில் நெயில் பாலீஸ் பூசப்பட்டு இருந்தது.

சுகன்யாவின் சின்னச் சின்ன அசைவுகளால் வெளிப்பட்ட சத்தத்தால் திவ்யா நனவு நிலைக்கு வந்தாள். எழுந்திருக்க மனம் இல்லாமல், படுத்துக் கொண்டே சுகன்யாவைப் பார்த்து முறுவலித்தாள்.

''என்னடி இப்படி இளைத்துப் போய் இருக்க?''

''இல்லையே?''

''எதுக்குப் பொய் சொல்ற சரியா சாப்பிடுவது இல்லையா?''

''நான் மறந்தாலும் சமையல்கார அங்கிள் மறப்பது இல்லை.''

''சரி, எதுக்கு தந்தி அடிச்சே, என்ன விஷயம்?''

''நீ பயந்து போய் வந்தியாக்கும்'' சிரித்தாள்.

''பல்லை ஒடச்சிடுவேன். எதுக்குடி தந்தியடிச்சேன்னா, சிரிக்கிற. நானும் பயந்து போய், அந்த சிடுமூஞ்சி ஹெட் மிஸ்ஸஸ்கிட்டே பர்மிசன் வாங்கி வருவதற்குள், நான் பட்ட பாடு எனக்குத்தானே தெரியும். பம்பாயும், ஊட்டியும் பக்கத்து பக்கத்தில் இருப்பதாக நினைப்பா?'' அலுத்துக் கொண்டாள்.

''ரொம்பதான் அலட்டிக்கிறீயே'' என்றபடி, திவ்யாவின் அருகே தானும் படுத்துக் கொண்டாள் அந்த பதிமூன்று வயது சிறுமி சுகன்யா.

''என்னடி விஷயம்? தந்தி அடிக்கும் அளவிற்கு என்ன விஷயம்? டாடிக்கே நீ தந்தியடித்தது தெரியாதாமே, அப்போ யாரோட ஹெல்ப்பில் தந்தி அடிச்சே?''

''எங்கள் ஸ்கூல் பக்கத்தில் தான் தந்தி ஆபீஸ் இருக்கே. அதனால் நானே அடிச்சிட்டேன்.''

''சரி என்ன பிரச்சினை?''

''நான் ஏஜ்க்கு வந்திட்டேன்.''

''என்னது?'' எழுந்து உட்கார்ந்தாள்.

''ஆமாம் இன்றோடு ஐந்து நாட்கள் ஆகிறது.''

''டாடிக்குத் தெரியுமா?''



''தெரியாது. நான் இதை எப்படிச் சொல்வது? அவரை நான் பார்த்தே இருபது நாட்களுக்கு மேல் ஆகிறது. நமக் கென்ன அம்மாவா இருக்காங்க போய் சொல்லுவதற்கு, எனக்கு நீ மட்டும் தான்க்கா இருக்க. அதான் உனக்குத் தந்தி யடிச்சேன். நான் செஞ்சது தப்பா?''

தன் தங்கையை மார்போடு அப்படியே அணைத்துக் கொண் டாள். அந்தக் கொஞ்ச நேரம் சுகன்யாவிற்கு தாயாக மாறினாள் திவ்யா. எந்தப் பொண்ணுக்கும் இப்படி ஒரு சூழ்நிலை வரக் கூடாது. என்ன குறை எங்களுக்கு பணம் இல்லையா? கார் இல்லையா? பங்களா இல்லையா? எல்லாமே இருக்கு. ஆனால் சாப்பிட்டாயா? என்று கேட்கத்தான் இவ்வளவு பெரிய வீட்டில் ஆள் இல்லை. தான் அழுவது தெரிந்தால் சுகன்யாவின் மனம் உடைந்து விடும் என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு...

சுகன்யாவின் தலையைக் கோதி விட்டு கொண்டே,

''என்னடி பண்ணி இருக்க?''

திவ்யாவின் நெஞ்சில் இருந்து முகத்தை எடுக்காமலேயே, ''நாப்கின் யூஸ் பண்றேன்.''

''எப்படி யூஸ் பண்றது என்று தெரியும் இல்லே?''

''அதான் டி.வி.லேயும், புத்தகத்திலேயும் விலாவரியா இருக்கே.''

''கஷ்டம் ஒன்றும் இல்லையேடி?'' கண்களில் நீர் பொங்கக் கேட்டாள்.

''முதல் இரண்டு நாள் எனக்கு பயமா போய்விட்டது. இப்போ பரவாயில்லை.''

''ஆமாம் அன்று என்ன ட்ரெஸ் போட்டு இருந்த?''

''யூனிபார்ம்தான்.''

''அந்த யூனிபாம் எங்கே?''

''அயர்ன் பண்ணி வச்சிட்டேன்.''

''நீ அயர்ன் பண்ணி வச்சிட்டியா?''

''ஆமாம். இப்போ ஐந்து நாளா என்னோட துணிகளை வேலைக்காரிக்கு தெரியாமல், வாசிங் மெசினில் போட்டு, அயர்ன் பண்ணி வச்சிகிட்டேன்.''

''அவங்க ஒன்றும் கேட்கலையா?''

''இல்லை''

சரி என்று எழுந்தவள், வேலைக்காரர்களின் உதவியோடு, சுகன்யாவின் ரூமில் உள்ள எல்லா புக்ஸ், துணிமணி, பெட், சோபா, டிவி., டேப்ரெக்கார்டர் எல்லாவற்றையும் தன் ரூமிற்கு மாற்றினாள். வாஷிங் சோடா போட்டு அறை முழுவதையும் சுத்தமாக கழுவச் சொன்னாள். சமையல்கார அங்கிளிடம் விஷயத்தை தயக்கமாகக் கூறி, அவளிடம் இருந்து மேலும் பல விவரங்களை சேகரித்துக் கொண்டு, செயல்படத் துவங்கினாள். சமையல்கார அங்கிளின் மூலம் ஒரு டோபி பெண் மணி கிடைத்தார். அவர் மூலம் சுகன்யா ஆயில் பாத் எடுத்தாள். சுகன்யாவிற்கு ரூம் தனியாக ஒதுக்கப்பட்டது. அவள் ரூமில் இருந்த சாமிபடங்கள் விரைவாக அகற்றப்பட்டன. சுகன்யாவின் கழுத்து, கை, கால், காது என்று எல்லாவற்றிற்கும் நகையைப் பூட்டினாள். மாவிலை, பத்தினி தழை இவற்றை எப்படியாவது ஒடித்து வர வேண்டும் என்று கட்டளை இட்டு, மாவிலையை வீட்டின் முன் கட்டித் தொங்க விட்டாள். பத்தினி தழையை சுகன்யாவின் தலைமாட்டில் வைக்கச் சொன்னாள். சுகன்யாவின் லீவ் லெட்டரை பள்ளியில் சேர்க்க ஏற்பாடு செய்தாள். இவை அனைத்தும் அன்று இரவு எட்டு மணிக்குள் முடிந்தது. நிரஞ்சன், ரஞ்சித், வரதராஜன் யாரும் இன்னும்



வந்து சேரவில்லை. கார் டிரைவர் மூலம் சின்னச் சின்ன சீரியல் பல்பிற்கு ஏற்பாடு செய்து, பங்களா முழுவதும் மின்ன விட்டாள்.

இவளின் ஒவ்வொரு செயலையும் பார்த்து அசந்து போய் நின்றார் சமையல்கார அங்கிள். இந்தப் பதினைந்து வயதில் எப்படி ஒரு பெரிய மனிதத் தன்மை. சுகன்யாவின் தாயைப் போல நடந்து கொள்கிறாளே? ஆச்சரியத்தின் எல்லையில் நின்றார்.

''அங்கிள் என்ன பண்ணப் போறீங்க?''

''என்னம்மா பண்ணனும்?''

''தமிழ்நாட்டு மெனு பண்ணுங்க அங்கிள். நீங்கள் தமிழ் நாட்டுக்காரர் தானே. உங்களுக்குத் தான் எல்லா சமையலும் தெரியுமே.''

''என்ன வேணும்?''

''அரிசி சாப்பாடு, பச்சரிசி சாப்பாடு வேண்டாம். புழுங்கல் அரிசி, சாம்பார், புளி குழம்பு, எலுமிச்சை ரசம், தக்காளி ரசம், மோர், தயிர், பொரியல், கூட்டு, பச்சடி, துவையல், அப்பளம், மெதுவடை, பாயாசம் இப்படி எல்லாம் சமைத்து போட்டால் தானே அங்கிள், அவள் நன்றாக வளருவாள்.''

பிரமித்து போய் நின்ற சமையல்கார அங்கிள், அவள் சொன்ன மெனு பட்டியல் நினைவிற்கு வந்ததும் கிச்சன் ரூமை நோக்கி ஓடினார்.

இரவு 8.30.

பிசினஸ் வேலையை முடித்து கொண்டு வந்தார் வரதராஜன். தன் கண்களை நம்ப முடியாமல் ஆச்சரியத்தோடு வீட்டைப் பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தவருக்கு எல்லாவற்றையும் விளக்கினார் சமையல்கார அங்கிள்.

ஒரு பக்கம் சந்தோஷம் ஜதிதாளம் போட்டாலும், மறு பக்கம் நெஞ்சு கொள்ளாத சோகம், துக்கம். சின்ன வயதில், கவலைகளே அறியாத இந்த வயதில் திவ்யாவிற்கு இப்படி ஒரு பொறுப்பா? சுகன்யாவின் அறைக்கு வந்து பார்த்தார்.

பாப் வெட்டிய தேவதையாக ஜொலித்தாள், சுகன்யா. சுகன்யாவின் தாய் உயிரோடு இருந்திருந்தால் கூட இப்படி செய்து இருப்பாளா? என்றால் சந்தேகம்தான். தன் சின்ன மகளை வாரி நெற்றியில் முத்தமிட்டார். இதுவரை பார்க்காத தந்தையின் பாசத்தை பார்த்த அந்த சிறுமி, மெய் மறந்து பனி போல் உருகினாள்.

''ஏண்டா இதை என்னிடம் சொல்லலை?'' ஆதங்கத்தோடு கேட்டார்.

''உங்களைப் பார்த்தே இருபது நாள் ஆகுது டாடி.''

''நாளைக்கு ஸ்கூல் போகணுமா?''

''இல்லை டாடி. நாலு நாளைக்கு லீவ் சொல்லி, லீவ் லெட்டரையும் அக்கா கொடுத்திட்டா, ஒன்பதாவது நாள் புண்ணியதானம் பண்ணனுமாம், ஐய்யருக்கு கூட ஆள் அனுப்பி இருக்கா?''

கீழே இறங்கி வந்தவரை எதிர்கொண்டாள், திவ்யா.

''திவ்யா''

''என்ன டாடி''

''நீ சின்னப் பிள்ளையா இருந்தாலும், தக்க சமயத்தில் உன்னோட பொறுப்பான வேலையால், எனக்கு கொஞ்சம் நஞ்சம் இருந்த கவலையும் போயிடுச்சிடா. உனக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை.''

''எனக்கு எதுக்கு டாடி நன்றி எல்லாம். இது என்னோட கடமை இல்லையா?'' அவர் கண்களுக்கு திவ்யா மகளாகத் தோன்றவில்லை. தாயாகத் தோன்றினாள்.



''இந்த சம்பிரதாயம் எல்லாம் உனக்கு எப்படிடா தெரியும்?''

தயங்கினாலும், பின்பு மெதுவாக கூச்சத்தோடு, ''நான் ஹாஸ்டலிலேயே ஏஜ் அட்டன் பண்ணிட்டதாலும், எனக்கு அம்மா இல்லை என்பதாலும், ஹாஸ்டல் வார்டன், தகவலை மட்டும் உங்களுக்கு சொல்லிட்டு, என்னை அங்கேயே வைத்துக் கொண்டதுதான் உங்களுக்குத் தெரியுமே. அங்கே என்னை எங்க வார்டன் இப்படித்தான் பார்த்துக் கொண்டார்கள்.''

ரஞ்சித்தும், நிஜந்தனும் மூக்கின் மேல் விரலை வைத்தார்கள்.

''எங்களுக்கு ரொம்பப் பெருமையா இருக்கு திவ்யா. சொன்னவர்கள் சுகன்யாவைப் பார்த்து விட்டு, தங்கள் தங்கள் அறைகளில் அடைக்கலம் ஆனார்கள்.

சாப்பாடு, இலை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, சுகன்யாவின் அறைக்கு வந்தார், சமையல்கார அங்கிள்.

''அங்கிள் நான் போட்டுகிறேன். நீங்க போங்க'' அவர் சென்றதும், சுகன்யாவின் முன் இலையைப் போட்டு தண்ணீரைத் தெளித்தாள், திவ்யா.

''என்னக்கா டைனிங் டேபிளில் இல்லையா?''

''ம்கூம். இலை சாப்பாட்டை எல்லாம், சம்மணம் போட்டு கீழே உட்கார்ந்துதான் சாப்பிடணும்'' ஒவ்வொரு வகையையும் இலையில் பரப்பினாள்.

''என்ன பார்த்து கொண்டே இருக்க, சாப்பிடுடி.''

''இதெல்லாம், நீதானே ப்ரிப்பேர் பண்ண சொன்ன?''

''ஆமாம், இந்த மாதிரி சமயத்தில் சத்தான உணவை, வயிறு நிரம்ப சாப்பிடணும். எந்தக் காரணத்தை கொண்டும்

பட்டினி கிடக்கக் கூடாது என்று எங்க ஹாஸ்டல் வார்டன் அடிக்கடி சொல்லுவாங்க.''

''இந்த சமையல்கார அங்கிள் ரொம்ப மோசம். எப்பப்பாரு, சப்பாத்தி, பூரி, ரொட்டி என்று வடநாட்டு மெனுதான் செய்றார். இனிமேல் தமிழ்நாட்டு மெனு செய்யச் சொல்லி வான் பண்ணு.''

''சரி, நீ சாப்பிடு.''

சுகன்யா, ஒவ்வொன்றாக சுவைத்து, இவளைப் பார்த்து சிரித்தாள்.

## 10



அந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை, வீட்டோடு, சுகன்யாவின் ப்ரண்ட்ஸ்க்கு மட்டும் அழைப்பு கொடுத்து, தமிழ்நாட்டு முறைப்படி சுகன்யாவின் புண்ணியாதானம் நடந்தது. வரதராஜன், நிஜந்தன், ரஞ்சன் எல்லோரும் அன்று ஒருநாள் வீட்டிலேயே இருந்து, இவர்களிடம் பேசி அரட்டை அடித்துக் கொண்டு இருந்தார்கள். மற்ற நாட்களில் வீட்டில் இருக்கும் போதே கூட ஒருவரை ஒருவர் பார்ப்பதே பெரிய வி.ஐ.பி.யை பார்த்துக் கொள்வது போல் பார்த்துக் கொள்வதும், ஹலோ சொல்வதும் வழக்கமாகி விட்டது. சுகன்யாவின் ப்ரண்ட்ஸ் எல்லோரும் மதிய சாப்பாட்டை முடித்துக் கொண்டு விடை பெற்றார்கள். ரஞ்சித்தும், சுகன்யாவும் கேரம் விளையாடினார்கள். நிஜந்தனும், திவ்யாவும் செஸ் போர்டை எடுத்துக் கொண்டார்கள். எதிரும், புதிருமாக அமர்ந்துக் கொண்டு காயை நகர்த்தினார்கள். வரதராஜன்



கொட்டாவி விட்டபடி அவர்களிடம் இருந்து கழண்டு கொண்டார். நால்வருக்கும் நன்றாகத் தெரியும். இதுவரை ஒருநாள் கூட இப்படிப் பேசி, ஒன்றாக சாப்பிட்டு, செஸ், கேரம் விளையாடியது இல்லை. இது புதுமையானதாக இருந்தது. இதுவரை நடக்காத நிகழ்ச்சி, வாழ்நாளில் இதுவும் ஒரு மறக்க முடியாத முக்கியமான நாள் என்று எண்ணும்படி ஜீரணிக்க முடியாத சந்தோஷமாகவே இருந்தது. மாநில மொழி திரைப்படம் பார்க்க வேண்டும் என்று ரஞ்சித் நகர்ந்ததும் சுகன்யா காயின்சை பொறுக்கி அடுக்கினாள். திவ்யாவின் தலையெல்லாம் விண்விண் என்று தெறித்தது. இரண்டு நாட்களாக நல்ல தூக்கம் இல்லை. இன்னும் சிறிது நேரம் உட்கார்ந்தால், தலை தானாகவே செஸ்போர்டைத் தொடும் என்று தெரிந்ததும்,

''அண்ணா இதோடு போதும், எனக்குத் தூக்கம் வருது.''

தங்கையின் முகத்தை நிமிர்ந்து பார்த்த நிஜந்தன், அன்போடு புன்னகைத்தான்.

''எதுக்கு சிரிக்கிற?''

''சும்மாடா. இது நாள்வரை தப்பு பண்ணிட்டேனோ என்று தோணுது.''

''ஏன்?''

''ஒன்றும் இல்லடா. என்னை விட பதினொரு வயது சின்னவள் நீ. சுகன்யா பதிமூன்று வயது சின்னவள். நானும், ரஞ்சித்தும் நினைத்து இருந்தால், உங்கள் இருவருக்கும் மம்மியோட ஞாபகமே வராமல் வளர்த்து இருக்கலாம் இல்ல? நீ ஒரு மூலையில், சுகன்யா ஒரு மூலையில், நாங்கள் ஒரு பக்கம். ஏதோ ஒரு தூரத்து சொந்தக்காரங்க மாதிரி ஆடிக்கு ஒருநாள். அமாவாசைக்கு ஒருநாள் பார்த்துக் கொள்கிறோம். இதெல்லாம் ஏன் என்று புரியலை.''

''புரியலை?'' நிஜந்தனின் கண்களை நேருக்கு நேர் சந்தித்தவள், ''நாம எல்லாம் பணக்கார அனாதைகள்'' என்றாள்.

ஒன்றும் பேசாமல் செஸ்போர்டை மடித்தான்.

''அண்ணே, நான் ஒன்று சொல்லட்டுமா?''

''என்னம்மா?''

''நீ ஏன் இப்போ கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?''

''நானா? கல்யாணமா? எனக்கா?'' சிரித்தான் நிஜந்தன்.

''உண்மையாகவே சொல்றேன். சீரியசாகவும் சொல்றேன். நீ கல்யாணம் பண்ணிக் கொண்டால், நம் வீட்டிற்கு ஒரு பொண்ணு வர சான்ஸ் இருக்கு இல்லையா?''

நிஜந்தன் யோசிப்பது போல் தெரிந்தது.

பிற்பகல் மூன்று மணி.

திரும்பி படுக்க நினைத்து உடம்பை அசைத்தாள் திவ்யா. யாரோ உடம்பைக் கட்டிப்பிடித்துக் கொண்டு இருப்பதை உணர்ந்ததும், கண்களை லேசாகத் திறந்தாள். கோழிக் குஞ்சாக அவளைக் கட்டிக் கொண்டு சுருண்டு இருந்தாள் சுகன்யா. திவ்யாவின் கைக்கும், மார்பிற்கும் இடைப்பட்ட இடத்தில் தலையை செருகி இருந்தாள். இடது கையை அவள் இடுப்போடு சுற்றி, இடது காலை அவள் கால்மேல் போட்டபடி தூங்கிக் கொண்டு இருந்தாள். அவள் தலையின் பாரம் தாங்காமல், நெஞ்சு வலித்தது. இறுக்கமாக இடுப்போடு சுகன்யாவின் ஙகைகள் இறுக்கி இருந்தன. அதனால் மூச்சு விட கொஞ்சம் சிரமமாக இருந்தது. அவளின் தூக்கம் கலையாதபடி, அவள்புறமே ஒருக்களித்து படுத்தாள். சுகன்யாவின் சூடான மூச்சுக் காற்று இவள் கழுத்தில் பரவி கதகதப்பை ஏற்படுத்தியது. அதற்கு மேல் ஏனோ தூக்கம் பிடிவாதமாக வர மறுத்தது. கழுத்தில் ஏதோ உறுத்தியது. கைகள் தேடி கஷ்டப்பட்டு



எடுத்தன. மஞ்சள் அரிசி சுகன்யாவின் நெற்றியில் இருந்து உதிர்ந்து இருக்கின்றது. தன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். அரிசி மஞ்சளோடு சேர்ந்து கெட்டியாக பிடித்து இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக உதிர்த்து, தன் உள்ளங் கையில் குவித்துக் கொண்டு உற்று பார்த்தாள். அந்த மஞ்சள் அரிசி ஆயிரம் அர்த்தங்களை மவுனமாக உணர்த்தியது.

சுகன்யாவின் கழுத்துக்குக் கீழே இருந்த தன் கையை ஆடாமல், அசைக்காமல் எடுத்தாள். தன் மேல் இருந்த காலையும் எடுத்து விட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

''சுகன்யா''

''ஏய் சுகன்யா''

''இன்னும் என்ன தூக்கம்''

''ஏய் சுகன்யா.. ப்ளீஸ் கெட் அப்'' தோளைப் பிடித்து உலுக்கினாள்.

புரண்டு படுத்த சுகன்யா ஈனக் குரலில் முனகினாள்.

''எழுந்திரு.''

''தூக்கம் வருது.''

''எழுந்திரு. எழுந்திரு. சொன்னாக் கேளு.''

''எதுக்கு என்னை எழுந்திருக்க சொல்ற'' கண்களைத் திறக்காமலேயே கேட்டாள்.

''நான் ஏழரை ட்ரைனுக்கு ஊட்டி போறேன்.''

''இன்னைக்கா?''

''இன்னைக்கான்னு இழுக்குற. வந்து ஐந்து நாள் ஆகுது தெரியுமில்ல?''

கோபத்தோடு எழுந்து உட்கார்ந்தாள் சுகன்யா. ஒரு பில்லோவை எடுத்து தன் மடியில் வைத்து அழுத்திக் கொண்டு, "ரொம்ப தான் பீத்திக்காதே" முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"இப்போ எதுக்குடி கோபித்துக் கொள்கிறாய்?"

"இன்னைக்கு நீ போய்த்தான் ஆகணுமா?"

"என்ன சுகன்யா? இன்னும் சின்னப் புள்ளையாகவே இருக்க, எனக்கு எக்ஸாம் நெருங்குது."

"நீ பாட்டுக்கு போயிடுவ. உனக்கென்ன நீ இருப்பது ஹாஸ்டல். உனக்கு வார்டன் இருக்காங்க. எப்போதுமே கூட இருக்க ப்ரண்ட்ஸ் இருக்காங்க. ஆனா இங்கே யார் இருக்கா?"

"டாடி இருக்கார், ரெண்டு அண்ணா இருக்காங்க, சமையல்கார அங்கிள் இருக்கார். சர்வண்ட்ஸ் எல்லாம் இருக்காங்க. இங்கே நீ ராணிடி."

"நக்கலா?"

"இல்லை, நிஜமாத்தான் சொல்றேன். நீயும், நானும் போட்டது தப்பு கணக்கு. உனக்கும், எனக்கும் இருக்கும் எண்ணம், ஏக்கம், ஆசை எல்லாமே, டாடி கிட்டேயும் இருக்கு. அண்ணங்க கிட்டேயும் இருக்கு."

சுகன்யா திருப்திப்பட்டதாகத் தெரியவில்லை. "நீ திரும்ப எப்போ வருவே?"

"பப்ளிக் எக்ஸாம் முடிந்ததும், ஓடி வந்திடுறேன்."

"ஆங்.. சுகன்யா, நான் சொல்றபடி நடக்கிறியா?"

"என்ன?"

"ஒன்னு நான் லெவன்திற்கு பாம்பே வரணும். இல்ல எய்த்தோட நீ பாம்பே ஸ்டடியை முடித்துக் கொண்டு ஊட்டி வரணும். என்ன சொல்ற?"



"டாடி சம்மதிப்பாரா?"

"சம்மதிக்க வைக்கனும். இதிலே உன் திறமையைக் காட்டு."

"இது நடக்குமா?"

"மனது வைத்தால் நடக்கும். முயற்சி பண்ணிப்பாரு, இதைப் பற்றி டாடிக்கு லட்டர் எழுதுறேன். ஓ.கே.?"

அரைகுறையாக சம்மதித்தாள் சுகன்யா. "எனக்கென்னவோ டாடி உன்னை இங்கே படிக்க வைப்பார் என்று எனக்கு நம்பிக்கை இல்லை."

"சப்போஸ் டாடி சம்மதிக்கவில்லை என்றால், நான் படிக்கலை. இங்கேயே வந்திடுறேன். போதுமா? இதுக்கு மேலே சந்தேகப்பட்டா, அப்புறம் எனக்கு கெட்ட கோபம் வரும்."

"ஏண்டி இப்படி கடிக்கிற?" அழ ஆரம்பித்தாள்.

"ஏய்.. ஏய்.. நான் சும்மா சொன்னேன். இதுக்குப் போய்.. இங்கே பாரு... இங்கே பாருடா... கண்ணா.. இன்னும் கொஞ்ச நாளில் நமக்கு இரண்டு அண்ணி வரப் போறாங்க..."

"அண்ணியா?"

"ஆமாம், நான் பெரிய அண்ணன்கிட்டே இன்னைக்குத் தான் இதைப் பற்றி பேசினேன். யோசிக்கிற மாதிரி தெரியுது. விரைவில் நம்ம வீட்டில் இரண்டு மேரேஜ் நடக்கலாம்."

"நடந்திட்டுப் போவுது, அதனால் நமக்கென்ன?"

அவள் தோளைப் பற்றி உட்கார வைத்து, தானும் பக்கத்தில் அமர்ந்த திவ்யா, "அடிப் பைத்தியக்காரி, நமக்கு ரெண்டு அண்ணிங்க வருவாங்கடி."

"வந்தா என்ன?"

"வந்தா என்னவா? நம்மை விட வயதில் பெரியவங்களா இருப்பாங்க."

"இருந்திட்டுப் போகட்டுமே, அதனால என்ன?"

"போடி ட்யூப்லைட், அண்ணின்னா என்ன அர்த்தம் தெரியுமா? உனக்குத் தெரியாது. அது எனக்குத் தெரியும். அண்ணின்னா அம்மா என்று இன்னொரு அர்த்தம் உண்டு."

"அம்மான்னு அர்த்தம் மட்டும் இருந்தா போதுமா? அம்மாவா ஆயிட முடியுமா?"

"சும்மா தொண தொணக்காதடி. டெபனட்டா... ஒரு அண்ணியால அம்மாவாக ஆக முடியும்."

"இது யாருக்குத் தெரியாது. அண்ணனோட குழந்தைக்கு அம்மா தான்."

சிரிப்பதா, அழுவதா, திட்டுவதா? என்று தெரியாமல் பற்களை கடித்துக் கொண்டே, "அசடே, அதை நான் சொல்லலை. நமக்கு அம்மாவா இருக்க முடியும்டி. நமக்கு ஒரு அண்ணி இல்ல. இரண்டு அண்ணி. அதனால் கவலைப் படாமல் இரு."

"எனக்கு நம்பிக்கை இல்லை."

"ஏன்?"

"டாடிக்கும், ப்ரதர்ஸ்க்கும் இல்லாத பாசம் எங்கேயோ இருந்து வரப் போறவளுக்கு பொத்துக்கிட்டா வரப் போவுது? இதெல்லாம் சுத்தப் பொய்" அலட்சியமாக கழுத்தை சொறிந்து கொண்டு திரும்பினாள் சுகன்யா.

"இல்லடி. நான் சொல்றது உண்மை. எங்காவது யாராவது ஒருத்தர் தான் கெட்டவங்களா இருப்பாங்க. நமக்கு வரும் அண்ணி அப்படி இருக்க மாட்டாங்க. எனக்கு அப்படி ஒரு நம்பிக்கை இருக்கு."

"எப்படி?"



"கடவுள் என்று ஒருத்தர் இருக்கார். நம்மை அவருக்கு கண்டிப்பா தெரியும். பணம் இருந்தாலும் பாசத்தை நம்மிடம் காட்ட முடியாத சூழ்நிலை நம்ம டாடிக்கு. நம்மோட ஏக்கத்தை கடவுள் புரிந்து இருப்பார். மம்மி மாதிரியான அருமையான அண்ணியைக் கொடுக்கணும் என்று அந்த ஆண்டவனுக்கு தெரியும். நம்மை மோசம் பண்ண மாட்டார்."

சுகன்யாவின் மனதிற்கு இந்தப் பேச்சு, கங்கை வெள்ளத்தை விட பன்மடங்காகப் பெருகி இன்ப ஊற்றை உற்பத்தி செய்தது. "நிஜமாவா?" சின்னக் குழந்தை போல் கேட்டாள்.

"எஸ்.அண்ணின்னா சும்மா இல்லை உன்னைக் காலையிலே எழுப்பி விட்டு, ப்ரஷ் எடுத்துக் கொடுத்து, பேஸ் வாஷ் பண்ணச் சொல்லி விட்டு, உனக்கு சாப்பாடு போட்டு, தலை சீவி விட்டு, ஸ்கூல் பேக்கை எடுத்து உன் முதுகில் மாட்டி விட்டு, உன்னோட நெற்றியில் சின்னதா ஒரு முத்தம் கொடுத்து ஸ்கூல் அனுப்புவாங்க. நீ ஸ்கூல் விட்டு வந்ததும் உனக்கு காபி, டிபன் கொடுத்து, ஈவினிங் ஹோம் ஒர்க் சொல்லிக் கொடுத்து, நைட் உன்னைத் தூங்க வைப்பது முதல் எல்லாமே அண்ணி தான் செய்வாங்க."

"சத்தியமா?"

"ஆமாண்டி."

"அப்படின்னா நான் அண்ணியை அம்மான்னு கூப்பிடட்டுமா?"

"ஐய்யய்யோ. அதெல்லாம் எனக்குத் தெரியாது. அண்ணி வந்த உடன் அவங்ககிட்டேயே கேட்டுக்க."

"எப்போ கல்யாணம்?"

"அதுக்குள்ளேயே அவசரப்பட்டா எப்படி? இன்னும் பெண்ணே பார்க்கவில்லை."

''எப்போ பார்ப்பாங்க?''

''எனக்கென்ன ஜோசியமா தெரியும்.''

''நான் டாடியைப் பார்த்தால், அண்ணி வேணும் என்று கேட்கப் போறேன்.''

''அம்மாடி, புத்திசாலித்தனமா அதை செய்யி, புரியுதா?''

பலமாக தலையாட்டினாள் சுகன்யா. குதூகலம் வந்து ஒட்டிக் கொண்டு உறவாடியது. அண்ணியின் வரவு அற்புத மானது. அன்பானது, அழகானது என்று அவள் மனதில் பதிய வைத்தாள் திவ்யா. அவளைச் சொல்லியும் தவறு இல்லை. அவள் மனதில் இருப்பதுவும் அதுதானே?

மாலை ஆறு மணிக்கு திவ்யா தன் பொருட்களை எல்லாம் மூட்டை கட்டிக் கொண்டாள். சமையல்கார அங்கிள் ஊறு காய் பாட்டிலும், வறுத்த வடாகத்தை ப்ளாஸ்டிக் டப்பாவிலும் காற்று புகாமல் அடைத்துக் கொடுத்தார். மறுத்தாள் திவ்யா.

''இதெல்லாம் எதுக்கு அங்கிள்? வேணாம்.''

''நீ சும்மா இருமா? கொண்டு போய் பாரு.''

''அதுக்கு இல்ல அங்கிள். ஏற்கனவே நீங்க கொடுத்த ஊறுகாய் பாட்டில் அப்படியே இருக்கு.''

''பரவாயில்லை, எடுத்திட்டுப் போம்மா.''

''சரி. உங்கள் விருப்பம். எடுத்திட்டுப் போறேன்'' பாட் டிலையும், டப்பாவையும் வாங்கி வைத்துக் கொண்டாள். ''டாடி எங்கே?''

''அவுரு நாலரை மணிக்கே போயிட்டாருமா, நிஜந்தன், ரஞ்சித் ரெண்டு பேருமே கிளீனிக்கிற்கு போய் விட்டார்கள். ஆமாம், நீ போறது அவங்களுக்குத் தெரியுமில்ல?''



''ஓ தெரியுமே. டாடிக்கு பிசினஸ் மேட்டர் வந்து இருக்கும். இவங்களுக்கு முக்கியமான ஆபரேஷன் வந்து இருக்கும். அதை விடுங்க, அங்கிள். நான் போய் வரேன். சுகன்யாவை கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள்.''

''நீ கவலைப்படாமல் போயிட்டு வாம்மா.''

''அப்போ நான் வரேன் அங்கிள். டாடிகிட்டே சொல் லிடுங்க.''

''பத்திரமா போயிட்டு வாம்மா, நான் சொல்லிக் கொள் கிறேன்.''

''சுகன்யா, வரேண்டி.''

''இப்பவோ போகணுமா? ட்ரைன் செவன் தர்டிக்கு தானே?'' ஏக்கத்தோடு கேட்டாள்.

''பிரிஃபேரா போனாத்தானே நன்றாக இருக்கும்.''

''நானும் வரட்டா?''

''ஊட்டிக்கா?''

''இல்லை, ஸ்டேஷன் வரைக்கும்.''

''வாடி.''

''நல்லா படிக்கணும், என்ன?''

தலையாட்டினாள் சுகன்யா.

''எதுக்கும் கவலைப்படாதே. எனக்கு அடிக்கடி லட்டர் போடணும்.''

''சரி.''

''டாடிகிட்டே, அண்ணி வேணும் என்று சொல்லு.''

''சரி.''

''சரின்னு, கடமைக்கு தலையாட்டாதே. உன்னோட நல்ல திற்குதான் சொல்றேன்.''

''சொல்றேன்னு சொல்லிட்டேன்ல. அப்புறம் எதுக்கு சும்மா அதையே சொல்றே?''

''அண்ணனைப் பார்த்தாலும் சொல்லு. என்ன புரியுதா?''

''ஒரு சின்ன சந்தேகம். எனக்காக அண்ணி வேணுங்கறியா? இல்லை உனக்காகவா?''

''இரண்டு பேருக்கும்தான். என்னைப் பொருத்தவரை நமக்கு வர அண்ணிங்க அடுத்தவ இல்லை. நம்ம வீட்டிற்கு வர அம் பிகைகள். மூன்றாவது நபர் இல்லை. நம்மோட முன்னேற்றத் திற்கு முக்கியமான ஏணி.''

''அப்படின்னா, ஒன் கண்டிசன்.''

''என்ன?''

''பெரியண்ணி என்னோட அண்ணி. சின்ன அண்ணிதான் உனக்கு.''

''ஏனாம்?''

''பெரிய அண்ணனுக்குத்தானே பர்ஸ்ட் மேரேஜ் ஆகும். நம்ம வீட்டிற்கு பெரிய அண்ணிதானே முதலில் வருவாங்க.''

''ஓ.கே. மேடம். நீங்க அந்த ரூட்டில் போறீங்களா? இரண்டு பேருக்கும் ஒரே நாளில் மேரேஜ் ஆனால்...''

''யார் ரொம்ப அழகாக இருக்காங்களோ, அவங்கதான் என்னோட அண்ணி.''

சுகன்யாவின் தலையை சந்தோஷத்தால் கலைத்து விட்டாள் திவ்யா. ''பெரிய ஆள்டி நீ'' சிரித்தாள். இரவு வெளிச்சத்தில் நிலவோடு போட்டி போட்டது அவள் முகம்.



''பின்னால் வம்புக்கு வர மாட்டியே?''

''மாட்டேன். இரண்டு அண்ணியே வேண்டும் என்றால் கூட நீ வச்சிக்கோ, எனக்கு நீ சிரித்துக் கொண்டு இருந்தால் போதும்.''

ஸ்டேஷன் வந்த சிறிது நேரத்திலேயே ட்ரைன் வருவ தாக அறிவித்தார்கள். சிக்னல் கிடைத்தது. பயணிகள் எல்லாம் சுறுசுறுப்பானார்கள். ட்ரைய்ன் வந்து நின்றது. தன் நம்பரை தேடிப் போய், பர்த்தில் லக்கேஜை வைத்தாள் திவ்யா. ஜன்னல் கம்பிகளில் முகத்தை வைத்து கொண்டு டாட்டா காண்பிக்க கையைத் தூக்கியவள், சுகன்யாவைக் காணாமல் அதிர்ந்தாள்.

## 11



''அங்கிள்.''

''அங்கிள், டிரைவர் அங்கிள்''

''என்னம்மா'' குரல் கேட்டு ஓடி வந்தார்.

''சுகன்யா எங்கே?'' பதறினாள்.

''சுகன்யா... சுகன்யாவா?'' பார்வையை நாலாபக்கமும் வீசி னார். முகத்தை திருப்பிக் கொண்டு வேறுபுறமாக பார்த்து கொண்டு கொஞ்ச தூரத்தில் நின்று இருந்தாள். அவள் உடல் குலுங்குவதைக் கண்டு அவள் அழுகின்றாள் என்று அவருக்குப் புரிந்தது.

''பாப்பா, இது என்னது? எதுக்கு கண் கலங்கற? வாம்மா!''

''நான் வரலை அங்கிள், நான் இங்கேயே நிற்கிறேன். அவளைப் பார்த்தால் அழுகை வந்திடும்... நான் வரலை அங்கிள், நீங்களே சொல்லிட்டு வாங்க'' தொண்டை கமறியது.

திவ்யாவிடம் அவர் வந்து சொல்லவும், ரெயில் கிளம்ப வும் சரியாக இருந்தது.

''சுகன்யாவை பத்திரமாக பார்த்துக்குங்க அங்கிள்''

''சரிம்மா, நீ கவலைப்படாதே.''

ரெயில் கிளம்பியது. சுகன்யாவின் கண்களில் இருந்து ரெயில் புள்ளியாகிப் போனது. டிரைவரும், சுகன்யாவும் ப்ளாட்பாரத்தை விட்டு வெளியே வரும்போது தூறல் போட் டுக் கொண்டு இருந்தது. வீட்டிற்கு வருவதற்குள் பலமான மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. ஏற்கனவே நல்ல குளிர். இதில் மழை பலமாகப் பெய்ததால் சாரல் காற்று புயல் போல் வீசியது. இரண்டு பக்கமும் காரின் கண் ணாடியை ஏற்றி விட்டாள். கையை குறுக்கும் நெடுக்குமாக கட்டிக் கொண்டு உட்கார்ந்து இருந்தாள்.

''க்ரீச்'' கார் நிற்கும் சத்தம் கேட்டு நினைவிற்கு வந்தாள். இறங்க நினைக்கும் முன், டிரைவர் கார் கதவைத் திறந்து விட்டார். காரில் இருந்து இறங்கியவள், கைகளைக் கட்டிக் கொண்டே வீட்டிற்குள் ஓடினாள். வீட்டின் உள்ளே போன துமே தெரிந்தது, டாடியோ, அண்ணன்களோ, யாரும் வர வில்லை என்று. சமையல்கார அங்கிள், ''திவ்யா நல்லபடி யாக டிரெய்ன் ஏறி விட்டாளா?'' என்று விசாரித்தார். பட்டும் படாமல் பதில் சொன்னாள். சாப்பிடச் சொன்னார். மறுத்தாள். தன் அறைக்குள் நுழைந்து கதவைப் 'படார்' என்று சாத்தி தாழ் போட்டாள். பெட்டில் குப்புற விழுந்தாள். தலையணையை கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினாள். வாய்விட்டு சத்தம் வெளியே வந்தது. கண்கள் சிவந்து, நாசி சிவந்து, முகம்



லேசாக உப்பியது. கண்கள் வலிப்பதைப் போல் இருப்பதை உணர்ந்து முகத்தைக் கழுவினாள். கடாமுடா என்று இடி சத்தம் காதை பிளந்தது. காதை இரு கையாலும் பொத்திக் கொண் டாள்.

திடீர் என்று கரண்ட் கட்டானது. வீடு முழுவதும் அமா வாசை இருட்டு. முன்னால் யார் வந்தாலும் தெரியாது. இடித்துக் கொண்டு ஸாரி சொல்ல வேண்டியதுதான். கும் இருட்டு. இடி சத்தமும் சுகன்யாவிற்கு பயங்கர பீதியைக் கொடுத்தது. பயம் வயிற்றை பிடித்து சுருட்டி இழுத்தது. அந்தக் குளிரிலும் குப்பென்று வேர்த்து வழிந்தது. பேச நினைத்தாள். வார்த்தை குழறிக் கொண்டு வர மறுத்தது. மெழுகுவர்த்தி ஹேண்டிலைத் தேடினாள். அவள் இடித்துக் கொண்டு விழுந் ததும், பல பொருட்கள் கீழே விழுந்து உருண்டதும்தான் மிச்சம். தட்டுத் தடுமாறி, நிதானமாக அறையை விட்டு மாடிப் படியில் இறங்கினாள்.

''அங்கிள்''

''அங்கிள்'' கத்தினாள்.

சமையல்கார அங்கிளின் குரல் சன்னமாக எங்கோ ஒலித்தது.

''அங்கிள்'' திரும்பக் கூப்பிட்டாள்.

''என்னம்மா.''

''மெழுகுவர்த்தி வேணும். பயமா இருக்கு.''

''அதைத்தான் நானும் தேடிகிட்டு இருக்கேன். நீ எங்கேமா இருக்க?''

''படியிலே நிக்கிறேன்.''

''நீ அங்கேயே இருமா. நான் மெழுகுவர்த்தி எடுத்திட்டு வரேன்.''

கொஞ்ச நேரத்தில் இரண்டு கையிலும் இரண்டு மெழுகு வர்த்தியோடு வந்தார். சுகன்யாவிடம் ஒரு மெழுகுவர்த் தியைக் கொடுக்கும்போது தான் அவள் முகத்தை கவனித்தார். முகம் பேயறைந்தது போல் கருத்து, சிறுத்து இருந்தது.

''என்னம்மா இது, பயந்திட்டியா?''

''ரொம்ப பயமா இருக்கு அங்கிள். ஜெனரட்டரை போட்டு விடுங்களேன்.''

''டீசல் இல்லம்மா. இப்படி திடீர் என்று கரண்ட் கட்டாகும் என்று எப்படித் தெரியும்?''

''எனக்கு பயமா இருக்கு அங்கிள்.''

''எதுக்கு பயப்படுறே. நாங்கள் எல்லாம் இருக்கிறோம் இல்ல. போய் படுத்துக்கோ. கரண்ட் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடும்.''

''டாடி வந்திட்டாரா அங்கிள்?''

''வந்திட்டாருமா?''

மெழுகுவர்த்தியை தூக்கிக் கொண்டே வரதராஜன் ரூமை நோக்கிப் போனாள் சுகன்யா.

கதவைத் தட்டினாள். 'தட்.. தட்.. தொட்..'

கதவைத் திறந்தார் வரதராஜன்.

மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் சுகன்யா நிற்பது தெரிந்தது.

''என்னம்மா...''

''பயமா இருக்கு டாடி.''

''பயமா? எதுக்கு? நாங்க எல்லாம் இருக்கோம் இல்லே.''



''இல்ல டாடி. எனக்கு பயமா இருக்கு'' சொல்ல முடி யாமல் கண்களில் நீர் வழிந்து வாயில் உள்ள உமிழ் நீரோடு கலந்து உப்புக்கரித்தது.

''டாடி, நான் இங்கேயே படுத்துக்கிறேன் டாடி.''

''இங்கேயா?''

''எஸ், டாடி.. இன்று மட்டும் உங்களோட படுத்துக்கிறேன் டாடி. ரொம்ப பயமா இருக்கு டாடி.''

''இதென்ன பேச்சு.. பைத்தியக்காரத்தனமா. போ போ, போய் உன்னோட ரூம்ல போய் படு.''

''குட் நைட் டாடி'' முனகினாள்.

''குட் நைட். தட்ஸ் குட்'' கதவை சாத்திக் கொண்டார்.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக டாடியை சந்திக்க அவர் ரூமிற்கு போனாள். அவர் வருமான வரி கணக்கை சரி பார்த்துக் கொண்டு இருந்தார்.

''டாடி மே ஐ கமின்.''

நிமிர்ந்து பார்த்தவர், கண்களில் வியப்பை தேக்கி, ''எர்லி மார்னிங்? உள்ளே வா.''

''குட்மார்னிங் டாடி'' இரவு ஏமாற்றத்தை காட்டிக் கொள் ளாமல் சொன்னாள்.

''குட்மார்னிங். நைட் நல்லாத் தூங்கினியா?''

''தூங்கினேன் டாடி. உங்ககிட்டே கொஞ்சம் பேசணும் டாடி.''

''என்னம்மா?''

''எனக்கு அன்னி வேணும் டாடி.''

''அண்ணியா?'' புரியாமல் பார்த்தார்.

''எஸ் டாடி. அண்ணி வேணும்.''

''என்னம்மா சொல்ற?''

''நீங்க மூன்று பேருமே ரொம்ப பிஸியானவங்க. உங்க கிட்டே எல்லாம் நிறைய அன்பு இருக்கு. ஆனா அதைக் காட்டத்தான் டயம் இல்ல.''

''சுகன்யா.''

''என்னை தப்பா நினைக்காதிங்க டாடி. அண்ணி வந்தால், இந்த நிலை மாறலாம் இல்லையா?''

''சர்வண்ட் எல்லாம் உன்னை நன்றாகப் பார்த்துக் கொள்ள வில்லையா? என்ன பண்றாங்க அவங்க எல்லோரும்.''

''அவங்ககிட்டே என்ன கேட்கப் போறிங்க? அவங்க எல் லாரும் எனக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. அண்ணன் காட்டும் பாசத்திற்கும், அடுத்தவங்க காட்டும் பாசத்திற்கும் வித்தியாசம் இருக்கு டாடி. இது ஆத்மார்த்தமானது. அது அவங்களுக்கு இடப்பட்ட ஒரு வேலை.''

தெள்ளத் தெளிவாக சுகன்யாவின் உள்ளத்தை புரிந்துக் கொண்டார். வரதராஜன். 'எத்தனை நாளைக்குத்தான் இந்தப் புள்ளைகள் இப்படியே இருக்கும்? பெரியவங்களாகவும் ஆகி விட்டன. இந்த வயதில் நல்வழிப்படுத்த வீட்டில் ஒரு பெண் இருந்தால்தானே நல்லது. நிரஞ்சனுக்கும் வேறு வய தாகிக் கொண்டே போகிறது.'

''சரிம்மா. சீக்கிரமே நிரஞ்சனுக்கு கல்யாணம் பண்ணிட லாம்.''

''தேங்க் யூ டாடி. இன்னொரு விசயம்'' காலைத் தேய்த்துக் கொண்டு அரைக் கண்ணால் அவரை நோட்டம் விட்டாள்.



''இன்னொரு விசயமா? அது என்னது?''

''இந்த வருடம் படிப்பு முடிந்ததும், நான் ஊட்டியிலே போய் படிக்கிறேன். இல்லை என்றால் திவ்யா இங்கே இருக் கட்டும்...'' வார்த்தையை மென்றாள்.

சிரிப்பு பொத்து கொண்டு வெளியே வந்து குதித்தது வரதராஜனுக்கு. கலகலவென சிரித்தார். ''சரி உன்னோட ஆசைப் படி இந்த வருடம் பப்ளிக் முடிந்த உடன் திவ்யாவை பாம்பேயிலேயே நல்ல கான்வென்டில் சேர்த்து விடலாம். போதுமா?''

''இது போதும் டாடி. தேங்க் யூ வெரி மச். தேங்க் யூ வெரி மச்.'' சுகன்யா போனதும் வருமான வரி கணக்கை மூடி வைத்தார். புதியதாக ஒரு பெரிய பிரச்சினையை அல்லவா காலையிலேயே சுகன்யா இவரிடம் விட்டு சென்று இருக் கிறாள். இவர்களுக்கு ஏற்ற அண்ணியை எங்கே போய் தேடு வது? நிஜந்தனுக்கும் ஏற்ற பெண்ணாக இருக்க வேண்டும். தன் தமிழ் நாட்டுக்கார நண்பர் ஒருவருக்கு உடனே வரச் சொல்லி ட்ரங்கால் கொடுத்தார்.

மடமடவென பெண் பார்க்கும் வேலைகள் துரிதமாக நடந்தன. நிஜந்தனுக்கு பெண் கொடுக்க வேண்டும் என்று எத்தனையோ பாம்பே பணக்காரர்கள் போட்டி போட் டாலும், தமிழ்நாட்டுப் பெண்ணாக இருக்க வேண்டும் என்று வரதராஜன் பிடிவாதமாக இருந்தார். நூற்றுக்கணக்கில் போட் டோவும் ஜாதகமும் நண்பர்கள் மூலம் வந்து குவிந்தன. படிப்பு, அழகு, குடும்பம், வசதி இவற்றை எல்லாம் பார்த்த தில் நித்யாவை எல்லோருக்குமே பிடித்திருந்தது. முறைப்படி பெண் பார்க்க வருவதாக பாண்டிச்சேரிக்கு சொல்லி அனுப் பினார், வரதராஜன். நித்யா பிறந்தது, வளர்ந்தது, படித்தது எல்லாமே பாண்டிச்சேரிதான். எம்.பி.பி.எஸ் முடித்து இருந் தாள். தந்தை மாணிக்கம்பிள்ளை பேங்க் மேனேஜராக

இருந்தார். அவருக்கு இரண்டே பெண்கள்தான். பையன்கள் கிடையாது. எல்லாமே பூர்வீக சொத்து. பெரிய பெண்ணை பி.எஸ்.சி வரை படிக்க வைத்தார். இன்னும் மேலே படிக்க வைக்க வேண்டும் என்று தான் ஆசை. ஆனால் நல்ல வரன் வரவும் கொடுத்து விட்டார். இரண்டாவது பெண் தான் நித்யா. உறவுக்காரர் ஒருவர் மூலம் வரதராஜனின் சம்பந்தத்தை வரவேற்றார் மாணிக்கம் பிள்ளை.

போட்டோவில் நித்யாவைப் பார்த்ததும், மிகவும் பிடித்துப் போயிற்று சுகன்யாவிற்கு. உடனே திவ்யாவுக்கு கடிதம் எழுதினாள். போட்டோவையும் வைத்து அனுப்பினாள். தனக்கும் நித்யாவைப் பிடித்து இருக்கின்றது என்றும், தற்போது எக்ஸாம் நடந்து கொண்டு இருப்பதால் பெண் பார்க்க தன்னால் வர முடியாது என்றும் எழுதி விட்டாள் திவ்யா.

பெண் பார்க்கும் படலமும் விரைவில் நடக்க எல்லா ஏற்பாடும் செய்யப்பட்டது. வரதராஜன், நிஜந்தன், சுகன்யா, ரஞ்சித், வரதராஜனின் நண்பர் ஆக மொத்தம் ஐந்து பேரும் நல்ல நேரங்களையும், சுப தினத்தையும் தாங்கிய ஒரு புதன் கிழமை பாண்டிச்சேரி சென்றார்கள். நிஜந்தன் அதிகமாகவே வெட்கப்பட்டான். வெட்கம், நாணம் என்பது பெண்களுக்கு மட்டுமா சொந்தம்? இல்லை ஆண்களுக்கும் சொந்தம் என்பதை நிருபித்தான். மிகவும் ஷையாகக் காணப்பட்டான். நித்யாவின் வீட்டின் முன்னால் இவர்களுடைய கார் போய் நின்றது. மாணிக்கம்பிள்ளை வாயெல்லாம் பல்லாக வரவேற்றார். மாணிக்கம்பிள்ளை சம்சாரமும் சம்பிரதாயத்தைக் கடைபிடித்து கை கூப்பினார். பெண் பார்க்கும்படலம் மகிழ்வோடு நிறைவடைந்தது.

இரண்டு மாதங்களுக்கு பிறகு.

ஒரு சுபயோக சுபதினத்தில் நித்யாவின் கழுத்தில் நிஜந்தன் மாங்கல்ய நாணை ஏற்றினான்.



## 12



நித்யா - நிஜந்தன் திருமணம் திவ்யா, சுகன்யா இவர்களின் ஆன்வல் லீவில் தான் நடந்தது. திருமணம் முடிந்த கையோடு ஹனிமூன், விருந்து என்று மூன்று மாதமாக பாம்பே பக்கமே அவர்கள் தலைகாட்டவில்லை. திவ்யாவும், சுகன்யாவும் நல்ல மார்க்குகள் எடுத்து தேர்வில் தேறி இருந்தார்கள். திவ்யா பாம்பே ஸ்கூலில் சேர்ந்து இருக்கின்றாள் என்று கூட நிஜந்தனுக்கு தெரியாது.

மெல்ல மூன்று மாதம் பதினொரு நாட்கள் உருண்டோடியது.

அன்று வழக்கம் போல் ஸ்கூலுக்கு புறப்பட்டு கொண்டு இருந்தார்கள் இருவரும். வரதராஜன் கம்பெனிக்கும், ரஞ்சித் கிளினிக்கிற்கும் காலை 8.00 மணிக்கே போய்விட்டார்கள். சமையல்கார அங்கிள் திவ்யா ரூமிற்கு ஓடி வந்தார். ''பாப்பா, டெலிகிராம் வந்திருக்கு'' ''டெலிகிராமா?'' கீழே ஓடி வந்தாள். கையெழுத்து போட்டு தந்திக்காரரை அனுப்பிவிட்டு, பார்த்தாள். நிஜந்தன் அடித்து இருந்தான். அன்று மாலை அவனும் நித்யாவும், பாம்பே வருவதாக.

''சுகன்யா ஓடியாடி ஒரு குட் நியூஸ்.''

ஐப்ரோ பென்சிலோடு கீழே ஓடி வந்தாள் சுகன்யா.

''நிஜந்தனும், அண்ணியும் இன்னைக்கு ஈவினிங் வராங்களாம்.''

''நிஜமா?''

''ச்சீ. நீ ஒரு சந்தேகம் பிடிச்சவடி. நீயே பார்'' அவள் கையில் தந்தியைத் திணித்தாள். படித்தாள் சுகன்யா.

''இன்னைக்கு நான் ஸ்கூல் வரலை, லீவ் லட்டர் கொடுத்துறியா?''

''ஏன்?''

''அண்ணி வராங்க இல்ல. எனக்கு வீட்டில் நிறைய வேலை இருக்கு''

''வேலையா?'' முழித்தாள்.

''நீ ஒன்றும் மூக்கை நுழைக்க வேண்டாம். லீவ் லெட்டரைக் கொடுத்தால் போதும்''

''கொண்டா கொடுத்து விடுறேன்.''

''அப்புறம் ஒரு விஷயத்தை திரும்ப நினைவுபடுத்துறேன். பெரிய அண்ணி என்னோட அண்ணி. நினைவு இருக்கு இல்ல?'' அதிகாரமாகக் கேட்டாள்.

''நினைவு இருக்குடி, லீவ் லெட்டரைக் கொண்டா, அவங்க வருவதோ ஈவினிங், நீ இப்பவே லீவ் போட்டு விட்டு என்ன தான் பண்ணப் போறியோ? ஆண்டவனுக்கே வெளிச்சம்''

''அங்கிள் நான் வரேன்'' உதட்டைப் பிதுக்கிக் கொண்டு புறப்பட்டாள், திவ்யா.

'லீவ் லெட்டரைக் கொடுத்தனுப்பியாச்சி, இங்கே இருந்து என்ன பண்ணுவது? ஒன்றுமே புரியலையே' மூளையைக் கசக்கினாள். ம்கூம் ஒரு ஐடியாவும் தோணமாட்டேங்குதே, காட் போர்டில் வெல்கம் கட் பண்ணி, டிசைனோட முன்னாடி வைக்கலாமா? ச்சீச் இதெல்லாம் ரொம்பப் பழசு. வேற என்ன செய்யலாம்? பொக்கே வாங்கி வந்து கொடுக்கலாமா? ம்கூம் வாழ்த்து சொல்லும் அளவு நாம என்ன பெரிய ஆளா?



இல்லையே. என்ன பண்ணலாம்? நிஜந்தன் ரூமை டிசைன் பண்ணலாமா? குட். தட்ஸ் க்ரேட். இரண்டு சர்வண்ட்டோட நிஜந்தன் ரூமில் நுழைந்தாள். மடமடவென வேலை துரிதமானது. மூன்று மாதங்களுக்கு முன்பு இந்த ரூமில்தான் அவர்களின் 'பஸ்ட் நைட்' நடந்தது. அடுத்த நாளே அவர்கள் மெட்ராஸ் சென்று விட்டதால், போட்டது போட்டபடி அப்படியே கிடந்தது. டேபிள், சேர் எல்லாவற்றையும் நகர்த்தி போட்டு முதலில் கூட்டினார்கள். கட்டிலில் உள்ள பூக்கள் எல்லாம் காய்ந்து, கருகி, சருகாகக் கிடந்தது. அதை எல்லாம் தட்டி விட்டு மெத்தை மேல் பெட்சீட்டை விரித்த போது, அவள் கால் அருகே அந்த சின்னப் பொருள் விழுந்தது.

குனிந்து கையில் எடுத்தாள்.

சின்ன ரிங். திருப்பித் திருப்பி பார்த்தாள். அண்ணியுடையதாக இருக்கும். மறந்திட்டுப் போய் விட்டார்களா? இல்லை தெரியாமல் போய் விட்டார்களா? எப்படியோ வந்த உடன் கொடுத்துவிட வேண்டும். தன் அறையில் இருந்த பூந்தொட்டி, குரோட்டன் தொட்டி எல்லாவற்றையும் இந்த அறைக்கு கொண்டு வந்து அலங்கரித்தாள். பல்பை செருகி ஒயரில் போடும் ப்ளவர் வாஸ் ஒன்று ஒரு வருடத்திற்கு முன்பு இவள் போட்டு இருந்தாள். அதை டேபிள் முன்னால் பளிச் என்று தெரியும்படி வைத்தாள். ஹாஸ்பிடலுக்கு போன் பண்ணி ரஞ்சித்திடம் சொன்னாள். முடிந்த அளவு ஆறு மணிக்கு எல்லாம் வருவதாக வாக்களித்தான். போனில் டாடி கிடைக்கவில்லை. தனக்குத் தெரிந்தவர்கள் வீட்டிற்கு எல்லாம் போன் பண்ணி விஷயத்தை சொன்னாள். அவர்கள் வாழ்த்து சொல்லும்போது தனக்கே சொன்னதாகப் பூரித்து நின்றாள். ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. ட்ரைவர் இருவரையும் இன்வைட் பண்ண 5.00 மணிக்கு எல்லாம் ரெயில்வே ஸ்டேசனுக்கு சென்று விட்டார்.

NNEMARA PUBLIC LIBR

சரியாக ஐந்து மணி நாற்பத்தி ஆறு நிமிடம் முப்பது வினாடிகளுக்கு எல்லாம் நிஜந்தனும், நித்யாவும் வீட்டிற்கு வந்தார்கள். ரஞ்சித், வரதராஜன் இவர்கள் இருவரும் இன்னும் வரவே இல்லை. அவர்களை தவிர எல்லோரும் வரவேற்றார்கள். இந்த மூன்று மாதத்தில் கொஞ்சம் பூசினாற் போல் நித்யா இருப்பது போல் சுகன்யாவிற்கு பட்டது. திவ்யாவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. திருமண அன்று பார்த்தது தானே, அதன் பிறகு நித்யாவை இப்போதுதான் பார்க்கின்றாள். அதனால் சின்னப் புன்னகையோடு ஒதுங்கிக் கொண்டாள். காலையில் சுகன்யா போட்ட கண்டிசன் வேறு நினைவிற்கு வந்ததால் எட்ட நின்றே எல்லாவற்றையும் பார்த்தாள். சுகன்யா பரபரவென அலைந்தாள். இவள் இவ்வளவு சந்தோஷமாக இருந்து, ஒரு நாள் கூட திவ்யா பார்த்தது இல்லை. அப்படி ஒரு சந்தோஷம். மனமார தன் இஷ்டதெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டாள். நிஜந்தன் ஒவ்வொருத்தரையும் தன் மனைவிக்கு அறிமுகப்படுத்தினான். எல்லோரையும் அறிமுகப் படுத்திய பின் திவ்யா உட்கார்ந்து இருக்கும் சோபா அருகே வந்தான்.

''ஹாய்'' சிரித்துக் கொண்டே திவ்யாவின் தோளைப் பற்றினாள், நித்யா.

திவ்யாவினால் பேச முடியவில்லை என்பதை விட பேச நா எழவில்லை. பேச வரவில்லை. நெஞ்சு நிறைய சந்தோஷம், கூடு கட்டி குடி இருந்தது. நித்யாவின் ஒவ்வொரு வார்த்தையையும், ஒவ்வொரு அசைவையும் ரசித்தாள். இனம் புரியாத ஒரு பாசம், நம்பிக்கை, துளிர்த்து, வளர்ந்து, பூத்து, காய்த்து, கனியாகி வளர்ந்து நின்றது. சுகன்யா ரிங்கோடு வந்தாள்.

''அண்ணீ.''

திரும்பினாள், நித்யா.



''இது உங்களோட ரிங்கா?'' நீட்டினாள்.

எடுத்துப் பார்த்தவள், வேகமாக ஆமோதித்து தலையாட்டினாள். ''இது எப்படி? உன்னிடம்?

''அது ஒன்றும் இல்லண்ணீ. நீங்க வரீங்கன்னு தெரிந்ததும்; அண்ணன் ரூமை சுத்தம் பண்ண சொன்னோம். அங்கே இது கிடைத்தது''

நித்யாவின் முகம் மாறியது.

''நீ ஏன் அங்கே போன?'' கண்டிப்பு கலந்தோடியது.

''ஏன்... ஏன்... நான் போகக் கூடாதா?'' தடுமாறினாள்.

சுதாரித்துக் கொண்டான், நிஜந்தன். ''ஒன்னும் இல்லம்மா. நீ எதுக்காக அந்த வேலையை செஞ்சேன்னு கேக்கறா.''

''இதில் என்னண்ணே இருக்கு''

''என்னங்க, டயர்டா இருக்கு.'' நிஜந்தனை கிளப்பிக் கொண்டு மாடிக்குச் சென்றாள். நித்யா பின்னாலேயே தொணதொணத்தபடியே போனாள் சுகன்யா. நித்யா அவள் வருகையை விரும்பா விட்டாலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அறைக்குள் நுழைந்ததும்,

''அண்ணீ. இது நான் போட்ட ப்ளவர்வாஸ். நல்லா இருக்கா?'' எதிர்பார்ப்போடு கேட்டாள்.

''இதெல்லாம் என்ன வெட்டி வேலை. ஸ்டடியில கான்ஸன்ரேசன் பண்ணாம, சோம்பேறித்தனமான வேலையை எல்லாம் பண்ணி இருக்க''

சுகன்யாவின் முகம் சுருங்கியது.

''நல்லா படிக்கணும் என்று சொல்றாம்மா.'' ட்ரான்சிலேசன் பண்ணினான், நிஜந்தன்.

சுகன்யா கீழே சென்றதும், படால் என்று கதவை சாத்தி னாள் நித்யா.

நிஜந்தனுக்கு கோபம் பற்றிக் கொண்டு வந்தது.

''நித்யா, என்னதான் நீ நினைத்துக் கொண்டு இருக்கே?''

பார்வையால் கொக்கி போட்டாள் நித்யா.

''புரியலை, நீ எதை நினைத்துக் கொண்டு இப்படி எல்லாம் பேசுற?''

''நான் என்ன தப்பாவா பேசினேன்?''

''ஆமாம். சுகன்யா எவ்வளவு ஆசையா உன்னிடம் பேசினா? ப்ளவர்வாசை எடுத்து வந்து காண்பித்தாள். அந்தப் பிஞ்சு முகத்துல எத்தனை எதிர்பார்ப்பு இருந்தது.''

''இந்த மாதிரி வேலையெல்லாம் எனக்குப் பிடிக்காதுங்க.''

''பிடிக்காட்டியும், பிடிச்சிருக்குன்னு சொல்ல வேண்டாமா?''

''என்னால பொய் சொல்ல முடியாது'' தீவிரமாக சொன் னாள்.

''நித்யா. ப்ளீஸ் பிரச்சினையை உருவாக்காதே'' தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தான். அவன் அருகில் வந்து உட்கார்ந்தாள் நித்யா. அவன் முகத்தை தன் பக்கம் மென்மை யாகத் திருப்பினாள். வேண்டா வெறுப்பாகப் பார்த்தான். ''இப்போ என்ன நடந்து போச்சி என்று இப்படி உர்ருன்னு இருக்கீங்க?''

அவள் கைகளைத் தன் தோளில் எடுத்துப் போட்டுக் கொண்டு, புன்சிரிப்போடு சொன்னான். ''என்னை விட, என்னோட டாடியை விட, இந்த வீட்டிற்கு ஒரு பொண்ணு வர வேண்டும் என்று ஆசைப்பட்டது திவ்யாவும், சுகன்யாவும் தான்''

''அப்கோர்ஸ் அதனால் என்ன?''



''அவங்களோட எதிர்பார்ப்பை ஏமாற்றிடாதே''

''நீங்க சொல்றது தெரியுது. ஆனா சுகன்யாதான் கொஞ்சம் கூட மேனஸ் இல்லாமல் பிகேவ் பண்றா?''

''நித்யா'' கத்தினான்.

''ஏன் கத்துறீங்க. தங்கக் கத்தி என்பதற்காக கழுத்தை வெட் டிக்க முடியுமா?''

இதற்கு மேல் பேசினால் வாதம்தான் முற்றும் என்று, அத் தோடு அந்தப் பேச்சை, நிறுத்திக் கொண்டான். இரவு சாப்பாட் டின் போது திரும்ப பிரச்சினை எழுந்தது. எல்லோரும் ஒன் றாக அமர்ந்து சாப்பிட்டார்கள். நித்யாதான் பேச்சைத் துவங்கி னாள்.

''அங்கிள்''

வாய்வரை கொண்டு சென்ற டிபனை வாயில் வைக் காமல், அப்படியே அவளைப் பார்த்து,

''என்னம்மா'' கேட்டார்.

''பாம்பே டாக்டர் மனோஜ்குமார், பாண்டிச்சேரியில் நான் ஒர்க் பண்ணிக் கொண்டு இருந்த ஹாஸ்பிடலுக்கு ஒருமுறை வந்தார்''

''மனோஜ்குமார்'' யோசித்தவருக்கு பளிச்சென்று தெரிந்தது. பேமஸ் ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட் மனோஜ்குமாரா?''

''எஸ். அங்கிள். பாண்டிச்சேரியிலேயே, தன்னோட ஹாஸ் பிடலில் ஒர்க் பண்ண விருப்பமான்னு கேட்டார். சோ நான் இங்கே அவரோட ஹாஸ்பிடலில் ஒர்க் பண்ணலாம் என்று இருக்கேன்.''

நிஜந்தனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இவ என்ன திடீர் என்று இப்படி ஒரு குண்டைப் போடுறா? கேள்விக் குறியோடு அவளைப் பார்த்தான்.

அவன் பார்வையைத் தவிர்த்தாள், நித்யா.

''எனக்கொன்றும் இல்லம்மா. நீ விருப்பப்பட்டா போகலாம்.''

''தேங்க்ஸ் அங்கிள்''

திவ்யாவும், சுகன்யாவும் ஒன்றும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். டவலில் கையை துடைத்துக் கொண்டு நித்யா எழுந்ததும், அவள் அருகில் சென்று கையை லேசாக தொட்டாள் சுகன்யா.

''என்ன சுகன்யா''

''குட் நைட் அண்ணி''

''குட்நைட்'' சிரித்தாள்.

''ஒரு சின்ன ஆப்ளிகேசன்?''

''எதுக்குத் தயக்கம்? சொல்லு''

''உங்களை நான் ஒரே ஒரு தடவை அம்மான்னு கூப்பிடட்டுமா?'' கண்ணின் கடை ஓரம் கண்ணீர் கசிந்தது.

அதிர்ந்தாள் நித்யா.

''சொல்லுங்கண்ணி நான் உங்களை அம்மான்னு கூப்பிடட்டுமா?''

''ஷட் இதென்ன பேச்சு, அண்ணியை போய் அம்மான்னு கிட்டு. உம்... நீ ஏதோ குழம்பிப் போய் இருக்க.போய் நிம்மதியா தூங்கு. காலையிலே எல்லாம் சரியாப் போயிடும்'' முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு மாடி ஏறினாள்.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த திவ்யா, சுகன்யாவிடம் வந்து, ''ஏண்டி, உனக்கு ஏதாவது இருக்கா? வந்த உடனே திடுதிப்புன்னு இப்படிக் கேட்டா, எப்படி பதில் சொல்லுவாங்க. பாவம் ஷாக்காயிட்டாங்க.''



நிஜந்தனின் அறை.

நிஜந்தனின் மார்பில் சாய்ந்து இருந்தாள் நித்யா. அவன் மார்பில் ஆள்காட்டி விரலால் கோலம் போட்டபடியே இருந்தாள்.

''என்னங்க, என்னங்க''

நிஜந்தனிடம் இருந்து பதில் வராததால், தலையைத் தூக்கி அவனைப் பார்த்தாள்.

''கோபமா?'' கொஞ்சினாள்.

''இல்லை'' முகத்தை திருப்பிக் கொண்டான்.

''பொய் சொல்லாதீங்க. என் மேல் கோபம்தானே?''

''தெரியுதுல்ல. அப்புறம் என்ன கேள்வி?''

''இங்கே பாருங்க. இப்படி எல்லாம் பேசாதீங்க. என்னால தாங்கிக்க முடியாது. இப்போ நான் என்ன பண்ணிட்டேன்?'' குரல் உடைந்தது. அழுது விடுவாள் போல் தோன்றியது.

''நித்யா.''

''நித்யா'' இப்போது இவள் காட்டில் மழை. பிகு பண்ணினாள்.

''நித்யா, இங்கே பாருமா? நீ எதுக்கு வேலைக்குப் போகணும்? நான் சம்பாதித்தால் போதாதா? நீயும் சம்பாதிக்கணும் என்றோ, உன்னோட சம்பாத்தியத்தை எதிர்பார்த்தோ இந்தக் குடும்பம் இல்லை''

கோபமாகத் திரும்பினாள். ''அதுக்காக, எனக்கு வர குட் சான்சை விட்டுடச் சொல்றீங்களா?''

''எது குட் சான்ஸ்?''

"டாக்டர் மனோஜ்குமாரை பற்றி தெரியும் இல்ல?"

"ரொம்ப நல்லாவே தெரியும்"

"அவருகிட்டே அசிஸ்டெண்டா இருக்க கொடுத்து வைக் கணுங்க. அது மட்டும் இல்ல ப்ராக்டிகலா எல்லாமே கற்றுக் கொள்ளலாம்"

"சரி நித்யா. ஆனா உனக்கு இது தேவை இல்லை"

"நீங்க எதுக்கு ஒர்க் பண்ணுறீங்க. உங்க டாடிதான் நிறைய சம்பாதித்து வைத்து இருக்கிறாரே, அப்படி இருக்கும் போது, ஒரு ப்ரைவேட் ஹாஸ்பிடலில் சீப் டாக்டரா நீங்க ஏன் இருக்கீங்க?"

"நான் ஆம்பளை. வேலை புருச லட்சணம்."

"ஆம்பளை என்கின்ற கர்வம் உங்களுக்கும் இருக்கா? எந்த வகையிலே உங்களை விடப் பெண்கள் குறைந்து போய் விட்டார்கள்? சொல்லப் போனா ஆம்பளையை விட எல்லா வகையிலும் உயர்ந்தவர்கள் பெண்கள் தான். உங்களுக்கு ஒரு சட்டம், எனக்கு ஒரு சட்டமா?"

"நித்யா, நீ ரூல்ஸ் பேசுற. ஆனா."

"ஆனாவாது, ஈனாவாது. நான் என்னோட ஆத்ம திருப்திக் காக போறேன். படிச்ச படிப்பை மறந்திடக் கூடாது என்பதற் காகப் போறேன்."

"இதுக்கு மேலே உன்னிடம் நான் என்ன சொல்லப் போறேன். உன்னோட இஷ்டம்" சலிப்போடு திரும்பிக் கொண்டான்.

அவன் புறம் தானும் திரும்பி அவன் கழுத்தில் தன் கையால் மாலை போட்டாள். அவன் காதில் தன் உதட்டை வைத்துக் கொண்டு, "டாக்டரை டாக்டரே புரிந்து கொள்ளவில்லை என்றால் எப்படி? நான் வேலைக்குப் போவதால் எந்தப்



பிரச்சினையும் ஏற்படாது. உங்களுக்கு எந்தக் குறையும் வைக்க மாட்டேன். அதுக்கு நான் கேரண்டி. மற்ற ஹாஸ் பிடல் என்றால் கூட நான் போக மாட்டேன். டாக்டர் மனோஜ் குமார் என்பதால்தான் இவ்வளவு ஸ்ட்ராங்கா சொல்றேன். ப்ளீஸ் டார்லிங் என்னைப் புரிந்து கொள்ளுங்கள்." உண்மை யான வருத்தத்தோடும், கவலையோடும் சிணுங்கினாள். அதற்கு மேலும் அவனால் கோபத்தோடு இருக்க முடிய வில்லை. படக்கென்று ஆர்வத்தோடு அணைத்தான். அவளை அல்ல, விளக்கை.

நித்யா, அடுத்த நாளே டாக்டர் மனோஜ்குமாரிடம் அஸிஸ் டெண்டாகச் சேர்ந்தாள். ஹாஸ்பிடல் மாருதியே காலை ஏழு மணிக்கெல்லாம் இவளை அழைத்துப் போக வந்தது. மாலை ஏழு மணிக்கு திரும்பினாள். இதில் முக்கியமான ஆபரேஷன் என்றால் விழுந்து அடித்துக் கொண்டு ஓடினாள். அவள் படிப்பின் முக்கியம், தொழிலின் கடமை அவளுக்குத் தானே தெரியும். சுகன்யாவிற்கும், திவ்யாவிற்கும் இது பெரிய ஏமாற்றமாக இருந்தது. சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த மாதிரி, சுகன்யாவின் மனதில் ஆசையையும், கற்பனையை யும் வளர்த்து விட்டு, இன்று அவளை ஏமாற்றத்தோடு உற வாட விட்டது திவ்யாதானே. தன்னைத்தானே நொந்து கொண் டாள். இவள் மட்டும் என்னவாம். அவளை விடக் கற்பனையை யும் ஏக்கத்தையும் சுமந்து இருந்தாள். அவள் முன் தன் தளர்ந்த மனதை காட்டக் கூடாது என்று, எதையும் கண்டு கொள்ளா மல், உதட்டளவில் சிரித்தாள். நித்யாவிற்கு இரண்டு நாத் திகள் இருப்பதே நினைவில்லை. ஹாஸ்பிடல், வீடு, நிஜந்தன் என்று தன் வட்டத்தை குறுக்கிக் கொண்டாள். திருமணத்திற்கு முன்பாவது தங்கைகளைப் பார்த்தால் ஹலோ சொல்வாள். இப்போது அதுவும் இல்லை. தாம்பத்திய வாழ்க்கை தாரமே உலகம் என்று அவளை உணரச் செய்து இருந்தது.

நான்கு மாதங்கள் உருண்டோடியது. வழக்கம் போல் திவ்யா ஸ்கூலுக்கு புறப்பட்டுக் கொண்டு இருந்தாள். லெட்டர் பேடை எடுத்து பேனாவில் இங்க் இருக்கின்றதா என்று செக் பண்ணினாள். டைம் டேபிளை பார்த்து தேவையான புக்ஸ் அண்ட் நோட் எல்லாவற்றையும் எடுத்து வைத்தாள்.

''அங்கிள், டிபன் பாக்ஸ்'' சத்தமாக குரல் கொடுத்து விட்டு, எல்லாவற்றையும் எடுத்து வைத்தாள். பெட்டில் உட்கார்ந்து கொண்டு உள்ளங் கால்களை நன்றாக டவலில் துடைத்து, சாக்சை மாட்டும்போது சுகன்யா பாத்ருமை விட்டு வெளிப் பட்டாள்.

''க்கா.''

''என்னடி'' சாக்சை மாட்டிக் கொண்டே கேட்டாள்.

''எனக்காக, இன்னைக்கு ஒரு நாள் லீவ் போடுறியா?''

சுகன்யாவைப் பார்க்கும்போதே அழுகையும், துக்கமும் அடிவயிற்றில் இருந்து கிளம்பியது. அடக்கிக் கொண்டாள். அவள் சோகத்திற்கு தான் தான் காரணம் என்று மனம் வேறு அடிக்கடி குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரணை செய்தது. மறு பேச்சு பேசாமல் லீவ் போட சம்மதித்து, யூனிபார்ம், சாக்ஸ், எல்லாவற்றையும் உருவினாள். சல்வாருக்கு மாறினாள். என்ன பண்ணனும் என்பது போல் சுகன்யாவை ஏறிட்டாள்.

''எதுக்கு லீவ் போடச் சொன்னேன்னு கேட்க மாட்டியா?''

''மாட்டேன்.''

''ஏன்?''

''நீ என்ன சொன்னாலும், நான் கேக்கப் போறேன்.''

''கோவிலுக்குப் போகலாமா?''

''போகலாம். ஆனால் இப்போ எந்தக் கோவில் திறந்து இருக்கும்.''



''எங்க ஸ்கூலுக்கு அடுத்த ஸ்டீரிட்டில் ஈஸ்வரன் கோவில் ஒன்று இருக்கு. அது எப்பவுமே திறந்து இருக்கும்.''

''சரி போகலாம்.''

''நான் சாமி கும்பிட அங்கே அழைக்கவில்லை. சாமி கிட்டே போய் ஒரு கேள்வி கேட்கப் போறேன்.''

''என்னன்னு?''

''எனக்குத் தெரிந்து என்னோட அக்கா பொய் சொன்னது இல்ல, பொய் சொல்லவும் மாட்டா. ஆனா அவள் அன்னியைப் பற்றிச் சொன்னது எல்லாமே சுத்தப் பொய்யாபிடுச்சி. அது அவளோட தப்பு இல்லை. நீதான் எங்களை ஏமாத்திட்ட, ஏன் ஏமாத்திட்டேன்னு கேட்கப் போறேன்?''

தலையைக் குனிந்து கொண்டாள் திவ்யா.

சுகன்யாவின் உள்ளுணர்வு அவளை எச்சரித்தது. நாம் தவறாகச் சொல்லி விட்டோமா? தலையை நிமிர்த்திப் பார்த்தாள். அணையை உடைத்துக் கொண்டு அலை பாய்ந்து கொண்டு இருந்த கண்ணீரை அழுத்தி துடைத்து விட்டாள்.

முதல் முறையாக மரியாதையான வார்த்தைகளை உடைத் தெறிந்தாள் சுகன்யா.

''இப்ப எதுக்குடி அழற. நாம என்ன தப்பு பண்ணினோம்? அந்தக் கடவுள்தான் தப்பு கணக்குப் போட்டுட்டார்.''

''அதுக்காக நான் அழவில்லை. உன்னை ஏமாற்றிவிட் டோமேன்னுதான்.''

''ஏமாந்தது நான் மட்டும்தானா?'' கூர்மையாகப் பார்த்தாள். ''என்னை விட நீதான் அதிகம் ஏமாந்து போயிட்ட, அது எனக்கு நல்லாவே தெரியும். நான் வெளியிலே புலம்புறேன். நீ மனதுக்குள்ளேயே அழுவுற. எங்கே என் ஏமாற்றத்தை

வெளியே காட்டி விட்டால், நான் தளர்ந்து போயிடுவேனோ என்று சிரித்துக் கொண்டு இருக்கே. இதெல்லாம் எனக்குத் தெரியாதுன்னு நினைக்கிறியா? என்னை ஏமாற்றுவதாக நினைத்து உன்னை நீயே ஏமாத்திக்கிட்டு இருக்க.''

உண்மை வெளிப்பட்டதும் மவுனம் அவளை ஆட்சி செய்தது.

''அக்கா, நான் ஒரு ஐடியா சொல்லட்டா.''

''சொல்லு.''

''பேசாம நாம ரெண்டு பேரும் ஊட்டி கான்வெண்டிற்குப் போகலாமா?''

''அதெப்படி முடியும்? இயர் முடியலை. நீ சேர சான்ஸ் இருக்கு. நான் சேர நோ சான்ஸ். வேற ஏதாவது சொல்லுடி.''

''சரி, அதை விடு எனக்கு ஒரு சின்ன ஆசை.''

''சின்ன ஆசையா?''

''ஆமாம். உன்னோட தியேட்டரில் சினிமா பார்க்கணும் என்று.''

''சினிமாவா? சரி, எந்தத் தியேட்டருக்குப் போகலாம்.''

''தியேட்டரையும் பிக்ஸ் பண்ணியாச்சி, டிக்கெட்டும் ரிசர்வ் பண்ணியாச்சி.''

''எல்லாத்தையும் முடிச்சிட்டேன்னு சொல்லு.''

''எஸ். ரெண்டு பிக்சருமே தமிழ் பிக்சர்தான். ஒரு படம் மார்னிங் ஷோ, ஒரு படம் மேட்னி ஷோ. போலாமா?''

''போலாண்டி.''

''அக்கா'' கையைப் புரண்டினாள். ''மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும், இந்த வார்த்தையில் உனக்கு ஏதாவது தோணுதா?''



''ம்கூம்... எதுவும் தோணலை.''

''தோணலை?''

''இல்லை.''

''அண்ணிங்கறதும் மூன்றெழுத்து தானே?'' அப்பாவித் தனமாகக் கேட்டாள்.

சுகன்யாவின் முகத்தை தன் உள்ளங்கைகளுக்குள் சிறை வைத்து, ''நீ கவலைப்படாதடி. பெரியண்ணி எப்படியோ இருக்கட்டும். சின்ன அண்ணி நமக்கு ஏற்ற மாதிரி வருவாங்க. உன்னோட அன்பையும், பாசத்தையும் அனுபவிக்கவும், அரவணைக்கவும் நம்ம அண்ணிக்கு கொடுத்து வைக்கலடி. டேக் இட் ஈஸி...''

இரண்டு படங்களையும் பார்த்தார்கள். சுகன்யா திவ்யாவை விட்டு ஒரு அடி கூட தள்ளி நிற்கவில்லை. ஒட்டிக் கொண்டு எப்போதும் கையோடு கையைக் கோர்த்து இறுக்கி இருந்தாள். இன்னைக்கு மட்டும் ஏன் இப்படி ஒட்டுறா? மனதில் சங்கடம் புழுவாக நெளிந்தது. ஏதோ நடக்கக் கூடாதது, நடக்கப் போகிறது. என்ன நடக்கப் போகின்றதோ தெரியலையே. ஏதோ ஒரு ரெட் சிக்னல் திவ்யாவின் மூளையில் அடித்துக் கொண்டே இருந்தது. சுகன்யாதான் படம் பார்த்தாள். இவளுக்கு எண்ணம் எல்லாம் என்ன நடக்கப் போகின்றதோ என்று அதையே சுற்றிச் சுற்றி வந்தது. ''பாட்டெல்லாம் நல்லா இருக்கு இல்லக்கா?'' எந்தப் பாட்டை இவள் கேட்டாள். இருந்தாலும் தலையாட்டி வைத்தாள்.

அண்ணியைப் பார்த்து முதலில் பேச வேண்டும். இப்படியே விட்டால் சுகன்யா தாங்க மாட்டாள். நாம் மட்டும் என்ன? நமக்கும் இதே நிலைதான். ஒரே வீட்டில் இருக்கின்றோம். ஒருத்தருக்கு ஒருத்தர் முகம் கொடுத்து சகஜமாகப் பேசுவது கூட இல்லை. ச்ச... என்ன வாழ்க்கை இது? ஷாப்பிங்

போவதாகவும், அப்படியே ப்ரண்ட் ஒருத்தி வீட்டிற்குப் போக வேண்டும் என்றும் பொய் சொல்லி விட்டு, கிளம் பும்போது 'போய்த்தான் ஆக வேண்டுமா?' என்று திரும்பத் திரும்பக் கேட்டாள்.

''முதல்ல வீட்டுக்குள்ளே போடி. நான் போயிட்டு கொஞ்ச நேரத்தில் வந்து விடுறேன்.''

''அக்கா.''

''என்ன? ஏதாவது வாங்கி வரணுமா? ஏண்டி அப்படிப் பாக்குற?''

''ஒன்றும் வேண்டாம். உன்னை முழுசாப் பார்க்கணும் போல தோணிச்சி, அதான் பார்த்தேன்.''

சிரித்தாள் திவ்யா.

''அக்கா'' திரும்ப அழைத்தாள்.

''இப்போ என்ன?''

''எனக்கு மூன்று முத்தம் தருவியா?''

''முத்தம் தானே? அதுவும் மூணு தானே? எங்கிட்டே எக் கச்சக்கமா ஸ்டாக் இருக்கு. இந்தா.''

சுகன்யாவின் நெற்றி, இரண்டு கன்னங்களிலும் ஈரம் ஒட்டாமல் முத்தம் கொடுத்தாள். 'டிரைவரையும் வேண்டாம் என்று கூறி விட்டு, தானே காரை எடுத்துக் கொண்டு டாக்டர் மனோஜ்குமார் நர்சிங்ஹோமை நோக்கி வேகமாகப் போனாள். காரை நிறுத்தி விட்டு ஹாஸ்பிடலின் உள்ளே ஓடினாள். ஒயிட் அண்ட் ஒயிட்டில் நர்சுகளும், டாக்டர்களும் இங்கும், அங்கும் ரன்னிங் ரேஸ் போய் கொண்டு இருந்தார்கள். யாரும் இவள் பார்க்க நின்று கொண்டு இருக்கவில்லை. நின்றால் தானே பேசுவதற்கு. வெயிட்டர் ஹாலில் டோக்கன் கொடுக்கும் பெண்ணை அணுகினாள்.



''எக்ஸ்க்யூஸ் மீ, டாக்டர் நித்யாவைப் பார்க்கணும்'' இந்தியில் கேட்டாள்.

''டாக்டர் நித்யா, மதராஸியா?'' அவளும் இந்தியி லேயே கேட்டாள்.

''ஆமாம்.''

''நீங்கள் யார்?''

''நான் அவருடைய சிஸ்டர் இன் லா. உடனே பார்க்க முடியுமா?''

டாக்டர் நித்யா பனிரெண்டாவது வார்டில் இருப்பதாக அறிந்து கொண்டு வந்து சொன்னாள். நித்யாவை உடனே பார்க்க வேண்டும் என்று இவள் பிடிவாதமாக இருக்கவும், ''நீங்கள் அவரோட பர்சனல் ரூமில் வெயிட் பண்ணுங்க. இன்னும் பத்து நிமிடத்தில் எப்படியும் அவங்க ரூமிற்கு வருவாங்க.''

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, கதவைத் தள்ளிக் கொண்டு, உள்ளே நுழைந்த நித்யா திகைத்தாள்.

''நீயா? இங்கே?'' நம்ப முடியாமல் கேட்டாள்.

''அண்ணி. இப்போ உங்களுக்கு பேஷண்டை பார்க்கும் வேலை இருக்கா?''

''இல்லே. ஒரு விசிட்டிங் போயிட்டு வந்தா போதும். அதுவும் இன்னும் அரை மணி நேரம் கழித்துப் போனால் போதும். நீ எதுக்கு இங்கே வந்தே?''

''உங்கக்கிட்டே கொஞ்சம் பேசணும் அண்ணி, டயம் இருக் குமா?''

புதிராகப் பார்த்த நித்யா, அவளுக்கு நேராக சேரை நகர்த்திக் கொண்டு உட்கார்ந்தாள்.

''அண்ணி, நீங்க ஒரு டாக்டர்தானே? உங்க கண்ணுக்கு உடம்பில் இருக்கும் குறைதான் தெரியுமா? மனதில் இருக்கும் குறையே தெரியாதா?''

''என்ன சொல்ற?''

''நீங்க என்ன நினைத்துக் கொண்டு எங்க வீட்டிற்கு வந் தீங்களோ எனக்குத் தெரியாது. ஆனா நானும், சுகன்யாவும் ஒரு நாள் கூட, ஒரு நிமிடம் கூட உங்களை அண்ணியாப் பார்த்ததில்லை. அம்மாவா கூட இல்லை. அதற்கும் மேலே ஒரு படி உயர்ந்த ஸ்தானத்தில் தான் பார்த்தோம். ஆனால் நீங்க இப்படி நடந்து கொள்வீர்கள் என்று நாங்கள் நினைக்க லண்ணி.''

''சுத்தி வளைக்காதே. விசயத்திற்கு நேரா வா.''

''ஒரு நாளாவது எங்களைச் சாப்பிட்டீங்களான்னு கேட்டு இருப்பீங்களா? இல்ல நாங்க சாப்பிட்டோமா என்று சமை யல்கார அங்கிளைக் கேட்டு இருப்பீங்களா?''

''திவ்யா, நீ அதிகமாப் பேசுற?''

''நான் அதிகமா பேசலண்ணி. அன்பு காட்ட யாரும் இல்லை யேங்கற ஆத்திரத்தில் பேசுறேன். ஆதங்கத்தில் பேசுறேன்.'' 'மளுக்' என்று எட்டிப் பார்த்தது கண்ணீர். ''அண்ணி, டாடியைப் பற்றியும், அண்ணனைப் பற்றியும் சின்ன வயதில் இருந்தே எங்களுக்குத் தெரியும். அது எங்களுக்குப் பழகிப் போச்சு. ஆனா முன்னபின்ன அறிமுகம் இல்லாத அண்ணியை அன்போட வடிவா நினைத்து ஆசையை வளர்த்துக்கிட்டோண்ணி, கற்பனையிலேயே வாழ்ந்திட்டோண்ணி.''

''அதுக்கு நான் பொறுப்பு இல்லையே'' சாதாரணமாக பதில் அளித்தாள் நித்யா.

''ப்ளீஸ் அண்ணி. என்னிடம் நீங்க எப்படி வேண்டுமானா லும் நடந்து கொள்ளுங்கள். சுகன்யா பாவண்ணி. அவ



கிட்டே மட்டும் கொஞ்சம் அன்பா பழகுங்கண்ணி. ஒரு நாளைக்கு ஒரு ஐந்து நிமிடம் அவளுக்காக ஒதுக்குங்க.''

''ஏன் அதை நீ செய்வது?''

வேதனையாகச் சிரித்தாள் திவ்யா. ''என்னால செய்ய முடியும். ஆனாலும் அவமனது உங்களைத்தான் சுத்தி வருது. அம்மான்னு கூப்பிடட்டுமான்னு என்று உங்களைத்தான் கேட்டா, என்னை இல்லை. சுகன்யாவும் ஒரு நோயாளிதான் அவளுக்கு உங்களால மட்டும் தான் ட்ரீட்மெண்ட் கொடுக்க முடியும். ப்ளீசண்ணி.''

''இதுக்காக இவ்வளவு தூரம் வந்தியா? வீட்டிற்கு போ இருட்டி விடும்.''

''அண்ணி.''

''வீட்டிற்குப் போ. இன்னும் சிறிது நேரத்தில் நான் வரேன்.''

''அண்ணி.''

''வீட்டிற்குப் போன்னு சொல்றேன்ல.''

அறையை விட்டு வெளியே வந்தாள் திவ்யா. வாசலை நோக்கிச் சென்றாள்.

''திவ்யா.''

''என்னண்ணி.''

''கார்ல வந்தியா?'' டூ வீலர்ல வந்தியா?''

''கார்ல.''

''சரி போ'' பேசண்டை பார்க்க வார்ட் பக்கம் போனாள்.

திவ்யா வீடு திரும்பியபோது சுகன்யா காமிக்ஸ் படித்துக் கொண்டு இருந்தாள். இரவு எட்டரை வரை நித்யாவை எதிர்

பார்த்தாள். 8.40க்கு ஒரு முக்கியமான ஆபரேசன் அட்டர்ன் பண்ணுவதால் வர ஒன்பதரை ஆகும் என்று போன் பண்ணி, சொன்னாள் நித்யா. அதை சமையல்கார அங்கிள் மூலம் கேட்டபோது உலகமே வெறுத்துப் போனது திவ்யாவுக்கு. போய் படுத்துக் கொண்டாள். சுகன்யா ஏதோ எழுதிக் கொண்டு இருந்தாள். அவள் படுக்கும்போது படுக்கட்டும் என்று 'குட் நைட்' சொல்லி விட்டுத் தூங்கி விட்டாள் திவ்யா.

காலையில் கண் விழித்தபோது, கண்கள் சிவந்து, எரிச்சலைக் கொடுத்தது. கண்களைத் துடைத்துக் கொண்டே பக்கத்தில் பார்த்தாள் திவ்யா. சுகன்யா தூங்கிக் கொண்டு இருந்தாள். உமிழ் நீர் வாய் ஓரம் ஒழுகி இருந்தது. வெள்ளையாக காய்ந்து போய் வேறு இருந்தது. தன் நைட்டியில் துடைத்து விட்டாள்.

''ஏய் சுகன்யா எழுந்திரு மணி ஏழு. எச்சிலை ஒழுக விட்டு தூங்கறா பாரு.''

''சுகன்யா, எழுந்திருடி.''

''டீ சுகன்யா'' எழுந்திருடி.

சுகன்யாவிடம் இருந்து சின்ன சிணுங்கல் கூட இல்லை.

''ஏய் எழுந்திருடி, தூங்கு மூஞ்சி'' பிடித்து உலுக்கினாள். ஓசை இல்லாமல் இவள் தள்ளி விட்ட பக்கம் சரிந்தாள் சுகன்யா.

''ஏய் சுகன்யா, சுகன்யா'' உலுக்கினாள். கையைத் தூக்கிப் பார்த்தால் டொலக் என்று கீழே விழுந்தது. ஜில்லிட்டுப் போய் இருந்தது. விரல்களில் கடினம் கூடி விறைத்து இருந்தது. நெஞ்சில் காதை வைத்துக் கேட்டால், ஒன்றும் கேட்கவில்லை. கிள்ளினாள் சுகன்யாவிடம் இருந்து எந்தச் சலனமும் இல்லை. கலவரம் தொற்றிக் கொண்டது. ''டாடீ'' வீடே அதிரும்படி தொண்டை கிழியக் கத்திக் கொண்டு அறையை விட்டு வெளியே ஓடி வந்தாள். கை, கால் எல்லாம் வெடவெடவென



நடுங்கியது. அதிவேகமாக தடதடவென இதயம் அடித்துக் கொண்டது. சத்தம் வெளியேயே கேட்டது. நிஜந்தன், நித்யா, ரஞ்சித், வரதராஜன் எல்லோரும் இவள் போட்ட கூச்சலைக் கேட்டு பதறிக் கொண்டு ஓடி வந்தார்கள். கீழே தான் விழுந்து விடாமல் இருக்க கதவைப் பிடித்துக் கொண்டு துவண்டாள். வழுக்குப் பாறையில் நிற்பதைப் போல் கால்கள் நிற்க மறுத்து, கைகள் சுரணையற்று தொங்கியது.

மேலே ஓடி வந்தார் வரதராஜன்.

''என்னம்மா, என்னம்மா என்னாச்சி?''

''டாடி... டாடி...'' பேச முடியாமல் திக்கித் தடுமாறினாள். கண்கள் இருண்டு வரதராஜனின் உருவத்தை மறைத்தது. கையை மட்டும் அறையின் உள்ளே காட்டினாள். உள்ளே பாய்ந்தார் வரதராஜன். சுகன்யாவைத் தூக்கினார். ''அம்மா அம்மா சுகன்யா, இங்கே பாரும்மா, டாடியைப் பாரும்மா'' தாடையைப் பிடித்து ஆட்டினார். அவர் கையில் இருந்து தலை துவண்டு தலையணையில் சரிந்தது. விபரீதத்தை உணர்ந்த ரஞ்சித், சுகன்யாவை மூடி இருந்த இமையைப் பிரித்து விட்டு, கண்களைப் பார்த்தான், கையைப் பிடித்துப் பார்த்தான். உள்ளம் பொல பொலவென உடைந்தது.

''சுகன்யா'' தலையில் அடித்துக் கொண்டு கதறினான்.

''ரஞ்சித் என்ன ஆச்சி.''

''டாடி... டாடி நம்ம சுகன்யா, நம்ம சுகன்யா நம்மை எல்லாம் விட்டுட்டுப் போயிட்டா டாடி...'' நித்யாவால் நம்ப முடியவில்லை. கை, காலை எல்லாம் பரபரவென்று தேய்த்துப் பார்த்தாள். தான் ஒரு டாக்டர் என்பதையே மறந்து டாக்டருக்கு போன் பண்ணினான் நிஜந்தன். சுவர் ஓரமாக ஒட்டி உறைந்த போய் உட்கார்ந்து இருந்தாள் திவ்யா. அளவுக் கதிகமாக தூக்க மாத்திரையை சாப்பிட்டு இருக்கின்றாள்

என்று தெரிந்தபோது, சுகன்யாவின் உடலைக் கட்டிக் கொண்டு கதறினாள் திவ்யா. ''சுகன்யா, என் கண்ணே, உனக்கு என் னம்மா குறை வச்சேன். எதுக்கும்மா இந்த வேலையை நெஞ்சே? என்னடா நினைச்சிட்டு இந்த வேலையை செஞ்சே. எங்களை விட்டுட்டு போக உனக்கு எப்படிடா மனம் வந்தது? சுகன்யா நானும் உன்னோட வந்திடுறேண்டி. என்னையும் கூட்டிக்கடி சுகன்யா, சுகன்யா'' எல்லாருடைய கண்களிலும் கண்ணீர் கரை புரண்டது. அந்த வீட்டின் மூலை முடுக்கு எல் லாம் முகாரி ராகத்தை கட்டிப் பிடித்துக் கதறியது.

## 13



சுகன்யா இறந்து இரண்டு மாதங்கள் ஆயிற்று. திவ் யாவைத் தவிர, எல்லோருமே ஓரளவு சகஜ நிலைக்குத் திரும்பி இருந்தார்கள். இவள் நடைப் பிணமாகவே செயல்பட்டாள். எங்கே பார்த்தாலும் சுகன்யா நடப்பது போலவும், பேசுவது போலவுமே இருந்தது. ஸ்கூல் போன மீதி நேரத்தை சுகன் யாவின் போட்டோவை வெறித்துப் பார்த்தபடியே கழித்தாள். தன் டென்த் ஐடென்டிடைப்வ் கார்டைத் தேடியவளின் கண்களில் அவளின் பச்சைக் கலர் டைரி கண்களில் பட்டது. எடுத்து திருப்பித் திருப்பிப் பார்த்தாள். டைரி எழுதி எத்தனை நாட்கள் ஆகின்றது? சுகன்யாவின் இறப்புக்கு முன்பு ஒரு வார மாகவே டைரியைத் தொடவில்லை. முதல் பக்கத்தைப் புரட்டினாள். பார்வையை ஓட விட்டு அடுத்த பக்கத்தைப் புரட்டினாள். அதில் உள்நாட்டு சுவர் ஒன்று இருந்தது. அதன் மேல் என் அன்பு அக்காவிற்கு... என்று இருந்தது.



''இது... இது... சுகன்யாவோட ஹேண்ட் ரைட்டிங் இல்ல'' அவசர அவசரமாகப் பிரித்தாள். சுகன்யாதான் எழுதி இருந் தாள்.

''என் அன்பு அக்காவிற்கு,

உன் ஒரே தங்கை சாவின் விளிம்பில் நின்று கொண்டு உனக்கு எழுதும் ஆத்ம கடிதம். இந்தக் கடிதம் உன் கைகளில் எப்படியும் கிடைக்கும். ஏன்னா நீ தான் டைரி எழுதுவியே. எனக்கு நூறு வயது வரை வாழ ணும் என்று ஆசை. ஆனால் வாழத்தான் புடிக்கலை. அக்கா, காஞ்சு போய் இருந்த இந்தப் பாலைவனத் திற்கு, என்னைக்குமே வற்றாத கங்கையா நீ இருக்க. தூக்க மாத்திரையை எடுத்து வாய் அருகில் கொண்டு போகும்போது கூட உன்னோட நினைவுதான் எனக்கு. உன்னோட சினிமா பார்க்கணும் என்று எனக்குள் இருந்த கடைசி ஆசையையும் இன்று நிறைவேற்றிக் கொண்டேன். அம்மாவோட அன்பு எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாதுக்கா. உன்னைத்தான் தெரி யும். ஆனால், நீ அண்ணியை அம்மாவோட இணைத் தாய். தவறு உன் மேல் இல்லை. உன்னோட மனதில் இருப்பதைத்தான் நீ சொன்ன. அண்ணியிடம் அன்பை எதிர்பார்த்து என்னை விட அதிகமா நீ தான் ஏமாந்து இருக்கிறாய். அதுவும் எனக்குத் தெரியும். ஆனா அண்ணியைப் பற்றி அதிகமா நான் கற்பனை பண்ணி வாழ்ந்திட்டேங்க்கா. அண்ணியைப் பார்க்கும் போதெல்லாம், ஓடிப் போய் கட்டிப் புடிச்சிக்கணும். கழுத்தை கட்டிகிட்டு ஊஞ்சல் ஆடணும். வாய் நிறைய 'அம்மான்னு' கூப்பிடணும் என்று தோன்றும். ஆனால் அதுக்குதான் வழியே இல்லையே என்று எண்ணும் போது என்னால தாங்கிக்க முடியலைக்கா. அன் ணியைப் பார்க்கும் போதெல்லாம் நெருஞ்சி முள்

குத்துவது போல சுருக் சுருக் என்று வலிக்க ஆரம் பித்தது. என்னால இந்த வேதனையைத் தாங்கிக்க முடியலை. இன்னொரு அண்ணியை எதிர்பார்க்க எனக்குப் பொறுமை இல்லை. அவங்களும் இவங் களைப் போல இருந்து விட்டால், அதனால் சூசைட் பண்ணிக் கொள்ளும் முடிவிற்கு வந்து விட்டேன். ஒரு வகையில் இது என்னோட சுயநலம்தான். செத்துப் போனவங்க எல்லாம் திரும்ப குழந்தையாப் பிறப்பாங் களாம். நான் செத்துப் போய் விட்டால், நம்ப அண்ணி வயிற்றிலேயே குழந்தையாகப் பிறக்கலாம் பாரு. அதனால் தான் சூசைட் பண்ணிக்கப் போறேன். நான் இறப்பதற்கு எந்த வகையிலும் நம்ம அண்ணி பொறுப் பாளி இல்லை. அவங்களை நீ வெறுக்கக் கூடாது. நல்லா பழகணும். எனக்குக் கிடைக்காத அன்பை எல்லாம் சேர்த்து நீ அனுபவிக்க வேண்டும். அதுதான் என்னோட கடைசி ஆசை. நிறைவேற்றுவியாக்கா? உன் சுகன்யா.''

எழுத்தே தெரியாமல் கண்ணீர் முட்டிக் கொண்டு லெட்டரை நனைத்தது.

சுகன்யாவின் திதி வந்ததும், ரஞ்சித்திற்கு பெண் பார்க்கும் படலம் நடந்தது. கோயமுத்தூரில் இருந்த டாக்டர் லதா, ரஞ்சித்திற்கு சட்ட பூர்வமாக மனைவியானாள். இந்த அண்ணி யாவது தன் கற்பனை நாயகியாக இருக்க மாட்டாளா என்ற நப்பாசை திவ்யா உள்ளத்தில் துளிர் விட்டுக் கொண்டு தான் இருந்தது. நித்யா விலகிப் போவதில் எட்டடி என்றால் லதா பதினாறு அடியாகப் பாய்ந்தாள்.

அன்று எக்ஸாம் முதல் நாள். மூன்று மணிக்கே எழுந்து படித்தாள். எக்ஸாமிற்கு தேவையான ஸ்கேல், பென், பென்



சில் எல்லாவற்றையும் எடுத்து ரெடியாக வைத்துக் கொண் டாள். தன் தாயின் படத்திற்கு முன் போய் மனமுருக வேண் டினாள். ''மம்மி இன்னைக்கு எனக்கு எக்ஸாம் ஆரம்பிக்குது. நான் நல்லா பரீட்சை எழுதணும் மம்மி'' கன்னத்தில் மாறி மாறி தொட்டுக் கொண்டு, டேபிள் மேல் இருந்த திருநீரை எடுத்து சின்ன கீற்றாக நெற்றியில் இட்டுக் கொண்டாள். லதா வேகமாக கீழே இறங்கிக் கொண்டு இருந்தாள். லதாவைப் பார்த்ததும், திவ்யா அவளிடம் ஓடி வந்தாள்.

''அண்ணீ.''

''என்ன'' அவசரம் அவளிடம் வெளிப்பட்டது.

''இன்னைக்கு எனக்கு பப்ளிக் எக்ஸாம்.''

''அதனால் என்ன?''

''உங்க ஆசீர்வாதம் எனக்கு வேணும்.''

களுக் என்று சிரித்தாள் லதா. ''ஆசீர்வாதமா? நான் பண்ணுவதா. இந்த பத்தாம் பசலித்தனத்தை எல்லாம் எங்கே கத்துக்கிட்டே? மாடர்னா ட்ரஸ் மட்டும்தான் பண்ணுற.''

''பெஸ்ட் ஆப் லக்'' என்று சொல்லத் தோணலை. பத்தாம் பசலித்தனம் என்று வியாக்கியானம், மனம் வெதும்பியது. வெளிக்காட்டாமல் நின்றாள்.

''எனக்கு டயம் ஆகுது? உங்கண்ணா ரூமில்தான் இருக் கிறார். உனக்கு தேவையான ஆசீர்வாதத்தை அவர்கிட்டே வாங்கிக்க. என்ன இருந்தாலும் நான் அடுத்தவள் தானே?''

''அது எனக்குத் தெரியும். நீங்க சொல்லணும் என்ற அவசியம் இல்லை'' வெடுக்கென்று சொல்லிவிட்டு, லதாவிற்கு வழி விட்டு ஒதுங்கி நின்றாள்.

திவ்யாவுக்கு எக்ஸாம் எல்லாம் முடிந்து இரண்டு நாட்கள் கழித்து, ஒரு நாள் ப்ரண்டோடு சினிமா பார்த்து விட்டு வீடு

திரும்பினாள். வீட்டிற்குள் நுழையும் போது அபூர்வமாக ஆச்சரியமாக நித்யாவும், லதாவும் வீட்டில் இருந்தார்கள். அதுவும் ஹாவில் உள்ள சோபாவில் அருகருகே அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தார்கள். திவ்யா அவர்களைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டே மாடி ஏறப் போனாள்.

''திவ்யா'' அழைத்தாள் நித்யா.

திகைப்போடும், ஏகப்பட்ட சந்தோசங்களைத் தாங்கிக் கொண்டு, திரும்பினாள்.

''நானா?''

''நீதானே திவ்யா'' கேட்டாள் லதா.

''திவ்யா நான்தான், ஆனா கூப்பிட்டது நீங்கள் என்று எண்ணும் போதுதான் கொஞ்சம் சந்தேகமாக இருந்தது.''

''இங்கே வா'' திரும்ப அழைத்தாள்.

பக்கத்தில் வந்து நின்றாள்.

''பிலிம்க்கு போனியா?''

''ஆமாண்ணி.''

''என்ன படம்?''

''பழைய படம். ஏக் துஜே கேலியே.''

''அழுகைப் படமாச்சே'' நித்யா சொன்னாள்.

''எனக்கு பழகிப் போன ஒன்று'' வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல் வார்த்தையை ஏற்றினாள் திவ்யா.

''லவ் ஸ்டோரியா?'' சந்தேகத்துடன் கேட்டாள் லதா.

''உம்.'' தலையாட்டினாள். 'என்னாச்சி இவங்களுக்கு ஒன்றுமே புரியலையே.'



லதா பக்கத்தில் உட்கார்ந்தாள்.

''மேலே என்ன படிக்கப் போற?'' நித்யா கேட்டாள்.

'கடவுளே! இது கனவாக இருக்கக் கூடாது.' மனம் எல்லாக் கடவுளுக்கும் மனு போட்டது.

''என்ன படிச்சா பெனிபிட் இருக்கும் அண்ணி.''

''அதை நான் சொல்ல மாட்டேன். ஏன்னா இது உன்னோட பர்சனல் மேட்டர். நான் யாரையும், எதுக்காகவும் கட்டாயப்படுத்துவதே கிடையாது. உன் விருப்பம், நீ எது வேண்டுமானாலும் படிச்சிக்கோ'' பெருமையாக சொல்லிக் கொண்டாள் நித்யா.

வாய் பூட்டு போட்டுக் கொண்டாள் திவ்யா.

''மேக்ஸிமம் எவ்வளவு மார்க் ஸ்கோர் பண்ணுவ?''

''தவுசனுக்கு மேலே வரும்.''

''நாளைக்கு நாங்க ரெண்டு பேருமே ஹாஸ்பிடலுக்கு லீவ். அதனால பஜார் போறோம். நீயும் வர்றியா?'' நித்யா கேட்டாள்.

திவ்யா தலையாட்ட நினைத்தபோது, ''நீ வந்தே தான் ஆகணும் என்று கட்டாயம் இல்லை. அஸ் யூ லைக்.'' கைகளை விரித்தாள் லதா.

''நீங்க போயிட்டு வாங்கண்ணி. நான் எதுக்கு?'' சொல்லி விட்டு விடுவிடுவென மாடி ஏறி மறைந்தாள். கண்ணாடி முன் உட்கார்ந்து கொண்டு பொறுமினாள். 'அஸ் யூ லைக் ஆம் அஸ் யூ லைக். யாரையும் கட்டாயப்படுத்த மாட்டாங்களாம். பெரிய இவங்க, எல்லோரிடமும் அன்பா நடந்து கொள்வதாக நினைவு. உன்னை நாங்க கட்டாயப்படுத்த மாட்டோம்

என்று பந்தா வேறு. அப்படீன்னா என்ன அர்த்தம்? நாங்க சொல்றதை சொல்லிட்டோம். நீ செய்யறதை செஞ்சிக்கோ அப்படீங்கற அலட்சியம் தானே? நீ எப்படிப் போனா எனக் கென்ன என்கின்ற மனப்பான்மை தானே? என்னை அன்பி னால் கட்டி ஆளும் அண்ணியை அல்லவா நான் கேட்டேன். கடவுளே இது என்ன கொடுமை.' கண்ணாடியில் அவள் உருவம் அவளைப் பார்த்தே சிரித்தது. 'என்ன இருந்தாலும் நான் மூணாவது மனுசிதானே? நான் அடுத்தவ தானே. உன்னைப் பரிவோடும், பாசத்தோடும் கண்டிக்க நாங்கள் யார்?' ஒவ்வொரு வினாவும் ஊசியால் குத்திக் குத்தி ரணத்தை உண்டு பண்ணியது. 'ஆமாம் நீங்கள் அடுத்தவங்க தான். மூணாவது மனுசிதான். என்னைக் கட்டாயப்படுத்த உங்களுக்கு உரிமை இல்லை. நீங்கள் யாரோ? நான் யாரோ? சரிதான் போங்கடி நீங்களாச்சி. உங்க அன்பாச்சி, யாருக்கு வேணும் உங்க உறவு.' கண்களைத் துடைத்துக் கொண்டு, பேஸ் வாஷ் பண்ணினாள். முகத்தைத் தான் கழுவ முடிந்தது. நித்யா, லதா பற்றி கற்பனையை இதயத்தின் ஓரத்தில் மூட்டை கட்டி வைத் தாள்.

நாளாக நாளாக திவ்யாவிற்கு பைத்தியமே பிடித்து விடும் போல் இருந்தது. அண்ணியின் வருகை அம்பிகையின் வருகை என்று கற்பனை பண்ணி வாழ்ந்தது அணு அணுவாக இவளைக் கொன்றது. கற்பனையைக் கலைக்க முடியவில்லை. பசு மரத்து ஆணி போல் பிடுங்கி எறிய முடியாதபடி பதிந்து போனது. தன் இருபுறமும் லதாவும், நித்யாவும் நின்று கொண்டு தன் முகத்தைத் தாங்கி முத்தம் கொடுப்பது போல் கனா கண்டாள். உடல் சிலிர்த்தது. உதடு துடித்தது. கனவு கலைந்தது. திரும்ப கண்களை மூடிக் கொண்டு, அந்த நிகழ்ச் சியை திரும்ப தேடி, மனக் கண் முன் கொண்டு வர முடி யாமல் தவித்தாள். தலையணை நனைந்தது. எழுந்து போய் அண்ணியிடம் முத்தம் ஒன்று கேட்கலாமா? வேண்டாம்.



வேண்டவே வேண்டாம். ஆசீர்வாதம் கேட்டதிற்கே பத்தாம் பசலி என்றவள், இப்போது பைத்தியம் என்றே சொல்லி விடுவாள்.

தன் கற்பனைக்கு வடிகால் வேண்டும் போல் தோன்றியது அவளுக்கு. ட்ரக்ஸ் யூஸ் பண்ணலாமா? மனம் ஒப்பவில்லை. 'என் அன்பிற்கும், கற்பனைக்கும் வடிகால் வேண்டும். யாரிடம் போய் என் அன்பைக் கொட்டுவேன். எத்தனை நாள் இப்படியே மனதிற்குள்ளேயே அழுத்தி வைத்துக் கொண்டு, உள்ளுக்குள்ளே குமுறுவது? ஐய்யய்யோ எனக்கு பயமா இருக்கே? என் அன்பிற்கு வடிகால் வேண்டும்.' தீர்மானமான முடிவிற்கு வந்தாள்.

கதவை சாத்திக் கொண்டு கண்ணாடி முன் அமர்ந்தாள். தன் பிம்பத்தையே லதாவாகவும், நித்யாவாகவும் மனக் கண் முன் கொண்டு வந்து நிறுத்தினாள். அவர்கள் இருவரும் தனக்கு முன்னால் இருப்பது போல் கற்பனை செய்து கொண் டாள். பேச ஆரம்பித்தாள். தானே நித்யாவாகவும், தானே லதாவாகவும், தானே திவ்யாவாகவும் பேசினாள்.

''அண்ணி, உங்களோட ஹாஸ்பிடல் வரட்டுமா? இங்கே ஒரே போரண்ணி.''

''இதுக்கு ஏண்டா என்னிடம் கேக்குற வா. ஆனா இது நம்ம ஹாஸ்பிடல் இல்லை. நீ வரவேண்டாம். பேசன்டை எல் லாம் நீ பார்த்தா என் பிஞ்சு மனம் தாங்காது.''

''என்னண்ணி பண்றது?'' கை, கால்களை செல்லமாக உதறினாள்.

''சொன்னா கேளுமா. இனிமேல் நான் ஹாஸ்பிடலுக்கு ஆபீஸ் டைம் பிக்ஸ் பண்ணிட்டேன். பத்து மணிக்கு போவேன். ஐந்து மணிக்கு ஓடி வந்திடுவேன்.''

''பொய் சொல்றீங்க.''

''உன்னிடம் நான் எதுக்குடா பொய் சொல்றேன். ஆமாம் கேட்க மறந்திட்டேன். ஒரு வாரமா நீ ஒழுங்காக சாப்பிடுவது இல்லையாமே? சமையல்கார அங்கிள் புகார் பண்றார். ஏன் சாப்பிடலை'' நித்யா கண்டித்தாள்.

''நான் நல்லாத்தாண்ணி சாப்பிடுறேன்.''

''ஏண்டி பொய் சொல்ற?'' குறுக்கிட்டாள் லதா.

''பார்த்தாலே தெரியலை. கண்ணிலே உசிரை வச்சிகிட்டு இருக்கா. இனிமேல் நீ ஒழுங்கா சாப்பிடலை ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணிடுவேன். புரியுதா?''

''புரியுது.''

திவ்யாவின் தலையில் ஒரு குட்டு வைத்தாள், லதா. 'உஷ்' தலையை பிடித்துக் கொண்டு நின்றாள். ''எத்தனை தடவை சொல்றது.'' கையில் வளையலைப் போடுடீன்னு, கேட்க மாட்டேங்கற. தன் கையில் இருந்த இரண்டு வளையலையும் கழற்றி, அவள் கையில் தள்ளி விட்டாள். இப்ப ஓ.கே. தனக்குத்தானே ஓ.கே. சொல்லிக் கொண்டாள், லதா.

இப்படியே தன் ஓரங்க நாடகத்தை ஒவ்வொரு நாளும் தன் அறைக் கதவை சாத்திக் கொண்டு அரங்கேற்றினாள். மனம் லேசான மாதிரி இருந்தது.

இந்த ஓரங்க நாடகத்தை ஒரு நாள் பார்த்து விட்டாள், லதா. விளைந்தது விபரீதம்.

ரஞ்சித்திற்கு போன் பண்ணினாள். உடனே அவனை வரவழைத்தாள்.

''எதுக்கு லதா இவ்வளவு அவசரமா போன்?''

''மேலே வாங்க'' தன் அறைக்கு அவனை ஒட வைக்காத குறையாக அழைத்து வந்தாள்.



''என்ன லதா? எதுக்குக் கூப்பிட்ட?''

''திவ்யாவைப் பற்றி சொல்லணும்.''

''அவளுக்கு என்ன ரிசல்ட் வந்திருச்சி. ஹை மார்க் வாங்கி இருக்கா. அவளைக் காலேஜில் சேர்க்கும் பொறுப்பை எங் கிட்டே விடாதே. நிஜந்தன் பார்க்கட்டும். இல்லை டாடி பார்க் கட்டும், என்னை ஆளை விடுமா?''

''நான் அதைப் பத்தி சொல்லலை.''

''திவ்யாவைப் பற்றி பேச பிறகு என்ன இருக்கு?''

''முதல்ல உட்காருங்க'' அவன் கையைப் பற்றி உட்கார வைத்தாள்.

காலேஜ் சேர்வதற்காக ஃபாம் எல்லாவற்றையும் ஃபில்லப் பண்ணி, கவரில் போட்டு, ரிஜிஸ்தர் பண்ண எல்லாக் கவரை யும் தூக்கிக் கொண்டு வெளியே வந்தவள்,

ரஞ்சித் அறையைத் தாண்டும்போது, 'திவ்யா' என்ற வார்த் தையைக் கேட்டதும் நின்றாள்.

''என்னடி சொல்ற?'' பதற்றத்தோடு ரஞ்சித் கேட்டது போல் தோன்றியது.

''ஆமாங்க, நான் கண்ணால பார்த்தேன்.''

''உளராதே லதா.''

''இல்லைங்க, திவ்யாவிற்கு என்னமோ ஆகிவிட்டது. ப்ரைன் ப்ராப்ளம் இருக்குமோன்னு தோணுது. கையையும், காலையும் ஆட்டிக்கிட்டு, தனக்குத் தானே பேசிக்கிறா.''

''என்னோட தங்கச்சியைப் பைத்தியம் என்கிறாயா?''

''பைத்தியம் என்று முடிவா சொல்லலை, பைத்தியமா ஆயிட்டாளோன்னு சந்தேகப்படுறேன்.''

''லதா.''

''உணர்ச்சி வசப்படாதீங்க. நானும் டாக்டர் தான் என்பதை மறந்திடாதீங்க. எங்க டாக்டர் மதுஸ்ரீ மனோதத்துவ டாக்டர் என்பதை மறந்திடாதீங்க. திவ்யாவை எவ்வளவு சீக்கிரம் அட்மிட் பண்ணுகின்றோமோ, அவ்வளவும் நல்லது.''

இதற்குமேல் அவர்கள் இருவரும் பேசியது திவ்யாவின் செவிகளில் விழவில்லை. பிரமை பிடித்தது போல் நின்றாள். உலகமே இயங்காமல் அஸ்தமித்தது. 'நான்... நான் பைத்தியமா? பைத்தியமா?... நோ... நோ... நான் பைத்தியம் இல்லை... நான் பைத்தியம் இல்லை...' மனம் ஓலமிட்டது. அவர்கள் வெளியே வருவதற்குள், அந்த இடத்தை விட்டு அவசர அவசரமாக நகர்ந்தாள்.

இனிமேல் இங்கே இருக்கக் கூடாது. எங்கேயாவது போயிடணும். தீர்மானமாக வீட்டை விட்டு வெளியேறுவதாக முடிவிற்கு வந்தாள். யாருக்கும் தெரியக்கூடாது என்பதற்காகவே அடுத்த நாளே சென்னைக்கு யாருக்கும் தெரியாமல் புறப்படுவதென்று முடிவு செய்து சென்னைக்கு செல்லும் எக்ஸ்பிரசில் ரிசர்வ் செய்தாள். தனக்கு தேவையான மூன்று செட் துணி, தன் சர்டிபிகேட்ஸ். சில முக்கியமான புத்தகங்கள், கொஞ்சம் பணத்தையும் எடுத்துக் கொண்டு, தன்னைத் தேட வேண்டாம் என்று லெட்டர் எழுதி வைத்து விட்டு, வீட்டை விட்டு வெளியேறினாள்.

## 14



எல்லாவற்றையும் விடாமல் சொல்லி முடித்தாள் திவ்யா.



''இதுதான் அங்கிள் நடந்தது. என்னோட சின்ன அண்ணி என்னைப் பைத்தியம் என்று சொன்னதால் நான் ஓடி வரலை. அண்ணி சொன்ன மதுஸ்ரீ ரொம்ப பிரபலமான டாக்டர். அவங்ககிட்டே என்னைக் கொண்டு போவாங்க. சைக்காலஜி ப்ரகாரம் என்னை டெஸ்ட் பண்ணும்போது, என் உள் மனம் உண்மையைச் சொல்லும் இல்லையா? அப்போதாவது என்னைப் புரிந்து கொள்ளட்டும் என்று நான் தைரியமாகவே இருந்தேன். ஆனா எடுத்ததுமே எனக்கு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுக்கப் போவதாக அண்ணி, அண்ணனிடம் பேசியதை சமையல்கார அங்கிள் எங்கிட்டே சொன்னபோது, துடிச்சிப் போயிட்டேன் அங்கிள். நான் பைத்தியமே இல்லை. அப்படி இருக்கும்போது என்னால ஷாக் ட்ரீட்மெண்ட்டை தாங்கிக்க முடியுமா? நீங்களே சொல்லுங்க. அங்கிள் சாகலாம் என்று நினைத்தேன். ஆனா அதுவும் முடியலை. சாகக் கூட தைரியம் வேணும் என்பதை அப்போதான் தெரிந்து கொண்டேன். மதராஸ் வரதா முடிவு பண்ணினேன். என்னோட அதிர்ஷ்டமோ, துரதிர்ஷ்டமோ தெரியலை, நான் போன டாக்சி ட்ராபிக் ஜாமில் மாட்டிக் கொண்டது. ஒன்னவர் லேட். ரிசர்வ் செய்திருந்த ட்ரையினை விட்டு விட்டேன். அந்த ட்ரையினும் ஆக்சிடெண்ட் ஆயி, நான் செத்துப் போயிட்டதா இந்த உலகத்திற்கு சொல்லிடுச்சி'' அதற்கு மேல் பேச முடியவில்லை. அழுதாள்.

'திவ்யாவை அப்பாவி என்பதா, இல்லை அவள் அண்ணி சொன்னது போல் பைத்தியம் என்பதா?' ஒன்றும் புரியாமல் பார்த்தார் மரகதம். அவரின் கண்களில் கண்ணீர் திரையிட்டு இருந்தது.

மருதநாயகம் சைலண்டாகவே இருந்தார். ஆரம்பத்தில் அவர் முகத்தில் இருந்த கடுகடுப்பு கொஞ்சம் குறைந்து இருந்தது. எதனால் என்று தெரியவில்லை. மம்தாவும், விக்னேசும் அழுதே இருப்பார்கள் போலிருக்கின்றது. அதற்கு

அடையாளமாக கன்னத்தில் வரி வரியாக கண்ணீர் கோடுகள் பாதை போட்டு இருந்தன.

'திவ்யா' அழைத்தார் காமாட்சி வரதராஜன்.

அவரின் கைகளைப் பற்றிக் கொண்டு கண்ணீர் துளிகளை பொல பொலவென உதிர்த்தாள். ''மேடம், என்னை மன்னிச்சிடுங்க மேடம்.''

''முதல்ல கண்ணைத் துடை, எதுக்கு கலங்குற? இப்போ என்ன நடந்து போச்சு கண்ணைத் துடை.''

கண்களைத் துடைத்துக் கொண்டு, ''மேடம் இன்னொரு உண்மையையும் நான் இப்போ சொல்லிடுறேன். என்னோட டாடி வரதராஜன் வேற யாரும் இல்லை. உங்க ஹஸ்பெண்ட் வரதராஜன்தான்.''

''திவ்யா'' அழுத்தமாக அவளைப் பார்த்தார்.

''எஸ் மேடம், எந்த அன்பு உங்ககிட்டே கிடைக்காது என்று நினைத்து உங்களை டைவர்ஸ் பண்ணிட்டுப் போனாரோ அதே வரதராஜனோட பொண்ணுதான் நான். ஒரு காலத்தில் என்ன காரணத்திற்காக உங்களை விட்டுப் பிரிந்தாரோ? அதே காரணத்திற்காகத்தான், நான் அவரைப் பிரிந்தேன்.''

''இதென்ன புது குழப்பம்'' எல்லோரும் திவ்யாவை திகில் பார்வையோடு பார்த்தார்கள்.

''மேடம் உங்களிடம் நான் வந்து சேருவதற்கு முன்பே, பத்திரிகையில் உங்களைப் பற்றி படிச்சி இருக்கேன். அதனால் நான் உங்களை நேரடியாகத் தேடி வந்தேன். வந்த இரண்டொரு நாளில் உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும் என்றுதான் உங்கள் அறைக்கு வந்தேன். நீங்கள் இல்லை. ஆனால் உங்கள் டேபிள் மேல் கார்ட் சைஸ் ஆல்பம் இருந்தது. யாரும் இல்லை என்ற துணிவில் ஒவ்வொரு



போட்டோவா பார்த்தேன். கடைசி போட்டோ உங்கள் திருமண போட்டோ, எனக்கு எல்லாமே புரிஞ்சி போச்சி, உங்ககிட்டே உண்மையைச் சொன்னால், திரும்ப என்னை பாம்பே அனுப்பி விடுவீங்களோ? என்ற பயத்தால் தான் நான் சொல்லலை மேடம்.''

'திவ்யா அவரோட பொண்ணா? அவரோட உயிர்தான் என் முன்னால் முழுசா அழகு தேவதையா வளர்ந்து, அவர் மேலேயே வெறுப்பாகப் பேசிக் கொண்டு இருக்கின்றதா? ஒருமுறை அபார்சன் ஆகிவிட்டபோது, எப்படி வேதனைப் பட்டேன். அவரோட உயிரை முழுசா பார்க்க முடியலையே என்று இரவு பகல் பூரா கண்ணீர் வடித்தேனே? அவரோட பெண்ணே என்னிடம் அடைக்கலம் ஆனபோது, ஏன் என் உள்ளுணர்வு இதை உணர்த்தவில்லை. நீ என்னோட பொண்ணுமா, உனக்கு பெரியம்மா இருக்கேன்டா, என்றெல்லாம் சொல்ல நா துடித்தது.' இடம், பொருள், ஏவலை கவனித்து மௌனமாகவே இருந்தார், காமாட்சி வரதராஜன்.

''அங்கிள் நான் தப்பு பண்ணியதா நீங்கள் நினைத்தாலோ, இல்லை உங்களுக்கு மருமகளா வர எனக்குத் தகுதி இல்லை என்று நினைத்தாலோ, நீங்கள் என்ன முடிவு எடுத்தாலும் அதற்கு நான் கட்டுப்படுறேன். ஆனால் ஒன்று சம்பத்தோட தாலியைத் தவிர வேறு யாரோட தாலியையும் இந்தக் கழுத்து வாங்காது.''

காமாட்சி வரதராஜன் முன்னால் நடக்க பின்னால் நடந்தாள் திவ்யா. திவ்யாவிற்கு பின்னால் மம்தாவும், விக்னேசும் வந்தார்கள். மரகதமும், மருதநாயகமும் தலையைப் பிடித்து கொண்டு ரூமிலேயே உட்கார்ந்து விட்டார்கள்.

திவ்யா படியைத் தாண்டும்போது, அவள் கையை பற்றினாள், மம்தா. திரும்பினாள் திவ்யா.

''சாரி'' விழிகள் மன்னிப்பு கேட்டது.

''எதுக்கு?''

''என்னோட அண்ணியப் பற்றி கொஞ்ச நேரம் தப்பா நினைத்து விட்டேன். அதுக்கு.''

''மம்தா'' ஆச்சர்யப் பூ மடமடவென பூத்துத் தள்ளியது.

''எஸ் மைடியர் பாபி, இந்த விஷயத்தில் நாங்க இரண்டு பேரும் ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கோம்'' விக்னேஷ் விளக்கினான்.

சந்தோஷப் பூக்கள் சரமாரியாக தூவப்பட்டது திவ்யாவின் மேல். இரண்டு கைகளையும் அவர்கள் முன்னால் நீட்டி, 'பக்கா' என்றாள் வாயெல்லாம் பல்லாக...

ஆளுக்கு ஒரு கையில் பட் என்று அடித்து 'பக்கா' என்றார்கள்.

இரவு எட்டு மணி இருக்கும். விஷயத்தை கேள்விப்பட்டு ஆசிரமத்திற்கு வந்தான், சம்பத். மேடத்தை பார்த்து தெரியாதவற்றையும் தெரிந்து கொண்டான்.

''திவ்யா இப்போ எங்கே மேடம்?''

''அவ ரூமில் இருக்கா.''

''நான் போய் பார்க்கலாமா?''

''அவ மனதைக் கஷ்டப்படுத்த மாட்டியே?''

''நெவர் மேடம்.''

''போய்ப் பாரு.''

அவள் ரூமிற்கு போனான். லைட் போடாமல், விடிவிளக்கின் வெளிச்சத்தில் முழங்காலைக் கட்டிக் கொண்டு, தலையைக் கவிழ்த்து இருந்தாள். உள்ளே நுழைந்ததும், சுவிட்சைத் தட்டினான். தலையைத் தூக்கிப் பார்த்தாள். கண்கள் கூசியது. சம்பத்தைப் பார்த்ததும் எழுந்து நின்றாள்.



அவன் பார்வை அவளை ஊடுருவியது.

அவளை நெருங்கினான். பயத்தோடு நகர்ந்தாள் அவள். கட்டில் தடுக்கி தொப்க் என்று தலையணையில் உட்கார்ந்தாள். ஓங்கி ஒரு அறை விடப் போகிறான் என்ற பயம் மிரட்சியோடு கட்டிலின் விளம்பிற்கு நகர்ந்தாள்.

சம்பத் விடுவதாக இல்லை. அவள் நகர நகர.. இவனும் நெருங்கினான்.அவள் அருகில் குனிந்து ராக்கெட் வேகத்தில் 'பசக்' என்ற ஒரு முத்தத்தை அவள் கன்னத்தில் பதித்தான்.

''பயந்திட்டியா'' சிரித்தான். ''அட அசடே, எதுக்கு இப்போ இப்படி நடுங்கற?''

''என் மேல் கோபம் இல்லையே?''

''இல்லை'' வேகமாக மறுத்தான்.

''என்னைப் பற்றி உங்க வீட்டில் எதுவும் சொல்லலையா?''

அவள் பக்கத்தில் ஒட்டி அமர்ந்து கொண்டு, காலை ஆட்டிக் கொண்டே ஓரக் கண்ணால் சிரித்தான். ''சொன்னாங்க.''

''என்னைப் பற்றி தெரிஞ்சி கூடவா? என் மேல் கோபம் இல்லை.''

''ம்கூம். நீ என்ன கொலையா பண்ணிட்டே? உனக்கு அப்பா, அண்ணன், அண்ணி எல்லாம் இருப்பதாக சொன்னாங்க. உன்னோட அம்மா முஸ்லிம். அதனால இப்போ என்ன?'' சாதாரணமாகக் கேட்டான்.

''சம்பத் ரியலி யூ ஆர் வெரி கிரேட்'' உணர்ச்சிவசப்பட்டு அவனைக் கட்டிக் கொண்டாள்.

''திவ்யா, நான் உன்னைத் தான் காதலிச்சேன். உன்னோட கடந்த காலத்தை இல்லை. என்னோட உயிர் நீதான். உன்னோட குடும்பத்தை நீ வெறுப்பதினாலோ, வேற மதத்தை என்னோட டாடி வெறுப்பதினாலோ, நான் உன்னை வெறுக்க மாட்டேன். உன் மேல் முழு நம்பிக்கை எனக்கு இருக்கு. அதுக்காக நீயும், நானும் யாருக்கும் தெரியாம மேரேஜ் பண்ணனும் என்று அவசியம் இல்லை. என் டாடியோட சம்மதத்திற்காக காத்திருப்போம். காத்திருப்பதிலும் ஒரு சுகம் இருக்கு. நீ தானே சொன்ன த்ரில்லே இல்லாம சம்மதித்து விட்டார்கள் என்று. அனுபவி. நீ வீட்டை விட்டு ஓடி வந்தது தான் தப்பு. கடவுள் புண்ணியத்தில் எந்தவித ஆபத்தும் இல்லாமல் வந்து சேர்ந்துட்ட, ஏதாவது நடந்து இருந்தால்... ஒரு பொண்ணு அதுவும் வயதுக்கு வந்த பொண்ணு, ஆயிரந்தான் கஷ்டம் இருந்தாலும் வீட்டை விட்டு ஓடி வந்திருக்கக் கூடாது.''

''எப்படி சம்பத் என்னால் அங்கே இருக்க முடியும்? எனக்கு தலைவலித்தாலே, அண்ணன் கண்ணில் தண்ணீர் வரணும் என்று நான் நினைக்கலை, ஆனா அண்ணி கண்களில் வரணும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் தைலம் கூட எடுத்துக் கொடுக்காத அண்ணி என்று நினைக்கும் போது, என்னால எப்படி அங்கே இருக்க முடியும்?''

''சரிம்மா. டாடி உங்கப்பாவிற்கு போன் பண்ணி இருக்கார்.''

பிரட்சியோடு பார்த்தாள்.

''நீ உயிரோடத்தான் இருக்க என்று சொல்லி விட்டார். மார்னிங் பிளைட்டிற்கு உன்னோட டாடி இங்கே வரலாம்.''

''நான் டாடியைப் பார்க்கலை.''

''நீ ஏன் பயப்படுறே. நான் இருக்கேன்.''

''நான் பயப்படலை, அவரைப் பார்க்க விரும்பலை.''



''பிடிவாதம் பிடிக்காதே சொன்னா கேளு. ஒரு சின்ன அட்வைஸ். நாளைக்கு உன் டாடி வரார் என்று இங்கே இருந்து ஓடிடாதம்மா. நான் ரொம்ப பாவம்'' சிரிப்பாகக் கூறினாலும், சிந்தனையைத் தூண்டி விட்டான்.

திவ்யா தலையணையைத் தூக்கவும், சிட்டாக வெளியே பறந்தான். திவ்யாவின் வயிற்றில் அடர் சல்பூரிக் ஆசிட்டே சுரக்க ஆரம்பித்தது.

அதே சமயம் மும்பையில்...

தன் ஏசி அறையில் அமர்ந்து இருந்தார் வரதராஜன். நாளை பிசினஸ் விஷயமாக அமெரிக்கா போகலாம் என்று எல்லா ஏற்பாடுகள் செய்து இருந்தார். பையன்கள் இருவரும் டாக்டர் என்பதால், பிசினஸ் வேலையை எல்லாம் இவரே கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்னும் நிறைய வேலை பாக்கி இருக்கிறது. புதியதாக ஒரு இண்டஸ்ட்ரீ ஆரம்பிக்கலாம் என்று எண்ணி இருந்தார். அதற்காக பேப்பரில் வேலைக்கான இண்டர்வியூவிற்கு வர சொல்லி டேட் கொடுத்தார். அதற்கு வேறு ஏகப்பட்ட அப்ளிகேசன் வந்து குவிந்து இருந்தது. போட வேண்டிய செக்கில், பைலில் எல்லாவற்றிலும் கையெழுத்து போட்டார். நொடிக்கு ஒருமுறை தொந்தரவு செய்த போன் காலையும், இண்டர்காமையும் மாறிமாறி பேசி சமாளித்த போது தான், சென்னையில் இருந்து மருதநாயகத்தின் போன் வந்தது. திவ்யா உயிருடன் இருக்கின்றாள் என்றும், உடனே புறப்பட்டு வரச் சொல்லியவுடன், அடுத்த பிளைட்டிற்கே முடிந்தால் வருவதாக வாக்கு கொடுத்தார். சிறிது நேரம் பிரமிப்பு நீங்காமல் அப்படியே அமர்ந்து இருந்தார். இந்தப் பிரபஞ்சமே கண் முன்னால் சுழன்றது. திவ்யா உயிரோடு இருக்கின்றாளா? துரிதமாக வீட்டிற்கு புறப்பட்டார். நிஜந்தன், ரஞ்சித், நித்யா, லதா எல்லோருக்கும் போன் பண்ணி விஷயத்தை உடைத்தார். திவ்யா போட்டோ

மேல் இருந்த சந்தனமாலை எடுத்து வீசப்பட்டது. ஐந்து பேருமே சென்னைக்கு வர ஆயத்தமானார்கள்.



## 15

**கா**லை பிளைட்டிற்கே எல்லோரும் பம்பாயில் இருந்த மெட்ராஸ் வந்தார்கள். மருதநாயகம் அவர்களை எல்லாம் இன்வைட் பண்ணி தன் வீட்டிற்கு அழைத்து வந்தார். அவர்களை சுமந்து வந்த கார் பங்களாவை அடைந்ததும், மெதுவாக வழுக்கிக் கொண்டு ஒரு வட்டமடித்து நின்றது. அந்த மாருதியை ஒட்டினார் போலவே மருதநாயகத்தின் மாருதியும் வந்து நின்றது. எல்லோரையும் உள்ளே அழைத்துக் கொண்டு போனார். சோர்வாகக் காணப்பட்டார் வரதராஜன். சிறகொடிந்த பறவையாக இருந்தார். நித்யா, லதா இருவருடைய வயிறும் மேடிட்டு இருந்தது. தாய்மையின் பூரிப்பு முகத்தில் இருந்தது. வரதராஜன் தாங்க முடியாமல் படபடவென பொறிந்தார்.

''இப்போ திவ்யா எங்கே? எப்படி இருக்கா? நாங்கள் வருவது அவளுக்குத் தெரியுமா?'' அடுக்கடுக்காக கேள்விகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கினார்.

''பொறுமையா இருங்க, பையன் போய் இருக்கான், இப்போ வந்திடுவாங்க.''

கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அதில் இருந்து சம்பத், திவ்யா, காமாட்சி வரதராஜன் இறங்கினார்கள். காமாட்சி வரதராஜனின் கைகளை இறுக்கி பிடித்துக் கொண்டு மெதுவாக நடக்கத் தெரியாத குழந்தையைப் போல் அடி எடுத்து



வைத்தாள். கண்கள் தரையைப் பார்த்தது. அடிக்கடி எச்சிலை விழுங்கினாள்.

மேடத்தின் மனம் சஞ்சலப்பட்டது. அவர் வந்திருப்பாரே, நாம் எதுக்குப் போகனும்.

''சம்பத்''

''மேடம்''

''நான் உள்ளே வரலப்பா. திவ்யாவைக் கூட்டிகிட்டு போ.''

''வாங்க மேடம்'' சம்பத் வற்புறுத்தினான்.

''மேடம் நீங்க வரவில்லையென்றால், நானும் போகலை. இரண்டு பேருமே ஆசிரமத்திற்கு போய் விடலாம்'' விட்டால் அழுதே காரியத்தை முடித்து விடுவாள்.

''திவ்யா டோன் டாக். மேடத்தை குழப்பாதே'' இருவரையும் கஷ்டப்பட்டு தனக்கு தெரிந்த சமாதானங்களை எல்லாம் சொல்லி உள்ளே அழைத்து வந்தான். காமாட்சி வரதராஜனைப் பார்த்ததுமே, வரதராஜனின் உதடுகள் அவரையும் அறியாமல் 'காமாட்சி' என்று உச்சரித்தது. பரஸ்பரம் இருவரும் பார்வையால் நலன் விசாரித்து கொண்டார்கள். திவ்யா அங்கு இருப்பவர்களை நிமிர்ந்தே பார்க்கவில்லை. நிஜந்தனும், ரஞ்சித்தும் அனிச்சையாக எழுந்து நின்றார்கள்.

மயான அமைதி நிலவியது.

வரதராஜன் திவ்யாவின் அருகில் வந்தார். மேடம் ஒதுங்கிக் கொண்டார். நாலு வருடத்தில் அப்படி ஒரு வளர்ச்சி அவள் உடலில். முகம் கூட லேசாக மாறி இருந்தது போல் அவருக்குப் பட்டது. அவரை நிமிர்ந்து பார்க்காமலேயே தலை குனிந்தபடியே நின்றாள்.

''அம்மா அம்மா திவ்யா'' முகத்தை கரங்களால் நடுங்க நடுங்க வருடிக் கொடுத்தார். தீயை மிதித்தது போல் தள்ளி நின்று கொண்டாள்.

''திவ்யா நல்லா இருக்கியாம்மா?''

''ரொம்ப சந்தோஷமாகவே இருக்கேன்'' வெடுக்கென்று பதிலளித்தாள்.

நித்யா எழுந்து வந்து இவள் கைகளைப் பற்றினாள். அந்த இதமான பிடிப்பில் தன்னையே மறந்தாள். இப்படி ஒரு அன் பிற்காகத்தானே அவள் ஏங்கினாள். நிதானித்து கைகளை உதறிக் கொண்டாள்.

''என்னை மன்னிச்சிடும்மா?''

இகழ்ச்சியாக இதழை விரிய விட்டாள். நித்யாவை நன்றாக நேருக்கு நேராக பார்த்தாள். ''உங்களை நான் மன்னிக்கறதா? நான் யார்? உங்களுக்கு ரிலேசன் சிப்பா? இல்லையே?'' அப்போதுதான் கவனித்தாள், வயிறு ஏழு மாதம் என்று சொல்லியது.

''நீ உயிரோடுதான் இருக்கே என்று தெரிந்தபோது, எனக்கு எவ்வளவு சந்தோசமா இருந்தது தெரியுமா? என் மேலே நீ எவ்வளவு பாசம் வைத்து இருந்தாய் என்று உன்னோட டயரியை படிச்ச போதுதான் தெரிஞ்சிகிட்டேன்.''

''நம்ப முடியலைண்ணி. உங்களுக்கே நன்றாக நினைவு இருக்கும். ஒரு நாள் ஹாஸ்பிடலுக்கே வந்து, எவ்வளவு கெஞ்சி இருப்பேன். ஒரு ஐந்து நிமிடம், ஒரு ஐந்து நிமிடம் சுகன்யாவிற்காக ஒதுக்குங்க என்று. அன்னைக்கு நீங்க நினைத்து இருந்தால் சுகன்யாவைக் காப்பாற்றி இருக்கலாம். வீட்டுக்கு திரும்பிய போது எங்க ரூமிற்கு ஒரு முறை வந்து



இருந்தால் சுகன்யாவின் சாவைத் தடுத்து நிறுத்தி இருக்கலாம். ஆனா நீங்கள் கடைசி வரை வரவே இல்ல. நான் கெஞ்சியும் மாறாத உங்க மனசு, என்னோட டயரியை படிச்சா மாறிடுச்சி? என்னை நம்பச் சொல்லுறீங்களா?''

''திவ்யா..'' ஏதோ சொல்ல வாயெடுத்தாள் நித்யா.

கையைத் தூக்கி, அவளைப் பேச விடாமல் தடுத்தாள். ''அன்பு என்பது ஒரு பரவசமான அனுபவம். அது தானேதான் உள்ளத்திலே ஊறணும். ஒருவர் கட்டாயப்படுத்துவதால் வராது. அது தானாவும் உங்களுக்கு தோணலை. நான் கதறியும் உங்களுக்கு தோணலை.''

''ஒத்துக் கொள்கிறேன். அன்பு என்பது தானா வரணும் என்பதை. பிரிவில் தான் உண்மையான அன்பும், நட்பும் தெரியும். அந்த வகையில் உன்னோட கற்பனைக்கு ஏற்ற அண்ணியா நான் இனிமேல் இருப்பேன். ஏன்னா தப்பு செய்தவன், திரும்ப அதே தவறை செய்ய மாட்டான்.''

தலையாட்டி மறுத்தாள். ''அது உங்களால முடியாது. ஒரு அண்ணியை தன்னோட நாத்திக்கு அம்மாவா எந்த ஜென்மத்திலும் ஆக முடியாது. இது நான் அனுபவித்த உண்மை. இன்னொரு முறை என்னை ஏமாறச் சொல்லுறீங்களா? உங்களோட அன்பான ஒரு பார்வைக்கு எத்தனை நாள் ஏங்கி இருப்பேன்? ஒரு நாளாவது எங்களை நினைத்துப் பார்த்து இருப்பீங்களா?''

''என்னை நீ நம்பலையா?''

''சத்தியமா நம்பலை, நீங்க தாயாகும் முன்பே உங்க பார்வை எங்கள் மேல் படல. நாளைக்கு ஒரு குழந்தைக்குத் தாய். உங்களுக்கு என்று கவிதையா ஒரு குடும்பம். ப்ளீஸ் தயவு செய்து என்னை என் வழியில் விடுங்கள். இங்கே இருந்து போயிடுங்க.''

''திவ்யா'' அதட்டினார் மேடம். ''யாரிடம் பேசுகின்றோம் என்ற நினைவு இருக்கா?''

''நல்லாவே இருக்கு மேடம். கற்பனையில் நான் கண்ட அம்மாகிட்டே பேசுறேன். நிஜ வாழ்க்கையில் என்னோட மாஜி அண்ணிகிட்டே பேசுறேன். தான் இறந்தும் கூட இவங்க வயிற்றில் பிறக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட என்னோட தங்கச்சி எங்கே? எங்க நிழலைக் கண்டாலே ஒதுங்கிப் போற இவங்க எங்கே? பணம் இருந்தால் மட்டும் போதும். அன்பு நம்மைத் தேடி வரும் என்று நினைத்தேன் மேடம். ஏன்னா இந்தக் காலத்தில் ஒரு மகள் தாயிடம் பாசமா இருக்கணும் என்றால் பணம் வேணும். மகனிடம் பணம் இருந்தால் தாய் பாசமா இருப்பா. தங்கை பணக்காரியாக இருந்தால், இவ என்னோட தங்கை என்று சொல்லும் அண் ணங்க, அண்ணன் ஏழையா இருந்தா திரும்பிப் பார்க்காத தங்கைங்க, இப்படி எல்லாவற்றிற்குமே பணம்தான் பாலம் போடுது. இதுதான் நடைமுறை வாழ்க்கை. அதுக்கு கூட அதிர்ஷ்டம் வேணும் மேடம். அது எனக்கு இல்லை மேடம். அன்பு என்பது இதெற்கெல்லாம் அப்பாற்பட்டது.''

வரதராஜன் பக்கம் திரும்பினாள்.

''அன்பும், அரவணைப்பும் அரை கிலோ, ஒரு கிலோவாக கடையில் விற்று இருந்தால் வாங்கிக் கொடுத்து இருப்பீங்க டாடி. பயந்து போய் உங்கள் அறையை அடைக்கலமா நினைத்து வந்தால் கூட நாசுக்கா விலகிக்குவீங்க இல்ல டாடி. ஆயிரம் குறைகள் உங்களிடம் இருக்கு. ஆனால், சமூக சேவையில் ஈடுபட்ட ஒரே காரணத்திற்காக எந்தத் தவறுமே செய்யாத மேடத்தை நீங்க டைவர்ஸ் பண்ணலை. மேடம் மனைவியா இருந்ததினால் ஈஸியா டைவர்ஸ் பண்ணிட் டீங்க. நான் எந்த கோர்ட்ல போய் என்னோட டாடியை



டைவர்ஸ் பண்ணனும் என்று அப்பீல் பண்றது? அதான் ஓடி வந்திட்டேன். உங்களுக்குப் பிறந்தவதானே நான், எனக்கு உங்கள் பிடிவாதத்தில் கொஞ்சம் இருக்காது?''

மவுனமானார் வரதராஜன்.

லதாவிடம் வந்தாள். ''நல்லா இருக்கீங்களா? நான் ஒரு பைத்தியம் என்று ஏற்கனவே முடிவு பண்ணிட்டீங்க. அடுத்தவள், மூனாவது மனுசி, அது நீங்க தானே? புகுந்த வீடு தன்னோட வீடு. அங்கே இருப்பவர்கள் எல்லாம் தன் நெருங் கிய சொந்தங்களாக நினைக்கணும் என்று சொல்லுவாங்க. ஒரு பொண்ணுக்கு திருமணம் நடப்பது பெரிய விசயம் இல்லை. அவள் எப்படி நடந்து கொள்கின்றாள் என்பதுதான் முக்கியம். திருமணமாகும் ஆணுக்கும், பெண்ணிற்கு மட்டுந் தான் கற்பனைகள் இருக்கும் என்பது இல்லை. இரு வீட் டார்களுக்கும் அது இருக்கும். அன்பா நீங்க நடந்து கொள்ள வேண்டாம். அலட்சியப்படுத்தாமல் இருக்கலாம் இல்லையா?''

லதா ஒன்றுமே பேசவில்லை. என்ன பேசுவாள்? எல்லா வற்றையும் திவ்யா அல்லவா பேசிக் கொண்டு இருக்கின் றாள். நிஜந்தனையும், ரஞ்சித்தையும் பார்த்தாள் அருகே சென்று சிரித்தாள்.

''கல்யாணம் ஆனதும் ஹலோ கூட சொல்ல நேரம் இல் லாத பெரிய பெரிய டாக்டர்கள் எனக்கு உடன்பிறப்புக்களாக கிடைத்ததில் மிகவும் சந்தோசம்.'' எந்த அளவு ஆத்திரமாக வெடித்தாளோ அந்த அளவு வேகமாக ஓ வென அழ ஆரம் பித்தாள்.

மருதநாயகத்தின் காலைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

''அங்கிள், நான் அனாதை அங்கிள். எனக்கு யாருமே இல்லை அங்கிள். நாலு வருடத்திற்கு முன்பு எனக்கு அப்பா,

அண்ணன், அண்ணி எல்லாமே இருந்தார்கள். எங்கள் குடும்பமே டாக்டர் குடும்பம். அவர்கள் எல்லோருக்குமே உடம்பைப் பற்றிதான் தெரியுமே தவிர, மனதை பற்றி தெரியாது. அதற்கு எல்லாம் அவர்களுக்கு நேரம் இல்லை அங்கிள். அவர்கள் மேல் தவறே இல்லை அங்கிள். தவறு எல்லாமே என் மேல் தான். எந்தப் பெண்ணிடமும் உன்னோட லட்சியம் என்னான்னு கேட்டால். நான் டாக்டர் ஆகணும், என்ஜினீயராகணும். ஐ.ஏ.எஸ். ஆகணும். எழுத்தாளரா இருக்கணும். பாடகியா இருக்கணும் என்றுதான் சொல்லுவாங்க. நல்ல மருமகளா இருக்கணும். நல்ல மகளா இருக்கணும். நல்ல மனைவியா இருக்கணும். நல்ல அண்ணியா இருக்கணும் என்று யாராவது சொல்லி இருக்காங்களா அங்கிள்? சொல்லலை அங்கிள். இன்குளுடிங் ஐ. இதெல்லாம் தெரியாமல் நாங்கதான் கணக்கை தப்பா போட்டுட்டோம் அங்கிள். ஆண்கள் இதற்கெல்லாம் ஒரு படி மேலேயே போய், எப்போ குடும்பத்தை விட்டு கழண்டு கொள்ளலாம் என்று ப்ளான் பண்றாங்க. எந்தத் துறையை எடுத்தாலும் ஆணுக்கு நிகராக பெண்கள் தலைநிமிர்ந்து நடக்குறாங்க. அதெல்லாம் நினைக்கும்போது பெருமையாவும், பூரிப்பாவும் இருக்கு அங்கிள். எத்தனை ஜென்மம் எடுத்தாலும் பெண்ணாவே பிறக்கணும்னு ஆசைப்படுறேன் அங்கிள். ஆனால் கோபுர கலசமா ஜொலிக்கும். 'தாய்மை' என்னும் அரிய பண்பை மறந்திட்டால், இந்தியா தாங்குமா அங்கிள்?

''குறட்டை விட்டாலே டைவர்ஸ் பண்ணும் வெளிநாட்டுக் காரங்கிட்டே இருந்து நாம தனித்து நிற்கிறோம் என்றால், அது நம்மோட பண்பாடும், கலாச்சாரமும் தான் அங்கிள். ஆனால் என்னோட அப்பா, அண்ணன், அண்ணி எல்லோருமே தவறிப் போய் இந்தியாவில் பிறந்து விட்டார்கள். இங்லாந்தில் பிறந்து இருக்க வேண்டியவர்கள். நான் அனாதை



தான் அங்கிள். நான் முஸ்லிம் பெண்ணிற்கு பிறந்தவள் என்ற காரணத்தைக் காட்டி என்னை ஏற்க மறுத்துடாதீங்க அங்கிள் ப்ளீஸ்'' பொங்கி வந்தது கண்ணீர்.

''டேக் இட் ஈஸி, டேக் இட் ஈஸி'' தூக்கி முதுகை தட்டிக் கொடுத்தார் மருதநாயகம்.

''திவ்யா'' கண்களைத் துடைத்துக் கொண்டு அழைத்தார் வரதராஜன்.

''டாடி.''

''நீ சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் ஈட்டி மாதிரி இருக்கும்மா. என்னோட பிசினஸை வேண்டுமானாலும், விட்டு விடுகிறேன். என்னோட வாம்மா. நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன் வந்திடும்மா.''

''நான் சொல்றதை செய்வீங்களா? டாடி.''

''என்னம்மா செய்யணும், சொல்லு.''

''எனக்கு அம்மா வேணும்.''

''திவ்யா''

''எனக்கு அம்மா வேணும் டாடி.''

''முடியாததைக் கேட்கிறியேம்மா.''

''முடியும் டாடி, நான் காட்ற அம்மாவிற்கு நீங்கள் தாலி கட்டுவீர்களா? டைவர்ஸ் பண்ணினால் என்ன டாடி? திரும்ப தாலி கட்டக் கூடாது என்று எந்த சட்டமும் இல்ல டாடி. மேடம் எனக்கு அம்மாவா வேணும் டாடி. அம்மா எனக்கு வேணும் டாடி. ப்ளீஸ்.''

வரதராஜன் மேடத்தைப் பார்த்தார். மேடம் திகைத்துப் போய் இருப்பதை, அவர் வெளிறிய முகம் காட்டியது. 'இவள் இப்படி

ஒரு குண்டைத் தூக்கி போடுவாள் என்று எப்படித் தெரியும்? இவ்வளவு நாள் கழித்து, திரும்ப அவரோடு நான் சேர்ந்து வாழ்வதா? இதென்ன முட்டாள் தனம்? மனம் எதை எதையோ எண்ணி கணக்கு போட்டது. காதலுக்கும், இளமைக்கும் நேரடி கனெக்ஷன். புதுமண தம்பதிகள் என்றால் சொல்லவே வேண்டாம். இதயம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்த அந்தக் காலத்தை எல்லாம் விட்டு விட்டு, இறக்கை ஒடிந்து நொண்டியாகி, நின்ற இடத்தை விட்டு நகர்ந்தாலே மூச்சு வாங்கும் இந்த வயதில், தனக்கு இன்னொரு தாலியா? ஊர் என்ன சொல்லும்? காரி மூஞ்சியில் துப்பாது?'

''மேடம் யோசிக்காதீங்க மேடம். சம்மதம் என்று சொல்லுங்க மேடம்.''

நிஜந்தன் மேடத்தின் அருகில் வந்தான்.

''அம்மா''

உலகமே சுழன்றது. ஒவ்வொரு நரம்பும் விம்மித் துடித்தது. கண் முன்னால் வானம் கீழே வந்தது. பூமி மேலே போனது. அம்மா அம்மா துக்கம் தொண்டையை அடைத்தது. வயிற்றில் கடமுடா என்று என்னவோ உருண்டது. பயமா? இன்பமா? ஏதோ ஒன்று பந்தாக சுருண்டு மேலே வந்தது. என் வயிற்றில் பிறந்து இருக்க வேண்டியவன்.

''அம்மா டாடிக்கு இப்படி ஒரு மறுபக்கம் இருக்கும் என்று எங்கள் யாருக்குமே தெரியாது. தெரிந்து இருந்தால் என்னைக்கோ ஓடி வந்திருப்போம்.''

வரதராஜன் பார்வையால் பேசினார். ''காமாட்சி நடந்தை மறந்திடு. பிள்ளைங்களுக்காக ஒத்துக் கொள்.''

''எனக்கு கொஞ்சம் டயம் வேணும்'' குனிந்து கொண்டே சொன்னார்.



''அம்மா நீங்கள் எவ்வளவு டயம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் நல்ல பதிலா இருக்கணும். டாடி போலாமா?'' புறப்பட்டார்கள்.

''நீங்களாவது கண்கலங்காம வச்சிக்கணும். அவள் சந்தோஷமா இருக்கின்றாள் என்று தெரிந்தாலே போதும்'' சொல்லி விட்டுக் கண் கலங்கினான் ரஞ்சித்.

எல்லோரும் புறப்பட்டார்கள்.

மருதநாயகம், மேடம், மரகதம், சம்பத் எல்லோருமே எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் யாரும் இவர்கள் பேச்சிற்கு செவிமடுக்கவில்லை.

திவ்யா தடுக்காமல் வேடிக்கை பார்த்து கொண்டு நின்றாள்.

திவ்யாவிடம் வரதராஜன் வந்தார்.

''இப்போ நான் எதற்கு பாம்பே போறேன் தெரியுமா? எல்லாவற்றையும் விற்று விட்டு மெட்ராஸ் வரப் போறேன். என்னோட பிள்ளைகளுக்கு நல்ல அப்பாவா நடந்துக்கப் போறேன். வரேம்மா.''

நிஜந்தனும், ரஞ்சித்தும் நிற்கும் இடத்திற்கு இவள் போனாள்.

''சாரிண்ணே. என்னை மன்னிச்சிடுங்க'' அழுதாள்.

''ச்சீய் கழுதை இப்போ ஏன் அழற. பிரிவில்தானே அன்பு வெளிப்படும்'' மார்பில் சாய்த்துக் கொண்டு சமாதானப்படுத்தினான் நிஜந்தன். ரஞ்சித் மட்டும் இளைத்தவனா? தங்கையை உச்சி முகர்ந்து சீராட்டினான்.

நித்யாவின் கண்ணீரும், லதாவின் கண்ணீரும் அவர்கள் அறியாமல் செய்த தவறை எல்லாம் அடித்துச் சென்றது. இவளைப்

பார்த்து இருவருமே புன்னகையை அள்ளி வீசினார்கள். அதில் அன்பு இருந்தது. பரிவு இருந்தது. பாசம் இருந்தது. குஞ்சு கொத்துவதால் கோழி வெறுக்காது என்ற வார்த்தை படிகமாக படிந்து இருந்தது. இவளை ஆதரவோடு அணைத்துக் கொள்ள இரண்டு மன்னிகளின் கைகளும் பரபரத்தது.

திவ்யாவின் அண்ணன்கள், அண்ணிகள் எல்லோரும் விடை பெற்று சம்பத், திவ்யா, விக்னேஷ், மம்தாவுடன் வெளியே வந்தார்கள். அங்கே மேட்டும், வரதராஜனும் கண்களால் பல கதைகளைப் பேசினார்கள்.

"ஐய்யய்யோ இவங்களுமா?"

"பக்கா" கைகளை நீட்டினான் விக்னேஷ்.

"பக்கா" அவன் தோளில் வேகமாக அடித்தாள் மம்தா.

# ரோஜாப்பூ தோட்டம்

## 1

நான் உன்னைக்
காதலிக்கின்றேன்
என்றதுமே...
கலங்கிப் போனான்
என் தோழன்...
வேறொன்றும் இல்லையடி கள்ளி!
இதயத்தை உன்னிடம்
இழந்துவிட்டு
எப்படி இயங்கிக் கொண்டிருக்கின்றேன்
என்றுதான்!....

**கா**லை 8.00 மணி. தேனி.

அந்த நடுத்தரமான வீட்டின் முன்பு பெரிய பந்தல் போடப்பட்டு இருந்தது. அந்த வீட்டின் மொட்டை மாடியிலும் பெரிய பெரிய மூங்கில் குச்சிகள் நிறுத்தப்பட்டு பந்தலிடப்பட்டு இருந்தது. வீட்டிற்கு முன்னால் போடப்பட்டு இருந்த பந்தலில் மணமக்களுக்கான மேடை... பூக்களால் நிரம்பி வழிந்து கொண்டு இருந்தது. மங்களகரமான மேளச் சத்தமும், நாதஸ்வர சத்தமும் ஒலித்துக் கொண்டிருந்தது. வீட்டில் இருந்த எல்லா அறையிலும் கல்யாணப் பொருட்கள் நிரம்பி வழிந்தது. இரண்டு வீடு தள்ளி மூன்றாவது வீட்டில் தடபுடலாக சமையல் ஆகி, அந்தத் தெருவே மணத்தது.

மணமேடையில் மீரா, கண்ணன் ஜோடி வந்தவர்கள் கண் பட்டு விடும் அளவிற்கு பொருத்தமான ஜோடியாக மாலைக் குவியலோடு அமர்ந்து இருந்தார்கள். மணப்பந்தலில் ஒரு ஓரமாக மீராவின் விதவைத் தாய், அடிக்கடி கசிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இருந்தாள். மணமேடையில் மணமக்களுக்கு அருகேயே கண்ணனின் பெற்றவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். மாமா, அத்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என்று உறவினர் பட்டாளமே மணமக்களுக்கு பின்னால் நின்று கொண்டு சிரித்தபடி கிண்டல் அடித்துக் கொண்டிருந்தனர்.

''நல்ல ஜோடி.''

காதில் விழுந்த வார்த்தைகளை கிரகித்துக் கொண்டு ஓரக் கண்ணால் கண்ணன் மீராவைப் பார்த்தான். பார்வையின் தாக்கத்தில் மீராவும் தலையை லேசாக அசைத்து அவனைப் பார்த்தாள்.

சிரித்தான்.

ஆமோதிப்பது போல் தலையைத் தாழ்த்திக் கொண்டாள் மீரா...



கெட்டிமேளம்... கெட்டிமேளம்... ஐயர் உச்சஸ்தாயியில் கத்த...

மீராவின் சங்குக் கழுத்தில் கண்ணன் மூன்று முடிச்சிட, மஞ்சள் அரிசி அவர்கள் மேல் வேகமாக வீசப்பட்டது.

**கா**லை 9.00 மணி சென்னை அடையார்.

பத்மநாபா நகரில் உள்ள அந்த ஆடம்பரமான பங்களா. மாடிப்படியில் இருந்து வேகமாக இறங்கிக் கொண்டிருந்தாள் கிரிஜா. நீல நிறச் சுடிதார். இறங்கி வந்த வேகத்தில் பதற்றம் தொற்றியிருந்தது.

''அம்மா...''

''......''

''அம்மா...'' வேகமாகக் கத்தினாள்.

''என்னம்மா... இப்பதானே டூர் முடிஞ்சி வர, படுக்கலையா? போன வேகத்துல திரும்பி வர?'' கேட்டுக் கொண்டே கிரிஜா அம்மா கிச்சனில் இருந்து வெளிப்பட்டாள்.

கிரிஜாவின் கையில் ஒரு இன்விடேஷன் ஆடிக் கொண்டிருந்தது.

''மீராவோட இன்விடேஷன் எப்போ வந்தது?''

''ஒரு வாரம் இருக்கும்.''

''எங்கிட்ட ஏன் சொல்லலை?''

''இப்பதானேம்மா நீ வர.''

"நான் வந்து அரை மணி நேரம் ஆகுது. வந்தவுடனேயே சொல்றது இல்லையா?"

"மீரா கோபப்படுவாளேன்னு தோணுதா... உன் பிரண்ட் தானே... உன் நிலையைச் சொல்லு. ஏத்துக்குவா. பையன் மெட்ராஸ் தானே. ரிசப்ஷன் ஒரு வாரம் கழிச்சி மெட்ராஸ்ல தான். அப்ப போய்க்க."

"ஐய்யோ அம்மா..." காலை உதறினாள்.

"கிரிஜா பையன் போட்டோ பாத்தியா, நல்ல ஜோடி யில்ல, பையனும் மூக்கும் முழியுமா நல்லாவே இருக்கான்."

"டிரைவர்..." காட்டுக் கத்தல் கத்தினாள்.

அலறி அடித்துக் கொண்டு டிரைவர் ஓடி வந்தான்.

"என்னங்க சின்னம்மா.."

"மெட்ராஸ்ல இருந்து தேனி போக எவ்வளவு நேரம் ஆகும்?"

"பதினைந்து, பதினாறு மணி நேரமாவது ஆகும்மா."

"வேகமாப் போனா?"

"ம்... பதினொன்னு, பன்னண்டு மணி நேரத்துல போக லாம்."

"க்யுக்... போய் கார எடுங்க."

"அம்மா..."

"சொன்னத செய்ங்க... கோ மேன்" திரும்பிக் கத்தினாள்.

"கிரிஜா."

"அம்மா ப்ளீஸ், நான் தேனி போகணும்... அதுவும் அர்ஜென்டா போகணும், மீரா எனக்கு எப்படிப்பட்ட தோழின்னு உங்களுக்கு நல்லாவே தெரியும்."



"சரி குளிச்சிட்டுப் போ."

"நோ டைம்... ட்ரைவர்" வெளியே பாய்ந்தாள் கிரிஜா...

மாருதி சீறிக் கொண்டு புறப்படும் சத்தம், வேகமாக கேட்டு தேய ஆரம்பித்தது.

**கா**லை 11.00 மணி தேனி.

"பொண்ணு மாப்பிள்ளைய சாப்பிடக் கூப்பிடுங்கோ, எவ்வளவு நேரம் பட்டினி போடப் போறீங்க" ஒரு பெரியவர் உரக்கக் குரல் கொடுத்ததும்,

கண்ணனும் மீராவும் அருகருகே ஒட்டினார் போல் உட் கார வைக்கப்பட்டார்கள். தலைவாழை இலைகள் போடப் பட்டன.

"முதல்ல ஸ்வீட் சாப்பிடச் சொல்லுங்க."

கண்ணனின் கைகளில் ஜாங்கிரி திணிக்கப்பட்டது.

"பாதிய தங்கச்சிக்கு குடுடா" கிண்டலடித்தனர்.

கண்ணன் எச்சில் ஜாங்கிரியை மீராவின் இதழ் அருகே கொண்டு செல்லும்போது...

"எச்சில்ன்னு பாக்காதம்மா, உங்க ரெண்டு பேருக்கும் எதுலேயும் வித்தியாசம் இல்ல. இன்ப, துன்பம், எல்லாத்தி லேயும் பங்கு போட்டுக்கணும் சாப்பிடு."

கை நீட்டி வாங்கப் போனாள் மீரா.

"ம்கூம்" ஒரு இளைஞன் வேகமாகத் தலையாட்டி மறுத் தான்.

"ஊட்டுடா கண்ணா."

ஊட்டினான் கண்ணன்.

சந்தோசமாக ஜாங்கிரியை விழுங்கத் தொடங்கினாள் மீரா.

**ம**தியம் 1.00 மணி சென்னை டூ தேனி நெடுஞ்சாலை.

மாருதி காரின் உள்ளே கைகளை சிவக்கும் அளவிற்கு பிசைந்துக் கொண்டு இருந்தாள் கிரிஜா. சாலையின் இரண்டு பக்கமும் தவிப்போடு பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''டிரைவர் இப்ப எதுவரைக்கும் வந்திருக்கோம்?''

''விழுப்புரம் தாம்மா தாண்டி இருக்கோம்.''

''வேகமாப் போக முடியாதா?''

''இதவிட வேகமா எப்படிம்மா போறது?''

''போகனும், நான் போய் மீராவ பாக்கனும்.''

''ப்ரண்டாமா?''

''ப்ரண்ட் மட்டும் இல்லை. எனக்கு எப்படிச் சொல்ற துன்னு தெரியல. அவ என்னோட உயிர்.''

''போலாம்மா... போயிடலாம்... நிச்சயத்துக்குக் கூடவா சொல்லலை.''

''நா சிங்கப்பூர் டூர் போய் இப்பதானே திரும்புறேன். இந்த மூணு மாசத்துல எல்லாமே நடந்து இருக்கு'' கண்களை மூடிக் கொண்டு தளர்வாய் சீட்டிலேயே சரிந்து படுத்தாள். கண்ணுக்குள் கண்ணனும் மீராவும். சில விநாடிகளுக்கு பின், மீரா மட்டும் கண்ணீரோடு... ''என்னைக் காப்பாத்தாம விட் டுட்டியேடி கிரிஜா'' என வாய்விட்டுக் கதறத் தொடங்கினாள்.

''இல்ல மீரா... இல்ல மீரா'' கிரிஜா அலறவும்,



'சடார்' என பிரேக் அடித்து மாருதி ஒரு குலுக்கலோடு நின்றது.

டிரைவர் திரும்பிப் பார்த்தார். கிரிஜாவின் முகம் எல்லாம் பொட்டு பொட்டாக வேர்வை அரும்பியிருந்தது.

''என்னம்மா...''

''ம்... ஒன்னுமில்ல, வேகமா போங்க.''

**மா**லை நான்கு மணி. தேனி.

அந்த வீட்டு மொட்டை மாடியில், இரண்டு ஜமுக் காளத்தை விரித்து, இரண்டு பெரியவர்கள் பேசிக் கொண்டு இருந்தார்கள். கல்யாண வீட்டில் பாதிப்பேர் கிளம்பி இருந்தார்கள். முக்கியமான உறவினர்கள் மட்டும் தங்கி இருந்தார்கள். கண்ணனையும் மீராவையும் தூங்கச் சொல்லி இருந்தார்கள்.

''பரவாயில்ல! மரகதம், தன் பொண்ணை நல்ல இடத்துல குடுத்துட்டா.''

''மீரா மாதிரி ஒரு நல்ல பொண்ண கட்டிக்க அவங்கல்ல குடுத்து வச்சிருக்கனும்.''

''அது சரி, என்ஜீனியர் மாப்பிள்ளை, என்ன செஞ்சி இருக்கா.''

''என்ன செய்யனும், புள்ளையா குட்டியா, மீரா மட்டும் தான், எல்லாம் அவளுக்குத்தானே.''

''மீரா குடிசை வீட்டுல இருந்தாக்கூட, கோடீஸ்வரனைக் கட் டிக்கற அளவுக்கு அழகும் குணமும் இருக்கு அது போதாதா, பணத்த எப்ப வேணாலும் சம்பாரிக்கலாம். ஆனா நல்ல பொண்ணத் தவற விட்டா கஷ்டந்தான்.

''நீ சொல்றதும் வாஸ்தவம்தான். இந்தக் காலத்துப் பசங்க

எங்கே பொண்ணு மனச குணத்தப் பாக்குறானுங்க... எவ்வளவு போடுவாங்கன்னுல்ல கேக்கறானுங்க, இந்தத் தம்பி அதிர்ஷ்டகாரந்தான், பொன்னோட, தங்கமான பொண்ணையுமில்ல புடிச்சிட்டான்.''

''ரொம்ப பேசாத, நம்ம கண்ணே பட்டுடப் போவுது.''

மெல்ல மெல்ல பேச்சுக்கள் குறைய, மாலை டிபன் தயாரானது.

இரவு ஏழு மணி. திருச்சி.

''சின்னம்மா.''

''ம்...''

''காபியாவது குடிங்கம்மா.''

''வேண்டாம், நான் முதல்ல மீராவ பார்க்கணும்.''

''காலையில ஒன்பது மணியில் இருந்து வந்துகிட்டே இருக்கோம், உடம்பு என்னத்துக்கும்மா ஆகும்.''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம். நீங்க போய் சாப்பிட்டு வாங்க, நான் கார்லேயே இருக்கேன்.''

''அம்மா, நீங்க பசிதாங்க மாட்டீங்களே.''

''ப்ளீஸ், எனக்கு எதுவும் வேண்டாம், போய் சாப்பிட்டு சீக்கிரம் வாங்க'' தயக்கமாகக் கிளம்பிய டிரைவர், மறக்காமல் கொண்டு வந்த ப்ளாஸ்க்கையும் எடுத்துக் கொண்டார். பத்து நிமிடங்களில் திரும்பி வந்தவர், ப்ளாஸ்கின் மூடியில் சூடான ஹார்லிக்சை ஊற்றி கிரிஜாவிடம் நீட்டினார்.

தலையைக் கவிழ்த்துக் கொண்டு இருந்தாள். டிரைவர் குரல் கேட்டதும் நிமிர்ந்து பார்த்தாள், கண்கள் சிவப்பேறி கலங்கிக் கொண்டு இருந்தது.



மெலிதாகச் சிரித்தாள்.

''இந்தாம்மா... கொஞ்சமாவது குடி.''

''தேனி போக எவ்வளவு நேரம் ஆகும்?''

''இன்னும் மூன்று மணி நேரம் ஆகும்.''

''இன்னும் சீக்கிரம் போக முடியாதா?''

''ஏம்மா, இப்படி அவசரப்படறீங்க?'' ஆதங்கத்தோடு கேட்டார்.

''டிரைவர், நான் காலையில இருந்து சாப்பிடலன்னு. இவ்வளவு அக்கறையா ஹார்லிக்ஸ் கொண்டு வந்து குடுக்குறீங்களே... இந்த அன்பைவிட, எத்தனையோ மடங்கு அதிகமானது எனக்கும் மீராவுக்கும் உள்ள ப்ரண்ட்ஷிப்.

''குடிங்கம்மா...''

மெலிதாக ஹார்லிக்சை உறிஞ்சத் தொடங்கினாள். இதமான சூட்டோடு தொண்டையில் இறங்க ஆரம்பித்ததும், லேசான திருப்தி. கண்களை மூடித் திறந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். கழுத்தில் இறுக்கமாக சுற்றி இருந்த துப்பட்டாவை தளர்த்தி விட்டதும்... பனியோடு கலந்த குளிர்காற்று... கழுத்தை வருடத் தொடங்கியது. உடல் சிலிர்த்தது. கழுத்தில் உள்ள சின்னச் சின்ன மயிர் கால்கள் குத்திட்டு நின்றன. அடிக்கடி கையைத் திருப்பித் திருப்பி மணி பார்த்தாள்.

''ட்ரைவர்.''

''ஏ.ஸி.யை ஆன் பண்ணுங்க.''

''சரிம்மா.''

''வாக்மேன் இருக்கா?''

''இல்லையேம்மா, நீங்க இருந்தாதான் கார்ல வாக்மேன் இருக்கும்.''

''சரி'' எச்சிலை விழுங்கிக் கொண்டாள். தலைவலி மெள்ள மெள்ள அவளை ஆக்ரமிக்கத் தொடங்க, நெற்றியை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, அப்படியே படுத்துக் கொண்டாள். திரும்பிப் பார்த்த ட்ரைவர், பெருமூச்சு விட்டபடி காரை செலுத்தத் தொடங்கினார்.

இரவு எட்டு மணி. தேனி.

மிகவும் ஆடம்பரமாக முதலிரவு அறை அலங்கரிக்கப் பட்டது. இரண்டு பூக்காரர்களைக் கொண்டு மிக நேர்த்தியாக பூச்சரம் தொங்க விடப்பட்டது. ஏகப்பட்ட ஸ்வீட்ஸ், ப்ரூட்ஸ், எல்லாம் டேபிள் மேல் அடுக்கி வைக்கப்பட்டன. ஊதுபத்தி மணம், அந்த அறைக்குள் தனி சாம்ராஜ்ஜியமே நடத்திக் கொண்டிருந்தது. எல்லா வேலைகளும் முடிந்ததுமே, கண்ணன் அறைக்குள் சென்று காத்திருக்கத் தொடங்கினான். அறைக்கு வெளியே ஏகப்பட்ட கமெண்ட்ஸ். பிள்ளை வீட்டு இளவட்டங்கள், பெண் வீட்டு இளவட்டங்களைக் கிண்டலடித்தும், கடைக்கண்ணால் பார்த்து அசடு வழிந்து கொண்டும் இருந்ததில் பெருகிய 'ஜொள்'ளில் வேறு ஏகப்பட்ட பேர் தத்தளித்துக் கொண்டு இருந்தார்கள்.

மீராவிற்கு தனியாக அலங்காரம் நடந்தது. அவளைச் சுற்றி நாலைந்து பெண்கள் வட்டமடித்து இருந்தார்கள். தழையத் தழைய வழவழவென்று பின்னப்பட்டது. அதிக பூ வைத்துக் கொள்ள மீரா சம்மதிக்காததால், ஒரு முழம் மல்லி மட்டும் செருகப்பட்டது. வெளி அலங்காரத்தையும் அவளுடைய புற அழகையும்தான் எல்லோரும் ரசித்தார்கள். மீரா இயல்பாக இருப்பதாக எண்ணி கமெண்ட் அடித்துக் கொண்டிருந்தார்கள்.



அவள் உள்மனம் படும்பாட்டை, அதில் நடக்கும் போராட்டத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. தன் மனக் குமுறல்களை இதயத்தில் பூட்டி வைத்துப் பொறுத்திருந்தால் புது இரவில் பொங்கி வழியப் போவது யாருக்குத் தெரியும்?

''முகத்தை ப்ளீச் பண்ணுனியா மீரா.''

இல்லையெனத் தலையாட்டினாள் மீரா.

''ஃபேசியல் பண்ணினியா?''

''இல்ல ரமா'' புல்லாங்குழலின் நாதத்தை விட இனிமையாக அவள் குரல் ஒலித்தது.

''ஏய்... முட்டாள், மீராக்கு எதுக்கு ப்ளீச்சிங், ஃபேசியல் எல்லாம்.''

''ஏய்... விடுங்கடி எதுக்கு சண்டை போட்டுக்கிட்டு.''

''ம்...''

''மீரா...''

''இம்...''

''நாளைக்கு காலையில உன்னை வந்து பாப்பேன்டி'' நமுட்டாக சிரித்தாள்.

''பாரேன்.''

''நா கேக்றதுக்கு எல்லாம் பதில் சொல்லணும்.''

''சொல்றேன்... உங்கிட்ட சொல்லாமலா?''

''ஆங்... இப்படித்தான்டி பேசுவீங்க, ஆனா எவளும் சொன்னது இல்ல.''

''என்னதான் கேக்கப் போற?''

"எல்லாத்தையும் கேப்பேன். கண்ணாடி பிம்பம் மாதிரி தெரிஞ்சும் தெரியாமலும் இருக்கும் குடும்ப வாழ்க்கை பத்தி, நீதான் சொல்லணும்."

"நாம பேசிக்காத விஷயமா?"

"இருக்கலாம் மீரா, நாம பேசிக்காத விஷயமே இல்லதான், ஆனா எல்லோருமே அப்படி இருக்கலாம், இப்படி இருக்கலாம், இந்த பிரச்சினை வரும். அது வரும்னு படிச்சது. கேட்டது, பாத்தது இதப்பத்திதான் பேசி இருக்கோம், யாருக்கும் அனுபவம் இல்ல, மாமியார், மாமனார், நாத்தி, ஹஸ்பெண்ட், கொளுந்தன் இப்படி எதைப் பத்தியுமே. அனுபவப் பூர்வமா நம்ம மீராதான் முதல்ல கல்யாண வாழ்க்கையில நுழையப் போறா... அதான் சொன்னேன்."

"ஏய்... உன்னைப் பேச விட்டதே தப்பு. லெக்சரரா போகணும்கறது உன்னோட லட்சியம்தான், அதுக்காக எங்கிட்டயே ட்ரையல் பாக்கணுமா?"

உடனே தங்கக் காசுகளை சிதற விட்டதுபோல் குபீர் என சிரிப்பொலி எழுந்தது.

"மீரா... இன்னுமா, ரெடியாகல? மாப்பிள்ளைப் பையன் காத்திருக்கார் பார்" சட்டசபையின் கண்டனக் குரலாக ஒரு குரல் ஒலித்தது.

இரவு பத்து மணி.

கிரிஜாவின் மாருதி சரியாக பத்து மணிக்கு திருமணப் பந்தலுக்கு முன் க்ரீச்சிட்டு நின்றது. ட்ரைவர் இறங்குவதற்கு முன்பே, கிரிஜா ஒரு குட்டிப் புயல் போல் வெளியே வந்தாள். வீட்டில் இருப்பவர்கள் எல்லோருமே களைத்துப் போய், ஒன்பது மணிக்கு எல்லாம் படுக்கைக்குச் சென்று விட்டதால் இரண்டாவது சுற்று உறக்கத்திற்குப் போயிருந்தார்கள்.



மீராவின் தாய் மரகதம் மட்டும் உறங்காமல் ஹாலில் உள்ள தூணுக்கு அருகில் நின்று கொண்டிருந்தாள். ஹாலில் உள்ள விளக்கை அணைத்து விட்டு தானும், படுக்கலாம் என்று நினைத்து, சுவிட்சில் கை வைக்கும்போதுதான், பாய்ந்து வரும் கிரிஜாவைப் பார்த்தாள்.

"வாம்மா... வா... வா... நீ வராதது மீராவுக்கு எவ்வளவு வருத்தம் தெரியுமா?"

"அ...ம்...மா... மீரா எங்கே?" பதறினாள்.

"என்னம்மா... எதுக்குப் பதர்ற... உன்னைப் பத்தி அவளுக்குத் தெரியாதா? உம்மேல கோபப்படமாட்டா."

"அம்மா அவ எங்கே?"

"எட்டு மணிக்கு நேரம் நல்லா இருக்குன்னு ஐயர் சொன்னதால, சாந்திமுகூர்த்தத்திற்கு..."

"அவ ரூம்க்குள்ளே போய் இரண்டு மணி நேரம் ஆயிடுச்சா."

"வா கிரிஜா... முதல்ல சாப்பிடு எங்கையால நீ சாப்பிட்டு எவ்வளவு நாள் ஆகுது."

"அ...ம்...மா..." அழத் தொடங்கினாள். பதறிப் போன மரகதம்,

"கிரிஜா என்னம்மா இது? அழுதுகிட்டு. வா யாராவது பாத்திடப் போறாங்க. அந்த ரூம்க்குள்ளே வா" கிரிஜாவை இழுத்துக் கொண்டு அறைக்குள் சென்ற மரகதம், கதவைத் தாழிட்டுத் திரும்பினாள்.

குலுங்கிக் குலுங்கி அழும் மகளின் தோழியைப் புதிராகப் பார்த்தாள்.

''அ...ம்...மா.''

''சொல்லும்மா. வீட்டுல அப்பா, அம்மாகிட்டே சண்டை போட்டுட்டு வந்துட்டியா?''

''இல்லம்மா.''

''.........'' சாரதா மவுனமாக அவளைப் பார்த்தாள்.

''இன்னைக்கு காலையிலதாம்மா சிங்கப்பூர் டூர் முடிச்சி வீட்டுக்கு வந்தேன். அப்போதான் மீரா அனுப்பி இருந்த இன்விடேஷனைப் பார்த்தேன். அதில் இருந்த மீராவோட போட்டோவும் அவ கல்யாணம் பண்ணிக்கப் போற கண்ண னோட போட்டோவையும் பார்த்ததும் துடிச்சி போய்ட் டேம்மா. சாந்தி முகூர்த்தத்திற்கு முன்னாடியாவது வந்து மீராவ காப்பாத்திடணும்னு ஓடி வந்தேம்மா. கடைசியில முடியாம போயிடுச்சே. தெரிஞ்சே என்னால மீராவக் காப்பாத்த முடியலையே.''

''நீ என்னம்மா சொல்ற?''

''பாத்து பாத்து வளர்த்த ஒரு பச்சைக் கிளியைப் புலிகிட்ட குடுத்துட்டீங்களேம்மா.''

''கிரிஜா.''

''தன்னோட விரல் நகம் கூட கட்டிக்கிட்டவனுக்கு மட்டுமே சொந்தம்னு நினைக்கிற மீராவ, படுக்கைக்கு மட்டும்தான் பொண்ணுன்னு நினைக்கிற ஒரு பாவி கையில குடுத்துட் டீங்களேம்மா.''

''அம்மாடி! நீ என்ன சொல்ற? நெஞ்சு வலிக்குதே'' தன் மார்பை இறுக்கிப் பிடித்துக் கொண்டு மரகதம் தள்ளாட, தாங்கிப் பிடித்துக் கொண்டாள் கிரிஜா.

''அம்மா... அம்...மா...''



''எனக்கு ஒன்னுமில்லம்மா, மாப்பிள்ளைய உனக்கு முன்னாடியே தெரியுமா.''

''ம்.'' தலையாட்டினாள்.

''ஆறு, ஏழு மாதத்துக்கு முந்தி டாடியோட கமிஷனர் அங்கிளைப் பார்க்க, அந்த ஆபீசிற்குப் போனோம். அப்போ ஏதோ ஒரு பைவ் ஸ்டார் ஹோட்டல்ல நடந்த ரெய்டுல நிறைய பேரை அரெஸ்ட் பண்ணிக் கொண்டு வந்தாங்க. அப்படிக் கொண்டு வந்தவங்கள்ல இந்தக் கண்ணனும் ஒருத் தம்மா. கமிஷனர் அங்கிளுக்கு கண்ணனை நல்லாத் தெரியும் போல இருக்கு. நானும் டாடியும் உட்கார்ந்து இருக்கும் போதே அவனைக் கூப்பிட்டு அட்வைஸ் பண்ணினார். அதுக்கு அந்த ராஸ்கல் பொம்பளையே படுக்கைக்குத்தான். சாரி... இனிமே ரூம் தனியா எடுத்துக்குறேன்னு திமிரா பேசி னான். நல்ல குடிம்மா. நிதானத்துலேயே இல்ல. அந்த முகத்தை நான் பார்த்ததால இன்விடேஷனைப் பார்த்ததும் துடிச்சிப் போய்ட்டேம்மா.''

''........''

''போய் கதவைத் தட்டி மீராவ கூப்பிடட்டா.''

''வேண்டாம்மா... வேண்டாம். காலையில பேசிக்கலாம்.''

''அம்மா... உங்களுக்கு.''

''ஒன்னும் ஆகாது கிரிஜா. இந்தக் கட்டை மறத்துப் போய் கிடக்கு'' சொல்லி விட்டுத் தடுமாறியபடி எழுந்த மரகதத்தின் கைபட்டு சாமி படத்திற்கு முன்பு எரிந்து கொண்டு இருந்த காமாட்சி விளக்கு கீழே விழுந்து, எண்ணெய் சிந்த திரி அணைந்தது. அதை கிரிஜாவும், மரகதமும் பீதியோடு பார்த் தார்கள்.

# 2

உன் விழிக் கதிர் பட்ட பின்தான்
என் சோம்பலின் சட்டை
உரிக்கப்பட்டது...
உன் இதழ் ஈரம் பார்த்துத்தான்
என் இதயத்தில் ஈரம் சுரந்தது...
உன் மூச்சுக் காற்று
என் மேல் மோதிய பின்புதான்
என் முதுகெலும்பு நிமிர்த்தப்பட்டது...
என்னையே எனக்களித்த
என்னுயிர் தோழியே!
எதை உனக்கு காணிக்கையாக்குவேன்
என் காதலைத் தவிர...!

அதே நேரம் முதலிரவு அறையில்...

டேபிளோடு ஒட்டிப் போடப்பட்டு இருந்த சேரில் மீரா அமர்ந்து இருந்தாள். பூச்சரம் தொங்க விடப்பட்ட அலங்காரக் கட்டிலில் இரண்டு தலையணைகளை மடியில் வைத்து அழுத்திக் கொண்டு மீராவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருந்தான். அவன் பார்வை அவளின் ஒவ்வொரு அசைவையும் ரசித்துக் கொண்டு இருந்தன. அவள் கண்களை திராட்சைக்கு ஒப்பிடலாமா? ம்கூம் வேண்டாம், பழைய உவமை. அந்தக் கண்கள் கண்ணாடி போல மின்னும் தெளிந்த நீரோடை நடுவே பாதுகாப்பாக வைக்கப்பட்ட கறுப்பு வைரம். அந்தப் புருவம் வில் போல...



ம்கூம் வேண்டாம், வீணை தந்திக் கம்பியை வளைத்து வைத்தது போல அப்படி ஒரு மெல்லிய வளைவான புருவம், தட்டிப் பார்த்தால் தாளம் வருமா என்று இனிமேல்தான் பார்க்க வேண்டும். அந்த இதழ்... கொவ்வைப் பழம் போல... ம்கூம் வேண்டாம், காஷ்மீர் தக்காளியை நேராக வெட்டி, இதழாக அல்லவா பிரம்மன் படைத்து இருக்கின்றான். இதன் சுவை எப்படி என்று எப்படித் தெரிந்து கொள்வது? அவள் அருகில் வராமலேயே. வெண்ணெயைப் பிடித்து வைத்தார் போல் என்ன அது, கழுத்தா? மூச்சுத் திணற மீராவையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

''மீரா'' அழைத்தான்.

ஆனால் அவள் தியானத்தில் இருப்பது போல் அசையா மல் உட்கார்ந்து இருந்தாள். அவள் முக பாவத்தில் இருந்து மிக தீவிரமாக யோசித்துக் கொண்டு இருக்கின்றாள் எனத் தெரிந்தது.

''மீரா'' சிறிது வேகமாக அழைத்தான்.

''ம்.'' நிமிர்ந்து பார்த்து இதழை விரிய விட்டாள்.

''எதுவும் பேச மாட்டேங்கற. ஒரு ஒன்னரை மணி நேரத் துக்கு முன்னால் உள்ளே வந்தே, பாலை எங்கையில குடுத் துட்டு நீ பாட்டுக்கு சேர்லபோய் உட்கார்ந்துட்டே, ஏதாவது பேசு, பயமா இருக்கா?'' கண்ணனின் குரலில் தேன் கலந்தது. எழ எத்தனித்தவனை,

''அங்கேயே இருங்க'' தடைக்கோடாக மீராவிடம் இருந்து வார்த்தைகள் வந்து விழுந்தன.

''ஏன்?'' புரியாமல் பார்த்தான்.

''பேசணும்.''

''பக்கத்துல உட்கார்ந்தும் பேசலாமே?''

''வேண்டாம், முதல்ல மனம் விட்டுப் பேசிடுவோம். இந்த ரூம் உள்ளே நுழைந்ததில் இருந்து எப்படிப் பேசணும் என்றுதான் எனக்குள்ளே ரிகர்சல் பார்த்துகிட்டு இருந்தேன்.''

''நான் உன்னையே பாத்துகிட்டு இருந்தேன். இந்த ஸாரி உனக்கு நல்லா இருக்கு'' உதடுகளை ஈரப்படுத்திக் கொண் டான்.

''தேங்க்ஸ் என்னைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்?''

''எல்லாம் தெரியும்.''

''எல்லாம்னா?''

''நீ மீரா, வயது இருபத்தி இரண்டு, பத்து வயதிலேயே அப்பா இறந்திட்டார், எல்லாம் அம்மாதான். நெருங்கிய சொந்தம்னு இப்போதைக்கு என்னைத் தவிர யாரும் இல்லை. பி.எஸ்ஸி முடிச்சிருக்க. படிச்சது மெட்ராஸ் மீனாட்சி காலேஜ். அழகான நல்ல பெண் என்று எல்லாமே தெரியும்.''

''அப்போ நான் கர்ப்பமா இருக்கறது தெரியாது இல் லையா?'' நிதானமாகக் கேட்டாள் மீரா.

''பொளேர்'' என அறை விழுந்தது போல் அதிர்ந்தான்.

''கர்ப்பமா இருக்கியா... யூ மீன் பிரகனன்சி?''

''எஸ்.''

''யூ... யூ...'' எழுந்தவனிடம் இருந்து இரண்டு தலை யணைகளும் ஆளுக்கு ஒரு திசையாக பறந்தன.

''அங்கேயே நில்லுங்க'' குரலை உயர்த்தினாள்.

''நீ சொன்னது...'' நம்பாமலேயே கேட்டான்.



''சுத்தமான உண்மை. இப்போ நீங்க கோபப்படுவதிலோ, ஆத்திரப்படறதிலோ அர்த்தமே இல்லை.''

''எதுக்குடி அர்த்தம் இல்ல?''

''எம்மேல கோபப்பட உங்களுக்கு அருகதை இல்லை.''

''அருகதை பத்தி... என்னை ஏமாத்திட்டு... உன்னை...''

''காம் டவுன். நான் மட்டுமா ஏமாத்தினேன். நீங்களும் தான்.''

''......''

''என்ன பாக்குறீங்க. நீங்க என்ஜினீயர்னு மட்டும்தானே சொன்னீங்க. குடிகாரன், செயின் சுமோக்கர், உமனைசர்... புரியல அதான் பொம்பள பொறுக்கின்னு சொல்லவே இல் லையே.''

''நீ... நீ...''

சிரித்தாள் மீரா.

''பதினைந்து நாளைக்கு முன்னாடியே உங்க பயோ டேட்டா எனக்குத் தெரியும்.''

முகம் வெளிற பார்த்தான் கண்ணன்.

சேரை விட்டு எழுந்த மீரா, கண்ணனுக்கு எதிரேயே கட்டிலில் வந்து அமர்ந்தாள்.

''இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்னு பாக்குறீங் களா? வெரி சிம்பிள். அம்மா உங்களுக்குத்தான் என்னைக் குடுக்கணும்னு முடிவு பண்ணின உடனேயே உங்களைப் பத்தி முழுசா தெரிஞ்சிக்கிடணும்னு ஆசைப்பட்டேன். காலம் முழு வதும் வாழணுமில்லையா? நீங்க மெட்ராஸ்ன்னதுமே, என் னோட பிரண்டோட கசின் ஒருத்தர் டிடெக்டிவ் ஏஜென்சீஸ்

வைத்து இருக்கார். அவர்கிட்டே உங்க அட்ரஸ், போட்டோ கொடுத்து, உங்களைப் பற்றித் தெரிஞ்சிக்கணும்னு கேட்டேன். சந்தேகப்பட்டு இல்லை, சந்தோஷமா வாழணும்னு. கட்டிக்கப் போற புடவைக்கே ஏகப்பட்ட கடை ஏறி இறங்குகிறோம். பாத்துப் பாத்து செலக்ட் பண்றோம். புடவைக்கே அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கும்போது உங்களைப் பற்றி தெரிஞ்சிக்கிடணும்னு நினைத்த என்னோட ஆசையில எந்தத் தப்பும் இல்லை.

"தப்பு என்னன்னா, நம்ம நிச்சயம் முடிஞ்சி பத்திரிகை எல்லாம் அடிச்ச பின்னால்தான் உங்களைப் பற்றி அபூர்வ செய்திகள் எல்லாம் கிடைத்தது. கல்யாணத்தை நிறுத்தணும்னு நினைத்து இருந்தால் செஞ்சி இருக்கலாம். செய்யாததற்குக் காரணம் மூன்று. நம்பர் ஒன் பத்திரிகை அடிச்ச பின்னால கல்யாணம் நின்னா அதைத் தாங்கிக்கிற அளவு என்னோட அம்மாவுக்கு சக்தி இல்லை. நம்பர் டூ. எங்கம்மா சும்மா தூங்கியே நான் பார்த்தது இல்லை. இதனால அவங்க எழாம தூங்கிடுவாங்களோன்ற பயம். நம்பர் த்ரீ. இந்த விஷயம் எல்லாம் கல்யாணத்துக்கு பின்னால எனக்குத் தெரிய வந்தா, தாலியைக் கழட்டிக் கொடுத்துட்டா வர முடியும்ங்கற எண்ணம். அவ்வளவுதான்."

அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த கண்ணன், ஒரு சிகரெட்டை உருவி உதட்டில் ஒட்ட வைத்து, லைட்டரை ஆன் செய்து இழுத்து புகையை வெளியே விட்டான்.

"ஒரு நாளாவது நல்லவனா இருக்கணும்னு நினைச்சேன். ப்ச்... கெடுத்துட்ட..."

"..."

"என்னைப் பத்தி நீ தெரிஞ்சிக்கிட்டதுல சந்தோஷம் தான். பின்னால தெரிஞ்சிக்க வேண்டியதை முன்னாலேயே



தெரிஞ்சிகிட்ட. வெரிகுட்...! பட் ஒன் திங். நான் கெட்டவனாவே அயோக்கியனாவே இருக்கலாம். அதுக்காக கர்ப்பத்தோட இருக்கிற உன்னை என்னால ஏத்துக்க முடியாது."

"ஏத்துக்கச் சொல்லி நான் கால்ல விழலையே" சீறினாள்.

"கழுத்துல தாலி ஏறிடுச்சிங்கற திமிரா?"

"நெவர்... நிச்சயமா இல்லை. நீங்க பண்ணினா தப்பு இல்லை. அதே நான் பண்ணினா தப்பா?"

"....."

"ஏய்யா, ஒரு பொய்யான வார்த்தையையே உன்னால ஜீரணிக்க முடியலையே, உன்னோட அத்தனை உண்மைகளையும் நான் எப்படித் தாங்கிக்கிறது?"

"........."

"நீங்க மட்டும் எல்லாம் பண்ணலாம். ஆனா உங்களுக்கு வரப் போற பொண்டாட்டி மட்டும் உத்தமியா, பத்தினியா இருக்கணும் இல்ல?"

"........."

"இருபத்தைந்து வருஷம் வளர்ந்து படிச்சி, என்னைக் கல்யாணம் பண்ணுறது பெரிசு இல்ல. இருபது வருஷமா வளர்த்த அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை எல்லாத்தையும் நீங்க போட்ற மூணு முடிச்ச மட்டும் நம்பி விட்டுட்டு வரோமே... அதான்! குடிச்சி குடிச்சி நாளை நீ கண்ணை மூடிட்டா உங்கம்மாவிற்கு இன்னொரு மகன் இருக்கார். உங்க தம்பிக்கு இன்னொரு அண்ணன் இருக்கார். எனக்கு யார் இருக்கா? தன்னை மட்டுமே தன்னோட அன்பை மட்டுமே, தன் நிழலை மட்டுமே, தன் அரவணைப்பை மட்டுமே நம்பி வர, தனக்காக வாழ்நாள் முழுக்க சந்தோஷமோ

துக்கமோ, ஏத்துக்க, எல்லாத்தையும் விட்டுட்டு ஒருத்தி பொண்டாட்டியா வரப் போறான்னு தெரிஞ்சும் இப்படி ஆடு நீங்களே. மனசாட்சியே இல்லை? கண்ணுக்குத் தெரியாத புருஷனுக்காக தன்னையே பொத்தி பொத்தி பாதுகாக்கிற பொண்ணுங்களுக்கு நீங்க என்னய்யா வச்சி இருக்கீங்க? எல்லா ஆம்பிளையையும் சொல்லலை. உன்னப் போல பொறுக்கிங்களுக்குச் சொல்றேன்.''

''நிறுத்து இதுவரைக்கும் பேசினதே போதும். பேசி எனர் ஜியை வேஸ்ட் பண்ணாத, வா டைம் ஆகுது.''

படக்கென எழுந்து நின்றாள்.

''தொட்ட, நடக்கறதே வேற.''

''என்னாடி பண்ணுவே?'' அவனும் எழுந்தான்.

''கத்தி ஊரக் கூட்டுவேன். மானத்தை வாங்குவேன்.''

''மெறட்டுறியாடி.''

''நான் 'டா' சொல்ல நேரம் ஆகாது.''

''இப்ப என்னதான் சொல்ற?''

''ஊருக்குத்தான் நாம புருஷன் பொண்டாட்டி. இந்த ரூமுக் குள்ளே இல்லை.''

''கன்னி கழியாம சாகணும்னு உனக்கு விதி இருந்த நோ அப்ஜெக்ஷன். எந்தப் பொண்ணையும் நான் விருப்பம் இல்லாம தொட்டதில்லை. காச விட்டெறிஞ்சா கியூவில நிப் பாளுங்க.''

''பாலுக்கும் கள்ளுக்கும் நிறம் ஒண்ணுதான். வித்தியாசம் ரொம்ப அதிகம்.''

''ஏய்... டயலாக் அடிக்காத.''



''இல்லை.. உன்னை மாத்திக் காட்றேன். மீரா... மீரான்னு என்னை சுத்த வைக்கிறேன்.''

''சினிமாவுக்குத்தான் இந்த மாதிரி சவால். எதார்த்தமான வாழ்க்கைக்கு ஒத்து வராது.''

''மாத்திக் காட்டறேன்.''

''உன்னைப் பார்த்தா பரிதாபமா இருக்கு. நீ தோத்துப் போயிடுவ. ஆழ்ந்த அனுதாபங்கள். பத்து வயசுலேயே சிகரெட் குடிச்சவன் நான்.''

''சேலஞ்ச்'' கட்டை விரலை உயர்த்தினாள் மீரா.

சத்தம் போட்டு சிரித்த கண்ணன், ''சேலஞ்ச்'' என்று சிரித் தான்.

''இது நமக்குள்ளதான் இருக்கணும்.''

''இதிலேயாவது ஒத்துமையா இருப்போம்.''

''குட் நைட்'' மீரா பெட்ஷீட்டை கீழே விரித்தாள்.

''ஏய்... மேலேயே படு. என்னோட சுண்டு விரல் கூட உம்மேலே படாது. எத்தனை ரவுண்டுல இருந்தாலும் வாக்கைக் காப்பாத்துபவன் நான்.''

பெட்ஷீட்டை எடுத்து கட்டிலுக்கு வந்தவள், ''இப் யூ டோண்ட் மைண்ட்?'' என்றாள்.

''எஸ்.''

''உதட்டுக்கு மேலே இருக்கும் உங்க மீசை அழகா இருக்கு'' சொல்லி விட்டு அவனுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டாள். படுத்தவளை இரண்டு நிமிடம் முழுமையாகப் பார்த்தவன், சொன்ன வாக்கைக் காப்பாற்ற முடியுமா? என யோசிக்கத் தொடங்கினான்.

பிரச்சினைக்குரிய இருவரும் உறங்கத் தொடங்க, மரகதமும், கிரிஜாவும் மனம் தவிக்க விழித்து இருந்தனர். விடியும் போது விபரீதம் விளையும் என்று மரகதம் மட்டும் அறிந்து இருந்தாள். அதைப் பார்க்க தான் இருக்க மாட்டோம் என்ற நம்பிக்கையில்லை.

கிரிஜா கூறிய உண்மையைக் கேட்டு மரகதம் தவித்துப் போனாள். உயிருக்குயிராய் வளர்த்த கண்மணி பாழாகப் போகிறதே என்ற எண்ணம் அவளை வாட்டி வதைத்தது. சந்தோஷமாக வளர்த்து, அவள் விரும்பியதை எல்லாம் செய்து, மகிழ்ச்சிக் கோலத்திலேயே என்றும் பார்த்த நம்மகள் வாழ்நாள் முழுதும் கண்ணீர் வடித்து வாழும் நிலை வந்து விடுமோ என்று கலங்கினாள்.

மறுநாள் காலையில் உடல்நிலை சரியில்லாது படுத்தவள் ஒரு வாரத்தில் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உயிரை விட்டாள். மீரா எவ்வளவு ஆறுதல் சொல்லியும் தன் சந்தோஷத்திற்கு குறைவில்லை என்று கூறியும் மரகதம் உயிர் பிரியும் வரை அவள் வார்த்தைகளை நம்பவே இல்லை.

## 3

**அன்பு அன்னைக்கு**
**என் வயிறு நிறைந்ததா என்ற கவலை!**
**ஆசைத் தந்தைக்கு**
**ஆஸ்தி நான் சேர்ப்பேனா என்ற கவலை!**
**தங்கமான தங்கைக்கு**
**என் தனிமை பற்றிய கவலை!**



**உனக்கு மட்டும் ஏனடி**
**என் உயிர் பற்றி கவலை?**
**அதுதான் உன்னிடம்**
**பாதுகாப்பாய் இருக்கிறதே!...**

மூன்று மாதங்கள் சுலபமாக உருண்டோடியது. மரகதம் இறந்து எண்பத்தி எட்டு நாட்கள். மீரா அழக்கூட இல்லை. ஸ்தம்பித்து நின்றாள். கண்ணன்தான் ஆடிப் போய் விட்டான். எதிர்பார்க்காத ஒன்று. கிரிஜா மட்டுமே தலையில் அடித்துக் கொண்டு கதறினாள். அவசரப்பட்டு ஆத்திரப் பட்டு தான் சொன்ன உண்மைகள், அந்தத் தாயின் உயிரைப் பறித்து விட்டதே என்ற குற்ற உணர்வில் கூனிக் குறுகி நின்றவளைத் தேற்றியதே மீராதான். தனக்காக இருந்த ஒரே ஒரு ரத்த சம்பந்தத்தையும் தலை முழுகி விட்டு, புகுந்த வீடு புறப்பட்டாள், அந்தப் பூவை. கத்தி இல்லாமல் சத்தம் இல்லாமல் அந்த வீட்டில் ஒவ்வொரு நாளும் ஒரு யுத்தமே நடந்து கொண்டு இருந்தது. நம்மிடம் அன்பாக இருப்பவரையே நாம் அடிக்கடி கவனிப்பதில்லை. ஆனால் எதிரியை ஒவ்வொரு வினாடியும் உற்றுப் பார்க்கின்றோம். இதற்கு மீராவும் கண்ணனும் விதிவிலக்கா என்ன? ஒருவரைப் பற்றி மற்றவர், விரல் நுனியில் விஷயங்களை வைத்திருந்தார்கள். பத்து வருடம் குடும்பம் நடத்திய தம்பதிகள் கூட இந்த அளவு ஒருவரைப் பற்றி மற்றவர் தெரிந்து வைத்திருப்பார்களா என்றால் கஷ்டம்தான்!

வழக்கம்போல் ஏழு மணிக்கு எழுந்து, தன் வேலைகளை முடித்துக் கொண்டு பேருக்கு சாப்பிட்டோம் என்ற சாப்பாட்டோடு தன் ஹீரோ ஹோண்டாவை உறும வைத்துப் புறப்பட்டான் கண்ணன். மாமியாரைத் தவிர கொழுந்தன், மாமனார் புறப்பட்டுப் போய் அரை மணிக்கும் மேலாகி விட்டது.

சமையல் சாமான்களை வேலைக்காரியிடம் பொறுக்கிப் போட்டு விட்டு டவலோடும், சேலையோடும் பாத்ரூம் நுழைந்த மீரா, வெளிவர இருபது நிமிடங்கள் ஆகியது. முடியை தூக்கி இறுக்கிக் கட்டி உச்சியில் அழகான உருண்டையான கொண்டை. வெளிர் நீல நிற பூனம் சேரி. அவள் உடலை உருவி விட்டது போல் வழிந்து தொங்கியது. தோளில் கிடந்த துண்டில் மீண்டும் ஒரு முறை முகம் துடைத்தவள், ஈரம் உதறி அதைக் கொடியில் போட்டு ஹாலுக்குள் வந்தாள்.

கனமான சரீரத்தோடு எதிரேயே மாமியார் நின்று கொண்டு இருப்பதைப் பார்த்ததும் அவள் இதழில் கோடாக ஒரு புன்னகை மலர்ந்தது.

''மீரா.''

நின்றவள், திரும்பினாள், புன்னகை மாறாமல்.

''சொல்லுங்கம்மா'' என்றாள்.

''சாப்பிட்டியா?''

''இல்லம்மா. இனிமேல்தான்.''

''டிபன் போட்டுகிட்டு என்னோட பக்கத்துல வந்து சாப் பிடறியா?''

எதற்கு என்று கேட்கத் தோன்றினாலும் அன்பான மாமி யார், அம்மா என்று அழைக்கத் தோன்றும், அழைத்துக் கொண் டிருக்கும் நெகிழ்ச்சியான உறவு. எதிர்த்து கேட்க வாய் வர வில்லை. தலையை ஆட்டிக் கொண்டு கிச்சனில் நுழைந்த வள், திரும்பி வரும்போது, தட்டோடும், சுடச்சுட ஆவி பறக்கும் நான்கு தோசை, சாம்பார், சட்னியோடும் வெளிப் பட்டாள். நேராக மாமியாரின் அருகில் வந்து அமர்ந்தவள், தட்டைக் கீழே வைத்து விட்டு தண்ணீரும் எடுத்து அருகில் வைத்துக் கொண்டு சம்மணம் இட்டு அமர்ந்து தோசையைப்



பிட்டு வாயில் வைக்கும்போது, நிமிர்ந்து அவளைப் பார்த் தாள்.

''நீ சந்தோஷமா இருக்கியாம்மா?'' நெத்தியில் அடித் தாற்போல், எந்தவித சுத்தி வளைத்தலும் இல்லாமல் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற மாதிரியான கேள்வி.

வாயில் போன தோசைத் துண்டு, அவள் கையிலேயே இருந்தது. புரியாமல் பார்த்தாள்.

''இந்த வீட்டுல சந்தோஷமா இருக்கியா மீரா?''

சிரித்தாள்.

''எனக்கென்னம்மா குறை?''

''எந்தக் குறையும் இல்லையா?''

''இல்லம்மா. அம்மா இறந்த கவலைகூட உங்க மூலம் தீர்ந்து போச்சு.''

''பொய் சொல்லாதம்மா. குடும்ப வாழ்க்கையில பழம் தின்று கொட்டை போட்டு, மரமாக வளர்ந்தவ நான் என்னால சீக்கிரம் உணர்ந்திட முடியும்.''

''.........''

''நீயும் கண்ணனும் சந்தோஷமா இல்லைன்னு நினைக் கிறேன்.''

''இல்லையே, அப்படி ஏதும் இல்லையே. சந்தோஷம்னு நீங்க எதைச் சொல்றீங்க?''

''மீரா. நான் பொண்ணைப் பெத்து வளர்க்கல. ஆனா, பொண்ணு! அத்தைன்னு கூப்புட்ற என்னை, வாய் நிறைய அம் மான்னு கூப்பிடும் போதெல்லாம் இந்த அடி வயிறு எல்லாம் கலங்குதுடியம்மா. எங்கிட்ட பொய் சொல்லாத, என்னோட

புள்ளை நல்ல புள்ளை இல்லைன்னு எனக்கு நல்லாத் தெரியும்.''

''............''

மீராவின் கண்ணுக்குள் லேசாக உப்பு நீர் சுரக்கத் தொடங்கியது.

''சந்தோஷமா இருக்கிற புருஷன், பெண்டாட்டிக்கும், நடிக்கிற புருஷன் பெண்டாட்டிக்கும் வித்தியாசம் ரொம்ப அதிகம்மா.''

''......''

''உங்களுக்குள்ளே இருக்கிற விஷயத்தை நான் கேட்கக் கூடாதுதான். நீ என்னை அத்தைன்னு கூப்பிட்டு இருந்தீன்னா நான் கொஞ்சம் தயங்கி இருப்பேன்.''

''........''

''சொல்லும்மா. மனசுக்குள்ளேயே வச்சிருக்காத. உடம்பு போயிடும். சந்தோஷத்தைப் பங்கு போட்டுக்கிட்டா ரெட்டிப் பாகும். துக்கத்தை பங்கு போட்டுகிட்டா பாதி குறையும். எம்புள்ளை குடிகாரன்னு நல்லாத் தெரியும். அவனை வளர்த்த விதத்துல நான் என்ன தப்பு பண்ணினேன்னு எனக்கே தெரியல. அவன் குடிக்க ஆரம்பிச்சப்ப எல்லாம் எனக்குத் தெரியாதும்மா. மொடா குடிகாரனா மாறினப்பதான் தெரியும்.''

''.........''

''உன்னோட பிரச்சினையை தீர்த்து வைப்பேன்னு நான் சொல்லலை. ஆனா, இந்த வழியில போனா சரியா இருக்கும்னு சொல்ற வயசும், அனுபவமும் எனக்கு இருக்கு மீரா.''

மீராவின் கையில் இருந்த தோசைத் துண்டு, விரல்களின் பலகீனத்தில் தட்டிலேயே விழுந்தது. பற்றிப் படர குச்சோ,



மரமோ கிடைக்காத முல்லைக் கொடிக்கு அழகான பந்தலே கிடைத்த சந்தோஷம்! சந்தோஷம் அதிகமானாலோ, துக்கம் அதிகமானாலோ, கோபம் அதிகமானாலோ அழுகை ஒன்று தான் இறக்கும் வழி. சத்தம் இல்லாமல் கண்களில் நீர் வழிந்தோடத் தொடங்கியது. சாம்பாரில் நனைந்த அவள் விரல்கள் ஈரம் காய்ந்து மாமியாரின் சேலைத் தலைப்பை முறுக்கிக் கொண்டு இருந்தது.

''சொல்லும்மா'' சுருக்கம் விழுந்த மாமியாரின் கைகள், அவள் கன்னம் தடவியது. அந்தக் கைகளை அப்படியே தன் கன்னத்தோடு அழுத்திக் கொண்ட மீரா...

சொல்லத் தொடங்கினாள்.

தன் திருமணம்,

திருமணத்திற்கு முன் கண்ணன் பற்றிய முழு விவரம்.

முதலிரவில் நடந்த சவால், இப்போது ஒவ்வொரு நாளும் நடக்கும் அமைதிப் போர், அத்தனையையும் அழுகையோடும் தேம்பலோடும் கொட்டித் தீர்த்தாள்.

எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்ட கண்ணனின் தாய் கமலம்...

''நீ இந்த அளவு முட்டாளா இருப்பேன்னு நான் எதிர் பார்க்கல.''

''அம்மா...''

''ஆமா, கல்யாணத்துக்கு முன்னாடி இவனைப் பற்றிய அத்தனை உண்மை தெரிஞ்சும் நீ எடுத்த முடிவுல உன்னோட அம்மா மேலே உனக்கிருந்த அக்கறை, கல்யாணத்துக்கு பின்னால தெரிஞ்சா என்ன பண்ணுவோம்னு சிந்திச்ச விவேகம், திருத்த முடியும்னு நினைச்ச நம்பிக்கை, நம்மை மீறி

என்னதான் நடக்கும் என்கிற தைரியம். இப்ப உங்கிட்ட இல்லைன்னு தோணுதும்மா.''

''.........''

''அன்பால சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை. அதுவும் மனைவியோட முந்தானைக்கு வலிமையும், சாதிக்கிற திறமையும் ரொம்ப அதிகம். தாயோட தாய்ப்பாலை விட மனைவியோட கண்ணீருக்கு சக்தி அதிகம்.''

மீரா பேசாமலேயே கமலத்தைப் பார்த்தாள்.

''குடும்பத்துல சவாலா? நீ ஜெயிச்சிட்டா பரவாயில்லை. அவன் ஜெயிச்சிட்டா? சகஜமா அவங்கிட்டே சாதிக்க வேண்டியதை, சவால் விட்டு சாதிக்க நினைக்கிறியே முடியுமா?''

''தப்பு பண்ற அவர்கிட்டே என்னை அடிமையா இருக்கச் சொல்றீங்களா?''

''இல்லம்மா, பொம்பளைங்க அடிமையா இருக்கிறதே எதுக்குத் தெரியுமா? புருஷனை அடக்கி ஆளத்தான்.''

''.......'' ஒன்றும் புரியாமல் பார்த்தாள்.

''விலகி இருந்து என்னத்த சாதிக்கப் போற நீ?''

''.........''

''நீங்க ரெண்டு பேரும் விலகி இருக்கிறது வெறுப்பையும், கோபத்தையும், பிரிவையும் அதிகப்படுத்துமே தவிர, பண்றது தப்புன்னு புரிய வைக்காது. இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்து விடல், இந்த ஒண்ணே முக்கால் வரியிலேயே உன்னோட விஷயம் அடங்கிப் போச்சி.''

''அன்பால அவரைத் திருத்த முடியும்னு நினைக்கிறீங்களா?''



''நிச்சயமா முடியும்.''

''எப்படி? எனக்கு எதுவும் புரியலையே.''

''இது புத்திசாலித்தனம்.''

''..........''

''என்னோட பிள்ளை கெட்ட பிள்ளைன்னு நல்லாவே எனக்குத் தெரியும் மீரா. ஆனா, எவ்வளவு கெட்டவனா இருந்தாலும் அவனுக்குள்ளேயும் ஈரம் இருக்கும். அந்த மாதிரி ஒரு நல்ல பழக்கம் என் பிள்ளைகிட்டே இருக்குன்னா, அது தன்னால யாரும் கஷ்டப்படக் கூடாதுன்னு நினைக்கிறதுதான். தன்னால அடுத்தவங்களுக்குத் தொந்தரவு இருக்கக் கூடாதுன்னு தன்னோட வேலையைத் தானே இழுத்துப் போட்டுக்கிட்டு செய்வான். அடுத்தவங்க கஷ்டப்படக் கூடாதுன்னு நினைக்கிறவன், தன்னால தன் பொண்டாட்டி கஷ்டப்படறான்னு தெரிஞ்சா தாங்க மாட்டான்.''

''எனக்குப் புரியலம்மா.''

''அவனுக்காக நீ வாழறங்கறதை, நீ புரிய வைக்கணும். உன்னோட துக்கமும் சந்தோஷமும் அவனாலதான்னு தெரிஞ்சிக்கணும்.''

''அவர் மாறுவார்னு எனக்குத் தோணலை.''

''கல்லை எறிஞ்சி பார்ப்போம். மாங்காய் விழுந்தால் நல்லதுதானே.''

''எனக்கு நம்பிக்கை இல்லம்மா.''

''எனக்காகம்மா, அவனை நெருங்கிப் பாரு. அவன் மனசுல என்னதான் இருக்குன்னு தெரிஞ்சிக்க முயற்சி பண்ணு.''

''      ''

''உன்னோட அருமையை அவன் தெரிஞ்சி, அதுல கொஞ்ச நாள் வாழ்ந்துட்டானா உனக்காக எதையும் விட்டுக் குடுப்பான்.''

''சரிம்மா. உங்களுக்காக, உங்க திருப்திக்காக முயற்சி பண்றேன்.''

கமலம் மீராவை ஆசையோடு பார்த்து, ''உன்னால முடியும்'' என்றபடி தன் நீர் வழியும் கண்களுக்குள் அவள் உருவத்தை நிரப்பி, கண்களை மூடி உள்ளுக்குள் அழுத்திக் கொண்டாள். மெல்ல எழுந்த மீரா... எதுவும் சாப்பிடாமல் கொண்டு வந்த தட்டு, தண்ணீர் எல்லாவற்றையும் கிச்சனில் வைத்துவிட்டு தங்கள் அறைக்கு வந்து கதவை சாத்திக் கொண்டாள். அப்படியே படுக்கையில் சரிந்தாள். உடலைத் திருப்பி பேனை வெறித்தபடி கண்களைச் சுழல விட்டாள்.

கண்ணனின் பர்சனல் காட்ரேஜ் பீரோ கண்ணில் பட்டதும் சில வினாடிகள் யோசித்தாள். எழுந்து பீரோவைத் திறந்தாள். இதுநாள் வரை அதில் என்ன இருக்கின்றது என்று கூட அவளுக்குத் தெரியாது. மேலிருந்து கீழாக பார்வையை ஓட விட்டவள் இரண்டாவது அறையில் இருந்த கறுப்பு நிற சூட்கேசை பார்த்ததும் வெளியே எடுத்தாள். கண்ணன் சூட்கேசை சாதாரணமாகவே லாக் பண்ணி இருந்தான். சூட்கேசை கட்டில் மேல் போட்டவள், திறந்து உள்ளே ஆராய்ந்தாள். அவனுடைய சர்ட்டிபிகேட்ஸ், சில டைரிகள், பில்டிங் பிளான் பேப்பர்ஸ் மட்டும் இருந்தது.

அவனுடைய சர்ட்டிபிகேட்டை எடுத்துப் பார்த்தாள். திரும்ப அதை ஃபைலிலேயே வைத்தாள். ஒவ்வொரு டைரியையும் பிரித்துப் பார்த்தாள். கற்புக் கெடாமல் பளிச் என அத்தனையும் சிரித்தது. எதுக்கு இத்தனை டைரி? மனதிற்குள்ளேயே திட்டிக் கொண்டு சூட்கேசை மூடி பீரோவில்



வைத்து இழுத்து சாத்தினாள். சிறிது நேரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. குழம்பித் தவித்தாள்.

தான் இறங்கி வருவதை எப்படி எடுத்துக் கொள்வான் என்று கணிக்க முடியாமல் கலங்கினாள். முதல் முறையாக கண்ணனுக்காக இரவு எப்போது வரும் என்று காத்திருக்கத் தொடங்கினாள்.

இரவு ஒன்பது மணி.

கண்ணன் கைலிக்கு மாறி படுக்கையில் சரியும்போது, மீரா படுத்தபடி ஏதோ ஓர் புத்தகத்தில் ஆழ்ந்து இருப்பதைப் பார்த்தான்.

''மீரா.''

''ம்...''

''உன்னோட கைக்கு கீழே என்னோட பெட்ஷீட் இருக்கு பாரு. எடுத்துக் குடு'' என்றான்.

திரும்பி அவனைப் பார்த்தவள், அலட்சியமாக எடுத்துக் கொடுக்கும்போதுதான் கவனித்தாள். அவன் வலது கையில் போடப்பட்டு இருந்த கட்டை. உடனே எழுந்து புத்தகத்தை மடித்து டேபிள் மேல் போட்டவள், அவன் கையைப் பற்றி, ''என்னது காயம்?''

கண்ணன் மீராவை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான்.

''தொடாம கேளு'' கைகளை எடுத்துக் கொண்டான்.

''நீங்கதான் என்னைத் தொடக்கூடாது. நான் தொடலாம்.''

''......'' கண்களை விரித்து அவளைப் பார்த்தான்.

''காயம் எப்படி பட்டுச்சி?''

சொல்லக்கூடாது என்று சைத்தான் மனது ஓதினாலும், அவனையும் அறியாமல் சொல்ல விரும்பினான்.

''சைட்டுக்குப் போகும்போது.''

''எந்த சைட்டுக்கு.''

''மயிலாப்பூர்.''

''எப்படி?''

''செங்கல் கையில விழுந்துடுச்சி.''

''ரொம்பக் காயமா?'' அவளையும் மீறி அவள் குரலில் ஏக்கமும் வேதனையும் ஏற்பட்டது.

''இல்லை.''

அதற்கு மேல் எப்படிப் பேச்சைத் தொடங்குவது என்று இருவருக்குமே தெரியவில்லை.

அடுத்த சில வினாடிகளுக்கு அமைதி நீடித்தது.

இடது கையால் சிகரெட் பாக்சை எடுத்து சிறிது கஷ்டப் பட்டு ஒரு சிகரெட்டை உருவி இதழில் செருகிக் கொண்ட வன், லைட்டரை எடுத்து அழுத்தும்போது அது பிடிவாதமாக மக்கர் செய்தது. இரண்டு மூன்று முறை அழுத்தி அழுத்திப் பார்த்தான். வெறுத்துப் போய் தீப்பெட்டியில் பற்ற வைக்க முயற்சி செய்தான். அவன் தடுமாறிக் கொண்டிருப்பதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த மீரா, அவன் கையில் இருந்த தீப்பெட்டியை வாங்கி, ஒரு குச்சியை உருவி, பற்ற வைத்து இதழில் துடித்துக் கொண்டிருந்த சிகரெட்டிடம் காட்டினாள்.

புகையை உள்ளிழுக்கத் தோன்றாமல் அவளையே பார்த் தான்.



''என்ன பாக்கறீங்க? எதுக்கு தீக்குச்சி கிழிச்சேன்னா, நீங்க கஷ்டப்படறத பார்க்க முடியல அதான். அன்பைத் தான் நாம பங்கு போட்டுக்க மாட்டோம். கஷ்டத்தை ஷேர் பண்ணிக்கலா மில்ல.''

மின்னல் அடித்தாற்போல் கண்ணுக்குள் அதிர்ச்சி! ''புக் ஏதோ படிச்சிகிட்டு இருந்தியே, படிச்சிட்டியா லைட் ஆப் பண் ணட்டா?'' சன்னமாக முனகினான்.

''ஓ.எஸ்.'' சொல்லிவிட்டு, அவனுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டாள்.

இருவரின் கண் இமைகளும் மூடாமல் கருவிழியை தழுவித் தழுவி எழும்பிக் கொண்டு இருந்தது. இருட்டில் இலக்கில் லாத ஒரு புள்ளியை இருவருமே தேடிக் கொண்டு இருந் தார்கள். கண்ணனுக்கு மீராவின் இந்த அணுகுமுறை புதிது. அவனைப் பற்றி அவள் அக்கறைப்படுவதை விரும்பத் தொடங் கினான். நிமிடங்கள் கரையத் தொடங்கின. பனிரெண்டு மணி அடித்து ஓயும்போது மெதுவாக எழுந்தாள் மீரா. நைட் லேம்ப் சுவிட்சை தட்டினாள். கண்ணனை திரும்பப் பார்த்தாள். சீரான தூக்கத்தில் இருப்பது போல் தென்பட்டது. கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவள், தண்ணீர் தொட்டியில் போட்டு வைத்திருந்த அந்த மஞ்சள் நிற அழகான ரோஜாவை எடுத்துக் கொண்டு, தங்கள் அறைக்கே திரும்பி, கதவைத் தாழிட்டாள். பின்பு அன்று மதியம் கடை கடையாக ஏறி இறங்கி, பார்த்துப் பார்த்து வாங்கிய ட்ரஸ் பார்சலையும் எடுத்து டேபிள் மேல் வைத்துக் கொண்டாள். கண்ணனுக்கு அருகில் சென்று,

''கண்ணன்...''

''.......''

''கண்ணன்...''

விழியோடு கொக்கி போட்டுக் கொண்டிருந்த உறக் கத்தை பிரிக்கக் கஷ்டப்பட்டான்.

''கண்ணன்'' அவன் தோளைத் தட்டினாள்.

''ம்...'' முனகலோடு இமைகளைப் பிரித்துப் பார்த்தான். எதிரே மஞ்சள் ரோஸோடு மீரா. எதுவும் புரியவில்லை.

''விஷ்யூ மெனிமோர் ஹேப்பி ரிட்டன்ஸ் ஆப் த டே!'' ரோஸை அவனிடம் நீட்டினாள். அப்போதும் புரியாமல் அவளையே பார்த்தான்.

''நாளைக்கு உங்க பர்த்டே. நான்தான் முதல்ல விஷ் பண்ணனும்னு தோணிச்சி. அதான் இந்த நடுராத்திரி தொந் தரவு... சாரி.''

''எனக்கு பர்த்டேவா...'' கேள்வி முடிச்சிட எழுந்து உட் கார்ந்தான்.

''ஏன் தெரியாதா?''

''மறந்து போய் பல வருஷம் ஆகுது.''

''ஓ.கே. பாஸ்ட் ஈஸ் பாஸ்ட். இனிமேல் ஒவ்வொரு பர்த் டேயும் கொண்டாடனும். நோ! கொண்டாடறோம்!''

''.......''

பேசிக் கொண்டே ட்ரஸ் பார்சலை எடுத்து அவனிடம் நீட்டி னாள்.

வாங்காமலேயே ''என்னது?'' என்றான்.

''பிரிச்சுப் பாருங்க.''

''என்னால பிரிக்க முடியாது.''

''ஓ... ஐயம் சாரி...'' சொல்லிக் கொண்டே பார்சலைப் பிரித்து அவனிடம் நீட்டினாள். கருப்புக் கலரில் பேண்ட், சந்தன கலரில் டீ சர்ட்.



''உங்க பர்த்டேக்கு என்னோட சின்ன ப்ரசண்ட்.''

''ட்ரஸ்தான் வாங்கித் தருவியா மீரா. உன்னோட மனசைத் தர மாட்டியா?'' அவனுக்குள் எண்ண வரிகள் ஓடின. வெளி வரத் துடித்த அந்த வார்த்தைகளைக் கஷ்டப்பட்டு விழுங்கிக் கொண்டான்.

''நல்லா இருக்கா?''

''நைஸ்'' மீராவின் மென்மையான அணுகுமுறை, ஸ்நேக மான பரிவுக்குப் பின்னால் கோழையாகிக் கொண்டிருந் தான். பனித்துளியாக அவனுக்குள் அவள் இறங்கிக் கொண் டிருக்கின்றாள் என்று அவனுக்கே தெளிவாகத் தெரிந்தது. பல வருடங்களுக்குப் பின்னால் தன் பர்த்டே நினைவிற்கு வந்தது. இனிமேல் சின்னச் சின்ன விஷயங்களையும், விசேஷங்களையும் இவளுக்காக, இவளின் அன்பைப் பெறு வதற்காகவாவது கொண்டாட வேண்டும் என்று தோன் றியது. எவ்வளவு நேரம் அப்படியே பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்து இருந்தான். அவள் சவாலில் ஜெயித்து விடு வாளோ என்று அச்சப்பட்டான். நினைவு திரும்ப மீராவைப் பார்த்தபோது, அவள் சலனம் இல்லாமல் தூங்கிக் கொண்டு இருந்தாள். அவனைச் சலனப்படுத்தி விட்டு!

அவள் கொடுத்த ரோஸ் அவனைப் பார்த்து சிரிப்பது போல் தோன்றியது. அவனும் சிரித்தான். ரோஜாவை மீரா வாக நினைத்து ஒவ்வொரு இதழாக வருடி விட்டான். டீ சர்ட், பேண்ட் இரண்டையும் விரித்துப் பார்த்தான். நல்ல கலர், நல்ல காம்பினேஷன். அந்தத் துணிகளை அப்படியே மார்பில் போட்டுக் கொண்டான். இத்தனை நாட்களாக இந்த அன்பை இழந்து விட்டோமோ? அவள் பரிசாகக் கொடுத்த துணிக்கே இவ்வளவு சக்தி என்றால், அவளே இந்த நெஞ்சில் கிடந்தால் எவ்வளவு சந்தோஷம் கிடைக்கும். கணக்குப் போடத் துவங்கினான்.

"மீரா! ஐ லவ் யூ... நான் உன்னைக் காதலிக்கிறேன். உங் கிட்டே தோத்துட்டேன்' என்று வாய் விட்டுக் கத்த வேண்டும் போல் இருந்தது.

'இவளை ஏன்டா காதலித்தாம்' என்று பின்னால் வருத் தப்படப் போவதை அப்போது அவன் அறிந்திருக்கவில்லை.

# 4

**உன் விழியை மீனுக்கும்**
**இதழைக் கனிகளுக்கும்**
**பற்களை முத்துக்களுக்கும்**
**ஒப்பிட்டுப் பார்த்த நான்...**
**உன் இதயத்தை**
**மட்டும் ஏன்**
**இரும்போடு ஒப்பிட மறந்தேன்?**
**ஒருவேளை**
**நான் காந்தம் என்பதாலா!**

மனோஜ்குமார் நர்சிங்ஹோம்.

கொட்டை எழுத்துக்களில் தங்கப்பூச்சு வாங்கியது போல், மிகப் பெரிய கட்டிடத்தின் மேல் பித்தளை எழுத்துக்கள் மின்னிக் கொண்டு இருந்தன. இரண்டு வருடத்திற்கு முன்பு ரிப்பன் வெட்டிய ஹாஸ்பிடலாக இருந்தாலும், ஸ்கட் வேகத்தில் புகழ் அடைந்து கொண்டு இருந்தது. இந்தப்



புகழுக்கு முழுக் காரணம் மனோஜ்குமார் என்ற இருபத்தி ஏழு வயது அழகான இளைஞன். மனோதத்துவத் துறையில் பி.எச்.டி. முடித்தவன். தலையில் கிரவுண்ட் விழுந்த டாக்டர் களால் முடியாத பைத்தியக்கார கேஸ்களை, மிக எளிதாக வசப்படுத்தும் திறமை கொண்டவன். ஒரு சில சமயங்களில் நோயாளிகளைக் கூட்டி வரும் இளம் பெண்கள் இவன் மேல் காதல் கொண்டு பைத்தியமாவதும் உண்டு. எந்த நேரமும் சிரித்துக் கொண்டிருக்கும் முகம். மறந்துகூட கடுமையான வார்த்தையை வெளியிடாத குணம். சுருள் சுருளான கருமை நிறைந்த அடர்ந்த முடி. சிவந்த அவன் முகத்தில் கம்பளிப் பூச்சாய் அடர்ந்த மீசை. நுனி நாக்கில் புரளும் ஆங்கிலம். தேவைப்பட்டால் கவிதையும் சொல்லும் திறன் கொண் டவன். இப்போதே இவனுக்காக எங்கோ பிறந்து இருக்கும் பெண் மேல் பொறாமை கொண்டவர்களின் லிஸ்ட் மிக நீளம்.

இவ்வளவு பெருமை வாய்ந்த இந்த ஹாஸ்பிடல் முன்பு வெள்ளை நிற மாருதி 1000 வழுக்கிக் கொண்டு நின்றது. இரண்டு விநாடிகளுக்கு பின்பு டிரைவர் சீட்டில் இருந்து இறங்கினான் மனோஜ்குமார். ஒயிட் அண்ட் ஒயிட் இறங்கி நடக்கும்போது இடது கை ஃபுல் ஹேண்டை இழுத்து விட்டு நடந்தான். முழங்கைக்கு மேல் சார்ட் ஏறியபோது, அங்கிருந்த கருப்பு மச்சம் வெளி உலகைப் பார்த்துச் சிரித்தது.

ரிசப்ஷனில் இருந்த அனைவரும் எழுந்து நின்றார்கள். சிரித்தபடியே தலையை ஆட்டிக் கொண்டு விடுவிடுவென உள்ளே நடந்தான். தன் அறைக்கு வந்து குஷன் சீட்டில் தன் உடலை சரித்து உட்கார்ந்தவன் பஸ்ஸரில் கை வைத்தான். பஸ்ஸர் வெளியே ஒலித்ததுமே அவனுடைய பர்சனல் பி.ஏ. உள்ளே நுழைந்தான்.

"எஸ். டாக்டர்."

''நைட் ட்யூட்டி யார் பார்த்தா?''

''டாக்டர் காமினி.''

''கிளம்பிட்டாங்களா?''

''இப்போ ஒரு பத்து நிமிடத்துக்கு முன்னாலதான் போறாங்க.''

''ம்...'' நெற்றியில் கை வைத்துத் தேய்த்தவன், மீண்டும் தொடர்ந்தான்.

''அந்த சிவா எதுவும் பிரச்சினை பண்ணலையே?''

''இல்ல டாக்டர். நைட் ஃபுல் டோசில் இன்ஜக்ஷன் போட்டதும் தூங்கிட்டார்.''

''வெல். யூ கேன் கோ.''

பி.ஏ. தயங்கி நின்றதும், என்ன என்பது போல் ஏறிட்டுப் பார்த்தான்.

''உங்க சிஸ்டர் போன் பண்ணியிருந்தாங்க சார்.''

''மதுவா?'' கண்களில் வியப்பைத் தேக்கி கேட்டான்.

''ஆமாம் சார். காலையில பஸ்ட் பிளைட்டுக்கு கிளம்பி வராங்கலாம்.''

''ஓ காட்...! பிளைட் எத்தனை மணிக்கு மீனம்பாக்கத்துக்கு வரும்?''

''பதினோரு மணிக்கு டாக்டர்.''

''மதுஸ்ரீயைப் பார்த்து இருக்கீங்க இல்ல?''

''எஸ். டாக்டர்.''

''ரிசீவ் பண்ணி ஹாஸ்பிடலுக்குக் கூட்டிகிட்டு வந்துடறீங்களா?''



''எஸ் டாக்டர்.''

''மிஸ்டர் ராஜன்.''

''எஸ் டாக்டர்.''

''ஐ ஸ்பெஷலிஸ்ட் சேதுமாதவனோட போன் நம்பர், பர்சனல் போன் நம்பர் குடுத்துட்டுப் போங்க.''

''நான் போன் பண்ணி லைன் குடுக்கறேன் சார்.''

''நோ! நோ! நானே பண்ணிக்கிறேன்.''

ஐ ஸ்பெஷலிஸ்ட் சேது மாதவனோட போன் நம்பரைக் கொண்டு வந்து கொடுத்து பி.ஏ. நகர்ந்ததும் தன் டெலிபோனை அருகே இழுத்தான் மனோஜ்குமார். ஒவ்வொரு நம்பராக டயல் செய்து, ரிசீவரை காதில் பொருத்தி ஐந்து வினாடிகளுக்கு பின் எதிர் முனையில் போன் எடுக்கப்பட்டது தெரிந்ததும்,

''ஹலோ'' என்றான்.

''எஸ்.''

''மிஸ்டர் சேதுமாதவன் ப்ளீஸ்.''

''எஸ் ஸ்பீக்கிங்.''

''சார்! ஐ'ம் மனோஜ்.''

''மனோதத்துவ டாக்டரா?''

''எஸ்'' சிரித்தான்.

''நல்லா இருக்கியா?''

''என்ன அங்கிள், யாரையோ விசாரிக்கிற மாதிரி விசாரிக்கிறீங்க?''

''மை டியர் பாய்! தப்பா எடுத்துக்காத, உங்கப்பா எப்படி இருக்கான்.''

''உங்க பிரண்டுதானே அங்கிள், உங்களுக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவுதான் எனக்கும் தெரியும்.''

''ஓ.கே. எதுக்கு போன் பண்ண?''

''மது லாஸ்ட் மண்டே அமெரிக்காவில் இருந்து ரிட்டன் ஆயிட்டா. தனியா நர்சிங்ஹோம் ஓபன் பண்றதைவிட, ஒரு சீனியரான ஐ ஸ்பெஷலிஸ்ட் கிட்ட பிராக்டீஸ் பண்ணினால் நல்லா இருக்கும்.''

''ஓ.கே. நான் என்ன பண்ணணும்?''

''இந்த மெட்ராசில் விரல் விட்டு எண்ணக்கூடிய டாக்டர்ஸ்ல நீங்க தான் நம்பர் ஒன். மது உங்ககிட்டேயே பிராக்டீஸ் எடுத்தா நல்லா இருக்கும்.''

''மது எப்போ வரா?''

''இன்னைக்கு வந்திடுவா. நான் நாளைக்கு அவளோட உங்க ஹாஸ்பிடல் வர்றேன்.''

''ஓ.கே. ஆல்வேஸ் வெல்கம் மை பாய்.''

''தேங்க் யூ அங்கிள்'' போனை வைத்துவிட்டு நிமிரவும், இண்டர்காம் ஒலிக்கவும் சரியாக இருந்தது.

''எஸ்.''

''டாக்டர், உங்களைப் பார்க்க கணேசன் தம்பதி வந்திருக்காங்க. உங்களை அர்ஜென்டா பார்க்கணும்கறாங்க.''

''ஓ.கே. வரச் சொல்லுங்க. தனித்தனியா'' போனை வைக்கும் முன், ''எக்ஸ்க்யூஸ்மி சார்.''



''எஸ்...''

''உங்க பிரெண்ட் கண்ணன் வந்திருக்கார்.''

''கண்ணனா?'' மனோஜின் குரலில் வியப்பு தெறித்தது.

''........''

''பஸ்ட் கண்ணனை அனுப்புங்க. பத்து நிமிடம் கழிச்சி பேஷண்ட்டை அனுப்புங்க.''

''ஓ.கே. டாக்டர்.''

சில நொடிகளுக்குப் பின் டோரைத் தள்ளிக் கொண்டு தன்னை ஏ.சி. ரீங்காரமிடும் அந்த அறைக்குள் திணித்த போதே...

''வாங்க சார், இப்போதான் ஞாபகம் வந்துதா?'' சேர் விட்டு எழுந்த மனோஜ், கண்ணனை கைப்பற்றி உட்கார வைத்தான்.

''ஸ்மோக் பண்ணலையே?'' சந்தேகமாக கேட்டான், மனோஜ்.

''இல்லடா. உன்னைப் பார்க்க வரும்போது ஸ்மோக் பண்ண மாட்டேன், டிரிங்ஸ் யூஸ் பண்ண மாட்டேன்னு தெரியாதா?''

''இல்ல, சும்மா கேட்டேன். ஹவ் ஈஸ் யுவர் மேரேஜ் லைப்?''

ஒன்றும் பேசாமல் சிரித்தான் கண்ணன்.

''என்னடா சிரிக்கிற?''

''ஏன் சிரிக்கக் கூடாதா?''

''நீ எப்பவும் சிரிச்சிகிட்டுதான் இருக்க. உன்னால மீரா சிரிக்கிறாங்களா?''

விலுக்கென நிமிர்ந்து பார்த்தான் கண்ணன். கண்ணனின் தோளைப் பிடித்த மனோஜ்,

''தப்பா சொல்லலடா கண்ணா. இதுவரைக்கும் நீ எப்படி இருந்தாலும் நல்லது கெட்டது உனக்கு மட்டும்தான். இப்போ அப்படி இல்ல.''

மனோஜின் கையைத் தன் தோளில் இருந்து எடுத்து விட்ட கண்ணன்,

''உங்கிட்டே கொஞ்சம் பேசணும் மனோ.''

''கொஞ்சம் என்ன, நிறைய பேசு.''

அந்த நேரம் கதவு லேசாகத் தட்டப்படும் சத்தம் கேட்டது.

''டேய், பேஷண்ட்ட கவனிச்சிடறேன். இந்த மேகசின படிச்சுகிட்டு இரு'' சொல்லிவிட்டு மனோஜ்,

''எஸ்.கமின்.''

கதவைத் திறந்து கொண்டு முப்பத்தைந்து வயது நிரம்பிய ஒருவர் உள்ளே நுழைந்தார்.

''குட்மார்னிங் டாக்டர்.''

''குட்மார்னிங் மிஸ்டர் கணேசன். ப்ளீஸ் பீ சீட்டட்'' சேரைக் காட்டினான்.

தன்னை சேருக்குள் அமர்த்திக் கொண்டவர், கண்ணனைத் தயக்கமாகப் பார்த்தார். அதை கவனித்த மனோஜ்.

''இவர் என்னோட பிரெண்ட். பிரச்சினை ஒன்றும் இல்லை. நீங்க சொல்லுங்க'' என்றான் கண்ணனை கவனித்தபடியே...

''என்னோட ஒய்புக்கு ஹிஸ்டீரியா இருக்குமோன்னு சந்தேகமா இருக்கு.''



''ஹிஸ்டீரியா?''

''எஸ் டாக்டர்.''

''எப்படி நடந்துகிறாங்க?''

''திடீர் திடீர்னு எமோஷனல் ஆகுறா. கூச்சல் போடறா. அவளை ஏமாத்திட்டதா புலம்பறா. அந்த டைம் கையில் கிடைக்கிற பொருள் எல்லாம் கிரிக்கெட் பேட்கிட்டே கிடைச்ச பால் மாதிரிதான். குழந்தைங்க பயப்படறாங்க.''

''என்ன ஏஜ்?''

''தர்டி டூ.''

''எப்பவுமே இப்படித்தான் நடந்துகிறாங்களா?''

''இல்ல டாக்டர். வீக்லி ஒன்ஸ் ஆர் டூ டைம்ஸ் அப்படி நடந்துகிறா. தென், அப்படி நடந்துகிட்டத நினைச்சி ஃபீல் பண்ணி அழறா. அதனால உங்ககிட்டே ட்ரீட்மெண்ட் எடுத்துக்கணும்னு அழைச்சிகிட்டு வந்திருக்கேன்.''

சிறிது நேரம் அமைதியாக இருந்த மனோஜ், ''ட்ரீட்மெண்ட் எடுக்கிற அளவிற்கு பிராப்ளம் இருக்காதுன்னு நினைக்கிறேன். உங்க வொய்ஃபை வரச் சொல்லுங்க. நீங்க வெளியே வெயிட் பண்ணுங்க.''

அவர் வெளியே சென்று, மனைவியை உள்ளே அனுப்பும் முன்,

மனோஜ் கண்ணனிடம் அவசர அவசரமாகப் பேசினான்.

''கண்ணா, நீ செக்கப் ரூம்ல இருக்கிற சேர்ல போய் உட்கார். வர லேடி உன்னைப் பாத்து தயங்கலாம்.''

தலையை ஆட்டிக் கொண்டே, கையில் இருந்த புத்தகத்தோடு செக்கப் ரூமிற்குள் நுழைந்தான்.

''வாங்க மேடம்'' மனோஜ் அந்தப் பெண்ணோடு பேசுவது கண்ணனுக்கு மிக துல்லியமாகக் கேட்டது.

''உட்காருங்க.''

அந்தப் பெண் மிகவும் தயக்கமாக சேர் நுனியில் அமர்ந்தாள்.

''யுவர் குட் நேம் ப்ளீஸ்.''

''கல்பனா'' குரல் சன்னமாக ஒலித்தது.

''எந்த வருஷம் உங்களுக்கு மேரேஜ் ஆச்சி?''

''1983.''

''குழந்தைங்க இருக்காங்களா?''

''பொண்ணு ஒண்ணு, பையன் ஒண்ணு.''

''அத்தை மாமா இருக்காங்களா?''

''இறந்துட்டாங்க.''

''உங்க ஹஸ்பெண்ட் எங்கே வேலை பார்க்கிறார்?''

''வேலைக்குப் போகல. பிசினஸ் பண்றார்.''

''தினமும் காலையில எத்தனை மணிக்குக் கிளம்பிப் போவார். எத்தனை மணிக்கு திரும்பி வருவார்?''

''காலையில ஆறு, ஏழு மணிக்கெல்லாம் கிளம்பிப் போவாங்க. நைட் பத்து பதினோரு மணிக்குத்தான் திரும்பு வாங்க. ஒரு சில நாள் ரொம்ப லேட் ஆகும்.''

''உங்களைக் கொடுமைப்படுத்துறாரா?''

''அப்படி எல்லாம் இல்லை'' வேகமாகத் தலையாட்டி மறுத்தாள்.



''குடிப்பாரா?''

''ஐய்யய்யோ இல்ல.''

''சிகரெட்.''

''எப்பவாவது.

''சரி. அந்த சேர்ல போய் உட்காருங்க'' என்று அந்த அறையிலேயே இடது ஓரத்தில் பலவித ஒயர் கனெக்ஷனோடு போடப்பட்டு இருந்த சேரை சுட்டிக் காட்டினான். அவள் சென்று உட்கார்ந்ததும் எல்லாவற்றுக்கும் இணைப்பைக் கொடுத்து, ஜீரோ வாட்ஸ் பல்ப் ஒன்றை மட்டும் போட்டு விட்டு, மத்த எல்லா சுவிட்சையும் ஆஃப் பண்ணினான். கல்பனா கண்களை மூடிக் கொண்டு சாய்ந்து இருந்தாள். சிரிஞ்ச் வழியாக ஏறியிருந்த மருந்தை அவள் புஜத்தில் இறக்கினான்.

அவள் அன்கான்ஷியசிற்குச் சென்றதும்,

''கல்பனா'' அழைத்தான் மனோஜ்.

''ம்.'' மெலிதாக முணகினாள்.

''நான் பேசுவது கேக்குதா?''

''ம்.''

''உங்க பெயர் கல்பனாதானே?''

''ஆமா.''

''உங்களுக்கு அடிக்கடி கனவு வருதா?''

''ம்.''

''எப்படி வருது?''

''இந்த பூமிக்கு ஏதோ ஆபத்து வந்திடுது. எல்லாரும் பயந்து ஓட்றாங்க. என்னோட கணவரும் ஓட்றார். குழந்தைகளும் ஒரு பக்கம் ஓடுது. என்னைக் காப்பாத்துங்க காப்பாத்துங்கன்னு கத்தறேன். ஆனா யாருமே காப்பாத்தல. நான் மட்டும் தனியா இருட்டுல நின்னுகிட்டு இருக்கேன். எனக்கு யாருமே இல்லை'' சன்னமாக விசும்பத் தொடங்கினாள், கண்களில் கண்ணீர் வழிந்தது.

தன் ஹேண்ட் கர்ச்சீப்பால் அவள் கண்களைத் துடைத்த மனோஜ்...

''இல்லை, உங்களுக்கு எல்லாமே இருக்காங்க.''

''பொய் சொல்றீங்க. எனக்கு யாருமே இல்லை. கல்யாணம் ஆன புதிதில் அவர் ரொம்ப பாசமா இருந்தார். ஆனா இப்பல்லாம் கொஞ்ச வருஷமா என்னைக் கண்டுக்கிறதே இல்லை. என்னிடம் சரியாப் பேசறதே இல்லை. பிசினஸ் பிசினஸ்னே அலையறார்.''

''யாருக்காக?''

''எனக்காகவும், என்னோட குழந்தைக்காகவும்ன்னு சொல்றார்.''

''உண்மைதானே?''

''பொய். அவருக்கு எம்மேல பாசம் இல்லை. வெட்கத்தை விட்டுச் சொல்றேன். அவர் என்னைக் கிஸ் பண்ணியே நாலரை வருஷம் ஆகுது.''

சிறிது நேரம் மவுனமாக இருந்த மனோஜ்.

''கல்பனா.''

''ம்.''



''பூமி இப்போது நடுங்குது?''

''ஆமாம். நடுங்குது. என்னோட வீடு ஆடுது.''

''எல்லோரும் பயந்துகிட்டு ஓட்றாங்களா?''

''ஆமா.''

''அங்க பாருங்க, வலது பக்கமா உங்களைக் காப்பாத்த உங்க கணவர், குழந்தைகளைத் தூக்கிட்டு ஓடி வர்றார்.''

''ஆமாம். எங்கிட்டதான் வர்றார்.''

''அவர் கூட தப்பிச்சிப் போயிடுறீங்களா?''

''ம்.''

''உங்களக் காப்பாத்த உங்க கணவர் இருக்கார். நீங்க தனி ஆள் இல்ல. குழந்தைங்க இருக்காங்க.''

''ஆமாம். எனக்கு எல்லாரும் இருக்காங்க. எல்லாரும் இருக்காங்க.''

கொஞ்சம் கொஞ்சமாக அவள் சுதி குறைந்தது.

மனோஜ் சேரில் இருந்து எழுந்தான். எல்லா லைட் சுவிட்சையும் தட்டினான். முகத்தை துடைத்துக் கொண்டு சேரில் வந்து அமர்ந்தவன், பஸ்ஸரில் கை வைத்தான்.

''சார்.''

''மிஸ்டர் கணேசனை உள்ளே வரச் சொல்லுங்க.''

உள்ளே நுழைந்த கணேசன், கல்பனா சேரிலேயே மயங்கி இருப்பதை கவனித்துப் பதறினான்.

''சார்... கல்பனா...''

''பயப்படாதீங்க. மயக்கம்தான். கொஞ்ச நேரத்துல சரியாயிடும். நீங்க உட்காருங்க.''

கணேசன் பதட்டத்தோடு அமர்ந்தார்.

''உங்க மனைவியை உங்களுக்குப் பிடிக்குமா?''

''என்ன டாக்டர் இப்படிக் கேட்குறீங்க? அவ மேல உயிரையே வச்சிருக்கேன். அவளுக்காகவும், குழந்தைகளுக்கா கவும்தானே இப்படி ஓடி ஓடி உழைக்கிறேன்.''

''பணம் மட்டும் மனைவியைத் திருப்திப்படுத்தும்னு நினைக்கிறீங்களா?''

''டாக்டர்.''

''சொல்லுங்க.''

''அவளுக்குத் தேவையான எல்லாத்தையுமே வாங்கிக் குடுத்து இருக்கேன். பங்களா மாதிரி வீடு, படகு மாதிரி காரு... எல்லாம் இருக்கு.''

''ம்'' தலையாட்டிய மனோஜ். ''என்ன என்ன இல்லைன்னு நான் சொல்லட்டுமா? அன்பு, பரிவு, பாசம், அரவணைப்பு...''

''டாக்டர்.''

''வெத்துக் காகிதம்! அந்தப் பணத்துக்காக உங்க அறிவு, டைம், திறமை எல்லாத்தையும் இழந்து அதுக்காக இப்படி ஆலா பறக்குறீங்களே? ரத்தமும், சதையும், நரம்பு, உணர்ச்சி யும் உள்ளே கற்பனையையும் கனவையும் தேக்கி வச்சிக்கிட்டு காத்து இருக்காங்களே, உங்க மனைவி, குழந்தைங்க, அவங்களுக்காக எவ்வளவு நேரம் செலவு பண்ணி இருக் கீங்க?''

''.........''

''முத்தம், கட்டிப்பிடித்தல் எல்லாம் குழந்தை பெத்துக்க மட்டும் இல்லை. கணவனும் மனைவியும் அன்பை வெளிப் படுத்திக்க மிக முக்கியமான நல்ல வழி.''



''டாக்டர்.''

''நீங்களும் உங்க மனைவியும் சந்தோஷமா இருந்து, பீச், சினிமா அப்படி இப்படின்னு போயி நாலரை வருஷம் ஆகுதா?''

மனோஜ் குரலில் வெளிப்பட்ட கடுமை, கணேசனுக்கு லேசான கலக்கத்தைக் கொடுத்தது.

''ஆமாம்.''

''பொண்டாட்டிங்கறவ என்ன மெஷினா? உங்களுக்கு இருக்கிற அத்தனையும் அவளுக்கும் இருக்கு. உங்க ஆத்திரம், கோபம், சந்தோஷம்... எல்லா உணர்ச்சிகளையும் எங்க வேணா போய் தீர்த்துக்கலாம். சிகரெட் குடிக்கலாம். தண்ணி அடிக்கலாம் எல்லாம் செய்யலாம். பாவம் அவங்க என்ன செய்வாங்க? சிகரெட் குடிக்க முடியுமா? தண்ணி போட முடியுமா? இல்ல...''

''டாக்டர்! அவ நிலைமை?''

''இதே நிலை தொடர்ந்தால் பைத்தியத்தில் தான் போய் நிக்கும்.''

''டாக்டர்.''

''லிசன் மிஸ்டர் கணேசன், மனைவிங்கறவ உறிஞ்சிட்டு தூக்கிப் போடற ஸ்ட்ரா இல்லை. உயிரோட கலக்கிற உறவு. தனக்கு யாருமே இல்லையேங்கற பயம், அவங்களோட தனிமை, இந்த அளவுக்கு கொண்டு வந்து விட்டுடுச்சி. ஒரு ஆணுக்கு கல்யாணம் ஆனா, அவன் அப்பா, அம்மா, அண்ணன், தம்பி யாரையும் பிரியறது இல்லை. பட் பெண்ணைப் பொருத்தவரைக்கும் ஆப்போசிட். அப்படிப் பட்டவளை எப்படியெல்லாம் பார்த்துக்கணும்னு நீங்கதான் பிளான் பண்ணணும். பணம் மட்டும் வாழ்க்கைக்கு நிறைவு

தராது. உங்க மனைவிக்கு இப்போ தேவை என்னன்னா உங்களோட அன்பு, பரிவு, பாசம், அரவணைப்பு. உங்க மனைவிகிட்டே இப்போ நீங்க வச்சி இருக்குற டிஸ்டென்ஸ குறைங்க.''

''நான் என்ன பண்ணனும்னு சொல்லுங்க டாக்டர்?''

''வெல். ஒரு மாதத்துக்கு உங்க பிசினஸெல்லாம் மூட்டைக் கட்டி வச்சிட்டு, முடிந்தால் குழந்தைகளோட ஊட்டி, கொடைக்கானல்னு நல்ல இடங்களுக்கு டூர் போங்க. உங்க அன்பை உங்களுக்குள்ளேயே வச்சிக்காம வெளிப்படுத் துங்க.''

''தேங்க்யூ டாக்டர்'' நெகிழ்ந்தான்.

''இட்ஸ் ஆல் ரைட். நீங்க ஒரு வெல் எஜுகேட்டட் பிசினஸ்மேன். உங்களை மாதிரி இருக்கிறவங்களே மனை வியைப் புரிஞ்சிக்காம அவங்களோட உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கலன்னா, படிக்காதவங்க எப்படி இருப்பாங்க? ம்... யோசிங்க மிஸ்டர் கணேசன்.''

அதே நேரம் கல்பனாவிற்கு விழிப்பு தட்டவும், எழுந் திரிக்க எத்தனித்தாள்.

''மெதுவா எழுந்திரிங்க மேடம்'' மனோஜ் குரல் கொடுத் தான்.

எழுந்த கல்பனா, சேலையை ஒரு முறை சரி செய்து கொண்டு சோர்ந்த முகத்தில் புன்னகையோடு வந்தாள். கணேச னுக்கு அருகில் சேரில் வந்து உட்கார்ந்தாள். அவள் கையை ஆசையோடும், ஆதரவோடும், அன்போடும், கனிவோடும்... எல்லா உணர்வுகளையும் ஒன்று திரட்டி பற்றி அழுத்தினான்.

உடலில் அத்தனை நரம்புகளும் விழித்து, சந்தோஷ தாளம் போட கணேசனைப் பார்த்தாள், கல்பனா.



''தேங்க் யூ டாக்டர். பீஸ்...'' என்றான் கணேசன்.

''ரிசப்ஷன் பக்கத்துலேயே கேஷ் கவுண்டர் இருக்கும். கன்சல்டிங் பீஸ் மட்டும் கட்டிட்டுப் போங்க.''

''செக்கப் ட்ரீட்மெண்ட்...?'' தயங்கினான்.

''இவுங்களுக்கு ஒண்ணுமே இல்லையே. நார்மல். ஷீ ஈஸ் ஆல்ரைட். இவங்களுக்கு ட்ரீட்மெண்ட்டையும் நீங்கதான் தரணும். மெடிசனும் நீங்க தான் தரணும்'' என்று நமுட்டாச் சிரித்தான், மனோஜ்.

அவர்கள் இருவரும் விடைபெற்று வெளியேறியதும், மனோஜ் எழுந்து செக்கப் ரூமிற்குள் நுழைந்தான். கண்ணன் புத்தகத்தை மூடி விட்டு நகம் கடித்துக் கொண்டிருந்தான்.

''கண்ணா என்னடா பேசணும்? அடுத்த பேஷண்ட் வர்ற துக்குள்ளே பேசிடலாம்.''

எழுந்து நின்ற கண்ணன், மனோஜைப் பார்த்துச் சிரித் தான்.

''மனோ, உங்கிட்டே என்ன என்ன கேக்கணும்னு நினைச் சேனோ, அத்தனைக்கும் கணேசன், கல்பனா தம்பதிங்க மூலம் நீ பதில் சொல்லிட்ட. இப்ப நான் வீட்டுக்குப் போக ணும்.''

''டேய் என்னடா?''

''ஒண்ணுமில்லே. நான் வர்றேன்.''

''டேய்... மது இன்னைக்கு வராடா.''

''ஓ.கே. வந்தா வீட்டுக்கு கூட்டிக்கிட்டு வா. நான் அப் புறமா பார்க்கறேன்.''

CONNEMARA PUBLIC LIBRA

அவசரமாக வெளியேறினான் கண்ணன். 'நாம் ஒன்று நினைத்தால் கடவுள் ஒன்று நினைப்பான்' என்று தெரியாமல்!

# 5

**உன் பெயரை**
**என் இதயத்தில் எழுத**
**எடுத்த முயற்சி**
**அத்தனைக்கும் தோல்வி!**
**என் இதயமே உருகினாலும் பரவாயில்லை**
**பேனா முனைபட்டு!**
**உன் பெயர் காயம் பட்டுவிட்டால்**
**என்ற கலக்கம்தான்...!**

அந்த பஸ் ஸ்டாப் முன்பு நாலைந்து நபர்கள் மட்டும் நின்று கொண்டு இருந்தார்கள். கண்ணன் ஐந்து நிமிடமாக காலை மாற்றி மாற்றி கைகளுக்கு சொடுக்குப் போட்டும், தலையைக் கோதிக் கொண்டும் இருந்தான். அந்த வழியாக எந்த பஸ்சும் வருவதாகத் தெரியவில்லை. ஆட்டோ பிடிக்கலாமா? என்று யோசித்தவனுக்கு சிறிது தூரத்தில் ஒரு ஆட்டோ ஸ்டாண்ட் இருப்பது தென்பட்டது. துள்ளல் நடை யோடு விரைந்தான். மனம் முழுக்க சந்தோஷம். மனோ ஜிடம் எப்படிடா பேசுவது? என்று யோசித்துக் கொண்டு இருந்தவனுக்கு, 'செக்கப் ரூம்' போதும் உனக்கு ஞானம் கிடைக்க என்று மனோஜ் சொல்லாமல் சொல்லி விட்டான். இத்தனை வருடம் கழித்து, மீண்டும் புதியவனாகப் பிறந்



திருந்தான். மீராவை நினைக்கும்போதே அம்பிகை முன் னால் கைகட்டி, கண் மூடி நிற்கும் பக்தன் போல ஆனான்.

காதல்!

முதல் காதல்!

இந்த உலகத்தில் அவன் பிறந்து இன்றோடு 9865 நாட்கள் ஆகின்றன. ஆனால் இதுவரை காதல் என்ற உணர்வைக் கதை களிலும், படங்களிலும் பார்த்ததோடு சரி. அனுபவித்தது இல்லை. தன்னைக் கட்டிக் கொண்டவள், இப்படி காதல் உணர்வை ஏற்படுத்திக் கலங்கடிப்பாள் என்று கனவில் கூட நினைக்கவில்லை. மூச்சு விடும் நேரத்தில் கூட முப்பது முறை மீராவின் பெயரை உச்சரித்துப் பார்த்தான். நாலு பெக் ராவா அடிச்சா கூட 'மீரா'ங்கற பேர்ல இருக்கிற கிக், போதை இதுவரை ஏற்பட்டது இல்லை.

ஆட்டோவில் ஏறியவன், ஒரு போட்டோ ஸ்டுடியோ வின் பெயரை உச்சரித்து விட்டு, மீண்டும் கண்களை மூடி கண்ணுக்குள் மீராவை தேடத் தொடங்கினான். அவள் விஷ் பண்ணி, பிரசண்ட் பண்ணியதை தப்பாக எடுத்துக் கொண் டோமோ என்று கூடத் தோன்றியது. எப்படியோ இருக்கட்டும். அவள் என் மனைவி. எனக்குச் சொந்தமானவள். நான் தோற்று விட்டேன் என்று கூறி விடுவோம். 'ஐ லவ் யூ! டூ யூ லவ் மீரா?' என்று கேட்டு விடுவோம்.

'அதற்கு உன் குடி, சிகரெட், கெட்ட பழக்க வழக்கங்களை நிறுத்த வேண்டுமே கண்ணா' அவன் மனசாட்சியே கேள்வி கேட்டது. அடுத்து யோசிக்கும் முன் ஆட்டோ சடன் பிரேக் அடித்து நின்றது.

ஸ்டுடியோ வந்திருந்ததால் இறங்கினான். மீட்டரைப் பார்த்து மீட்டருக்கு மேல் பத்து ரூபாயை ஆட்டோக்காரன்

கைகளில் திணித்து விட்டு ஸ்டூடியோவிற்குள் நுழைந்தான். சர்ட் பாக்கெட்டில் இருந்து கார்ட் சைஸ் போட்டோ ஒன்றை வெளியே எடுத்து...

''இந்த போட்டோவை டேபிள் மேல் வைக்கும் முறையில் கண்ணாடி போட்டுக் கொடுக்க முடியுமா?'' கேட்டான்.

ஸ்டூடியோக்காரன் சிறிது நேரம் பின்னந்தலையை சொறிந்து விட்டு...

''எப்போ சார் வேண்டும்?'' என்றான்.

''இன்னும் ஐந்து நிமிடத்தில்...''

''சார்ஜ் அதிகமாகும் சார்.''

''இட்ஸ் ஓ.கே.''

போட்டோவைக் கையில் எடுத்துக் கொண்டு ஸ்டூடியோக்காரன் உள்ளே நுழைந்ததும், கண்ணன் அங்கு போடப்பட்ட சேரில் அமர்ந்தான். ஐந்து நிமிடம் என்றவன் அரை மணி நேரம் கழித்து பிரேம் போட்டு கொண்டு வந்தான்.

பதினோரு மணிக்கு வீடு வந்து சேர்ந்து இருந்தான்.

மீராவும், அவன் தாயும் சமையல் அறையில் மும்முரமாக இருந்தார்கள். அவர்களை ஓரக்கண்ணால் பார்த்து விட்டு, தங்கள் அறைக்குள் நுழைந்தவன், டேபிள் மேல் அந்த போட்டோவை வைத்தான். சர்ட்டை கழட்டி ஹேங்கரில் மாட்டி விட்டு, கைலிக்கு மாறி, அறையை விட்டு வெளியே வந்தான். கிச்சன் ரூமில் நிலைப்படியில் கைகளை இருத்திக் கொண்டு நின்றான். குக்கரில் விசிலைப் பொருத்தி விட்டுத் திரும்பிய மீரா, கண்ணனைப் பார்த்து நெற்றி சுருக்கினாள். அவன் தாயும் திரும்பிப் பார்த்தாள்.



''என்னடா?''

''லேசா தலைவலிக்குது! காபி வேணும்!'' சொல்லிவிட்டு ஹாலில் கிடந்த சோபாவில் தன்னை சரித்துக் கொண்டு கண்களை மூடினான்.

''மீரா அதிசயமா இன்னைக்குத்தான் காபி கேட்டு இருக்கான். நீ காபிய போட்டு குடு. நான் சமையலைப் பார்த்துக்கிறேன்.''

''சரிம்மா'' சொல்லிவிட்டுப் பாலையும் பில்டரில் இருந்த காபி டிக்காசனையும் கொஞ்சம் கலந்து எடுத்து மிதமான சூடாகும் வரை ஆற்றி விட்டு, ஹாலில் கண்ணன் இருப்பதை கவனிக்காமல் தங்கள் அறைக்குள் நுழைந்தாள். நுழைந்ததும் முதலில் கண்களில் பட்டது, டேபிள் மேல் இருந்த போட்டோ. தனக்குள் ஏற்பட்ட நடுக்கத்தை கட்டுப்படுத்திக் கொண்டு, கையில் இருந்த காபியை அந்த டேபிள் மேலேயே ஒரு நுனியில் வைத்தாள். உடல் முழுவதும் 1000 வோல்ட் மின்சாரம் பாய்ந்த அதிர்வு. 'ஓரத்தில் வைத்து பார்த்துக் கொண்டு இருந்த தன் தாயின் போட்டோவை இவ்வளவு அழகாக பிரேம் செய்து வைத்திருப்பது யார்? என்னைவிட என் தாயை அதிகமாக நேசிக்கும் இந்த வீட்டு ஜீவன் யார்?

கண்ணனா?

என் கணவனா?

காதல் என்ற உணர்வை என்னுள் தட்டி விட்ட அந்தக் கள்வனா?'

ஒன்றும் புரியவில்லை. ஆனால் அவளுக்குள் ஒரு மீட்டல், மெல்லிய அனுபவித்து தெரிந்து கொள்ள வேண்டிய இழையான ஒரு உணர்வு எழுந்தது. கசிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு போட்டோவிற்கு கீழே படபடத்துக் கொண்டு இருக்கும் துண்டு சீட்டை எடுத்தாள்.

''மீரா! ஐ லவ் யூ... டு யூ லவ் மீ...?''

கண்ணன்!

உன் கண்ணன்!

கண்ணனின் கிறுக்கலான சாய்ந்த எழுத்துக்கள். பேப்பரைக் கைகளில் எடுத்தாள். நெஞ்சோடு வைத்துக் கண்களை மூடும் போது, அவனே அங்கு இதழ் பதித்தது போன்ற உணர்வில், 'ச்சீய்!' என்று சிணுங்கினாள். சிணுங்கியவள் அதோடு நில்லாமல் குங்குமம் கொஞ்சம் எடுத்து தன் இதழ்களில் லிப்ஸ்டிக் போடுவது போல அழகாகத் தடவினாள். பின்பு தன் இதழை அந்தத் துண்டு சீட்டில் கண்ணன் கையெழுத்து இட்ட இடத்தில் வைத்தாள். குங்குமச் சிவப்பு அதில் இதழ் வடிவில் ஒட்டியதும், டேபிள் மேலேயே வைத்து, காபி டம்ளரை அதன் முனையில் வைத்தாள். பின் தன் இதழை முந்தானை யில் அழுத்தி துடைத்துக் கொண்டாள். அறையை விட்டு வெளியே வந்தவள், நேராக ஹாலுக்கு வந்து கண்ணனின் அருகில் நின்றாள். அவன் இமையை மூடிக் கொண்டு கரு விழியை உருட்டிக் கொண்டு இருந்தான். அவன் காதைப் பிடித்துத் திருகி எழுப்ப கைவிரல்கள் பரபரத்தது. கட்டுப் படுத்திக் கொண்டாள்.

தான் வந்திருப்பதை தெரிவிக்க சன்னமாக செருமினாள்.

அவன் கண்களைத் திறக்கவில்லை. ஆனால் மூடிய விழி களில் அவன் கருவிழி உருள்வது தெரிந்தது. மெல்ல அவன் முகம் அருகே குனிந்தாள். அவள் மூச்சுக் காற்று அவன் முகத்தில் மோதியது.

''கண்ணன்.''

''உம்...''

''எழுந்திரிங்க.''



தயக்கமாக எழுந்தான்.

''காபி.''

கை நீட்டியவனிடம், ''ரூம்க்கு வாங்க. எடுத்துகிட்டு வர்றேன்'' என்றாள். தலையை தாழ்த்திக் கொண்டு எழுந் தான். அவள் ஹாலிலேயே நின்று கொண்டு இருப்பதை கவனித்து, முதலில் அந்த போட்டோவை எடுத்து பீரோவில் வைக்க வேண்டும். அவள் நல்ல மூடில் இருக்கின்றாள் என்று நன்றாகத் தெரிந்த பின்புதான் இந்த போட்டோவை எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று எண்ணியபடியே தங்கள் அறைக் கதவை திறந்து, உள்ளே நுழைந்தவனுக்கு காபி டம்ளருக்கு கீழே துடிக்கும் பேப்பரின் வேகத்தை விட பல மடங்கு அதிகமாகத் துடித்தது. ஓடாத குறையாக அருகில் சென்று பேப்பரை உருவினான். கண்ணன் என்ற கையெழுத்தின் மேல் சிவந்த நிறத்தில் மீராவின் இதழ் அச்சு. இதயம் விம்ம... கண்களில் நீர் சுரக்கட்டுமா? வேண்டாமா? என்பது போல் தயார் நிலையில் நிற்க... அந்த காகிதத் துண்டை, பட்டுத் துணியை பத்திரமாய் எடுப்பது போல் எடுத்து தன் இதழ் மேல் அந்த குங்கும அச்சை இணைக்க நினைத்து, முகமும் கையும் ஒன்றை ஒன்று நெருங்கும்போது கதவருகில் நிழலாட திடுக் கிட்டுத் திரும்பினான்.

சத்தம் கேட்காமல் கதவைத் திறந்து உள்ளே வந்து கதவின் மேலேயே சாய்ந்து கொண்டு கைகள் இரண்டையும் மார் பிற்கு குறுக்கே கட்டிக் கொண்டு அவனையே பார்த்தபடி நின்றிருந்தாள், மீரா.

எச்சிலை விழுங்கிக் கொண்டவன்,

''அது... வந்து... இந்த... போட்டோ...'' தடுமாறினான்.

''எங்கே எடுத்தீங்கன்னோ, எப்படி எடுத்தீங்கன்னோ நான் கேக்கவே இல்லையே.''

"எனக்கு... வந்து... எப்படி..." முகத்தில் இல்லாத வேர்வையைத் துடைத்துக் கொண்டான்.

"எப்படி?" பற்கள் தெரிய சிரித்தாள்.

"நான் கெட்டவன்தான். அயோக்கியந்தான். ஆனா அடுத்தவங்களைக் கண்ணீர் விடும் அளவுக்கோ, இல்லை வருத்தப்படும் அளவுக்கோ கஷ்டத்தைக் குடுக்கிற மனசாட்சி இல்லாதவன் இல்லை. உங்கம்மா இறந்தப்பவே என் மனசுல பலமா அடி விழுந்துடுச்சி. தன்னோட பொண்ணை இப்படி ஒருத்தனுக்கு குடுத்துட்டோமே என்கிற கவலைதான் உங் கம்மாவோட உயிரைக் குடிச்சிடுச்சி. 'நான் கர்ப்பமா இருக் கேன்னு சொன்ன பொய்யையே உங்களால ஜீரணிக்க முடி யலையே, உங்களோட இத்தனை உண்மைகளை நான் எப் படித் தாங்கிக்க முடியும்னு' நீ கேட்ட கேள்வி... உன்னைக் கொஞ்சம் கொஞ்சம் விரும்ப ஆரம்பிச்சேன். ஆத்திரப்படத் தெரிஞ்ச எனக்கு அன்பை வெளிக்காட்டத் தெரியல மீரா. திரும்பிப் படுத்த எனக்கு, உன்னை தினம் தினம் நினைச்சிக் கிட்டு இருக்கேன்னு சொல்லத் தெரியல மீரா. பிடிவாதமா இருக்கத் தெரிஞ்ச எனக்கு, உன்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்லத் தெரியல மீரா. என்னோட உள்மனத் தவிப்பை எல்லாம் மீறி உங்கிட்ட தோத்துடக் கூடாதுங்கற வெறியும் இருந்துச்சி. பட் பட்..."

மீரா கதவில் சாய்ந்தவள் நகரவே இல்லை. அவன் மேலும் தொடரட்டும் என்று காத்திருந்தாள்.

"நேத்து நீ, சாதாரணமா கூட விஷ் பண்ணி, பிரசண்ட் பண்ணி இருக்கலாம். அது எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருந்தது தெரியுமா? அப்பவே வாய் விட்டு அழணும் போல இருந்துச்சி மீரா. ஆனா, உனக்கு முன்னாடி அழக் கூடாதுன்னு கட்டுப்படுத்திக்கிட்டேன். நான் மறந்து போன பர்த்டே! எனக்கு புடிச்ச கலர்ல டிரஸ், ஐ கான்ட் கண்ட்ரோல் மை ஃபீலிங்ஸ். எப்படியாவது எம்மனச சொல்லிடணும்னு முடிவு பண்ணினேன். நேரா சொல்றதை விட உம்மனசுக்குப் புடிச்ச மாதிரி சொல்லணும்னு நெனச்சேன். உனக்கு ரொம்ப புடிச்சவங்க உங்கம்மா அதான் இந்த வழி. நான் போட்ட சவால்ல தோத்துப் போயிருக்கலாம். அதைப் பத்தி எனக்கு கவலை இல்லை. உன்னோட அன்பு கிடைச்சா அது எனக்கு வெற்றிதான். மீரா! எம்மேல உனக்குக் கோபம் இருக்கலாம். தயவு பண்ணி என்னைப் புடிக்கலைன்னு சொல்லிடாதே. ரொம்பக் காலமா நான் தேடிக்கிட்டு இருக்கற வெளிச்சம் நீ."



மெதுவாக அவன் அருகே வந்தவள், அவன் கையில் இருந்த பேப்பரை வாங்கினாள். அவன் முகத்துக்கு நேராக அதைத் தூக்கிக் காண்பித்து சிறிது கூட யோசிக்காமல், இரண்டாக, நாலாக, எட்டாக, பதினாறாக கிழித்துக் கீழே சிதற விட்டாள். விழிகள் விரிய அதிர்ச்சியோடு பார்த்தான், கண்ணன்!

## 6

**என் பேனா முனைக்கும்**

**உன் விழியின் நுனிக்கும்**

**வித்தியாசம் இல்லை.**

**இரண்டுமே**

**இதயத்தையும்**

**பேப்பரையும் கிழித்துக் கொண்டுதான்**

**இருக்கின்றன...!**

"மீரா" கண்ணனின் வாயில் இருந்து வார்த்தைகள் வெளி வரவில்லை. உதடு மட்டும் அசைந்து, ஓசைக்கு பதில் காற்று தான் வெளிவந்தது. பிரம்மை பிடித்தவன் போல் அவளையே இமைக்காமல் பார்த்தான்.

அவன் பார்வையைச் சந்தித்த மீரா...

"எதுக்குப்பா இந்த காகிதம்? உங்களுக்கு மட்டும்தான் அந்த கற்பனை, மாற்றம், காதல்னு நினைக்கிறீங்களா? எனக்குள்ளேயும் கொந்தளிச்சுப் போய் கிடந்தது. உங்க மேல கோபம் இருந்தது, ஆத்திரம் இருந்தது உண்மைதான்... நாளாக நாளாக உங்க பார்வை எம்மேலே படாதான்னு ஏங்கத் தொடங்கினேன். சேர்ந்து வாழணும்னு விரும்பினேன். படிப்படியா உங்களை மாத்தணும்னு ஆசைப்பட்டேன். ஆனா நான் பொண்ணு வெளிப்படையா என்னால சொல்ல முடியல. திருந்தத் துடிக்கிற உங்க மனசை அறிஞ்சப்போ, எங்கம்மா மாப்பிள்ளை விஷயத்துல ஏமாந்துடலைன்னு முடிவு பண்ணினேன். நீங்க ரூம்க்கு வரும்போது, தூங்கற மாதிரி நடிச்சாலும், நீங்க படுத்ததும் உங்க முகத்தை கொஞ்ச நேரம் பார்த்துட்டுத்தான் தூங்குவேன். வெக்கத்தை விட்டுச் சொல்றேன், நேத்து பூ கொடுக்கும்போது பூ கொடுத்த கையை இழுத்து அப்படியே நெஞ்சோட அணைச்சிக்க மாட்டீங்களான்னு ஏங்கினேன். இந்தக் காகிதம் வேண்டாம் கண்ணன். மனசுக்குள்ளேயே இதுநாள் வரை கதறிக்கிட்டு இருந்தது போதும். எனக்கு நீங்க வேணும் கண்ணன். உங்க அன்பு வேணும். இந்த நெஞ்சிலேயே காலம் முழுவதும் உறங்கணும் கண்ணன். இந்த மீராவுக்கு இந்தக் கண்ணன் வேணும். இந்தக் கண்ணன் வேணும்..." வார்த்தைகள் சிதறி சிக்கித் துவண்டு விம்மலோடும், அழுகையோடும் வெளிப்பட்டு விழ... அப்படியே அவன் காலுக்கடியில் சரிந்து விழப்போனவளைத் தாங்கிப் பிடித்தான், கண்ணன்.



"மீரா! என்னம்மா... ஏய்... இங்க பார்... சிரி... ப்ளீஸ்மா சிரி."

கண்ணில் கண்ணீர் பெருக, அவள் அவனை நிமிர்ந்தே பார்க்கவில்லை. அவள் முகத்தை தூக்கி கண்ணீர்த் துளிகளைச் சுண்டி எறிந்தவன்.

"பாரு மீரா! என்னைப் பாரு... ஏய்... பாரு."

கண் இமைகளை சிரமப்பட்டு திறப்பது போல திறந்து அவனைப் பார்த்தாள்.

"எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?"

"எவ்வளவு?"

"இந்த உலகத்தை விடப் பெரிசு."

"உம்" அவன் கைகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு விலகி நின்றாள்.

"அம்மா தனியா சமைக்கிறாங்க."

"சமைக்கட்டும்."

"என்னடா காபி எடுத்துக்கிட்டு போனவ ஆளையே காணோம்னு, நினைப்பாங்க."

"நினைக்கட்டும். ஏன் நீ லேட்டுன்னு தெரிஞ்சா அம்மாவே சந்தோஷப்படுவாங்க."

"நிச்சயமா?"

"மீரா."

"ம்."

"இன்னைக்கு என்னோட பிறந்த நாள் மட்டும் இல்லை, நாம ரெண்டு பேரும் சேர்ந்து வாழத் தொடங்குகிற நாள்."

''ம்.''

''நான் இப்படி எல்லாம் மாறுவேன்னு நினைக்கவே இல்லை மீரா.''

''ம்.''

டேபிள் நுனியில் ஆள் காட்டி விரலால் கோலம் போட்டுக் கொண்டு இருந்தவளை நெருங்கி நின்றான்.

''என்ன நீ, எதுவும் பேச மாட்டேங்கற ம்... ம்...ன்னே சொல்ற. பயங்கரமா என்கிட்ட சண்டை போடுவியே, எதிர்த்துப் பேசவியே, அதெல்லாம் எங்கே காணோம்.''

''இனிமே சண்டை போட மாட்டேன்.''

''ஏன் மீரா?''

''போட்டவரைக்கும் போதும். இனிமே வேண்டாம்பா.''

''நீ கோபப்படலைன்னா ஒன்று சொல்லட்டா.''

''என்னப்பா'' குரலில் தேன் ஒழுகியது.

''நீ முதல்ல கோபப்பட மாட்டேன்னு சொல்லு.''

''மாட்டேன்'' சிரித்தாள்.

''நான் லாட்ஜில் ரூம் எடுத்து ரெண்டு மாசம் ஆகுது.''

''ம்.''

''மொதல்லாம் ராவாவே அடிப்பேன். ஆனா இப்போ சோடா கலந்து குடிச்சேன். அப்புறம் அளவைக் குறைச்சேன். இன்னும் குடிக்கிறேன். கொஞ்சமா. ஒரேயடியா என்னால விட முடியல மீரா.''

''ம்.''



''முதல்ல சிகரெட் பாக்கெட் கணக்கா காலியாகும். இப்போது நாலு மணி நேரத்துக்கு ஒரு சிகரெட். இதையும் போகப் போக குறைச்சிக்கிறேன்.''

''ம்.''

''பேசு மீரா.''

''நல்லவங்க நல்லவங்களா இருக்கிறது பெரிய விஷயம் இல்லை. ஆனா இவ்வளவு கெட்டப் பழக்கத்தையும் வச்சிக்கிட்டு, அதை விட்டுட்டு, மீராவுக்காக உங்க மீராவுக்காக வாழணும்னு நினைக்கறீங்க பாருங்க, இந்த ஒண்ணு போதும் எனக்கு காலம் முழுக்க உங்க காலடியில நான் கிடப்பேன்.''

''உன்னைத் தவிர மனசாலக்கூட ஒரு பொண்ணையும் தொட மாட்டேன்.''

''எதுக்குப் பொய் பேசறீங்க? உங்க மனசுதான் எங்கிட்டே இருக்கே. அதை மட்டும் என்னோட உயிரே போனாலும் கொடுக்க மாட்டேன். வேற ஒருத்தி நுழைய விடவும் மாட்டேன்.''

''மீரா! இந்த ஜென்மம் மட்டும் இல்லாமல் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் நாம பிரியக் கூடாது.''

மெலிதான சத்தம் கேட்கும் அளவிற்கு சிரித்தாள்.

''இந்த ஜென்மம் பத்தி பேசினால் ஓ.கே. அடுத்த ஜென்மமா? நம்புற மாதிரி பேசுங்க.''

''இல்ல மீரா. உன்னைத் தவிர வேற யார் என் மனசை நெருங்கினாலும் மனக் கதவை படக்குன்னு சாத்திடுவேன்'' அவள் தோள்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அவள் கண்ணுக்குள் ஊடுருவி தன்னைத் தேடினான்.

''என்னங்க?''

''ம்.''

''இன்னைக்கு நான் வாங்கிக் குடுத்த டிரஸ்சை போட்டுக் கிறீங்களா?''

''ஷ்யூர். வெளிய போலாமா மீரா.''

''ம்கூம்'' தலையாட்டி மறுத்தவள், ''வேண்டாம்'' என்றாள்.

''ஏன்?''

''நிறைய பேசனும்.''

''எப்போ?'' ஆசையோடு கேட்டான்.

''இன்னைக்கு, இன்னைக்கு நைட்.''

''நைட்ல போயா? இப்பவே பேசலாமே.''

''ம்கூம்... நைட்லதான். எப்படித் தெரியுமா? ஜீரோ வாட்ஸ் பல்ப் நம்ம ரூம்ல எரியனும். ஃபேன ரொம்ப கம்மியா வச்சிக்கனும். வாசமான ரெண்டு ஊதுபத்தி எரிஞ்சிகிட்டு இருக்கனும். டேப்ல வால்யூம் ரொம்ப கம்மியா வச்சி, பழைய காதல் பாட்டு போட்டுக் கேக்கனும்.''

''எந்த டைப் பாட்டு'' கிறங்கியிருந்தான் கண்ணன்.

''நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்... நாளோடும் பொழுதோடும் உறவாட வேண்டும்... அந்த மாதிரி சாங்ஸ்.''

''ம்... அப்புறம்.''

''ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்தபடி படுத்திருக் கனும். வாய் விட்டுப் பேசக்கூடாது. கண்ணால பேசனும்,



விடியற வரைக்கும் அப்படியே பாத்துக்கிட்டே இருக் கனும்.''

''ம்... இவ்வளவுதானா?'' சலித்துக் கொண்டான்.

''ஏன் புடிக்கலையா?'' கண்களில் ஏமாற்றம் கொப் பளித்தது.

''எல்லாம் சூப்பர்ப்... கடைசி வந்து சொதப்பிட்ட. நானா இருந்தன்னா என்ன பண்ணனும்னு நினைப்பேன் தெரி யுமா?''

''உஷ்ஷ் ஒண்ணும் சொல்ல வேண்டாம். அம்மா என்னமோ ஏதோன்னு நினைச்சிகிட்டு இருப்பாங்க. நான் வர்றேன்'' என்று திரும்பியவளின் கையைப் பிடித்து இழுத் தான்.

''இன்னைக்கு நைட் வரைக்கும் தாங்கற மாதிரி ஏதாவது குடு இல்லை ஏதாவது பேசிட்டுப் போ.''

உதடு சுழித்து கண்களை மூடித் திறந்தவள்,

''ஐ லவ் யூ'' சொன்னதோடு நில்லாமல், அவன் மீசையைப் பிடித்துத் திருகி, ''இந்த மீசையை எனக்கு ரொம்பப் பிடிக் கும்'' என்று கூறி... கதவைத் திறந்து கொண்டு சமையல் அறை நோக்கி சிட்டாய் பறந்தாள்.

கண்ணன் வெகு நேரம் கண்ணாடி முன்பு நின்று, தன் மீசையையே பார்த்தான். மீராவின் கைபட்ட அவன் மீசை மீதே அவனுக்குப் பொறாமையாக இருந்தது.

என்றும் இல்லாமல் ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. கண்ணனுக்கும், மீராவிற்கும் என்ன செய் கிறோம் என்றே முதலில் புரியவில்லை. ஒருவரை ஒருவர் பார்க்கும்போதெல்லாம் அசட்டுத்தனமாக சிரித்துக் கொண்

டார்கள். வாட்ச், வால்கிளாக் எல்லாவற்றிலும் டைம் மாற்றி இரவு 9.00 மணிக்கு திருப்பி பெருமூச்சு விட்டான், கண்ணன். இரவுக்காக இருவரும் காத்திருக்கத் தொடங்கனர்.

**மா**லை ஐந்து மணி. மனோஜ்குமார் நர்சிங்ஹோம்.

மனோஜ் எல்லா பேஷண்ட்டையும் பார்த்து முடித்து கொஞ்சம் தளர்வாக சேர் மேல் சாய்ந்திருந்தான். அந்த இடை வேளையில் கண்ணன் நினைவுக்கு வந்தான். கண்ணனை நினைத்துமே உதட்டில் புன்னகை அரும்பியது. நல்ல பிரெண்ட். வீட்டுக்குப் போய் ரொம்ப நாள் ஆகுது. பேசாம கண்ணனையும், மீராவையும் பார்த்துட்டு வரலாமா? யோசித்தவனுக்கு அதுதான் சரி என்று தோன்றியது. இனி மேல் டயம் இருக்கோ இல்லையோ? மதுவையும் கூட்டிக் கிட்டுப் போலாமா? வேண்டாம் ரெஸ்ட் எடுக்கட்டும். உடனே சேர் விட்டு எழுந்தான்.

அந்த நேரம் பார்த்து கதவு தட்டப்பட்டது.

''எஸ் கமின்.''

உடலாலும் உள்ளத்தாலும் தளர்ந்து போயிருந்த சிவா, உள்ளே நுழைந்தான். நடிகர் அரவிந்தசாமியை நினைவுபடுத் தும் முகம், நிறம், உருவம்... உயரம் மட்டும் கொஞ்சம் கம்மி. மழிக்கப்படாத இரண்டு வார தாடி.

மனோஜுக்குள் லேசான திடுக்கிடல். மறைத்துக் கொண்டு கவர்ச்சியாக சிரித்தான்.

''வாங்க சிவா.''

சேரில் வந்து உட்கார்ந்த சிவா, மூச்சு விட சிரமப்பட்டான்.

''சிவா. போய் ரெஸ்ட் எடுங்க.''



''டாக்டர்! உங்ககிட்டே பேசணும்னுதான் வந்தேன். திரும்ப என்னை பெட்டுக்குப் போகச் சொல்லாதீங்க. ஊசியை போட்டுப் போட்டு என்னை தூங்க வச்சிடுறாங்க.''

''நீங்க நல்லாத் தூங்கணும்'' அருகில் வந்து அவன் தலையைக் கோதிவிட்டான்.

''டாக்டர், பொய்யை ரொம்ப நாளைக்கு மறைக்க முடி யாது. எந்த நிமிஷம் நான் சாகப் போறேனோ தெரியல. சாவப் பத்தி எனக்குக் கவலையில்லை டாக்டர். சாகறதுக்கு முன்னால என்னோட அம்முவ, எனக்கு சொந்தமான அம் முவ நான் பார்க்கணும். அவகூட ஒரு நாளாவது வாழ்ந்துட்டு சாகணும்'' அவன் பேசி முடிப்பதற்குள் ஏகப்பட்ட திணறல்.

''சிவா... உணர்ச்சி வசப்படக்கூடாது. உங்க அம்மு நிச்சயம் கிடைப்பாங்க. உண்மையான அன்புக்கு தோல்வி இல்லை. காம் டவுன்.''

''டாக்டர், நானும் இந்த ரெண்டு வருஷமா அத்தையை யும், அம்முவையும் தேடாத இடம் இல்லை'' விசும்பினான்.

''சிவா! அம்மு போட்டோ இருக்கா? விளம்பரம் குடுக் கலாம்.''

சிவா அப்படியே சேரில் சாய்ந்து காய்ந்து போன உதட்டை நாவினால் ஈரப்படுத்தி, ''எட்டு வயசுலதான் கடைசியா அவளைப் பார்த்தேன். இப்போ அவ எப்படி இருக்கா, எங்கே இருக்கான்னு தெரியலையே. அம்முவப் பார்க்காம இந்தக் கூட்டுல இருந்து உயிர் போகாது'' மூச்சு அவனுக்கு வேக வேகமாக வாங்கியது.

''மனசைப் போட்டுக் குழப்பிக்கக் கூடாது.''

''டாக்டர், இங்க அடங்கிக் கிடக்க புடிக்கல. வெளியே போகணும் போல இருக்கு. உங்களைத் தவிர வேற யாரை

யுமே எனக்குப் புடிக்கல. நான் வெளியே போகனும். ப்ளீஸ், எந்தத் தப்பும் பண்ண மாட்டேன்!'' கண்ணீரோடு கெஞ்சி னான்.

சிறிது நேரம் யோசித்த மனோஜ், வெளியே கூட்டிக் கிட்டுப் போனா, கொஞ்சம் ரிலீஃபா இருக்கும். அதுவும் ஒரு ஃபேமிலியைப் பார்க்கும்போது சந்தோஷப்படலாம். சிவா வோட சாவை தடுத்து நிறுத்த முடியாது. இருந்தாலும் சின்னச் சின்ன சந்தோஷங்கள் மன திருப்தியைக் கொடுக்கும் என்றெண்ணி.

''உங்களைத் தனியா என்னால அனுப்ப முடியாது சிவா. ஆனா என்னோட கூட்டிக்கிட்டு போக முடியும். என்னோட பிரெண்ட் வீட்டுக்கு வர்றீங்களா?''

சிவாவின் பார்வையில் மலர்ச்சி தெரிந்தது.

''உங்க பிரெண்ட் நல்லவரா?''

''ரொம்ப நல்லவன்.''

''என்னோட அம்முவ அவர் தேடித் தருவாரா?''

''ம்... சீக்கிரம் உங்க அம்முவக் கண்டுபிடிச்சிடலாம்.''

''டாக்டர்... நான் போயி தலையணைக்கு அடியில இருக்கிற அம்மு போட்டோகிட்ட சொல்லிட்டு வந்திட் றேன்.''

''ம்...'' தலையாட்டினான் மனோஜ்.

துள்ளலோடு சிவா செல்வதை துக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான், மனோஜ். சிவாவும் மனோஜும் கண்ணன் வீட்டு வாசற்படியில் கால் வைத்தபோது மணி ஆறே முக் கால்.



காலிங்பெல்லில் கை விரல் பட்டதும் உள்ளே சென்ற ஒலி, இரண்டு நிமிடத்தில் கதவு திறக்க வைத்தது. கதவைத் திறந்தவள் மீரா. பார்த்ததுமே மனோஜை அடையாளம் கண்டு கொண்டாள். சிரித்த முகத்தோடு வரவேற்றாள்.

''உள்ள வாங்க. உங்க பிரெண்ட் வெளியே போயிருக் கார். இன்னம் கொஞ்ச நேரத்துல வந்திடுவார்'' ஷூவை கழற்றி விட்டு உள்ளே நுழைந்தான். சிவாவை மீரா பார்த்த துமே, ஏதோ ஓர் உணர்வு உள்ளே புரண்டது. சிவாவின் கண்களைப் பார்த்ததுமே இனம் புரியாத அவஸ்தையாக மனம் பிசைந்தது. அந்தப் பார்வை இவளுக்கு பரிச்சயப்பட்ட பழக்க மான பார்வை. எங்கே, எப்போது என்றுதான் புரியவில்லை.

சிவாவிற்கு கண்களால் ஜாடையைக் காட்டி உள்ளே அழைத்து வந்தான் மனோஜ். இருவரும் ஹாலில் உள்ள சோபாவில் அமர்ந்தார்கள். கமலம் வெளியே வந்து,

''வாப்பா'' என்றாள்.

''வரேம்மா. இவர் சிவா. பிரெண்டுமா?''

''வாங்க தம்பி'' என்று திரும்ப கமலம் சொன்னதும்,

எதுவும் சொல்லத் தெரியாமல் கையை அனிச்சையாக தூக்கி கூப்பினான்.

''அம்மாடி! காபி கொண்டா'' கமலம் சத்தமாக குரல் கொடுத்ததும்,

''இதோ வரேம்மா'' பதில் குரல் கொடுத்தாள்.

காபியை கொடுக்கும்போதுதான் சிவா மீராவை நன்றாக கவனித்தான். மஞ்சள் குளித்த முகம். புருவங்களுக்கு இடை யில் சின்னதாக ஒரு சாந்து. மை இல்லாத கண்கள். வெளியே சிரிக்காவிட்டாலும் மலர்ச்சியான முகம். காதலிக்கலாமா

என தோன்ற வைக்கும் வசீகரம். காலர் வைத்த சுடிதார். வெளிர் நீல நிறத்தில் மதியமே கண்ணன் வாங்கி வந்து கொடுத்தது. இப்படி உடல் முழுவதும் போர்த்திக் கொண்டது போல் உடையணியும் பெண்களை சிவாவிற்கு மிகவும் பிடிக்கும். அந்தக் காரணத்திற்காகவே மரியாதையாக அவளை இன்னொரு முறை பார்த்தான்.

''காபி.''

இருவருமே எடுத்துக் கொண்டார்கள்.

''என்னோட அம்முவ கண்டு பிடிச்சி தர்றீங்களா?'' பரிதாபமாகக் கேட்டான்.

மீராவிற்கு ஒன்றும் புரியவில்லை.

''அம்முவா?''

''ஆமாம். என்னோட அத்தை பொண்ணு. அவளை தேடித்தான் அலையறேன். அவ இதுவரைக்கும் எனக்குக் கிடைக்கவே இல்லை. அவளை சீக்கிரம் நான் பார்த்துரு வேன். மனசு என்னமோ அப்படியே சொல்லுது'' என்றான்.

''கிடைச்சிடுவாங்க, கவலைப்படாதீங்க'' சொல்லிய வள், காபி டம்ளரை எடுத்துக் கொண்டு கிச்சனுக்குள் நுழை யும்போது,

''தம்பி! கண்ணன் வந்திடுவான். இருங்க நான் பக்கத்துல கோவில் வரைக்கும் போயிட்டு வந்திடுறேன்.''

''சரிம்மா'' தலையாட்டினான் மனோஜ்.

''வரேம்மா'' உள்நோக்கி குரல் கொடுத்தாள்.

''சரிம்மா'' மீனா அங்கிருந்தே கத்தினாள்.

கமலம் கிளம்பிப் போய் ஒரு ஐந்து நிமிடங்கள் இருக்கும்.



''மீரா கொஞ்சம் வர்றீங்களா?'' மனோஜ்தான் அழைத் தான்.

''மீரா... மீரா...'' சிவாவின் காதுக்குள் எதிரொலித்தது. கழுத்தை வெட்டி, சாய்த்து மனோஜை பார்த்தான்.

''டாக்டர் என்ன பேர் சொன்னீங்க?''

அவன் கேட்ட விதம் மனோஜிற்கு லேசான நெருடலை ஏற்படுத்தியது.

''மீரா'' நடுங்கிக் கொண்டு இருக்கும் சிவாவின் கைகளை அழுத்தமாகப் பற்றிக் கொண்டு சொன்னான். அந்த நேரம் பார்த்தா மீரா உள்ளே இருந்து வர வேண்டும்... சிவாவின் கை, கால், உடல் என்று எல்லாமே நடுங்கத் தொடங்கியதைப் பார்த்ததும்,

''என்ன, என்னாச்சி இவருக்கு?'' கேட்டுக் கொண்டே அருகே ஓடி வந்தாள்.

''கொஞ்சம் ஹாட் வாட்டர் எடுத்து வாங்களேன்'' மனோஜ் துரிதப்படுத்தி விட்டு, இப்படி ஏதாவது நடந்தால் என்ன செய்வது என்று கையோடு கொண்டு வந்த டேப்லட் உறையைப் பிரித்தான். மீரா கொண்டு வந்த தண்ணீரைப் பிடுங்காத குறையாக வாங்கி, சிவாவின் வாயில் ஊற்றி, மாத்திரையைப் போட்டு விழுங்க வைத்தான்.

''இவருக்கு என்னாச்சி? ஏன் இப்படி ஆயிட்டார்?'' கேட்டுக் கொண்டே டம்ளர் வாங்க மனோஜிடம் கை நீட்டும்போது, அவளின் வலது உள்ளங்கையின் நடுவில் மொச்சை அளவு இருந்த மச்சத்தை சிவா பார்த்தான்.

கண்களில் கரகரவென கண்ணீர் வழியத் தொடங்கியது. சடார் என எழுந்து அவளை நெருங்கி நின்று, விரிந்த விழி களோடு...

''அம்மு.''

மீரா பயந்து நடுங்கினாள். மனோஜ் சிவாவின் கைகளைப் பற்றி இழுக்கும்போது...

''அம்மு... என்னைத் தெரியல. நான் சிவா. உன்னோட சிவா.''

''சிவா?''

''என்ன அம்மு? என்னைத் தெரியல. உன்னோட அத்தைப் பையன். உன்னோட கை மச்சத்துல காசெல்லாம் வைச்சி விளையாண்டு இருக்கோமே, மீராங்கற பேர் நல்லால்லன்னு அம்முன்னு நான்தானே உனக்குப் பேர் வச்சேன்.''

கீழிலிருந்து மேலாக முழுவதுமாக அவனைப் பார்த்தாள்.

''சிவா... நீயா?'' அவளையும் அறியாமல் உச்சரித்தாள்.

மீரா தன்னைத் தெரிந்து கொண்டாள் என்றதுமே கோடிப் பூக்களை மேலே கொட்டியது போல் பூரித்துப் போனான். உள்ளே சென்ற மாத்திரை தன் வேலையைத் தொடங்க, ''அம்மு... அம்மு...'' என்றபடி விழி செருக, 'தொப்'பென்று சோபாவிலேயே சரிந்தான்.

மீராவைக் கலவரமாகப் பார்த்தான், மனோஜ்.

''மீரா! இவர உங்களுக்குத் தெரியுமா?''

பயந்து போய் நின்றவள்,

''இவர் சொல்றதெல்லாம் பார்த்தா, என்னோட மாமா பையன் சிவா போலத் தெரியுது.''

''அடையாளம் உங்களுக்குத் தெரியலையா?''

''இல்லை. 15 வருஷத்துக்கு முன்னால பார்த்தது.''



''அதுக்கப்புறம்...''

''குடும்பத்துக்குள்ளே ஏதோ பிரச்சினை. பெரியவங்க உறவையே அறுத்துக்கிட்டாங்க. அப்போ எனக்கு ஒரு எட்டு வயசு இருக்கும். சிவாக்கு பதினாறு இல்லை பதிமூணு வயசு இருக்கும்.''

''மீரா! நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும். அதுவும் சிவாவிற்கு மயக்கம் தெளியறதுக்குள்ளே.''

''இவருக்கு என்ன? ஏன் இப்படி?''

''சொல்றேன். பதட்டப்படாதீங்க.''

''சிவா உங்களுக்கு சொந்த அத்தை பையனா?''

''ஆமாம், அம்மாவோட அண்ணன் பையன்.''

''என்ன பிரச்சினையினால பிரிஞ்சீங்க?''

''தெரியாது.''

''சிவாக்கு நீங்கன்னும், உங்களுக்கு சிவான்னும் உங்க சின்ன வயசுல பெரியவங்க பேசி இருக்காங்களா?''

யோசித்த மீரா,

''இப்போ இதெல்லாம் எதுக்கு?''

''ப்ளீஸ். நான் கேக்கிற கேள்விக்கு பதில் சொல்லுங்க.''

''ஆமாம்... சொல்லி இருக்காங்க.''

''உங்கக்கிட்டேயே சொல்லி இருக்காங்களா?''

''ம்... சொல்லி இருக்காங்க. ஆனா, எனக்கு சிவாவ கல்யாணம் பண்ணிக்கணும் அப்படின்னு தோணினது இல்லை. அன்பு இருந்துச்சி. ஆனா காதல் இல்லை. காதல்னால என்னன்னே தெரியாத வயசு.''

''நீங்க அப்படி எடுத்துக்காம இருக்கலாம். ஆனா இந்த சிவா.. உங்களையே மனைவியா சின்ன வயசுல இருந்தே நினைக்கத் தொடங்கிட்டார். உங்களை காட்டிக் காட்டி இவதான் உனக்குப் பொண்டாட்டி, உனக்குன்னு பிறந்தவ இவதான்னு ஒரு நாளைக்கு பத்து தரம் சொல்லி இருக்காங்க. அதை அப்படியே நம்பிட்டார். பச்சை மண்ணை எப்படி வேணா புடிக்கலாம். அந்த மாதிரி குழந்தைப் பருவத்தில் பெரியவங்க சொன்ன வார்த்தைகளை அப்படியே நம்பி... நீங்க இல்லாம வாழ்க்கையே இல்லைன்ற அளவிற்கு வந்திட்டார்.

''மனோஜ்! இதுக்கெல்லாம்...'' முத்து முத்தாய் அரும்பி இருந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

''நிச்சயமா நீங்களும் சிவாவும் காரணம் இல்லை. பெரியவங்க பண்ணின வேலை. செத்தவங்களை இப்போ திட்டியும் புண்ணியமில்லே.''

''மனோஜ்! எனக்கு எதுவும் புரியல. மாமா வீட்டிற்கும் எங்களுக்கும் சண்டையான கொஞ்ச நாள்லேயே அப்பா போயிட்டார். மாமாக்கு கூட ஆந்திரா பக்கம் டிரான்ஸ்பர் ஆயிடுச்சி. எங்கே இருக்காங்கன்னு கூடத் தெரியாது. அந்த கிராமத்துல இருந்தா அப்பா நினைவு அதிகமா இருக்குன்னு நாலைந்து ஊருக்கு மாறி கடைசியில தேனியில செட்டில் ஆயிட்டோம். இத்தனை வருஷம் கழிச்சி சிவாவ இந்த நிலைமையில பாப்பேன்னு நான்.. நான்...'' தடுமாறினாள்.

''மீரா, சிவாக்கு இப்போ நான் கொடுத்து இருக்கிற டேப்லட் ஒரு அரை மணி நேரத்துக்குத்தான் மயக்கத்தைக் கொடுக்கும். அதுக்குள்ளே எல்லாத்தையும் நான் சொல்லணும். மூணு வருஷத்துக்கு முன்னாடியே உங்க மாமாவும், அத்தையும் ஒரு ஆக்சிடண்டுல போய்ட்டாங்க. நல்ல



போஸ்ட்ல சிவாவிற்கு பேங்க்கில வேலையும் கிடச்சிச்சி. சிவா கண்ணை மூடும்போதெல்லாம் உங்க உருவத்தைத் தவிர வேற உருவத்தைப் பார்க்கல. உங்களைத் தேடத் தொடங்கினார். ரெண்டு வருடத்தில தமிழ்நாடு முழுவதும் சுத்தியாச்சி. எட்டு வயசுல பாத்த பொண்ணை எப்படிக் கண்டு பிடிக்கிறதுன்னு தெரியல. குழம்பிக் குழம்பிப் பைத்தியமாயிட்டார். அப்பா, அம்மா, சொந்தம் பந்தம் யாரைப் பற்றியும் ஞாபகம் இல்லை. சாவோட விளிம்புல நின்னுகிட்டு இருக்கார். அதிக பட்சமா இன்னும் மூணு மாசம் உயிரோட இருக்கலாம்.''

''மனோஜ்...''

''ப்ளீஸ்! காம் டவுன். அவர் அம்மு, அம்முன்னு சொன்னதுனாலதான் ரிலீஃபா இருக்கட்டுமேன்னு இங்கே கூட்டி வந்தேன். மீரான்னு ஒரு தடவை சொல்லி இருந்தாலும் இந்தப் பக்கமே அவரைக் கூட்டி வந்திருக்க மாட்டேன். மனிதாபிமானத்தோட பார்த்தா சிவாவிற்கு எந்தளவு நிம்மதியைக் குடுக்க முடியுமோ அந்த அளவு குடுக்கணும்.''

''நான் பார்த்துக்கிறேன். கண்ணன் வரட்டும். சிவா இங்கேயே இருக்கட்டும். சிவா என்னோட மாமா பையன். என்னோட சொந்தக்காரன். அவனுக்கு நான் இருக்கேன்.''

''மீரா! உங்களுக்கு சிவா மேலே உண்மையான அன்பு இருக்கு இல்ல?''

''அதை நான் எப்படி நிரூபிக்கணும்னு நினைக்கிறீங்க?''

''உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலன்னு சொல்லி...''

''மனோஜ்'' வாய்விட்டு அலறினாள்.

''எஸ்! சிவா இப்போ இருக்கிற மனநிலையில உங்களுக்குக் கல்யாணம் ஆயிடுச்சின்னு தெரிஞ்சாலே ஆபத்து.

தற்கொலை பண்ணிக்க முயற்சி பண்ணலாம். இன்னும் மூணு மாசத்துல தானா சாகப் போறவரை நாமே சாகடிக்கணுமா? இல்ல, தனக்கு சொந்தமான மீராவை, ஐ மீன் அம்முவ கண்ணன் பறிச்சிட்டதா நினைச்சி கண்ணனைக் கொலை பண்ணக்கூடத் துணியலாம்.''

''ஐயோ!''

''சிவாவிற்காக நீங்க காத்துக்கிட்டு இருக்கீங்கன்னு தெரிஞ்சா, போற அந்த உயிர் நிம்மதியாப் போகும்.''

''நான் பொய் சொன்னாலும் தாலி காட்டிக் கொடுத்திடுமே, மெட்டி காட்டிக் கொடுத்துடுமே.''

''மெட்டி இன்னைக்கு அன்மேரீட் கேர்ள்ஸ் கூட போட்றாங்க. இப்போ போட்டு இருக்கற சல்வார் மாதிரி குளோசா பிளவுஸ் போட்டுக்கோங்க. இப்போதைக்கு வேற வழி எனக்குத் தோணலை.''

''அம்மு... அம்மு... அ...ம்...மு...'' உதடுகள் பிரிய முணுமுணுத்தபடி நினைவிற்கு வரத் தொடங்கினான் சிவா. அவன் கண் விழிப்பதை துடிக்க மறந்த இதயத்தோடு பார்த்தாள் மீரா.

''அம்மு...'' தடுமாறிக் கொண்டு எழுந்தான்.

''மீரா! இவர் பைத்தியக்கார பிடிவாதக் குழந்தை. ஞாபகம் இருக்கட்டும்'' மனோஜ் கிசுகிசுத்தான்.

''அம்மு...''

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிவாவைப் பார்த்துச் சிரித்தாள், மீரா.

''அம்மு என்னை மறக்கலையே?''

''எப்படி சிவா முடியும்?''



''நிஜமாவா... என்னை மாதிரியே நீயும் தேடுனியா?''

''ஆமா'' தலையாட்டினாள்.

''எனக்காக காத்துக்கிட்டு இருந்தியா?''

''ஆமாம்.''

சந்தோஷம் தாளாமல் அப்படியே அவள் நெஞ்சில் சரிந்தவனை அதிர்ச்சியோடு மனோஜ் பார்க்க, ஏற்கவும் முடியாமல் விலக்கவும் முடியாமல் மீரா தத்தளிக்க, கடை கடையாக ஏறி இறங்கி பழைய காதல் பாடல் கேசட்டுக்களை பொறுக்கி... சந்தோஷம் தாங்காமல், ''பாவாடை தாவணியில் பார்த்த உருவமா?'' என சத்தமாக ஹம் செய்து கொண்டு உள்ளே நுழைந்த கண்ணன், மீராவின் மேல் சிவா சாய்ந்த காட்சியைப் பார்த்து ஸ்தம்பித்து... கேசட்டுகளைச் சிதற விட்டான்.

# 7

**எனக்கு**
**எப்போதும் சம்மதமே!**
**நீ நீராக இருந்தால்**
**வேராக மட்டும் அல்ல!**
**நீ மண்ணாக இருந்தால்**
**உரமாகக் கூடத்தான்!**

கடந்த இரண்டு நாட்களாக கண்ணனையும், கண்ணன் குடும்பத்தினரையும் சமாதானப்படுத்தி புரிய வைப்பதற்

குள், மனோஜிற்கு தாவு தீர்ந்தது. கண்ணன் வீட்டை தூரத்து சொந்தம், அம்மா இறந்ததும் மீரா இங்கு வந்து விட்டாள் என சிவாவை நம்ப வைத்து இருந்தார்கள். இறக்கப் போகும் ஒருவனுக்காக அவன் மன நிம்மதிக்காக ஒரு குடும்பமே நடித்துக் கொண்டு இருந்தது. மீரா கண்களை மூடி இரண்டு நாட்கள், சிவாவின் திடீர் வருகை, அவனின் பரிதாப நிலையில் விழி பிதுங்கிப் போயிருந்தாள். கண்ணன் எதுவும் பேசாமல் அமைதி காத்தான். வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்த கதை. சிவாவின் இரவு பாலில் தூக்க மாத்திரையைக் கலந்து கொடுத்து விட்டு சோர்ந்து போய் ஹாலில் உள்ள சோபாவில் உடலை சாய்த்து இருந்தாள். அதுவரை பேப்பர் படித்துக் கொண்டிருந்த கண்ணன், மீரா வந்ததும் பேப்பரை மடித்து டீபாய் மேல் போட்டான். அவளுக்கு அருகில் வந்து உட்கார்ந்தான். அதே சமயம் கண்ணனின் பெற்றவர்களும் எதிரே உள்ள சோபாவில் அமர்ந்தார்கள்.

''சாப்டியாம்மா!?'' கண்ணனின் தந்தைதான் கேட்டார்.

''இல்லப்பா'' தெம்பில்லாமல் முனகினாள்.

''உடம்பு என்னத்துக்கு ஆகும்?''

''...''

''மீரா.''

நிமிர்ந்து மாமனாரைப் பார்த்தாள்.

''எத்தனை நாளைக்கும்மா இந்த நாடகம்?''

''அவன் சாகற வரைக்கும்'' அதிர்ந்து பேசத் தெரியாத கமலத்திடம் இருந்து அப்படி ஒரு வார்த்தை வந்து விழுந்தது.

''அம்மா'' அதிர்ந்தாள்.



''இங்க பாரு மீரா. சுத்தி வளைச்சி எல்லாம் எனக்குப் பேச வராதும்மா. நீயும் கண்ணனும் சந்தோஷமா குடித்தனம் பண்ணனும்னு, ஒவ்வொரு சாமிகிட்டேயும் வேண்டினவ நான். எம்புள்ளை திருந்திட்டான்னு தெரிஞ்சப்ப நீ சந்தோஷமா இருக்கப் போறியேன்னு சந்தோஷப்பட்டவ நான். இருந்தாலும் இந்த நாடகம் எனக்குப் புடிக்கலை. எங்க கண்ணு முன்னாடியே உன்னைத் தொட்டுத் தொட்டுப் பேசறதும், அவன் சிரிக்கறதும், அவன் உன்னைப் பார்க்கிற பார்வையே சரியில்லை. இது என்னோட மனசுக்கு நல்லதாப் படல. அவனைத் திரும்ப பைத்தியக்கார ஹாஸ்பிடல்லயே விட்டுடுங்க. இல்லன்னா பொறுக்க முடியாமே நானே, 'அட மடையா, அவ என் மருமகடா. கண்ணனுக்குப் பொண்டாட்டிடா'ன்னு சொன்னாலும் சொல்லிடுவேன்.

''அம்மா.''

''உன்னோட நல்லதுக்குத்தாம்மா சொல்றேன். கேக்கறதும் கேக்காததும் உன்னோட இஷ்டம்'' சொல்லிவிட்டு விடுவிடுவென எழுந்து போய் விட்டாள். கமலம் பின்னாலேயே கண்ணனின் அப்பாவும் ஓடினார்.

அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டு இருந்த கண்ணன், பிறகு மவுனமாகவே .மீராவின் புறம் திரும்பினான்.

''மீரா.''

''.........''

''இங்க பாருடா.''

''.......''

''நான் இருக்கேன் கண்ணம்மா. எந்த நிலையிலும் நீ புண்பட்ற மாதிரி பேச மாட்டேன். உன்னைப் பொருத்த

வரைக்கும் எங்கிட்டே சந்தேகம்ங்கற வார்த்தைக்கே இடம் இல்லை.''

''கண்ணன் எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல. என்ன பண்றேன்னும் புரியல'' வார்த்தைகள் திணறலோடு வெளிப் பட்டது.

''கவலைப்படாத.''

''எப்படிப்பா? கட்டின புருஷன் முன்னாடியே யாரோ மாதிரி; எனக்கு ஒன்னு மட்டும் புரியுது. நல்லா நடிக்கிறேன்.''

''நீயும் நானும் நெறைய பாவம் பண்ணி இருக்கோம். அதான் இப்படி காலம் நம்மை கல்யாணத்துல சேர்த்துது. ஆனா நாம சேரல. ஒருத்தர் மேல ஒருத்தர் கற்பனை, காதல், அன்பை வளர்த்துக்கிட்டு சேர்ந்து வாழணும்னு முடிவு எடுத்தப்போ விதிக்குப் புடிக்கலை.''

''எம்மேல கோபமா?'' கண்ணனின் தோளில் கை வைத் தாள், மீரா.

''மீரா கை எடு'' பதறினான்.

''ஏன்?''

''அந்த சிவா பார்த்துட்டா ருத்ரதாண்டவம் ஆடுவான்.''

மீராவிற்குள் ஏதோ சுண்டி எறிந்தாற்போல் வலித்தது.

''ஏய்... தப்பா எடுத்துக்கிட்டியா? உண்மையத்தான் சொன் னேன். உம்மேல எனக்குக் கோபம் இல்ல மீரா. எம்மேலேயே எனக்கு வருத்தம். நேத்து அந்த சிவா என்ன சொன்னான் தெரியுமா? என்னோட அம்மு ரொம்ப அழகு இல்ல? ஸ்டில் ஐ லவ் அம்மு. அப்படி இப்படிங்கறான். அவன் உன்னைப் பத்தி கொஞ்சி கொஞ்சிப் பேசும்போது சப்புன்னு அறைய லாமான்னு தோணிச்சி. பாவம் இவன் என்ன பண்ணுவான்?



இவனைப் பார்க்கும்போது பரிதாபமாகவும் இருக்கு, கோபமாக வும் இருக்கு.

''இதுக்கெல்லாம் காரணம் அந்தப் பெருசுங்க. பொறந்த உடனே இவனுக்கு இவ, இவளுக்கு இவன்னு சொல்லிட வேண்டியது. சும்மாவும் விட மாட்டாங்க. திரும்பத் திரும்ப கீறல் விழுந்த ரெக்கார்ட் கணக்கா அதையே சொல்ல வேண் டியது. இந்தப் புள்ளைங்க பெரிசாயி என்ன நிலைமையில எப்படி இருக்கிறதுன்னு யோசிக்கிறதே இல்லை. ஆசை இருந்தா மனசுலேயே வச்சிருந்து பெரிசா ஆனா அதுங்க ரெண்டும் கல்யாணத்துக்கு ஒத்துகிட்டா பண்ணி வையுங் களேன். யார் வேண்டான்னா? சின்னப் புள்ளைங்க மனசக் கெடுத்துட்டு இதுங்க சண்டை போட்டுகிட்டு பிரிஞ்சிட்டு, நான் செத்தா நீ வராத. நீ செத்தா நான் வரலைன்னு போயிட வேண் டியது. வர கோபத்துக்கு புதைச்ச எடத்துல தோண்டி அந்த எலும்புக்கூடையாவது நாலு சாத்து சாத்தணும் போல இருக்கு'' கொஞ்சம் வேகமாகவே பேசினான், கண்ணன்.

மீராவின் கண்களில் அணை உடைந்து குபுகுபுவென கண்ணீர் வெள்ளம் புறப்பட்டது.

''மீரா... நீ எதுக்கு அழற? நான் பேசுனது தப்பா. பக்கத்து லேயே உன்னை வச்சிக்கிட்டு அன்பா ஒரு வார்த்தை என் னால பேச முடியலையே. அந்த வேதனைதான். நீயே யோசிச் சிப் பாரு. சின்ன வயசுலேயே சிவா மனசக் கெடுத்துட்டாங்க. அதனால இப்போ அவஸ்தை பட்றது யாரு? அவங்களா? இல்லையே, நீ... நான்... அந்தப் பைத்தியக்கார சிவா.''

''சாகற வரைக்கும் சிவா நிம்மதியா இருக்கட்டுங்க. அவன் யாரோ இல்லை. என்னோட சொந்தம். என்னோட சொந்தம் உங்களுக்கு சொந்தம் இல்லியா?''

''நான் இல்லேன்னு சொன்னேனா?''

''ஒரு சில நேரம் சிவாவோட அன்பு, வெறியாயிடு மோன்னு பயமா இருக்கு. மனோஜ்கிட்டே தான் ஐடியா கேக்கனும்.''

''அவனா?'' பற்களைக் கடித்தான் கண்ணன்.

''.........''

''எல்லாம் அவனால வந்தது.''

''அவர் என்ன பண்ணுவார்? அம்மு அம்முன்னா மனோஜுக்குத் தெரியுமா? நான் தான் அம்முன்னு.''

கண்ணன் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

**நா**ட்கள் வாரங்களாக மாறத் தொடங்கின. மீராவால் சிவாவை கவனிக்கவும் முடியவில்லை. கவனிக்காமல் இருக்கவும் முடியவில்லை. தான் எவ்வளவு சொல்லியும் தன் பேச்சை மதிக்கவில்லை என்று மகளாக எண்ணிய மருமகள் மீது கமலத்திற்கு வெறுப்பு வளரத் தொடங்கியது. எந்த மாமியார்தான் தன் மருமகளிடம் வேறு ஒரு இளைஞன் சகஜமா பேசிப் பழகுவதை ஒத்துக் கொள்வாள்? அதுவும் சிவா... மீராவின் நகத்தைக் கடிப்பது, எப்போது கல்யாணம் என நச்சரிப்பது, அவள் மடியிலேயே தலை வைத்துப் படுப்பது... இதெல்லாம் பார்க்கும்போது நடு மண்டையில பச்சை மிளகாய் அறைத்து வைத்தது போல் 'சுர்'ரென்று இருந்தது. கண்ணனைத் தவிர மீதி அத்தனை பேரும் மீராவிற்கு எதிராக போர்க்கொடி தூக்கினார்கள். இதில் வேறு சிவா கொஞ்சம் கொஞ்சமாக தேறிக் கொண்டு இருந்தான்.

அன்று பர்சேசிங்கிற்காக மீரா வெளியே கிளம்பினாள். சிவாவிற்கு ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டும் என்று ஹாஸ்பிடலிலேயே அட்மிட் செய்யப்பட்டான். சிவாவிற்கு எந்த நேரமும் மீரா அருகில் இருக்க வேண்டும். வீட்டிற்குப் போய்



குளித்து விட்டு வருகின்றேன் என்று கிளம்பியவள், தான் வீட்டு வேலையை முடித்து விட்டு வெளியே, கிளம்பினாள். தெரு முனையைத் தாண்டி இருக்க மாட்டாள், கண்ணன் ஹீரோ ஹோண்டாவில் எதிர்பட்டான்.

இவளைப் பார்த்ததும் வண்டியை நிறுத்தினான்.

''எங்கே மீரா?''

''வண்டியில ஏறு'' ஏறிக் கொண்டாள். வண்டியை மார்க்கெட் முன்னாலேயே நிறுத்தி சாவியை உருவி பேண்ட் பாக்கெட்டில் திணித்துக் கொண்டான். அரை மணி நேரத்தில் எல்லா வேலையையும் முடித்துக் கொண்டு இருவரும் இணையாக வெளியே வரும்போது தங்களை யாரோ பார்ப்பது போல் உணர்ந்த மீரா, திரும்பிப் பார்த்தாள். இருபதடி தூரத்தில் மாநிறத்தில் அழகான இளம்பெண். களையான முகத்தோடு ஆசைகள் அனைத்தையும் கண்களில் தேக்கி கண்ணனின் முதுகையே வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

கண்ணனைத் தட்டினாள், மீரா.

''என்ன மீரா?''

''நான் சொன்ன உடனே டபால்னு திரும்பாதீங்க. ஒரு இருபதடிக்கு பின்னால மஞ்சள் கலர் வாயில் புடவை கட்டிகிட்டு இருக்கிற பொண்ணைப் பாருங்க.''

கண்ணன் அவள் சொன்னபடியே திரும்பிப் பார்த்தான்.

''யாருன்னு உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்'' என்றான் நடந்து கொண்டே.

''தெரிஞ்சவங்களா? அப்படிப் பாக்குறாங்க'' பிடிக்கவில்லை என்பதை வார்த்தையிலேயே வெளிக்காட்டினாள் மீரா.

''ரொம்பத் தெரிஞ்சவங்க.''

''யாரு? பாத்ததே இல்லை.''

''பேரு சுகுணா.''

அப்படியே நின்றாள் மீரா.

''நின்னுட்ட... இங்கே ஏதாவது வாங்கணுமா?''

''இல்லை, சுகுணாவ முன்னாடியே உங்களுக்குப் பழக் கமா?''

''ம்...''

''கொஞ்சம் விளக்கமா சொல்லுங்களேன்.''

''இங்கே வேண்டாம். போகும்போது சொல்றேன். பார்வை யிலேயே என்னை முழுங்கிடுவா போல இருக்கு.''

சீரான வேகத்தில் ஹீரோ ஹோண்டா வந்து கொண்டு இருந்தது.

''கண்ணன்.''

''ம்.''

''சொல்லுங்க. சுகுணா யாரு?''

''கண்டிப்பா தெரிஞ்சிக்கணுமா?''

''ம்.''

''என்னால விரும்பப்பட்டவள், அவளும் என்னை விரும் பினா? நான் பெரிய கேடியா வளர்ந்துட்டேனா! பொண்ணு குடுக்க மாட்டேன்னு சுகுணா வீட்ல சொல்லிட்டாங்க. நான் பிடிவாதமா கட்டிகிடணும்னு ஆசைப்படல. அவ மனசுல இருந்திருக்கும் போல இருக்கு. அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? இந்த மனசுக்கு மீரான்னு ஒரு தேவதை பிறந்து



இருக்கும்போது, சுகுணாவாவது, சுண்டைக்காயாவது...'' கண் ணன் பேசிக் கொண்டே போனான்.

மீரா கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையையும் இழக்கத் தொடங்கினாள்.

## 8

**கவிஞன்**
**என்றதொரு அந்தஸ்தில்**
**உயர்ந்ததொரு உப்பரிகை!**
**காதலி கொடுத்த**
**கண்ணீர் பரிசென்று**
**படிப்பவருக்கு**
**எங்கே தெரியும்**
**பாவப்பட்டவன் நான் என்று...!**

ரவிக்குமார் இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட் கம்பெனி வாயிலில் ஆட்டோவில் இருந்து இறங்கினாள் மீரா. அண் ணாந்து பார்த்தாள். சூரிய ஒளி கண்களைக் கூசியது. 'காலை யில பத்து மணிக்கே இந்த வெயிலா?' முணுமுணுத்துக் கொண்டே உள்ளே நுழைந்தாள். ரிசப்ஷனை நெருங்கினாள்.

''எக்ஸ்க்யூஸ்மி மேடம்.''

''எஸ்.'' ரிசப்ஷனிஸ்ட் உதடுகளில் நிரந்தரமான புன் னகையில் நிமிர்ந்தாள்.

''அக்கவுண்டண்ட் சுகுணா ப்ளீஸ்.''

''வெயிட் பண்ணுங்க. யுவர் குட் நேம் ப்ளீஸ்.''

''மீரா கண்ணன்.''

''ப்ளீஸ் சீட்டட்'' வரிசையாக போடப்பட்ட சேரை சுட்டிக் காட்டினாள்.

''தேங்க் யூ'' மீரா தனக்குப் பிடித்த நீலக்கலர் சேரில் தன்னை இருத்திக் கொண்டாள்.

'பெரிய கம்பெனி போல இருக்கே' பார்வையினால் அளந்தாள் மீரா... சுற்றிலும் பளபளக்கும் மிரர். மொசைக் தரை. நவீன மாடல் கட்டிடம். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு இருந்தபோது... ரிசப்ஷனிஸ்ட் அழைத்தாள்.

''மேடம்! டென் மினிட்ஸ் வெயிட் பண்ண முடியுமா? பிஸியா இருக்காங்க.''

''வெயிட் பண்றேன்'' தலையாட்டினாள் மீரா.

பத்து நிமிடங்களுக்கு முன்னதாகவே சுகுணா உள்ளே இருந்து வெளிப்பட்டாள். நான்கு நாட்களுக்கு முன்பு பார்த்த அதே காட்டன் புடவை. ப்யூட்டி பார்லரில் ஹேர் கட் பண்ணி இருக்க வேண்டும். யூ ஷேப்பில் கட் பண்ணி, தூக்கி ரப்பர் பாண்ட் போட்டு இருந்தாள். மாநிறம். மீராவை விட கொஞ்சம் உயரம் கம்மி. பார்ப்பதற்கு அழகாகவே இருந்தாள். இத்தனை விவரங்களையும் சுகுணா தன்னை நெருங்கும் முன்பே மீரா கவனித்தாள்.

அவள் அருகில் நெருங்கியதுமே புன்னகைத்தபடி எழுந்து நின்றாள் மீரா. சுகுணாவிற்கு மெலிதான அதிர்ச்சி. அது அப்பட்டமாகவே அவள் கண்களில் தெரிந்தது. கண்ணனின் வொய்ப் புன்னகையோடு நிற்கிறாள்.



எதற்கு? அருகில் நெருங்கி...

''ஐ'ம் சுகுணா?'' செல்ப் இன்ட்ரடியூஸ் செய்து கொண்டாள்.

''வெல், ஐ'ம் மீரா கண்ணன்'' மீரா கூறியதுமே,

''ரொம்ப ஷாக்கா இருக்கு...'' என்றாள்.

''வித் யுவர் பர்மிஷன்... சுகுணான்னு கூப்பிடலாமா?''

உதடு மடித்து சிரித்த சுகுணா,

''ஓ...! கம்பெனி கேன்டினுக்கு வாங்க. அங்கே போய் பேசலாம்'' சுகுணா வழிகாட்ட, அவளைப் பின் தொடர்ந்தாள் மீரா... ஒதுக்குப்புறமாக போடப்பட்ட எதிரும் புதிருமான இரண்டு இருக்கையில் அமர்ந்து கொண்டார்கள்.

''காபி... டீ?'' சுகுணா கேட்டாள்.

''ஸ்வீட்.''

கண்களை உயர்த்திப் பார்த்த சுகுணா,

''பாஸந்தி.''

''ம்'' மீரா தலையசைத்தாள்.

பேரரிடம் ஆர்டர் கொடுத்துவிட்டு.. ஸ்நேகமாகச் சிரித்தாள்.

''கண்ணன் நல்லா இருக்காரா?''

''நல்லா இருக்கார்... அப்பா, அம்மா எப்படி இருக்காங்க?''

''நல்லா இருக்காங்க. நீங்க வந்த விஷயம்...'' காரணத்தைக் கேட்டாள்.

''உறவை புதுப்பித்துக் கொள்ள.''

''அதைத்தான் ஏற்கனவே உடச்சிட்டாங்களே...''

''நாம சேர்த்து வைப்போம்.''

வித்தியாசமான பார்வையை மீரா மேல் ஓட விட்டாள் சுகுணா.

''நான் கொஞ்சம் ஃப்ரியா பேசட்டுமா?''

''உன்னை ஃப்ரியா பேச வைக்கணுங்கறதுக்காகத்தான் நான் வந்து இருக்கேன். நமக்குள்ளே டிஸ்டென்ஸ் வேண்டாம், வயசு வித்தியாசம் ரொம்ப கம்மியாக இருக்கும்ன்னு நினைக்கிறேன், என்னை உன்னோட ப்ரெண்டா நினைச்சிக்கோ.''

மீண்டும் அழகாக சிரித்தாள் சுகுணா.

''உறவு! நான் என்ன சொல்றதுன்னு புரியலை. கண்ணன் அலுவலக வேலையா எங்க ஆபீஸ் வரும்போதெல்லாம் என்னோட பழகுற வாய்ப்பு கிடைத்தது. நாளடைவில் அவரையே விரும்பத் தொடங்கினேன். என் காதலை ஏற்றுக் கொண்ட அவரால் என்னைப் போல் தீவிரமாக முடிவு எடுக்க முடியவில்லை. என் பெற்றோர்கள் அவரை முரடன், குடிகாரன் என்றெல்லாம் விமர்சித்தது அவரை ரொம்பவும் பாதித்திருக்கும். மதியாதார் வீட்டில் திருமணம் செய்வதை அவர்கள் பெற்றோரும் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே எல்லாம் முடிந்து நீங்களே முற்றுப்புள்ளியும் வைத்த பிறகு இப்போது எப்படி உறவு. எனக்குப் புரியவில்லை மீரா.''

''அவரை இன்னமும் காதலிக்கிறியா?''

சிறிது நேரம் மவுனமாக இருந்த சுகுணா...

''உங்க கணவரா ஆன பின்னாலும் நினைச்சிக்கிட்டு இருக்கிறது தப்புத்தான். எனக்கு நல்லாத் தெரியுது. எம்



மனசுல கண்ணன் பத்தி விழுந்த உருவத்தை அழிச்சிக்க முடியல... தூர நின்று பார்க்கிறதோட சரி... அதையும் நீங்க விரும்பலேன்னா... என்னை மாத்திக்க முயற்சி பண்றேன்.''

''இன்னும் கண்ணன் உன்னோட மனசுல இருக்காரா?''

''.......'' தலையை குனிந்து இருந்தாள்.

''தயங்காம சொல்லு.''

''ம்.''

''இன்னும் நீ கல்யாணம் பண்ணிக்காததற்கு காரணம், கண்ணன் மேலே உள்ள காதல்: ஆம் ஐ கரெக்ட்?''

''......''

''பயப்படாத சுகுணா... நானும் உன் ஏஜ் உள்ள பொண்ணு தான். உன்னோட ஃபீலிங்ஸை என்னால புரிஞ்சுக்க முடியும்.''

''ஆமாம்!''

''இந்த நிமிஷம் கூட அவரை விரும்பறீயா?''

''ஆமாம்! என்னால முடியல மீரா. ஏன்னா கண்ணன், கண்ணன்னு துடிச்ச மனசு, அவர் என்னை மறக்கறதுக்கு எங்கள் பெற்றோரின் கெடுபிடிதான் காரணம். மேலும் எதையும் ஈஸியா எடுத்துக் கொள்வார் கண்ணன்! அதே நேரம் அவருக்கு நீ வந்து சேர்ந்த மாதிரி எனக்கும் ஒருவன் இந்த உலகத்திலே இருக்கலாம். இந்த நவீன காலத்திலே கண்ணன் இல்லாட்டி என் வாழ்வே இல்லையின்னு சீரழிய நான் விரும்பல. மாற்றம் வரும்வரை காத்திருப்பேன்! அதுவரைக்கும் மலரும் நினைவுகள் மாதிரி என் மனசுக்குப் பிடிச்சத அசை போடுறதில தப்பில்லைங்கிறதுதான் இப்போதைக்கு என் பாலிஸி!''

பேரர் இரண்டு பாஸந்திகளைக் கொண்டு வந்து வைத்தார்.

''எடுத்துக்கோங்க.''

''பரவாயில்லை, மீரான்னு கூப்பிடு.''

பாஸந்தியில் இரண்டு ஸ்பூன் எடுத்து சுவைத்தாள். கொஞ்சம் கூடத் தயங்காமல், சுகுணாவைப் பார்த்து...

''கண்ணனைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?''

சுகுணாவின் கையில் இருந்த டேபிள் ஸ்பூன், டேபிள் மேலேயே நழுவி விழுந்தது.

''விளையாடுறீங்களா?''

''நான் விளையாடி ரொம்ப வருஷம் ஆகுது. சீரியஸா பேசுறேன்.''

''கண்ணனுக்கும் உங்களுக்கும் கல்யாணம் ஆயிடுச்சி.''

''அப்கோர்ஸ்.''

''மீரா!''

''சுகுணா, இதுக்கு முன்னே உங்களிடம் நான் பேசியது இல்லை. பழகினதும் இல்லை. இருந்தாலும் உங்கிட்ட என்னால ப்ரியா பேச முடியும். கண்ணனைக் கல்யாணம் பண்ணிக்கும் முன்னமே, அவரோட அத்தனை குணமும் எனக்குத் தெரியும்... பர்ஸ்ட் நைட்டிலேயே சண்டை, நீயா நானான்னு பார்ப்போங்கற சவால். எங்கிட்ட அவருக்கு என்ன புடிச்சதுன்னு தெரியலை. அவர் திருந்த ஆரம்பிச்சார். ஒருத்தரை ஒருத்தர் விரும்ப ஆரம்பிச்சோம். எத்தனை நாள்தான் மனசுக்குள்ளேயே வச்சிக்க முடியும்? ஒரு நாள் ரெண்டு பேரும் மனச திறந்து கொட்டினோம். புதுசா வாழ்க்கையைத் தொடங்கணும்னு நினைச்சன்னைக்கு... சிவாவோட விஜயம். சிவா யாருன்னு கேக்குறியா? உனக்கும் சிவாவிற்கும் அதிக



வித்தியாசம் இல்லை. அவன் பைத்தியமாயிட்டான், நீ இன்னும் ஆகல... சிவா என்னோட சொந்த மாமா பையன். எனக்கும் சிவாவிற்கும் பெற்றோர்களே சின்ன வயசிலே முடிச்சுப் போட்டாங்க. குடும்பத்துல பிரச்சினை. யார் எங்கே இருக்கோன்னே தெரியாத அளவுக்கு பிரிவு. மாமா குடும்பத்தையே நாங்க மறந்தாச்சி... சிவா பத்தி நினைவே எங்கிட்டே இல்ல, ஆனா சிவாவிற்கு என்னைத் தவிர வேற நினைவே இல்லை. என்னைத் தவிர வேற ஒரு பொண்ணை அவனால நினைச்சிகூடப் பார்க்க முடியாது.

''அப்பா, அம்மாவ இழந்திட்டு, அந்த சோகத்தைக் கூட பெரிசா நினைக்காமல், என்னைத் தேடி தன்னோட மீரா கிடைக்க மாட்டாளான்னு ரெண்டு வருஷமா அலைஞ்சி இருக்கான். அதனால பைத்தியம் மாதிரி ஆயிட்டான். என்னோட டிரஸ்ஸைக் கூட அடுத்தவங்க தொடக்கூடாதுன்னு நினைக்கும் அளவுக்கு வெறித்தனமான காதல். நான் இன்னொருத்தனோட மனைவிங்கறதை, அவனால நினைச்சிக் கூடப் பார்க்க முடியாது. ஒருவேளை தெரிஞ்சா, அவன் இருக்கிற மனநிலையில கண்ணனுக்கே ஆபத்து வரலாம். இல்லை அவனே தற்கொலை பண்ணிக்கலாம். இன்னும் கொஞ்ச நாள்ல தானா சாகறவனை, நாம சாகடிக்கணுமா? இந்த ரெண்டு மாசமா சிவாவுக்கு முன்னால எல்லாரும் நடிச்சிகிட்டு இருக்கோம். எனக்கு இன்னும் கல்யாணம் ஆகல, என்னைத்தான் அவன் கல்யாணம் பண்ணிக்கப் போறான்ற நம்பிக்கையில... சிவா வாழ்ந்துகிட்டு இருக்கான். இந்தப் பொய் நாடகம் கண்ணனைத் தவிர, வேற யாருக்கும் புடிக்கல... எந்த நேரத்துல பூகம்பம் வெடிக்குமோன்னு நான் பயந்து செத்துகிட்டு இருக்கேன்.''

''சிவா எம்மேல வச்சிருக்கற அன்பு. சொல்லக் கூடியது இல்லை... சின்ன வயசுல இருந்து வளர்ந்த அந்தக் காதலோட வலிமையை என்னால ஜீரணிக்க முடியல. சிவா என்னோட

சொந்தம்... பிறந்த வழியில எனக்கிருக்கிற சொந்தம் இவன் ஒருத்தன்தான். அவனுக்கும் என்னை விட்டா வேற யாரும் இல்லை. அவன் மேலே எனக்கு அன்பு இருக்கு. காதல் இல்லை. கண்ணன் திருந்தி வாழ நினைக்கும் போது, என்னோட சுண்டு விரலைக் கூடத் தொட முடியாத அளவுக்கு துர்பாக்கியம். இந்த சூழ்நிலை அவரைக் கெட்ட வழிக்குத் திரும்பக் கொண்டு போயிடுமோன்னு பயமா இருக்கு... அவருக்கு ஒரு பொண்ணோட அன்பு தேவை. அதைக் கொடுக்க முடியாத நிலையில நான் இருக்கேன்.

"நாங்க சேரணுங்கறதுக்காக சிவா சீக்கிரம் சாகணும்கறது எவ்வளவு கொடூரம். ஒருவேளை அவன் குணமாயிட்டானா? நான் குழம்பிப் போய் கிடந்த நேரத்துலதான் உன்னைப் பத்தித் தெரிஞ்சிக்கிட்டேன். கண்ணனை மறக்க முடியாம இன்னும் தத்தளிச்சிகிட்டு இருக்கிறதைப் புரிஞ்சிகிட்டேன். உன் காதலுக்கு என்னைக்கும் என்னோட ஆதரவு உண்டு. ஒரு ஆம்பளை... சிவாவே இப்படி பைத்தியக்காரனாகிக் கிடக்கிறானே... நீ பொண்ணு இன்னும் அதிகமாக நேசிச்சி இருப்பே... கண்ணனை விட்டு என்னால தனியா வாழ முடியும். அந்த மெச்சூரிட்டி எனக்கிருக்கு. ஆனா உன்னால முடியாது."

"மீரா!"

"ஆமாம் சுகுணா! நான் நல்லா யோசிச்சுதான் உங்கிட்ட பேசிகிட்டு இருக்கேன். முழு மனசோட சொல்றேன். நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழணும். நீங்க ரெண்டு பேரும் சேர்றதுனால, கண்ணனுக்கு ஒரு பெண்ணோட, அதுவும் உயிரா நினைக்கிற பெண்ணோட அன்பு கிடைக்குது. உனக்கும் நீ விரும்பின வாழ்க்கை. சிவாவுக்கு சந்தோஷமான சாவு. பெத்தவங்களுக்கு பிரிஞ்ச குடும்பம் ஒண்ணு சேருது. இத்தனை சந்தோஷங்களுக்கு மத்தியில, என்னோட பிரிவு பெரிய விஷயம் இல்லை."



"கண்ணன் சம்மதிப்பாரா?" பாவம் சுகுணாவின் குரல் கம்மியிருந்தது.

"உனக்கு சம்மதமான்னு மட்டும் சொல்லு. அவரை நம் வழிக்குக் கொண்டு வர்றது என்னோட பொறுப்பு."

விரக்தியாக சிரித்தாள் சுகுணா.

"எல்லாத்தையும் பத்தி யோசிச்ச நீங்க... உங்களை மறந்திட்டீங்களே மீரா."

"என்னைப் பத்தி யோசிக்க என்ன இருக்கு? சிவாவும் ஒரு வேளை போயிட்டா, கிரிஜான்னு எனக்கு ஒரு பெஸ்ட் பிரண்ட் இருக்கா. அவ மூலமா ஒரு வேலையைத் தேடிக்கப் போறேன். கண்ணன் சம்மதத்தோட வரேன். நீ நல்ல பதிலைச் சொல்லு... குட் டே!" கூறிவிட்டு சுகுணாவை லட்சியம் செய்யாமல் விடுவிடுவென, அந்தக் கம்பெனி கேட் நோக்கி நடக்கத் தொடங்கினாள். சுகுணாவிற்கு சிந்திக்க முடியாத அளவு குழப்பம். எந்த முடிவிற்கு அவள் வருவாள்? தடுமாறி நின்றாள். எதுவுமே தோன்றவில்லை. திடீர் என்று மீரா தன்னைப் பார்க்க கம்பெனிக்கு வருவாள், இப்படி எல்லாம் பேசுவாள் என்று ஜோசியமா அவளுக்குத் தெரியும். பலி களத்திற்கு கொண்டு செல்லும் ஆட்டின் கணக்காக பரிதாபமாக மீரா போவதையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

மீரா நேராக மனோஜ்குமாரின் ஆஸ்பிடலுக்குச் சென்றாள். சிவா கொஞ்சம் தேறி இருந்தான். முகத்தில் மலர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது. ஷேவ் செய்து ட்ரிம்மாக காட்சி தந்தான். தாடை எல்லாம் வெளிர் பச்சையில், அவன் முகத்துக்கே அழகு கொடுத்தது. தான் ஒரு நோயாளி என்று தெரிந்தும், மீராவின் முன்னால் அழகாகத் தெரிய வேண்டும் என்று.... தன்னை அழகுபடுத்திக் கொள்ள விரும்பினான். காலையில் இருந்து மீரா வரவே இல்லையே என்று படுக்கையில் புரண்டு

கொண்டு இருந்தவனுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை.

கதவைத் திறந்து கொண்டு மீரா உள்ளே நுழைந்தாள்.

"வா... மீரா வா! எவ்வளவு நேரமா காத்துக்கிட்டு இருக்கேன்."

"அப்படியா?" சிரித்தாள் மீரா.

"நீ சிரிக்கறது அழகா இருக்கு மீரா" கள்ளமில்லாமல் சொன்னான். கொண்டு வந்திருந்த ஆரஞ்சை தோல் உறித்து, சுளை சுளையாக எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"சிவா, இன்னைக்கு நைட் நான் வீட்டுலயே தங்கிட்றேன்... வேலை இருக்கு" ஆரஞ்சு சுளையை விழுங்காமல் அவளை முறைத்தான்.

"நீ நைட்ல எல்லாம் அவங்க வீட்ல தங்காத, கல்யாணம் ஆகாத பொண்ணு. மூக்கும் முழியுமா இருக்க. அந்தக் கண்ணன் பார்வையே சரியில்லை. அவன் தம்பி கூட அந்த மாதிரி முழிக்கிறான்."

"இல்ல, இந்த அம்மாவிற்கு உடம்பு சரியில்லை. நான் தானே பார்த்துக்கணும். இத்தனை நாளா அவங்க என்னைப் பார்த்துக்கிட்டாங்கல்ல? நன்றி இல்லாம உன்னோட மீரா இருக்கலாமா?"

"நீ சொல்றதும் சரிதான், ஆனா இன்னைக்கு ஒரு நாள் தான். அப்புறம் என்னை விட்டுப் போகவே கூடாது."

"போகமாட்டேன்" சலனம் இல்லாமல், அவனை ஒரு குழந்தையாகப் பார்த்தபடி பேசிக் கொண்டிருந்தாள்.

"அம்மு... நாம எப்ப கல்யாணம் பண்ணிக்கிறது?"

"உங்களுக்கு உடம்பு சரியாகட்டும்."



"இனிமே என்னைவிட்டுப் போக மாட்டியே."

"மாட்டேன் சிவா... உன்னோட அம்மு மேலே உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"'இருக்கு அம்மு... அந்தக் கண்ணன்கிட்ட பாத்து நடந்துக்க."

"நீ என் பக்கத்துல இருக்கும்போது என்னை யாரும் ஒண்ணும் பண்ண முடியாது?" அந்த வார்த்தைகள் கொடுத்த நம்பிக்கையில் தெம்பில் மெல்ல மெல்ல உறங்கத் தொடங்கினான், சிவா.

சரியாக மாலை ஐந்தரை இருக்கும்.

பூஜையை முடித்துக் கொண்டு கமலம் எப்போது வெளிப் படுவாள் என்று காத்திருந்தாள் மீரா. வெளியே வந்ததுமே...

"அம்மா!" பேசி பல நாட்களாகிய தயக்கம் மீராவின் குரலிலேயே வெளிப்பட்டது. மீராவின் மேல் ஏகப்பட்ட கோபமும் எரிச்சலும் உள்ளுக்குள் பொங்கினாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல், முகத்தில் சாந்தத்தை வரவழைக்க முயற்சி செய்து, தோற்றது வெளிப்பட்டது.

"என்ன மீரா!" குரலில் கடுமை தெரிந்தது.

"அம்மா பேசணும்" கண்கள் கலங்கத் தொடங்கியது.

"என்ன?"

"பூஜை ரூம்ல பேசணும்மா."

கமலத்தின் இமைகள் மேலேறி கீழே இறங்கியது.

"வா!" கதவைத் திறந்து கொண்டு இருவருமே உள்ளே நுழைந்தார்கள். கதவை சாத்தித் தாழிட்டாள் மீரா.

"அம்மா! பூஜை ரூம்ல யாரும் பொய் பேச மாட்டாங்க... அதுக்காக மட்டும் இல்ல, நான் சொல்லப்போற விஷயம் அப்படி."

''சொல்லு.''

''கண்ணனுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணிடுங்க.''

''அடிப்பாவி!'' கமலம் இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்க வில்லை என்பது முகத்தில் ஆடிய அப்பட்டமான அதிர்ச் சியே வெளிக்காட்டியது.

''தெரிஞ்சோ தெரியாமலோ உங்களை அம்மான்னே கூப்பிட்டுட்டேன், மகளாவே இருந்திடறேன்.''

''மீரா! நீ என்ன பேசற... அந்த பித்துப் பிடிச்சவன் உன்னை இந்த அளவு மாத்திட்டானா?'' கோபப்பட்டாள்.

''சத்தியமா இல்லம்மா, சிவாவால இந்த முடிவு எடுக்கல. சிவா மாதிரி ஒரு அப்பாவிப் பொண்ணு ஆயிடக்கூடா தேன்னுதான்.''

''.........''

''ஒரு வாரத்துக்கு முன்னாலதான் சுகுணாவப் பத்தி தெரியும். சிவாவுக்கும், சுகுணாவுக்கும் அதிகம் வித்தியாசம் இல்லை. சிவா அளவிற்கு அவ போயிடக் கூடாது. அதான் என்னோட ஆசை.''

''சுகுணா அப்படிப்பட்ட பொண்ணு இல்லை. நிச்சயம் அவ கண்ணனை மறந்து வாழத்தான் போறா! நீ எடுத் திருக்கிற முடிவுக்கு நான் சம்மதிப்பேன்னு நினைச்சியா...?''

''நீங்க சம்மதிக்க மாட்டீங்கன்னு எனக்கு நல்லாத் தெரி யும்மா... சிவாவால ,ான் எம்மேலே உங்களுக்குக் கோபம். அதுவும் எனக்குத் தெரியும். இருந்தாலும் என்னோட இந்த முடிவுனால, பிரிஞ்ச ரெண்டு மனசு சேரும். சுகுணாவுக்கு நினைத்த வாழ்க்கை, திருந்தி வாழத் துடிக்கிற கண்ணனுக் கும் ஒரு அன்பான பெண் துணை தேவை. நானும் கண்ணன் சந்தோஷமா இருக்கார்னு நிம்மதியா இருப்பேன். சிவா



வுக்கும் நிம்மதி... அவன் வாழப் போறவன் இல்லை. சாகப் போறவன். சாகற வரைக்குமாவது அவன் சந்தோஷமாக இருக்கட்டும்மா...''

''மீரா!''

''தயவு பண்ணி எனக்கு நீங்கதான் சப்போர்ட் பண்ண னும். எம்மேல உங்களுக்கு உண்மையான அன்பு இருந்தா... என்னோட வழியிலேயே என்னை விட்ருங்கம்மா.''

''கண்ணன் இதுக்கு சம்மதிப்பான்னு நினைக்கிறியா?'' கமலத்திற்குள் சங்கடம் புரண்டது... என்ன பெண் இவள்... மீராவின் முடிவை கமலத்தாலேயே ஏற்றுக் கொள்ள முடிய வில்லை.

''அவரை சம்மதிக்க வைக்க எனக்குத் தெரியும். அதுக்குத் தான் ஆஸ்பிடல் போகாமல் இங்கே இருக்கேன். அது என்னமோ தெரியலம்மா... அவருக்கும் எனக்கும் சேரும் நேரமே வரலை... இப்படியே இருந்திடறேன்.''

அதற்கு மேல் மீராவின் பேச்சைக் கேட்க விரும்பாமல், கமலம் கதவைத் திறந்த கொண்டு வெளியே வந்தாள். மனம் முழுக்க பயம்... எந்த முடிவுக்கும் வர முடியாத அளவு குழப்பம். 'தன் மகன் வாழணும்... அதுக்காக இந்த முடிவா? என்னையே இப்படிக் குழப்பினவள் கண்ணனை எப்படிக் குழப்பப் போகிறாளோ கடவுளே!' கமலம் தானாகப் பேசும் அளவிற்கு மண்டை குழம்பி இருந்தாள்.

கண்ணன் அன்று படு ஜாலி மூடில் இருந்தான். அதுவும் மீரா இரவு ஆஸ்பிடல் போகாமல் வீட்டில் தங்கப் போகிறாள் என்றதும்... உற்சாகத்தின் எல்லையையே முட்டி மோதினான். அதனால் இரவு டிபனில் மூன்று இட்லிகள் குறைந்தது. கைகால்களை ஆட்டிக் கொண்டு மீரா எப்போது அறைக்குள் நுழைவாள் என்று ஆவலோடு பார்வையைக் கதவிலேயே பதித்து இருந்தான்.

உள்ளே நுழைந்தாள் மீரா.

''வெல்கம் மைடியர் கண்ணம்மா'' தலையாட்டிச் சிரித்தான்.

''தேங்க் யூ'' சிரித்தாள், வேறு வழி இல்லை.

பீரோவைத் திறந்து சந்தனக் கலர் நைட்டி ஒன்றை உருவினாள்.

''எம் முன்னாலேயே நைட்டி மாத்தப் போறியா?'' ஆர்வமாகக் கேட்டான்.

ஒன்றும் பேசாமல் சிரித்தபடியே... தங்கள் பெட்ரூமிற்குள்ளேயே இருந்த பாத்ரூமிற்குள் நுழைந்தாள்... ஐந்து நிமிடத்தில் நைட்டியில் வெளிப்பட்டாள்.

''மீரா!''

''ம்.''

''பக்கத்துல வந்து உட்காரேன்.''

''வரேன்'' மீண்டும் காரணம் இல்லாமல் தன் உணர்வுகளை மறைக்க சிரித்தாள். பாவம் கண்ணன் அவள் சிரிப்பில் தன்னை மறந்து கொண்டு இருந்தான்.

''நம்ம மதிப்பு மிக்க வில்லன் நல்லா இருக்காரா?''

''யார்?''

''சிவாதான்... ஏய்... ஏய் தப்பா எடுத்துக்காதே. சும்மா ஒரு பேச்சுக்கு ஜோக்குக்கு சொன்னேன்'' அசடு வழிந்தான். ஒரு ஓரமாகப் போடப்பட்டு இருந்த ஸ்டீல் சேரை கண்ணனுக்கு நேராக இழுத்துப் போட்டு உட்கார்ந்தாள் மீரா.

''என்னது... சேர்ல உட்கார்ந்துட்ட...?'' ஏமாற்றம் அப்பட்டமாக அவன் விழிகளில் தெரிந்தது.



''உங்களுக்கு நேராதானே உட்கார்ந்து இருக்கேன்... பேசணும்.''

''அன்னைக்கு சொன்ன மாதிரியா?'' கண்களைச் சிமிட்டினான்.

விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள் மீரா. அவனை நேருக்கு நேராகப் பார்த்தால், அவன் அன்பிலும் விழி வீச்சிலும் தன்னை இழந்து விடுவோமோ என்ற பயம்.

''நீ பேசு, நான் உன் கையில நெட்டி எடுக்குறேன்'' சொன்னவன், அவள் அனுமதியை எதிர்பாராமல், அவள் கைவிரல்களுக்கு சொடுக்கெடுக்கத் தொடங்கினான்.

''கண்ணன்.''

''சொல்லுங்க மேடம்'' அவன் நெட்டி போடுவதிலேயே குறியாக இருந்தான்.

''நீங்க இன்னொரு கல்யாணம் பண்ணிக்...க...லா...மே.''

''ஓ... அதுக்கென்ன... பண்ணிக்கலாமே'' சிரித்தான்.

''நான் சீரியஸா பேசறேன்.''

''நானும் சீரியஸாத்தான் சொல்றேன். உன்னை எத்தனை முறை வேண்டுமானாலும் எங்க வேண்டுமானாலும், கல்யாணம் பண்ணிக்க நான் தயார்.''

பெருமூச்சோடு கண்களை மூடித் திறந்தாள்.

''காலையில சுகுணாவைப் பார்த்திட்டு வந்தேன்.''

கழுத்து நரம்பு சுளுக்குமோ என்று பயப்படும் அளவிற்கு சடக்கென நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

''அவளைப் போய் நீ ஏன் பாத்த?'' கோபப்பட்டான்.

''தோணுச்சி. பார்த்தேன்!''

''லூசு! உனக்கெதுக்கு இந்த வேலை?''

''அக்கறையோடதான்...''

''உளறாத... அவ என்ன சொன்னா?''

''அவளா எதுவும் சொல்லலை. நானாவே எல்லாத்தையும் தெரிஞ்சுகிட்டேன்.''

''என்ன?'' கண்ணனின் மனம் சஞ்சலப் படத் தொடங்கியது.

''மனசால உங்களோட வாழ்ந்திட்டு இருக்கா. உங்களை மறக்க முடியாமத் தவிக்கிறா...''

கண்ணன் பற்களைக் கடித்துக் கொண்டான்.

''நமக்குள்ளே இதுவரைக்கும் எதுவும் நடக்கல... ஒரு எல்லையோட தான் நிக்கிறோம்... அதனால...''

''அதனால'' கோபம் கொப்பளிக்கத் தொடங்கியது.

''நாம இப்படியே இருந்துருவோம். நீங்க சுகுணாவை கல்யாணம் பண்ணிக்கோங்க.''

''.......''

''அந்தப் பொண்ணு பாவங்க... நமக்குள்ளே உள்ள காதல் நாலு மாதம் தான். ஆனா அவ வருஷக் கணக்கா உங்களையே நினைச்சு வாழ்ந்திட்டு இருக்கா? பெண் பாவம் வேண்டாம். நீங்க மட்டும் தலையாட்டினீங்கன்னா... பிரிஞ்ச ரெண்டு மனசும் ஒன்னு சேரும்...'' அவள் முடிக்கவில்லை.

ஓங்கி விட்டான் ஒரு அறை. பலமான அவன் அறையைத் தாங்காமல்... சடக்கென கண்ணீர் வழிய, கண்ணனைப் பார்த்த



படியே, அவன் அறைவிட்ட கன்னத்தில் தன் இடது கையை வைத்து அழுத்திக் கொண்டு இருந்தாள்.

''லிசன் மீரா... விளையாட்டுக்குக்கூட இனிமே இப்படி பேசாத...'' அடித்து விட்டோம் என்று அடுத்த விநாடியே வருத்தப்பட்டான்.

''கண்ணன்! என்னைப் புரிஞ்சிக்கோங்க... சிவாவோட நிலைமையே என்னோட நிம்மதியப் பறிச்சிடுச்சி, இந்த நிலைமையில சுகுணாவைப் பத்தி ஏன் தெரிஞ்சுகிட்டேன்னு தெரியல... அவளும், இந்த சிவா மாதிரியே... உங்க மேலே உயிரையே வச்சிருக்கான்னு தெரிஞ்சப்போ... நான் வாழணுங்கற ஆசை போயிடுச்சி கண்ணன். உங்களைப் பிரிஞ்சு என்னால வாழ முடியும் கண்ணன்... அந்தப் பக்குவம் எனக்கு இருக்கு... பாவம் சுகுணா வழி தெரியாம தவிக்கிறா. இன்னும் உங்களை நினைச்சிட்டிருக்கா. நீங்க மட்டும் தீவிரமா இருந்திருந்தா உங்க பின்னாடியே ஓடி வரக் கூடத் தயாரா இருந்ததா சொல்றா... பாவம்! எனக்கு ஒண்ணும் புரியல்ல. உங்களைப் பிரிஞ்சு வாழ முடியுங்கற ஏதோ ஒரு உறுதிதான் என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கு. நிச்சயம் சாகப் போகிறவனோட வாழப் போவது எத்தனை நாள் என்பது எனக்குத் தெரியும். அவனோட ஒரு சகோதரியப் போல, ஒரு தாயைப் போலத்தான் இருக்கப் போறேன். எல்லோரையும் பிரிந்து அனாதையாய் திரிந்த சிவாவுக்கு கடைசி அஸ்தமன காலத்திலயாவது, ஒரு துணையா நான் இருக்கக் கூடாதா? உங்க மனைவிங்கிற அந்தஸ்தோட அப்படி ஒரு துணையா நடந்து கொள்வது உங்களுக்குத்தானே கவுரவக் குறைவு. அதற்குத்தான் என் இடத்தை சுகுணாவுக்குத் தர தயாராயிருக்கேன்!''

''நீ பாதை போட்டுத் தர்றியா? அதுவும் உனக்கு சொந்தமான பாதையைத் தரப் போறியா... போடி'' பற்களைக் கடித்தான்.

''கண்ணன் ப்ளீஸ்...''

கைகளைத் தூக்கி அவளைப் பேச விடாமல் தடுத்தான்.

''நல்ல மூட்ல இருக்கேன், ஏதாவது பேசாத... அந்த பைத் தியக்காரன் கூட சேர்ந்து சேர்ந்து நீயும் பைத்தியமாயிட்டே.''

''கண்ணன்... ப்ளீஸ்ப்பா... என்னைப் புரிஞ்சுக்கவாவது முயற்சி பண்ணுங்க... ஒரு பெண்ணோட சோகத்துல நாம வாழணும்னா, நம்ம வாழ்க்கையே இப்ப நம்ம இரண்டு பேரை மட்டும் நம்பி இல்லை. சிவா சாகமாட்டான்னு எதிர்பார்க்கிறோம். நாளைக்கு சுகுணாவும் இந்த நிலை மைக்கு வந்து அவள் சாக மாட்டாளான்னு எதிர்பார்ப்போம். வேண்டாங்க... அடுத்தவங்க சாவுலதான் நாம வாழணுமா...?''

''இனிமே ஒரு வார்த்தை பேசின, நான் என்ன பண்ணு வேன்னே தெரியாது... அவளா என்னைத் தொடர்ந்து காத லிச்சா... அதுக்கு நானா பொறுப்பு? எம்மேல உயிரையே வச்சிருக்கான்னியே... உன்னை விடவா?

''என்ன வேணா நீ சொல்லு... என்னால இனிமே எவளை யும் உன்னைத் தவிர மனசால கூட நினைக்க முடியாது. இம்பாஸிபிள். கல்யாணம் என்ன கத்திரிக்காயா? பக்கத்து வீட்டுக்காரி ஆசைப்படறான்னு தூக்கிக் குடுக்க. இது காதல், கணவன்! நான் மாறினது உன்னால மீரா... வாழத் துடிக்கிறது உன்னால மீரா... காதலை என்னான்னு தெரிஞ்சிகிட்டதும் உன்னால...''

''விட்டுக் குடுக்கறதும் காதல்தான்.''

''நீ எதை வேணா விட்டுக் கொடுக்கச் சொல், ஆனா உன்னை என்னால மறக்கவும் முடியாது, பிரியவும் முடியாது. இன்னைக்கு நாலு பேர் என்னைப் பார்த்து சல்யூட் அடிக் கிறான்னா... அதுக்கும் நீதான் காரணம். உன்னால எங்கிட்ட



ஏற்படுத்திக் கொண்ட மாற்றம்தான். நான் பெரிய என் ஜீனியரா இருக்கலாம்... அன்னைக்கு எனக்கு கிடைக்காத மதிப்பு, உன்னால நீ எனக்குள்ள ஏற்படுத்தின மாற்றங்கள் மதிப்பக் கொடுத்துச்சி... வேண்டாம் மீரா... இது விபரீத விளையாட்டு. உன்னோட இரக்கத்துல என்னைப் பழிவாங் கிடாதே... தாலி கட்டிக்கிற ஒரு பொண்ணோட கழுத்தும், மூணு முடிச்சத்தான் வாங்கணும். போடற ஆம்பளை கையும் மூணு முடிச்சுத்தான் போடணும். முடிச்சு அதிகமானா அது வாழ்க்கை இல்லை'' கலங்கினான்.

''சிப்பிதான் முத்தை மூடி இருக்கு... அதுக்காக அதுக்கு சொந்தமாயிட முடியுமா?''

''இங்க பார்...'' கத்தினான். ''உயிர் இல்லாத ஜடத்தைப் பத்தி பேசாத... நீ காதலின்னா காதலிக்கணும், எவளை யாவது கூப்பிட்டுக்கிட்டு வந்து, தாலி கட்றானா கட்டணும்... நான் என்ன பொம்மையா? எனக்கு மனசு இல்லை?''

மீரா... சேரை விட்டு எழுந்து நின்றாள். அவள் அழுது அழுது தேம்பலுக்கு வந்து இருந்தாள்.

''என்னை நீங்க காதலிக்கிறீங்க. என்னோட வார்த்தைக்கு மதிப்பு கொடுப்பீங்கன்ற நினைப்புல மண்ணள்ளிப் போட் டுட்டீங்க... உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணத்தை பண் ணிட்டு எங்கயாவது நிம்மதியா வாழலாம்னு நினைச்சேன். அதுல உங்களுக்கு விருப்பமே இல்லை. நான் உயிரோட இருந்தாத்தானே உங்களுக்குத் தடை?''

''மீரா! என்னைப் பாத்து பேசு... நீ செத்து நான் சந் தோஷமா இருக்கணுமா... இல்லம்மா... அவளோட என்னால சந்தோஷமா வாழ முடியாது.''

''உங்க மனசப் பத்தி எனக்குத் தெரியும். நிச்சயம் நீங்க மாறுவீங்க... அவ மாத்துவா.''

''இப்போ நான் என்ன பண்ணனுங்கற?'' கத்தினான்.

''அவளைக் கல்யாணம் பண்ணிக்கணும்.''

''எவளா இருந்தா எனக்கென்ன... அது கழுதையோ, குதிரையோ, கல்லோ மண்ணோ கொண்டு வந்து நிப்பாட்டு, தாலி கட்றேன்!'' சொல்லிவிட்டு, கதவு திறந்து கொண்டு போக எழுந்தவனை,

''நில்லுங்க'' என்றாள்.

''அம்மாகிட்ட எல்லாம் நானே பேசிட்டேன். ஏற்கனவே தெரிஞ்ச பொண்ணுதானே, போகப்போக சரியாயிடுவாங்க. சுகுணாவும் எனக்கு எஸ் ஆர் நோ சொல்லலை... அதுக்கு முன்னால அவளுக்கு போன் பண்ணி உங்க சம்மதத்தை சொல்லுநீங்க...'' திரும்பி முறைத்துப் பார்த்தான்.

''கோபம் வேண்டாம்... வாங்க, நான் டயல் பண்ணித் தர்றேன்'' அவனை போன் அருகில் விடாப்பிடியாக இழுத்துச் சென்றாள்.

கணவனின் மாமா வீட்டிற்கு போன் போடப்பட்டது. போனை எடுத்தது சுகுணாவேதான்.

''சுகுணா நான் மீரா! ஜஸ்ட் எ மினிட்'' சொல்லிவிட்டு ரிசீவரைப் பொத்தினாள்.

''அவதான் லைன்ல இருக்கா... பேசுங்க... ம்'' என்று கைகளில் போனைக் கொடுத்ததும், கண்ணனுக்கு என்ன முடிவு செய்வது என்றே புரியவில்லை. தற்போதைக்கு மீராவை திருப்திப்படுத்தணும் என்ற எண்ணத்தோடு, போனில்...

''சுகுணா நான் கண்ணன். நம்ம கல்யாணத்துக்கு உனக்கு சந்தோஷம் தானே?'' குரலில் அவன் கோபத்தைக் காட்டக் கூடாது என்று சைகை மொழியில் சொல்லிக் கொண்டு இருந்தாள் மீரா. எதிர் முனையில் மவுனம் சுகுணாவால்



ஜீரணிக்க முடியாத உண்மை. ரிசீவரை மீரா கையிலேயே திணித்துவிட்டு நகர்ந்தான் கண்ணன்.

''சுகுணா!''

''ம்.'' எதிர்முனையில் குரல் கேட்டது.

''சம்மதமா.''

''....''

''உன்னோட இந்த மவுனத்தை சம்மதமா நான் எடுத்துக்கிறேன்'' சொல்லிவிட்டு ரிசீவரை வைத்தாள். திரும்பிப் பார்த்தபோது கண்ணன் அங்கு இல்லை.

முதலில் கிரிஜாவை தொடர்பு கொண்டு வரச் சொல்ல வேண்டும். அவளை எப்படிச் சமாளிப்பது என்று திட்டமிடத் தொடங்கினாள். அடுத்த கட்ட வாழ்க்கை கிரிஜாவின் உதவியோடுதான் துவக்கப்பட வேண்டும் என்று உறுதியுடன் இருந்தாள். அவள் எதிர்பார்த்தபடி கிரிஜாவும் வந்து சேர்ந்தாள்.

''மீரா! நீ எடுத்த முடிவு சுய நினைவோடுதானா?''

''கிரிஜா தயவு செய்து என்னைக் கிளறாதே! எல்லோரிடமும், பேசி சமாதானம் சொல்லி, சொல்லி அலுத்து விட்டது. இனி எனக்கு விளக்க சக்தியில்லை. சுகுணா திருமணம் முடிந்து உன் உதவியோடுதான் வாழப் போகிறேன். எல்லாவற்றையும் ஆற அமரப் பேசிக் கொள்வோம்'' என்று கண்ணீர் விட்டுக் கூறினாள்.

அவள் நொந்து நிற்பதை அறிந்த கிரிஜா, தொடரவில்லை. ஏற்கனவே மீராவுடைய திருமணம் அவள் விரும்பாதது தானே!

''சரி. இப்ப என்ன செய்ய...?''

அடுத்த இரண்டு நாட்களில் ஊன் உறக்கம் இன்றி இரண்டு வீட்டிற்கும் அலைந்தார்கள். இந்தத் திருமணத்தில் யாருக்கு

சம்மதம் என்று யாருக்குமே தெரியவில்லை. ஆனால் எல்லா வேலைகளும் துரிதமாக நடந்தது. அடுத்த ஒரு வாரத்திலேயே திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று ஒத்தைக்காலில் நின்றாள். பத்திரிகையும் அடித்தாயிற்று... திருமணம் ஆவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு, மனோஜ் குமாரிடம் பத்திரிகை நீட்டும் போது ஆடிப் போய்விட்டான்.

''மீரா! இதென்ன பைத்தியக்காரத்தனம்.''

''இன்னொரு சிவா இங்கே உருவாகக் கூடாது.''

''இது நீங்களும், நானும் எடுக்கிற முடிவு இல்லை. ஒவ்வொரு வீட்டிலேயும் எடுக்க வேண்டிய முடிவு. பெரியவங்க பண்ணின தப்புக்கு நீங்க பலி ஆகறதா?''

''ப்ளீஸ் மனோஜ்... நீங்களும் கண்ணன் மாதிரியே பேசாதீங்க... என்னைப் புரிஞ்சுக்கோங்க...'' என்றபடி, சிவா தன் மேல் கொண்ட காதல்... கண்ணனின் காதல்... சுகுணாவின் மவுன வேதனை எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் அழுகையோடு கொட்டித் தீர்த்தாள்.

ஏதேச்சையாக மனோஜ் ரூமிற்கு வந்த சிவா... கதவருகிலேயே ஒன்று விடாமல் அத்தனையையும் வாங்கிக் கொண்டான்.

''அதென்னமோ தெரியல மனோஜ். நான் ஆசைப்படற, விரும்புற எதுவுமே எங்கிட்ட தங்கறது இல்லை. கிடைக்கறதும் இல்லை. சின்ன வயசுல அப்பாவ ரொம்பப் பிடிக்கும்... அவர்கிட்ட நிறைய விஷயம் கத்துக்கிடணும்னு நினைச்சப்போ... எங்களை விட்டுப் போய்ட்டார். மாமா வீட்டுக்குப் போறதா இருந்தா அப்படி ஒரு சந்தோஷம் இருக்கும். சண்டை போட்டுப் பிரிஞ்சிட்டோம். சிவா மேலே எனக்கு காதல் இல்லைன்னாக் கூட அதிகமான அன்பு உண்டு. அவனும் என்னோட அதிகமா இருக்கப் போறது இல்லை. கண்ணன் கிட்ட சண்டை போட்ட போதெல்லாம், ஒரே வீடு, ஒண்ணா ஒரே பெட்ரூம்ல இருந்தோம். ஆனா சேரணும்னு நினைச்சி



முடிவெடுத்த அன்னைக்கே பிரிவு. நான் துரதிருஷ்டசாலி... நான் உயிரா நினைக்கிறது எல்லாம் கிடைக்காது. எத்தனை நாளைக்கு சிவா கிட்ட மறைக்க் முடியும்? கண்ணன்கிட்ட இருந்து நான் ஒருத்தி விலகுறது கண்ணனுக்குக் கஷ்டத்தக் குடுத்தாலும் சுகுணாவோட அன்பு மாத்தும். பிரிஞ்ச குடும்பம் சேரும். சுகுணாவை சிவா மாதிரி ஆக்காம காப்பாத்திட்ட திருப்தி... சிவாவுக்கும் நான் அந்த வீட்டுக்குப் போகலேன்னா... சந்தோஷம். அன்பை ஒருத்தர் மேலே வச்சிட்டு பிரியறது என்னோட வாழ்க்கை... பாவம் அந்தப் பொண்ணு...'' அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. சிவா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு தன் அறை நோக்கி தளர்வாக நடந்தான். இதயத்தில் கத்தி வைத்தாற்போல் சுரீர் என்று வலி சொடுக்கியது.

# 9

**என் இதயத்தில் நீ!**
**எண்ணத்தில் நீ!**
**உள்ளத்தில் நீ!**
**என் உதிரத்தில் நீ!**
**உடம்பிலும் நீ!**
**என் உயிரிலும் நீ!**

அரை மணி நேர தாமதத்திற்குப் பிறகு...

முகத்தை நன்றாக அலம்பிக் கொண்டு... அழுத சுவடு தெரியாமல், மலர்ச்சியாக சிரித்தபடி... ஒரு இன்விடேஷனோடு சிவாவின் அறைக்குள் நுழைந்தாள் மீரா. இவளால் எப்படி சிரிக்க முடிகிறது? கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்தான். அவன் அருகில் சென்ற மீரா...

''சிவா'' குரல் கொடுத்தாள்.

''........''

''சிவா''

''என்ன அம்மு?'' கண்களைத் திறக்காமலேயே கேட்டான்.

''உடம்பு சரியில்லையா? ஏன் படுத்து இருக்க... இங்கே யாராவது ஏதாவது உன்னை சொல்லிட்டாங்களா?''

''இல்லை.''

''எழுந்திரி'' அவன் கையைப் பற்றி எழுப்பினாள். மீராவின் முகத்தை ஆசையோடு பார்க்கத் துடிக்கும் சிவா, தலையைக் குனிந்தபடியே இருந்தான்.

''கண்ணனுக்கு மேரேஜ் பிக்ஸ் ஆயிருக்கு. இன்விடேஷன் பாரு'' அவனிடம் இன்விடேஷனை நீட்டினாள். வாங்கிப் பிரித்துப் பார்த்தான்.

''என்னது தலையெல்லாம் இப்படி கலஞ்சி இருக்கு?'' கேட்டுக் கொண்டே அவன் ஷெல்ப்பில் இருந்து சீப்பை எடுத்து... அவன் முகவாயை இடது கையில் பிடித்துக் கொண்டு கேசத்தை ஒதுக்கி விட்டாள்.

''அம்மு''

''ம்'' அவனுக்கு அழகாக சீவி விடுவதிலேயே மும்முர மாக இருந்தாள்.

''என்னை உனக்குப் பிடிக்குமா?''

''இந்த அன்பான குழந்தைய யாருக்குத்தான் பிடிக்காது.''

''எம்மேல உனக்கு ரொம்ப அன்பா?''

''அளவு எல்லாம் சொல்ல முடியாது?''

''எங்கிட்ட எதுக்கு அம்மு பொய் சொன்ன?''



''சிவா'' அவன் முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள். கண்ணீ ரோடு அவன் கருவிழிகள் போராடிக் கொண்டு இருந்தன.

''கட்டிக்கிட்ட புருஷனுக்கு இவ்வளவு சந்தோஷமா கல் யாணம் பண்ணிவைக்கிற பொண்ணை இப்பத்தான் பாக்கு றேன்.''

''சிவா! நீ என்ன சொல்றே...?''

''நீ டாக்டர்கிட்ட பேசினதே கேட்டுட்டேன். ஏன் அம்மு.. உன்னோட வாழ்க்கையை பாழாக்கிட்டியே... ஒரு வார்த்தை.. ஒரு வா..ர்..த்..த எங்கிட்ட நேரா சொல்ல முடியலன்னாலும் செய்கையில் கல்யாணம் ஆயிடுச்சின்னு சொல்லி இருக்க லாமே.''

''சி...வா...'' வார்த்தைகள் உலர்ந்தது.

''நாம ரெண்டு பேரும் சந்தோஷமா வாழணும்னுதான் அம்மு ஆசைப்பட்டேன். நீ சந்தோஷமா இருக்கணும்னுதான் நினைச்சேன். உன்னைக் கஷ்டப்படுத்தணும்னு நினைப்பேனா... ஒரு வார்த்தை எங்கிட்ட சொல்லி இருக்கலாமே.. சொன்னா.. கோபம் வந்து உன்னையும், கண்ணனையும் கொலை பண்ணிடுவேன்னு நினைச்சிட்டியா.. ஏன் அம்மு நான் அந்த அளவுக்கு கெட்டவனா?''

''சிவா..இல்லை'' தடுமாறினாள்.

''அம்மு.. என்னாலதானே உனக்கு இவ்வளவு கஷ்டம்? உன்னோட கால் தரையில் கூடப் படக்கூடாதுன்னு நினைச்சேன். ஆனா, உன்னோட சந்தோஷமான வாழ்க்கைக்கே நானே.. நானே எமனா இருப்பேன்னு நினைக்கவே இல்லை. அம்மு.. அம்மு.. அம்மு.. என்னை மன்னிச்சிடு அம்மு'' கதறினான்.

''சிவா.. இங்க பாரு. சொன்னா கேளு! அழாத! உடம்புக்கு ஆகாது. நீ எமோஷனல் ஆகக் கூடாது. கண்ணைத் தொட'' அவன் முகத்தை இரு கைகளாலும் தாங்கிக் கொண்டாள்.

"நீயே துடைச்சி விடு"

அழுதுகொண்டே சிரித்த மீரா.. முந்தானையால் அவன் முகம் முழுவதும் துடைத்தாள்.

"அம்மு.. உன்மேல நான் வச்ச காதலை விட, எம்மேல நீ வச்ச பாசம் ரொம்ப பரிசு.. நீ வாழணும் அம்மு.. சந்தோசமா நூறு வருஷம் வாழணும். என்னைக் கண்ணன்கிட்ட கூட்டிக் கிட்டு போ..." எழுந்தவனை தோள் பிடித்து படுக்க வைத்தாள்.

"சிவா... உன்னை விட பாவம் அந்த சுகுணா, இந்த கல் யாணத்துல யாருக்குமே இஷ்டம் இல்லை. இந்த நேரத்துல நீ ஏதாவது குழப்பம் பண்ணி கெடுத்துடாதே. உன்னோட அம்முக்காக இதக்கூட செய்ய மாட்டியா?"

"என்ன அம்மு.. என்னைப் பார்த்து இப்படிக் கேக்குற...? உனக்கு விருப்பம் இல்லைன்னா எதையும் நான் செய்ய மாட்டேன். நானும் செத்துப் போயிட்டா உனக்கு யார் அம்மு இருக்கா?" கண்ணீர் முத்துக்கள் அவன் விழியை மறைக்கும் அளவிற்கு நிறைந்து வழிந்தது.

"கண்ணுக்குத் தெரியாத கடவுள்."

"நான் போயிட்டா கூட உன்னையே சுத்திக்கிட்டு இருப் பேன். நீயும், கண்ணனும் சேரணும். அப்படி சேர்ந்தா உனக்கே மகனாப் பொறக்கணும். அம்மு.. அப்படி பொறந்தன்னா சிவான்னே பேரு வை. ஒன்னு மட்டும் செஞ்சிடாதே அம்மு, கண்ணனுக்கு தங்கை, அக்கா இருந்து, அவங்க வீட்டுப் பொண்ணோ, பையனோ இருந்து சின்ன வயதிலேயே முடிச்சிப் போட்றாதீங்க... பெரிசா வளர்ந்து அவங்க விரும்பினா மட்டும் கல்யாணம் பண்ணுங்க..." மூச்சு வாங்கியது.

"சி...வா...!"

"அ...ம்..மு... எனக்கு உம்மேல காதல்லாம் இல்லை.. உன்னோட பெரிய மனசு முன்னாலே பொசுங்கிட்டேன். அம்மு எனக்கு ஒரே ஒரு ஆசை."



"சொல்லு சிவா.. நான் என்ன பண்ணனும்..? ஏன்பா இப்படி எல்லாரும் என்னை அழ வைக்கிறீங்க?" அவனைத் தாங்கிப் பிடித்தாள்.

"அம்மு, உம் மடியில தலையை வச்சி உன் முகத்தை பாத்துக்கிட்டே செத்துப் போயிடணும்.. உன்னை அத்தை பொண்ணா நெனச்சி நான் கேக்கல... அம்மாவா நினைக் கிறேன் அம்மு.. உன்னை அம்மாவா நினைக்கிறேன் அம்மு" மூச்சுத் தடுமாற நெஞ்சு விம்மியது.

"டாக்டர்!" மீரா குரல் எடுத்துக் கத்தினாள்.

"வேணா அம்மு... உன்னோட மடியில தலைய தூக்கி வை" அவனே எழ எத்தனித்தான். அவன் தலையை அப் படியே அள்ளி தன் மடியில் போட்டுக் கொண்டாள். மீராவின் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டான் சிவா...

"அ...ம்...மு...! நீ துரதிருஷ்டசாலி இல்லை... அம்பாளை நாம அப்படியா சொல்றோம்...

"என்னோட தலையைத் தடவிவிடு அம்மு.. அப்படியே தூங்கிடறேன்" மீரா அவன் தலை முடியைக் கோதத் துவங் கினாள். கலங்கிய விழிகளோடு அவனைப் பார்த்துக் கொண் டிருந்த அவளைப் பார்த்தபடியே அடுத்த மூன்று நிமிடங்களில் உயிரை விட்டிருந்தான். அது தெரியாத மீரா, அவன் தலையைக் கோதி தூங்கியவனை, தூங்க வைக்க முயற்சி செய்து கொண்டு இருந்தாள். சிறிது நேரத்திற்கு முன்பு "டாக்டர்" என்று மீரா அலறியதன் விளைவாக...

ஒரு நர்ஸ் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். உள்ளே நுழைந்தவள் நேராக சிவாவின் அருகில் வந்து அவன் கை நாடியைப் பிடித்து நிதானித்து விட்டு, திறந்திருந்த சிவாவின் கண்களைத் தன் கைகளால் மூடிவிட்டு.. மீராவைப் பார்க்க சங்கடப்பட்டு தலை குனிந்தபோதுதான், அவளுக்கு விஷயம் புரிந்தது. மீரா அழவில்லை. சிவாவின் தலையை

எடுத்து பெட்டில் வைத்து விட்டு.. மனோஜ் இருக்கும் அறை நோக்கி பதட்டம் இல்லாமல், வெகு நிதானமாக நடந்தாள். ஒரு நோயாளியோடு போராடிக் கொண்டிருந்தவன், மீரா தன்னைப் பார்க்க வேண்டும் என்றதுமே மற்ற டாக்டர்களிடம் வருகிறேன் என செய்கை மூலம் சொல்லிவிட்டு கதவு திறந்து கொண்டு வெளியே வந்தான்.

''சிவா இறந்த செய்தி கண்ணனுக்கு தெரியக்கூடாது.''

''சிவா?'' அப்படியா என்பதுபோல் நிறுத்தினான்.

''ம்'' தலையசைத்தாள்.

மீரா அழாமல் இவ்வளவு அமைதியாகப் பேசியது, அந்த இளம் டாக்டருக்கு சரியாகப்படவில்லை.

''மீரா அழுதுருங்க...''

''மனோஜ்... அழற நிலைமையில் நான் இல்லை. கண்ணனுக்கும் சுகுணாவிற்கும் மேரேஜ் முடியும் வரை எதுவும் தெரியக்கூடாது. தெரிஞ்சா இந்தக் கல்யாணம் நடக்காமலேயே போயிடும். ஒரு பொண்ணுக்கு பத்திரிகை எல்லாம் அடிச்சி.. கல்யாணம் நின்னுபோனா எவ்வளவு பெரிய அவமானம்னு உங்களுக்குத் தெரியும்.. ஏற்கனவே நொந்துபோன பொண்ணுக்கு... இந்த மாதிரி ஏதாவது நடந்தா.. உயிரையே குடிச்சிடும் ப்ளீஸ்...'' கை எடுத்துக் கும்பிட்டாள் மீரா.

'என்ன பெண் இவள்.. இந்த நிலையிலும் இன்னொரு பெண்ணுக்காக வருத்தப்பட்டு கொண்டு..' மனோஜ் அவனையே அறியாமல் தலையாட்டி வைத்தான்.

''இன்னும் ஒரு ரிக்வெஸ்ட்.''

''நைட்ல நான் ஆஸ்பிடலேயே தங்கிக்கறேன். அப்போதான் அவங்களுக்கு டவுட் வராது'' அதற்கும் மனோஜ் தலையாட்டி வைத்தான். சிவா இறந்த பின்பு ஒரு துளி கண்ணீர் கூட



அவள் விழிகளில் கசியவில்லை... இறுகின மனசோடு எல்லாவற்றையும் கவனித்தாள். மாலை வீட்டிற்கு சென்றபோது எல்லா வேலைகளும் மும்முரமாக நடந்து கொண்டு இருந்தன. யார் முகத்திலும் சந்தோஷம் என்பதே இல்லை. அது ஏன் என்றும் யாருக்கும் புரியவில்லை... நடக்க இருப்பதை யாரால் தடுக்க முடியும். கண்ணனின் பார்வையில் மீரா படவே இல்லை. அவன் எங்கே இருக்கிறான் என்று தெரிந்து கொண்டு, அந்தப் பக்கம் செல்லாமல் தவிர்த்துக் கொண்டாள். இரவு வழக்கம்போல் சிவாவிற்கு துணையாக ஆஸ்பிடல் என்று கூறி... ஆஸ்பிடலுக்கும் வந்து சேர்ந்தாள். கிரிஜாவைப் போய் நாளை பார்க்க வேண்டும் என்று எண்ணியபடி.. தனக்கு ஒதுக்கிய அறைக்குள் நுழைந்து தாழிட்டாள்.

அறையே வெறுமையாக இருந்தது. வயிற்றை பிடித்து இறுக்கியது. காது மடலில் யாரோ அம்மு... அம்மு... என்பதுபோல் மிரண்டாள். அவன் படுத்திருந்த இடம், நின்ற இடம், நடந்த இடம் அத்தனையையும் கண்களால் விழுங்கி, கைகளால் தடவிப் பார்த்தாள்..படுக்கையை அவள் தொட்டுத் தொட்டுப் பார்க்கும்போது தலையணை நகர்ந்தது. அவளின் எட்டு வயதுபோட்டோ கேட்பாரற்று கிடந்தது. எடுத்துப் பார்த்தாள். அவள் போட்டோவிற்கு பின்புறம் ''அம்மூ.. எங்கே இருக்கே?'' என்று எழுதிய சிவாவின் கையெழுத்து.. அதைப் பார்த்ததுமே அதுவரை அடக்கிக் கொண்டிருந்த துக்கம் அனைத்தும் அடித்துக் கொண்டு புறப்பட ''ஓ''வென வாய்விட்டு கத்தத் தொடங்கினாள். அழத் தொடங்கியதுமே பாத்ரூம் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் ஒரு மூலையில் சரிந்து உட்கார்ந்து அழத் தொடங்கினாள். எவ்வளவு நேரம் அப்படியே உட்கார்ந்தாள் என்று அவளுக்கு தெரியாது. ஓய்ந்து, முகம் கழுவி நிமிர்ந்தபோது, பாத்ரூம் ட்யூப்லைட் வெடித்து.. சில கண்ணாடித் துகள் அவள் கண்களில் விழவும் சரியாக இருந்தது.

# 10

பல காலம் காத்திருப்பேன்
பல வழியும் பார்த்திருப்பேன்
உனக்காக எடுத்திருக்கேன்
உயர்வான ஜென்மந்தான்
ஓடிவந்து உறவாடு
உயிரோடு கலந்து விடு!

திருமணத்திற்கு முதல்நாள். கண்ணனுக்கு இருப்பு கொள்ளவில்லை. முந்தாநாள் இரவு சென்ற மீரா திரும்பி வரவில்லை மனசு திக்.. திக்கென அடித்துக் கொண்டது. ஒரு வேளை சிவாவிற்கு முடியாமல் போய்விட்டதா? இந்தக் கல்யாணத்தை எப்படி நிறுத்துவது என்று தெரியாமல் விழி பிதுங்கிப் போய் இருந்தான். இந்த ஃபோன் வேறு அவுட் ஆஃப் ஆர்டர். வெளியே செல்ல முடியவில்லை. செல்ல முடியவில்லை என்பதை விட செல்லவில்லை. ரூமிலேயே இங்கும் அங்கும் நடை பழகிக் கொண்டு இருந்தான்.

அவன் அறைக் கதவு தட்டப்பட்டது.

தாளை விலக்கி கதவைத் திறநதான். சுகுணா நின்று இருந்தாள். 'பாவம் இவள்' என்று தோன்றினாலும் எதுவும் பேசாமல் அவளைப் பார்த்தான். பார்வையில் என்ன வேண் டும் என்ற கேள்வி இருந்தது.

''மீரா நேத்து வரல''

''........''

''எனக்கு அவங்களப் பார்க்கனும் போல இருக்கு.''



''........'' இவளுக்கே அவளைப் பார்க்கனும் போல் இருக் கும்போது எனக்கு எவ்வளவு கற்பனை இருக்கும், மனதிற் குள்ளேயே பொருமினான்.

''அவங்க தேர்ந்து எடுத்த வாழ்க்கை...அதனால அவங்க கிட்ட.''

''ஆசி வாங்கனுமா?'' கோபம் வெளிப்படாமல் கேட்டான்.

''அப்படிகூட வச்சிக்கலாம். அவங்க எந்த ஹாஸ்பிடல்ல இருக்காங்க.''

''மனோஜ் குமார் நர்ஸிங் ஹோம்.''

''என்னைக் கூட்டிப் போறீங்களா?'' வார்த்தைகளை வெளி யிடவே மிகவும் தயங்கினாள். கண்ணனே மீராவைப் பார்க்கா மல் தவித்துப் போய் இருந்தான். அவள் தன்னிடம் பேசா விட்டாலும் முகத்தையாவது காட்ட மாட்டாளா? என்று ஏங்கிக் கொண்டு இருந்தவனுக்கு அது நல்ல வாய்ப்பாகவே அமைந்தது.

''சரி வா'' என்றபடி பேண்ட், சர்ட்டுக்கு மாறினான். சுகுணாவிற்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. கண்ணன் தன்னை ஏற்றுக் கொள்வானோ என்ற நம்பிக்கை துளிர்க்கத் துவங்கியது. பார்ப்பவர்களுக்கு அவர்கள் இருவரும் வெளியே கிளம்பிச் செல்வதாகத் தோன்றியது. ஹீரோ ஹோண்டாவை எடுக்க வெளியே கை வைக்கும்போது வேண்டாம் உரசிக் கொண்டு உட்காருவாள். ஆட்டோ பிடித்தான். ஆட்டோவில் இருவரும் பேசவில்லை. ஆனால் ஒருவரை ஒருவர் பார்க் கும்போது சிரிப்பதுபோல் தோன்றியது. ஹாஸ்பிடல் முன்பு ஆட்டோ வந்து நின்றதுமே... முதலில் கண்ணன் இறங்கினான். கால் மரத்துப் போய் இறங்கத் தடுமாறிய சுகுணாவை.. தோளைப் பற்றி இறங்க வைத்தான்.

''ஸாரி?''

''பரவாயில்லை'' ஆட்டோ சார்ஜ் கொடுத்துவிட்டு ஹாஸ்பிடலை பார்க்கும்போது முகப்பில்.. வெள்ளை மாருதி 1000 இல்லை. நெற்றியைச் சுருக்கினான் கண்ணன். மனோஜ் ஹாஸ்பிடலில் இல்லை போல இருக்கே... பார்ப்போம் என்றபடி ரிசப்ஷனுக்கு வந்தபோது.. மனோஜின் பர்சனல் பி.ஏ. எதிர்ப்பட்டான்.

''கண்ணன் ஸார் நீங்களா.''

''ஏன் மனோஜ் இல்லையா, மீரா சிவா ரூம்ல இருக்காளா?''

''என்ன ஸார் இப்படி கேக்குறீங்க? உங்களுக்கு விஷயமே தெரியாதா.. சிவா முந்தாநாள் காலையில் பதினோரு மணிக்கே இறந்துட்டார் ஸார்.''

''மை காட்'' கண்ணனுக்குள் சகலமும் அதிர்ந்தது. சுகுணா ஸ்தம்பித்தாள்.

''முந்தாநாள் ஈவினிங் வீட்டுக்கு வந்தவ எதுவுமே சொல்லலையே.''

''அன்னைக்கு நைட் இங்கேயே தங்கினாங்க. பாத்ரூம் போயிருப்பாங்க போல இருக்கு. துரதிஷ்டவசமா ட்யூப் லைட் வெடிச்சி அவங்க கண்ணு ரெண்டுலேயுமே க்ளாஸ் குத்திடுச்சி...''

பி.ஏ.வின் சட்டைக் காலரை இறுக்கிப் பிடித்தான் கண்ணன்.

''இப்ப மீரா எங்கே? எப்படி இருக்கா...? என்னோட மீரா எங்கே..? எனக்கு சொல்லாம இவ்வளவு வேலையும் பார்த்தது யாரு?''

உலுக்கினான்.

''டாக்டர் ஸார்.''

''இப்ப மீரா எங்கே.''

''ஐ ஸ்பெஷலிஸ்ட் சேதுமாதவனோட ஹாஸ்பிடல்ல...'' அவன் முடிக்கவில்லை...

''ராயப்பேட்டைதானே.''



''ஆமாம் ஸார்'' அதற்கு மேல் அங்க நிற்க கண்ணனுக்கென்ன பைத்தியமா.. அவனுக்கு பின்னாலேயே ஓட்டமும் நடையுமாக வந்தாள் சுகுணா. முகத்தில் களையில்லை. கருத்துப் போய்விட்டது முகம். கடவுளே மீராவுக்கு எதுவுமே ஆகிவிடக்கூடாது. கடவுளே அந்த தேவதையைக் காப்பாற்று.. முனகிக் கொண்டே வந்தாள். ராயப்பேட்டை சேதுமாதவன் ஹாஸ்பிடலை அடையும் முன் செத்துப் பிழைத்தான் கண்ணன்... ஹாஸ்பிடல் வாயில் வந்ததோ இல்லையோ.. இறங்கி புயல் போல ஓடினான். எதிர்பட்ட டாக்டர்ஸ், நர்ஸ் அனைவரிடம் பைத்தியக்காரன் போல் ''மீரா எங்கே? மீரா எங்கே?'' என்றே கேட்டான். ஒரு டாக்டரை பிடித்து நிறுத்திக் கேட்கும்போது அவர் திருதிருவென விழித்தார்.

''என்ன மிஸ்டர் கொஞ்சம் கூட டீஸென்ஸி இல்லாம?''

''ப்ளீஸ் டாக்டர்... என்னோட மனைவி டாக்டர் - மீரா...''

''என்னைக்கு அட்மிட் பண்ணுனீங்க?''

கண்ணன் விழிக்கவும்.. சுகுணாதான் பதில் சொன்னாள்.

''முந்தா நாள் நைட் அட்மிட் பண்ணினாங்க.''

''ஓ.. க்ளாஸ் வெடிச்ச லேடி.. ஐ மீன் டாக்டர் மனோஜ் ஜோட ரிலேஷன் பொண்ணு.''

''எஸ் டாக்டர்'' பரபரத்தான்.

''அவங்க இன்டன்சிவ் கேர்ல இருக்காங்கன்னு நினைக்கிறேன்.''

கண்ணனுக்கு உலகமே கண் முன்னால் சுற்றியது. இன்டன்சீவ் கேர்ல வைக்கும் அளவிற்கு ஆபத்தா? ''மீரா.. மீரா...'' துடித்தான்.

''ஸார்.. அவங்க கண்ணு?'' சுகுணா கேட்டாள்.

''பாவம்.. ரெண்டு கண்ணோட கருவிழியும் ஸ்பாயில்டு.''

''மீரா'' அலறினாள்.

"சுகுணா.. என் மீரா பிழைச்சிக்குவாளா?" சுகுணாவின் தோளைப் பிடித்துக் கதறினான்.

"அத்தான் ப்ளீஸ்..." அவன் தோளைத் தட்டியவள்... அந்த டாக்டரை பார்த்து மேலும் கேட்க விரும்பி வாயசைப்பதற்குள்.. அவர்களைத் தாண்டிச் சென்ற ஒரு இளம் பெண் டாக்டரை அவள் அழைத்தாள்.

"எக்ஸ்க்யூஸ்மி டாக்டர்."

"எஸ்" மதுஸ்ரீ நின்றாள்.

"மிஸ்டர். கண்ணன்.. நீங்க சொல்ற பேஷண்டை இவங்க தான் ட்ரீட் பண்றாங்க."

"மது" கண்ணன் அடையாளம் கண்டு கொண்டான்.

"கண்ணன் எப்படியிருக்கீங்க...?"

"மீரா எப்படிம்மா இருக்கா?"

"பயப்படாதீங்க.. நான் பாத்துக்குறேன். பயப்படற மாதிரி ஒன்னும் இல்லை. நீங்க சுகுணாவா?" சுகுணாவைப் பார்த்துக் கேட்டாள்.

"ஆமாம்" தயக்கமாகக் கூறினாள்.

"மயக்கத்துலகூட.. உங்க பெயரைத்தான் சொன்னாங்க. ப்ளீஸ் கம்."

"மது" கண்ணன் அழைத்தான்.

"மனோ சீப் டாக்டர் ரூம்லதான் இருக்கான் வாங்க" கண்ணனை மட்டும் அழைத்துக் கொண்டு போய் சேதுமாதவனிடம் விட்டுவிட்டு சுகுணாவை கூட்டிக் கொண்டு இன்டன்சிவ் கேர் அறையில் நுழைந்தாள். ஏஸி ரீங்காரம் மெலிதாகக் கேட்டது. மீராவின் கண்களில் பெரியதாக கட்டு. சலனம் இல்லாமல் படுத்து இருந்தாள்.

"டாக்டர்.. மீராவுக்கு?"

"பயப்படற மாதிரி ஒன்னும் இல்லை. ஷீ இஸ் ஆல்ரைட்.. கண்ணு உள்ளேயும் க்ளாஸ் குத்தி புண்ணாயிடுச்சி. இதெல்லாம் ஆறவிட்டு திரும்ப ஆப்ரேஷன் பண்ணா.. நிச்சயமா அவங்களால பார்க்க முடியும்... பார்வை கிடைக்கும்."



"நிஜமா?"

"எஸ்.. ஆனா.. இந்த ஆறு மாதம் ரொம்ப கேர்ஃபுல்லா பார்த்துக்கணும் அவ்வளவுதான்."

"அவங்ககிட்ட பேசலாமா?"

"ரொம்ப டிஸ்டர்ப் பண்ணாதீங்க... பேசுங்க.. ஆறுதலா இருக்கும்." டாக்டர் மது. ஒரு ஓரமாக சேரில் உட்கார்ந்து மெடிக்கல் புக் ஒன்றை புரட்டத் தொடங்கினாள்.

"மீரா" காதுக்கு அருகில் அழைத்தாள் சுகுணா.

"........"

மீராவின் கைகளில் உள்ள விரல்களில் மெல்லிய சலனம்.

"மீரா"

"ம்." முனகினாள்.

"நான் சுகுணா வந்து இருக்கேன்."

"சு...கு..ணா..." உதடுகள் பிரிந்தன.

"என்ன மீரா இது?" கலங்கினாள் சுகுணா.

"சுகுணா.. கல்யாணம் நல்லபடியாக முடிஞ்சிதா?" மெலிதாக முனகினாள்.

"இல்லை"

"ஏன்"

"எனக்கு விருப்பம் இல்லை."

"சு...கு...ணா."

"மீரா நீ எங்கிட்ட பேசின போதெல்லாம் நான் எதிர்த்து எதுவுமே பேசல.. காரணம்.. உன்னோட முகத்தைப் பார்க்கும் போது எதுத்துப் பேசத் தோணலை. உன்னோட அன்புக்கு முன்னால பெரிய மனசுக்கு முன்னால மண்டிபோடத்தான் தோணிச்சி. இந்தக் கல்யாணத்தை எப்படி நிறுத்தறதுன்னு கண்ணன் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். உங்களுக்கு ஒன்னுன்னு தெரிஞ்சதுமே அவர் துடிச்ச துடிப்பை இப்ப நினைச்சாலும் நெஞ்சே நடுங்குது. நீ அவரை ஏமாத்திடாத.. நீ எனக்கு வாழ்க்கையைக் குடுக்கணும்னு நினைச்ச.. ஆனா, இந்த

நிலைமையில உன் வாழ்க்கையை நான் பறிச்சிட்டா... நான் மனுஷியே இல்லை. உன் அளவுக்கு நான் பெருந்தன்மை யானவளாக இல்லாட்டியும்.. ஒரு பொண்ணோட வாழ்க் கையை எடுத்துக்கிற அளவுக்கு சின்னபுத்தி உள்ளவ இல்லை.''

''சு...கு...ணா நானா.. தான்.''

''நீ பேசாத! உன்னோட பேச்சைக் கேட்டுக் கேட்டு அத்தனை பேருமே மகுடிக்கு கட்டுப்பட்ட பாம்பு மாதிரி இருக் கிறோம். நான் நல்லா இருக்கணும்தானே ஆசைப்பட்ட... அது இந்தக் கல்யாணத்துனால நடக்காது. என்னை மன்னிச் சிடு. சிவா மாதிரி நான் பைத்தியமாகவும் ஆகமாட்டேன். சாவைத் தேடிப் போற கோழையும் இல்லை. வாழ்ந்து காட்டு வேன். நீ சந்தோஷப்படற மாதிரி வாழ்ந்து காட்டுவேன். என்னோட காதலைவிட... முறையான மனைவி உன்னோட பாசம்தான் கண்ணனுக்குத் தேவை. ப்ளீஸ் என்னை நம்பு...

''உனக்காகவாவது நான் வாழறேன். எனக்காக உன்னோட வாழ்க்கையையே விட்டுக் கொடுத்தியே. உனக்கு விட்டுக் கொடுக்க எங்கிட்ட ஒண்ணுமே இல்லை. என்னை நீ புரிஞ்சி கிட்டா, நான் சந்தோஷமா இருக்கணும்னு விரும்பினா.. அத்தானை ஏமாத்தாத. அவர் மனசுல சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து இருக்கிற ராணி நீதான். இதுல உனக்கு சம்மதம்னா நீ சிரிக்கணும்.''

மீராவிடம் எந்த சலனமும் இல்லை.

''மீரா! நீ குடுக்கணும்னு நினைக்கிற வாழ்க்கை என்னை அணு அணுவா கொல்லும்! சித்ரவதை செய்யும்! நான் எப்படி ஆகக் கூடாதுன்னு நீ கவலைப்பட்டியோ அது உன்னோட வாழ்க்கையையும் பறிச்சி... எல்லாரோட நிம்மதியையும் குலைச்சி நடக்கணுமா.''

மீராவின் இதழில் கோடாக ஒரு புன்னகை விழுந்தது. சுகுணா சந்தோஷமாக அவள் கைகளைப் பிடித்தாள். அதே நேரம், கண்ணன் உள்ளே நுழைந்து மீரா அருகில் சோகமாக வந்தான்.



''மீரா'' குரல் உடைந்தது.

''கண்ணன்''

''என்னம்மா இது. உனக்கு இப்படி ஒரு தண்டனையா?''

''கண்ணு ரெண்டும்..''

''இல்லாட்டி போவுது கண்ணம்மா. வாழ்க்கை முழுவதும் உனக்கு கண்ணா நான் இருக்கேன். எனக்கு அகக்கண்ணைக் கொடுத்தவளே நீதானடி! உனக்குப் புறக்கண்ணா கூடவா நான் இருக்கமாட்டேன்? உன்னை விட்டுப் போகமாட்டேன் மீரா, செத்தாலும் வாழ்ந்தாலும் ஒண்ணா இருப்போம். ஆறுமாதம் அப்புறம் ஆப்ரேஷன் பண்ணினா பார்வை கிடைச்சிடும். கவலைப்படாதே. உனக்கு பார்வையே கிடைக்காட்டிக்கூட பரவாயில்லை. எல்லாத்தையும் நானே உனக்கு சொல்றேன். எம்மூலமா நீ உலகத்தைப் பாருடா.''

''கண்ணன்'' உணர்ச்சிவசப்பட்டாள்.

மதுஸ்ரீ சட்டென இடைப்புகுந்தாள்.

''மீரா! உணர்ச்சிவசப்படாதீங்க. கண்ணீரே வரக்கூடாது. கண்ணன் நீங்கதான் பார்த்துக்கணும். ஏன்னா இன்னும் ஆறுமாதம் கழித்து ஆப்ரேஷன் பண்ணப்போறதே நான்தான்'' பற்கள் மட்டும் தெரிய சத்தம் இல்லாமல் மது சிரிக்க, மனோஜ் கண்ஜாடைகாட்டி காதைப் பிடித்தான்.

''கண்ணத்தான் வித்யுவர் பர்மிஷன்?''

கண்ணன் விழித்தான்.

''உங்க மௌனத்தை நான் சம்மதமா எடுத்துக்கிறேன்'' சொல்லிவிட்டு மீராவின் காதுமடல் அருகே குனிந்து.

''ஸ்டில் ஐ லவ் யூ மீரா'' என்றாள்.

''சுகுணா.''

''நான் பாட்டி வீட்டுக்கு போறேன் மன அமைதிக்காக. திரும்பி வருவேன், அப்போ இந்த வயிறு மேடா இருக் கணும்'' கிசுகிசுத்தாள்.

"கண்ணன்"

"என்ன மீரா?" கண்ணன் அருகில் வந்தான்.

"மன்னிச்சிருப்பா புண்படும்படி நான் நடந்தா."

"உஷ்.. பேசாத. உனக்கு பதில், பாக்கப்போறதும் நான் தான் பேசப்போறதும் நான்தான்."

"மனோஜை தப்பா எடுத்துக்காதீங்க. நான் சொன்னது னாலதான் அவர் உங்களுக்கு மெசேஜ் சொல்லலை."

"மனோஜைப் பத்தி எனக்குத் தெரியும் கண்ணம்மா."

தன் கையைத் தூக்கி அவன் முகத்தைத் தடவினாள். கண், மூக்கு, காது, இமை, உதடு என்று ஒவ்வொன்றாக தடவிப் பார்த்தாள். மீசையில் கைவைத்தாள்.

"இந்த மீசை நல்லா இருக்கா?"

கண்ணன் சிரித்தான்.

மீராவின் கைகள் அவன் கழுத்து நெஞ்சு என்று தடவிக் கொண்டே வந்தது. அவள் தடவிய தன் உடலைப் பெருமை யோடும், கண்ணீரோடும் பூரிப்பாக பார்த்துக் கொண்டு இருந் தான் கண்ணன்.

"நான் வரேன் மீரா!" சுகுணா புறப்பட்டாள்.

"சுகுணா!" கண்ணன் அழைத்தான்.

"கண்ணன்! மீராவ பத்திரமா பாத்துக்குங்க. ஏதாவது ஒண்ணுன்னா எனக்கு பதில் சொல்ல வேண்டி இருக்கும். பீ கேர்புல்" என்று கூறி வெளியே போகும் சுகுணாவை கண்ணன் நீர் நிறைந்த விழிகளோடு பார்த்தான். பின்பு மது, மனோஜ் இருப்பதை லட்சியம் செய்யாமல் முதல் முதலாக தன் இதழை மீராவின் கன்னத்தில் ஒற்றி எடுக்கும் கண்ணனின் காதைத் தடவிப் பிடித்து. P 272 8/2/08

"ஐ லவ் யூ ராஸ்கல்!" என்று கிறங்கினாள் மீரா.

CONNEMARA P...
- 8 FEB 2008